உ

சிவமயம்.

எறும்பூர் என வழங்கும்

இறும்பூதூர்

சுத்தாத்வைத வேதாந்தாசாரியரான

ஸ்ரீ தத்துவராய சுவாமிகள்

அருளிச்செய்த

பாடுதுறை.

—o▭o—

★

இஃது

சிதம்பரம்

கோ. சித. மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலஞானதேசிக சுவாமியவர்களின்

மடாதிபதி

ஸ்ரீ சோமசுந்தரஞானதேசிக

சுவாமிகளால்

சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

★

விஜயஸூ ஐப்பசிமீ 15உ [31—10—1953]

... PUBLIC LIBRARY ... MADRAS

31 MAR 1958

1004

சிவமயம்.

பாடுதுறை, பதிகவகராதி.

பதிகம்	பக்கம்	பதிகம்	பக்கம்
அக்கைச்சி	142	உயிருணி	135
அச்சோ	136	ஊசல்	278
அடிமடக்கு ஸ்துதி	207	ஊர்	268
அடிமாலை	17	ஊர்	165
அடியவர் திறத்துநிந்தா ஸ்துதி	103	எம்பாவை	142
அடைக்கலம்	67	எம்பாவை (சுரூபானந்தர்)	173
அதிசயப்பார்வை	219	எம்பாவை (ஷை 2-வது)	179
அந்திக்காப்பு	86	ஏவலிசைத்தல்	121
அபயம்	62	ஏவலிலாக்காரணத்திகழ்ச்சி	262
அபயவரதர்	72	ஏவலுக்கிசையாக்	
அப்பா	252	காரணத்திகழ்ச்சி	120
அம்பட்டன்	255	ஐயகோ	138
அம்மானை	263	கழல்	279
அம்மானை (சுரூபானந்தர்)	149	கழல் (சுரூபானந்தர்)	148
அருட்கழன்மாலை	22	கனவுரை	275
அருட்கழல் விளக்கம்	60	காப்புக்குறியுரைத்தல்	215
அருட்பத்து	74	காரணற்காணுக்காரணத்திகழ்ச்சி	77
அருட்டிருப்பள்ளியெழுச்சி	188	காளம்	265
அருணெறி விளக்கம்	94	கிளிப்பயிற்று	126
அருமையுரைத்தல்	116	குணலை	253
அர்ச்சனை	131	குணலை (சுரூபானந்தர்)	145
அவனேநான்	220	குயில்	98
அவித்தியாப்பிரலாபம்	222	குரவை	144
அறுதியுரைத்தல்	115	குறத்தி	276
அறிவு	236	குறி	273
அனுபவமாலை	234	குறையுரைத்தல்	130
அனுபவரூபம்	90	கூடல்	126
அனுபூதி நிலையர்	134	கொடி	124
அன்னைப்பத்து	101	கோழி	125
ஆண்டார்	258	சரணம்	64
ஆவாள்	266	சந்நியாசம்	162
இம்பில்	246	சாழல்	110
இருபிறப்பாளர்	165	சாற்றுபறை	231
இறைவற்காண்டற்கருமை	186	சிவிகை	167
இறைவல்லபம்	157	சிவசங்கரம்	69
உந்தியார்	233	சிவசிவசங்கீர்த்தனம்	42

பாடுதுறை, பதிகவகராதி.

பதிகம்	பக்கம்
சிவப்பிரகாச ஸ்வாமிகள் திருப்பள்ளியெழுச்சி	191
சுதந்தரன்	156
சுரூபானந்தஸ்வாமிகள் திருப்பள்ளியெழுச்சி	195
செட்டியார்	245
செட்டியார் (சுரூபானந்தர்)	169
சோதனை	267
ஞானகாண்டங்கன்மகாண்டம்	249
தச்சன்	259
தச்சராண்டி	237
தச்சாண்டி	252
தட்டான்	261
தண்டு	163
தத்துவப்பிரகாசநாயனர் திருப்பள்ளியெழுச்சி	198
தபோவைம்	164
தவமுந்தவமுடிந்ததும்	257
தாய்வார்த்தை	139
த்துவாதசநாம சங்கீர்த்தனம்	45
தெய்வம்	157
தோழிக்குரைத்தல்	113
தோழியுரைத்தல்	140
நமஸ்கார சங்கீர்த்தனம்	49
நமசிவாய	213
நல்லேன்	137
நற்குறி	122
நாமசங்கீர்த்தனம்	55
நிந்தாஸ்துதி	205
நிலம்	261
நீற்றுக்காப்பு	89
நெஞ்சிற்கமைவுரை	106
நையாண்டி	241
பகடி	147
பகவதி	159
பந்து	247
பந்து (சி-ர், சு-ர்)	150
பரிபூர்ணப்பிரகாச நாயனர் திருப்பள்ளியெழுச்சி	201
பல்லாண்டு	82
பல்லி	123
பழித்துரைமாலே	112
பறைச்சியும் பறையனும்	229
பாங்கிக்குரைத்தல்	154
பாங்கிக்குரைத்தல்	251
பாண்டியுரைவாரம்	225
பாதவல்லபம்	80
பாம்பாட்டி	260
பாம்பாட்டு	239
பார்ப்பானும் பறைச்சியும்	228
பிடாரன்	254
பிரார்த்தனை	92
புகழ்ச்சிமாலே	35
பூணு நூல்	168
பெருமாள்	170
போற்றிஸங்கீர்த்தனம்	51
போற்றிமாலே	29
மகாதேவம்	58
மனம்	244
மனோரதம்	118
மால்	143
முதலியார்	257
முத்திரை	172
மெய்ஞ்ஞான விளக்கம்	271
வண்ணுறைன்	256
வரவு சாற்றல்	130
வளவியுடன் படுத்தல்	117
வாரணம்	270
வாழ்க்கைப்பாடு	160
வியந்துரை	155
விட்டுநெறி	210

உ

சிவமயம்.

மகாகணபதிதுணை.

இஃது

வீரைக் கவிராஜபண்டித பரம்பரை
வேம்பத்தூர் சௌந்தரபாரதிகள் குமாரர்
அம்பிகாபதி பாரதிகள்
பாடியது.

விநாயகர் துதி.

பூமேவு தில்லையையாள் பொற்புமிகு முக்குறுணி
பாமேவு ஐங்கரனே பார்த்தருள்வாய் — தேமேவு
நாவற் கனிபோல நான்கவிதை செய்வதற்கு
தேவனே நாடோறுஞ் செய்.

ஸ்ரீ தத்துவராயசுவாமிகள்
திருப்பள்ளி யெழுச்சி.

சீரமர் வீரையிற் செனித்திடும் நிதியே
செந்தமி ழிலக்கணந் தேர்ந்திடும் நிம்பையில்
ஏரமர் சங்கத்தி லின்பமாத் தேர்மணி
யேற்றமே வாய்ந்திடு மிறைய வனை
பாரமர் சொரூபா னந்தரின் மருகா
பாரெல்லாம் போற்றிட பண்குருமு னிவுக்கா
ஈர்ங்கடல் சென்றிடும் இன்பமார் தத்துவ
விரையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. 1

சடையாரும் பண்ணவன் றரமா ரடியவர்
சந்ததம் போற்றிட தகுநிதி கலைமுதல்
நடையாரும் ஒழுக்கமும் நட்பொடு கீர்த்தியும்
நல்லவர் சேர்க்கையும் நாடொறு மருளுவாய்
யடையாரும் மன்னவர் பாடித் துதித்திட
பலமொடு யாட்சியைப் பண்பொடு தருமணி
இடையாரு மிறைவியை யேத்திடுந் தத்துவ
விறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

மல்லிகை யிருவாட்சி மாதுளை ரோஜா
மருவாருஞ் சண்பகம் மாட்சியார் தாமரை
பல்வளந் தந்திடும் பச்சையார் வில்வம்
பாருள்ளோர் தான்மகிழ் பரமனார் கொன்றை
கல்லாரம் தும்பைப்பூ கவின்றரும் பிச்சி
நல்லார மாக்கொடு நம்பன் புனைந்திட
எல்லை யிலாமலே யிசைத்திடுந் தத்துவ
விறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. 9

மாமறை யோங்கிட மழைதினம் பெய்திட
வாமமார் வயலெல்லாம் வளமிகு சென்னெலுற
சேமமி குந்திடச் செல்வம் வளர்ந்திட
திறலாரும் பேரின்பஞ் செகத்தினி லோங்கிடத்
தாமமார் பாவலர் தான்களி கூர்ந்திடத்
தருங்கொடை நாடொறுந் தரணியின் மிகுந்திட
ஏமமாச் செய்திடு மின்பமார் தத்துவ
விறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருப்பள்ளி யெழுச்சி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இஃது

காஞ்சீபுரம், வித்வான்

சபாபதிமுதலியாரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

நான்முகன்முதலாநலந்திகழ்மூவரும்
வானவர்குழுவுமறைகளுமுறையிடப்
பூரணன்கருணையிற்பொலிதிருவுருவாய்
மாரணம்பிறப்பதுவகையினையருள்செய
வாரருட்கொம்பொடுமழகுறுகைலையி
லேர்பெறவிருந்தருளிறைகழல்வணங்கி
யப்பெருந்தேசிகனடியிணைபுனைதரு
செப்பருநந்திதன்றிருவடிவணங்கி
நந்திநற்சேவடிநலம்பெறச்சூடிய
வெந்தைநற்சனற்குமாரன்றனையிறைஞ்சி
யாங்கவன்சேவடியழகுறப்புனைந்த
வோங்குநல்வியாதனொண்கழலிறைஞ்சி
யருளிடைவியாதனடியரிற்சிறந்த
தெருளுடைச்சூதன்றிருவடியிறைஞ்சிச்
சிற்பரன்சூதன்றிருவடிபுனைந்த
நற்பெருங்கடவுணாதரையிறைஞ்சி
யவ்வழிவந்தங்கருளினிற்சிறந்த
தெய்வநற்றருலைவச்சித்தனையிறைஞ்சி
யத்தவனடிபுனையழகுறச்சோதிச்
சித்தவேடத்தவன்றென்றிசைவிளங்க
வந்துநற்புலியூர்மகிழ்ந்தினிதிருந்த
வந்தமிழருண்முனியருட்கழலிறைஞ்சி

யாங்கவனருளாலழகுறுகிளையி
லோங்கியமுனிவரனெண்கழலிறைஞ்சி
யழகுறுகிளையிலாரியனடிபுனை
யொழிவறுபரமுனியொண்கழலிறைஞ்சி
யுரைத்தநற்றிருமுனியொண்கழல்சூடிய
திருப்பனந்தாளிறைசேவடியிறைஞ்சி
மாமுனியருளான்மதுரைநன்புஞ்சைச்
சேமநல்வைப்பின்றிருவடியிறைஞ்சிச்
சீர்தருமிறையடிசென்னியிற்புனைந்த
வேர்தருவடமுனியிணையடியிறைஞ்சி
யலகில்சீர்முனிவனடியிணைமுடிபுனை
யுலகுயவந்தோனெண்கழலிறைஞ்சிக்
குருபரனுலகுயவந்தவன்கழல்புனை
திருநடராஜன்சேவடியிறைஞ்சித்
தத்துவன்றிருநடன்சரணவம்புயம்புனை
சுத்தநற்சிவப்பிரகாசநல்லடியிணை
நித்தமுமேத்திநிர்மலமனமுடை.
அத்தனும்சொரூபன் அடியிணைபோற்றும்
றன்னையோர்மொழியினிற்சதுர்பெறவளித்திங்
கன்னையிலன்புசெய்யாரருட்பெருங்கட
லருளாற்குன்றமருட்பெருங்கற்பக
மருளார்மேகமருட்பெருமுழுநிதி
யென்னையும்பொருளாவாண்டவனிணையடி
தன்னை நூறாயிரங்கோடிகால்வணங்கிப்
பெருந்திரட்டாஞ்சிவப்பிரகாச நூலை
யருந்திரட்டாகவறைவனென்றருள்வோன்
மத்துவராயர்செய்மாதவமதனாற்
றத்துவராயனுத்தரணியிலுதித்து
மாவாக்கியப்பொருண்மாமழைபொழிந்த
பாவாக்கியனெனும்பண்டிதர்சிகாமணி

முத்தாந்தர்போற்றுமுதிர்சுத்தசைவச்
சித்தாந்தர்க்குத்திருவாசகம்போ
லொருபொருளேயிவ்வுயிரெலாமுய்ய
விருபொருளாகியெய்தியதெனவந்
தரூபானந்தமனைவர்க்குமுதவுஞ்
சுரூபானந்தச்சுந்தரன்மீதுந்
தவப்பிரகாசஞ்சார்ந்தவர்க்கருளுஞ்
சிவப்பிரகாசச்சிற்பரன்மீது
நாடுதுறையெலாநணுமறைமுடிக்குப்
பாடுதுறையெனப்பண்ணியநூறு
னெச்சமயருமெந்நூலெந்நூலென்
றச்சுருதியிற்கொளவான்றதகான்று
மனுதிகணின்றுமாண்டுங்காணா
வனுதியையங்கையரதநத்தாக்கிச்
சவணமாத்திரத்திற்சச்சிதானந்தச்
சுவணமாக்குறுந்தூய்தாதலானு
மிறவாதியாண்டுமிசைத்திடவெண்ணி
யறமெண்ணான்குமம்பிகைவளர்த்த
விச்சகத்தொண்புரியேழினுஞ்சிறந்த
கச்சியிலுபயகவிகளாஞ்சுத்த
வைதிகசைவவளர்திருக்கூட்ட
வுய்திகொள்குரவரிலொருவனானோன்
குமரக்கோட்டன்கூரருணிறைந்து
திமிரக்கோட்டந்தீர்ந்தமெய்க்குரவனாங்
கச்சியப்பன்கழலையுங்கலையையு
முச்சியிற்கொண்டவனுயர்வழிவந்தோ
னிலக்கணவிலக்கியமிணையில்வேதாந்த
மலக்கணில்சிவாகமவருங்கரைகண்டோன்
சமயம்விசேஷந்தகுநிருவாண
மமைஞானதீக்ஷையினடுத்தவர்பவத்தி

ஞானப்பிரகாசமெல்லாமொழித்து
ஞானப்பிரகாசநண்ணியவருள்வோன்
சண்முகக்குரவன்சான்மாதவத்திற்
றண்மையோடுதித்ததநயனுரே
னண்ணலங்கைலையாமண்டாமடமும்
விண்ணளாம்வகுளமும்வியோமகோத்திரமுஞ்
சாந்தானிகமுநந்திசந்தானமுந்
தேர்ந்தவர்புகழ்சிதம்பரகேத்திரமு
மகோரபட்டாரகனுந்தீக்ஷநாமமு
மகோரசூத்திரமேயாதியாறிரண்டுந்
திகழருணசலதேசிகன்றன்பாற்
புகழுநூலளித்துப்புராதனமாதலா
லெழுத்துச்சொற்பொருளேறியுங்குறைவுறும்
வழுத்தபக்கங்துகையாறுவேண்டாத
வெழிலியிற்பலவாவெழுதாக்கிளவியிற்
பழுதறவச்சிற்பதிப்பித்தளித்தன
னெழிற்கோட்டந்நான்கிருமூன்றுள்ளும்
புழற்கோட்டம்மேபொற்பினதெனவுஞ்
சம்பத்துரேழ்தசநவநாட்டி
னம்பத்தூரேயழகியதெனவு
மேகமிலிரண்டாயிரமெனுநத்தத்
தாகுநீர்நிலவளனுர்ந்திடுபிறவளன்
றழையுமிவ்வூரைத்தானும்வேட்டனன்போல்
விழைசொன்னும்பிகைவில்வேசனென்னக்
கொன்றையந்தொடையான்கொடியிடையொடும்
கொன்றையம்பதியேகோப்பதியெனவும் [வாழ்
பதினெண்மொழியுளும்பைந்தமிழொன்றே
யெதிரிலதென்னவிருநிலம்புகழவுஞ்
சமயமோராறிற்சைவமொன்றே

யமைவிலாமேன்மையதாகியதெனவும்
பல்வளக்கோத்திரப்பண்ணவர்தம்முள்
வில்வமாமுனியேவிசேடவானெனவுந்
தருகற்பகநிகர்தகையினர்தம்முண்
முருகப்பமன்னன்மெய்தவனெனவு
நாற்குலந்தனிற்சூரநதிக்குலமதுவே
மேற்குலமெனவுமேதினிவந்தோன்
பனகந்தாங்குர்படிமுழுதாண்டுஞ்
சனகனதறிவிற்சலியாவறிவினன்
பவபுண்ணியமுயல்பசுக்கள்போலாது
சிவபுண்ணியமேசெய்தொழிலானோன்
செந்தமிழ்க்கெல்லையாய்ச்சேய்க்கிடனய்க்கோ
விந்தனில்வளர்ந்தவேங்கடவரையான்
வாலிநீர்நதிகள்போலாதுவான்சுரபியின்
பாலினீர்பெருகியபாலிமாநதியா
னண்டமெலாமுயவமர்ந்தெண்ணான்கறந்
தொண்டைவாயுமைசெயுந்தொண்டைநன்னா
குடக்கிற்றுகிர்வரைகுணக்கிற்புணரி [ட்டான்
வடக்கின்வேங்கடம்வரும்பெண்ணைதெற்கி
னற்புதமிக்கவரணநான்காகக்
கற்பமுமழியாக்கச்சிமாநகரான்
வெய்யவற்கானூஉவிழைந்துமுகமலர்ந்து
தையலரடிக்குந்தாழ்தருமுவமை
முண்ணிகழ்நாளமுளரிபோலாது
தண்ணியற்கானூஉத்தழைந்துமுகமலர்ந்து
மேலவயவமாம்விழிக்கிணையாயக்
கோல்வளையார்விழைகுவளையந்தொடையா
னற்படைத்தலைவனய்நகுலனிற்செறுனர்
தார்த்தெறநடத்துஞ்சயபரியுடையான்

றன்குலமென் றுந்தழைந்திடப்புரப்பான்
மின்குலஞ்சொரியுமேகவாகனனே
தள்ளருஞ்சிறப்பிற்றரணிவந்தமைக்கு
விள்ளருஞ்சான்றெனவெண்களிறுடையான்
படையுங்கொடையும்பகர்தருவிழாவு
முடையவனிவனெனவொலிக்குமும்முர்சான்
கையுறுமேனையர்கதலிபோலாது
மெய்யுறவெடுத்தமேழியம்பதாகையா
னாழிசூழுலகமேழுந்தமாணையா
மாழியினடத்துமரசர்கட்கமைச்சாய்ப்
பண்ணியகளிற்றைப்பாகரினூல்வழி
நண்ணியநாளுநடத்திடுமாணையா
னெருக்கிவெம்போர்செயநேர்ந்திடுநேரலர்
தருக்கினையொழிக்குஞ்சவளதோரணத்தா
னருணாசலப்பெயரார்ந்து
கருணாசலநியாய்க்கவினுமன்னவனே.

உ
சிவமயம்.
இவை
கைலாசபரம்பரையாகிய திருவாவடுதுறை
ஆதீனவித்வான்

தாண்டவராயசுவாமிகள் பாடியவை.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒப்பரியதத்துவமசிவாக்கியத்தின்பொருளையுள்ளங்
கைநெல்லியெனவொண்புவிக்குக்காட்டு, முப்புவனமும்
புகழும்பாடுதுறைநூலோதறிவினோர்மருவுகாஞ்சிநகர்வள
ருந், திப்பியகுணவருணாசலக் குரவனாலே சீர்மைபெறவே
செய்து தெண்டிரையுடுத்த, விப்புவன மகிழவச்சிற்பதிப்
பித்தா னிருங்கொன்றைவாழு மருணாசலவிந்திரனே.

கட்டளைக்கலித்துறை.

கத்துவராழிசுலவுமிக்காசினிக்கண்ணிலவு
மத்துவராயெங்கண்மாணிக்கவாசகவள்ளனிகர்
தத்துவராயர்சொல்சாத்திரமெங்குந்தழையச்செய்தா
னத்துவராகுலம்வாட்டருணாசலநாயகனே.

உ
சிவமயம்.
இஃது

சாரம். குமரப்பமுதலியார் பாடிய அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நாடுதுறை யெவைக்குமுதாகரணவிலக்கியமென்ன நாவலோர்கள், விடுதுறை யிஃதென்னச்சாதனர் சாத்தியர் கணிருவிஷயானந்தத், தாடுதுறையாமென்னப்பாடுதுறை யினைப்பதிப்பித்தங்கைதந்தான், கோடுதுறை யூர்வாஷிக் கொன்றையருணாசலப்பேர்க்குரிசின் மாதோ.

உ
சிவமயம்.

குருபரம்பரை.

முதலாசாரியர் ஸ்ரீ கைலாசத்தி லெழுந்தருளிய **உமாமகேஸ்வரர்**, அவர்மாணக்கர் - **நந்திகேஸ்வரர்**, அவர்மாணக்கர் - **சனற்குமாரர்**, அவர்மாணக்கர் - **வியாசர்**, அவர்மாணக்கர்-**சூதரிஷி**, அவர்மாணக்கர்- **கடவுள்நாதர்**, அவர்வழிவந்தமாணக்கர் - **திருவூர்ச் சித்தர்**, அவர்மாணக்கர் - **அருள்முனிவர்**, அவர் மாணக்கர் - **தி.ஹர்முனிவர்**, அவர்மாணக்கர் - **பரமுனி வர்**, அவர்மாணக்கர் - **திருப்பனந்தாளார்**, அவர் மாணக்கர்-**மதுரைப்புஞ்சைமுனிவர்**, அவர்மாணக்கர் **வடமுனிவர்**, அவர்மாணக்கர் - **உலகுய்யவந்தார்**, அவர்மாணக்கர் - **திருநடராஜர்**, அவர்மாணக்கர் - **சிவப்பிரகாசர்**, அவர்மாணக்கர் - **சொரூபானந்தர்**, அவர்மாணக்கர் - **தத்வராயர்**.

உ

சிவமயம்.

தத்வராயசுவாமிகள்

சரித்திரச்சுருக்கம்.

பூமிதேவிக்குத் திருமுகம்போலச் சிறந்திருக்கிற தமிழ் நாடு பலவற்றினு மேம்பட்ட நடுநாட்டில் வீரமா நகரத்தில் சற்றேறக்குறைய மூன்னூறு வருஷத்திற்குள்ளாக மாத்துவப் பிராமணருக்குள்ளே யிவ்வுலகஞ்செய்த மாதவ மென்று சொல்ல இரண்டு புண்ணியமூர்த்திகள் அவதரித்தார்கள். அவர்கள் அம்மான்*மருமகன் என்கிறமுறைமையையுடையவர்கள், அவ்விருவரும் வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லவராய் அறிவாசார முதலியவைகளிற் சிறந்தவர்களாய்ப் பிரமசாரியர்க ளாகியேயிருந்து தங்கள் கருமத்தில் வழுவாது நடந்துவருநாளில் வேதாந்த சாஸ்திரம் யாவையும் படித்து ஐயந் திரிவு அறியாமையில்லாமல் அவற்றின் பொருள்களை ஆராய்ந்தறிந் தெப்போதுந் தத்வவிசாரணையும் ஸ்வரூபவிசாரணையுஞ் செய்து வருதலாலும், அவைகளையே எவர்களுக்கும் போதித்தலாலும், பெரியவிருக்ஷந் தோன்றற்கிடனான சிறிய ஆலம் விதைபோல் ஞானங்குரமானவராதலாலும், இவர்களுக்கு அப்பருவத்திலேதானே பூர்வநாமம்போய்த் தத்வராயரென்றும், ஸ்வரூபானந்தரென்றும் காரணநாம முண்டாயின.

இவர்கள், பூர்வ தவக்குறைவால் வந்தவர்களாதலால் ஆத்ம விசாரணை செய்யவேண்டுமென்கிற விவேகமே மேலிட்டாலோசித்தார்கள். அவை யென்னெனில், இம்மையில் யாவரினுஞ்சிறந்த அரசர்கள் வாழ்வுஞ் சிலநாளி

---

* ஸ்வரூபானந்த சுவாமிகள் உடன்பிறந்தாள் பிள்ளை தத்வராய சுவாமிகள்.

லழிந்துவிடும்; அதனால் வருமின்பமும் முள்ளிப்பூவின் றேனையொக்குமென்றும், மறுமையில், இந்திராதிதேவர் பதங்களும் ஆயுண்மிகுந்திருந்து காமாதிதுன்பமுற் றழியுமென்றும், இளமையாதியும் நிலையல்லவென்றும் நினைத்துப் பெண்ணாதி மூவாசையுந்துறந்து சாந்திமுதலாகிய குணங்களைத் தமக்கங்கமாகக்கொண்டு தலையில் நெருப்புப்பற்றிக் கொண்டவன் நீர் தேடுதல்போலவும், மிகுந்த கோடை வெயிலிலகப்பட்டவன் நிழல் தேடுதல்போலவும், அதிதீவர பக்குவமுடையவர்களாய்ச் சனன மரணமொழிக்கவல்ல ஞானாசிரியரைத்தேடி அடுக்கவேண்டிப் பலநாள் பலவிடங்களிலுந் தேடிப்பார்த்துங் கிடையாமையால் மிகவும் வருத்தமடைந்து ஒருநாள் போம்வழியில் ஒரு சிறந்த சோலையில் பெரிய கல்லாலவிருக்ஷத்தின் கீழிருந்தாலோசித்தார்கள். அவையென்னெனில்:— நாம் இப்படித்தேடினால் எத்தனை காலஞ் செல்லும்; ஆதலால் ஒருவர் உத்தரதிசையிலும், ஒருவர் தக்ஷிணதிசையிலும் போய்த்தேடிப்பார்ப்போம்; நமக்குள் எவருக்கு முன்னே ஆசிரியர் கிடைத்தனுக்கிரகம் பெற்றுக்கொள்கின்றோமோ அவரே மற்றொருவருக்கும் ஆசிரியரென்று நிச்சயித்துக்கொண்டு போனார்கள்.

அவர்களில் தென்தேசத்திற்சென்ற ஸ்வரூபானந்த சுவாமிகள் பல தேசங்களிலும் பல ஊர்களிலும் பல வனங்களிலும் பல மலைகளிலும் பல நதிதீரங்களிலும் பல புராதனாலயங்களிலுந் தேடிக்கொண்டு, திருவரங்கமுந் திருவானைக்காவும் காவேரிநதியும் தெற்காக வடக்கே போய்த் திருப்பைஞ்ஞீலியென்கிற சிவஸ்தலத்தையும், திருவெள்ளறையென்கிற விஷ்ணுஸ்தலத்தையும் தன் பாங்கினுடைத்தாயிருக்கிற கோவத்தமென்னும் ஸ்தலத்துக்குச் சமீபத்தில் போம்பொழுது இவருக்கு ஒரு காரணமுமின்றிப் பேரானந்தமும் சரீரத்திலே புளகாங்கிதமும் உண்டாகிக் கைகள்

அஞ்சலிமுகிழ்த்திடக் கண்களில் நீர்பெருகக்கண்டு "நான் தேடிவந்த ஞானாசிரியரிருக்கிற ஸ்தானம் இதுவே" என்று அந்த நகரைப் பிரதக்ஷணமாகவந்து உள்ளேபோய் இவ்விடத்திலே பெரியவர்கள் யாராவது உண்டோ? என்று விசாரித்தார். அவ்விடத்திலுள்ளவர்கள் 'இந்த ஊருக்குப் புறத்திலே நாணற்புதலிருக்கின்றது. அதனுள்ளே ஒரு பெரியவரிருக்கின்றார். அவர் பெயர் *சிவப்பிரகாச சுவாமிகள் என்றும், அவர் ஒவ்வொரு தினத்திலே சாயங்காலத்தில் அந்தப் புதலைவிட்டு வெளியில் வருகிறார்' என்றுஞ்சொல்ல, அவ்விடத்திலேபோய் இவர் காத்துக் கொண்டிருக்கிறபோது, அந்தச் சிவப்பிகாச சுவாமிகள் ஒருநாள் வெளியிலே வந்தார். ஸ்வரூபானந்த சுவாமிகள் நமஸ்காரம் பண்ணி "நெடுங்காலமாயலை கின்ற இச்சனனமரணப் பிரவாகத்தினின்றும் அடியேன் கரையேற ஞானோபதேசம் பண்ணவேண்டும்" என்று பாததாமரையைப் பிடித்துக்கொண்டு முறையிடும் பொழுது, நாம் நினைத்திருந்த அதிதீவிர பக்குவனிவனே யென்று ஆலோசித்து, "அப்பா! உனக்காகத்தான் இங்கே இதுவரையில் யானிருந்தேன்" என்று மேலான மஹாவாக்கியத்தை அநுக்ரகம் பண்ணச், சிரவணாதிகளால் அவ்வநுக்கிரகத்தைப்பெற்றுக்கொண்டு ஸ்வானுபூதியாக வேண்டிச்சமாதிபண்ணிக்கொண்டிருக்குநாளில், வடக்கே தேடிக்கொண்டுபோன தத்வராயசுவாமிகள் அத்தேச முழுமையுந்தேடி ஆசிரியர் கிடையாமல் மறுபடியுந் தென்தேசத்திற்கே வந்து ஸ்வரூபானந்தசுவாமிகளைக் கண்டார். ஸ்வரூபானந்தசுவாமிகளுந் தனக்காசிரியர் கிடைத்ததும் அநுக்ரகம் பெற்றுக்கொண்டதும் பிறவுஞ்சொல்ல, தத்வராயசுவாமிகள் மிகவும் அதிசய

---

* சிவப்பிரகாசசுவாமிகள் பூர்வஸ்தலம் திருவாரூர். இவர் சுத்தவைதீக சைவர்.

மடைந்து ஸ்வரூபானந்தசுவாமிகளை வணங்கிமேலான ஞானுநுக்கிரகம் பெற்றுக்கொண்டு நிருவி கற்பசமாதியி லிருந்து நித்ய நிரதிசயானந்தத்தை அநுபவித்துக்கொண்டி ருக்கின்ற காலத்திலே, பெரியோர்களுக்குத் தாம் பெற்ற பேறு உலகம் பெறவேண்டு மென்கின்ற சங்கல்பம் சுபா வமானபடியால், ஸ்வரூபானந்தசுவாமிகள் திருவுள் ளத்தில் இந்தத்தத்துவராயர் தென்மொழியிற் பாடுதலில் மிகவும் வல்லுனராயிருக்கையால் இவரைக் கொண்டு லோ கோபகாரமாகச் சில சாஸ்திரங்களைச் செய்விக்கவேண்டு மென்று நினைத்து உபாயமாய்க் குறிப்பித்துக்கொண்டுவர, அவர் சதா நிஷ்டையிலிருக்கின்றவரானபடியால் அவருக்கு இந்தக் குறிப்பு மிகவுந் தோன்ருமலிருந்தது கண்டு, இக்கருத்து நன்ருகத் தெரிவிக்கவெண்ணி ஒருநாள் அமா வாசையில் அப்பரங்கனஞ் செய்யவேண்டியவர்போல ஏவ ளாளரைத் "தயிலங்கொண்டுவாரும்" என்று சொல்ல, அருகே நின்ற தத்துவராயசுவாமி அமாவாசையென் கிறதை மனதிலே நினைத்து "அம்" என்ருர். அப்போது ஸ்வரூபானந்தசுவாமிகள் கோபித்துக்கொண்டவர் போல "விதிவிலக்கென்கிற சங்கல்பமுங்கடந்து காலாதீத ராய்நின்ற நமக்கும் விதிவிலக்குண்டோ? நம்மெதிர் நிற்க வேண்டாம் போம்" என்றுசொல்ல, தத்வராயசுவாமி கள் அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய் விளங்குகின்ற சுவாமிகளுக்கும் நான் விதிவிலக்குக்கற்பித்த குற்றத்தால் இனி நானிந்தச்சரீரத்தோடிருத்தல் தகாது. கடலில் விழுந் திறத்தலன்றி இதற்குப் பரிகாரம் வேறில்லை யென்று நினைத்து, ஆசாரியர் சந்நிதானத்தை நோக்கிக்கொண்டே பின்னிட்டபடி நடந்து ஆராமைமேலிட்டுக் கண்களிற் ஜலம் தாரைதாரையாய்ப்பெருகப் பரமாசாரியராகிய சிவப்பிரகாசசுவாமிகளையும், ஆசாரியராகிய ஸ்வரூ பானந்தசுவாமிகளையுங் குறித்து ஸ்வரூபசாக்ஷாத்கார

விலாசத்தை நவநவமாகத் தமது ஸ்வாரூபாநுபூதியின்கண் அநுபவித்தபிரகாரம் பின்னுள்ள ஆத்மகோடிகளும் அவ்வநுபூதியைப்பெற்றுய்யும்படி ஜீவகாருண்ணியத்தினால் தமது ஸ்வரூபாநுபூதி ஆவேசத்தால் ஸ்தோத்திரமாகச் சிவப்பிரகாசவெண்பா-தத்வாமிர்தம் என்னும், இரண்டுடன் திருத்தாலாட்டு, பிள்ளைத்திருநாமம், வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, சின்னப்பூவெண்பா, தசாங்கம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலிப்பா, ஞானவினோதன் கலம்பகம், உலா, சிலேடையுலா, நெஞ்சுவிடுதூது, கலிமடல், அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, அமிர்தசாரவெண்பா என்னும் இந்தப் பதினெட்டையும் திருவாய்மலர்ந்தருளிக்கொண்டு போம்பொழுது அருகில் நின்ற மாணாக்கர்கள் அப்போதைக்கப்போதே அப்பிரபந்தங்களைத் தனித்தனியெழுதிக்கொண்டுபோய் ஸ்வரூபானந்தசுவாமிகள் சந்நிதானத்திற்படிக்கச், சுவாமிகளும் அச்சாஸ்திரங்களில் விருப்பமில்லாதவர்போல் 'மயிருள்ளவள் வாரி முடிக்கிறதுபோல, வாயுள்ளவன் பாடியனுப்புகிறான்'' என்று திருவாய்மலர்ந்து கொண்டிருந்தார். அப்படியிருக்க, இங்கே தத்வராயசுவாமிகள் "ஆசாரியர் தரிசனத்துக்கபாத்திரனாய்விட்டேனே, இனி நான் எந்தச் சனனத்தில் தரிசிப்பேன்'' என்னும் ஏக்கத்தினாலே தாயைக்காணாத இளங்குழந்தையைப்போல அழுது முகம் வீங்கி பாடுதுறையில் திருவடிமாலையைப் பாடிக்கொண்டு கிழுந்திறக்கக் கடலுக்குச்சமீபத்தில் போம்பொழுது, அந்தச் செய்தியை மாணாக்கர்கள் வந்துசொல்ல, ஸ்வரூபானந்தசுவாமிகளறிந்து "குருவுக்குவீங்கியை வரச்சொல்லும்'' என்று கட்டளையிட, அதைக் கேள்விப்பட்ட தத்துவராயசுவாமிகள் தந் தேகவருத்தமுழுதும் நீங்கி

நடக்கச் சக்தியும் பெற்றுக்கொண்டு சுவாமிகளால் அனுப்பப்பட்ட மாணுக்கர்களைப் பார்த்து "கருணாநிதியாகிய சுவாமிகள் மகா அபராதியாகிய என்னையும் வரக் கட்டளையிட்டார்களோ" என்று பேரானந்தமடைந்து, மேற்படி பிரபந்தத்தில் **திருவருட்கழன்மாலை, போற்றிமாலை, புகழ்ச்சிமாலை** முதலானவைகளையும் பாடிக்கொண்டு சிரசின்மேல் அஞ்சலியஸ்தராய்ச் சுவாமிகளுடைய சந்நிதானத்தைப் பார்த்துக்கொண்டேவந்து பிரதக்ஷணம் பண்ணி அஷ்டாங்க பஞ்சாங்கமாக அநேக நமஸ்காரஞ் செய்து முன்னினும் அதிகமாய்க் கண்களில் நீர்பெருக மயிர்க்கூர்ச்செறிந்து பரவசப்பட்டு நெஞ்சமுருகி ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நிற்கும்போது, சுவாமிகளும் "இரு" என்று கட்டளையிட, இருந்து சுவாமிகளின் பணிவிடைசெய்துகொண்டு மிகவும் சந்தோஷமடைந்திருக்கும் நாளில், **சுவாமிகள் தத்வராயர்பாடிய** சாஸ்திரங்களையெல்லாம் பார்வையிட்டுச் சொல்லமைதியும் பொருளமைதியு நோக்கிச் சந்தோஷத்தைத் தனக்குள்ளே யடக்கிக்கொண்டு "இந்தச் சாஸ்த்ரங்கள் மிகக்கற்றவர்க்கன்றி மற்றவர்க்குதவாது" என்று நினைத்துத் **தத்வராய சுவாமிகளைப்பார்த்து** "அப்பா! இந்தச்சாஸ்த்ரங்களெல்லாம் உனக்கே பாடிக்கொண்டனையன்றி உலகத்தாருக்குபயோகமாகப் பாடவில்லையே" என்றருளிச்செய்ய, அப்போது, மடைத்தொழிலாளர்கள் "சுவாமி! அமுது கொள்ள வெழுந்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்யச், சுவாமிகளும் நித்யகர்மங்களை முடித்து அமுதுக்கெழுந்தருளத், தனியேயிருந்த **தத்வராயசுவாமிகள்** ஆசாரியர் திருவாக்கை ஆலோசித்து அப்படியே தாமும் நினைத்து சுவாமிகள் அமுதுகொண்டு வருமுன்னர் எல்லோருக்கும் பிரயோசனப்பட **மோகவதைப்பரணியில்** ஒருபிரகரணமாகச் **சசிவர்ணபோதம்** என்னும் ஒரு

சாஸ்த்ரத்தைச்செய்து சுவாமிகள் திருவடியிலேவைத்து நமஸ்காரம்பண்ணச், சுவாமிகளும் **தத்வராயர்** விரைந்து பாடினதையும் அச்சாஸ்த்ரத்தின் பாகத்தையும் பார்த்துச் சந்தோஷமடைந்தார். பின்னும் **தத்வராயசுவாமிகள்** சில **வேதாந்தசாஸ்த்ரங்களுஞ்** சில **மதசித்தாந்த நூல்களுஞ்** செய்துகொண்டு நிருவிகற்பசமாதியிலிருக்கு நாளில், யாத்திரைசெய்கின்றவராகிய சில ஆராத்தியர்களும், சிலவித்வான்களும் ஸ்வரூபானந்தசுவாமிகளின் சந்நிதானத்தில் வீற்றிருக்கிற **தத்வராயசுவாமிகளின்** முன்னேவந்து "போர்முகத் தாயிரங்களிற்றியானையைக் கொன்ற சுத்தவீரனைத் தலைவனாகக்கொண்டு பாடப்படும் **பரணி** யென்னும் பிரபந்தத்தை வீரமென்பது கனவிலுங் கேட்டரியாத உம்முடைய ஆசான்மேலெப்படி நீர் பாடினீர்" என்றுகேட்க, அதற்குத் **தத்வராயசுவாமிகள்** "நம்முடைய சுவாமிகளும் சிஷ்யருடைய அகங்காரமாகிய யானையைக் கொல்லுதலாற் பாடினேம்." என்று சொல்ல, அதற்கு அவர்கள் " நீர்சொல்லும் அகங்காரயானை கண்ணுக்குப்புலப்படாமையால் ஒவ்வாது; ஆயினும் ஒரு சிஷ்யனுடைய அகங்காரமாகிய யானையைக் கெடுத்தற்கு அநேக நாட்செல்லுமே? இவர் ஏககாலத்தில் ஆயிரஞ் சிஷ்யர்கள் அகங்காரத்தைக் கெடுத்ததெப்படி" என்று வினவ, அதற்குத் **தத்வராயசுவாமிகள்** அநுபவத்திற்காட்ட வேண்டுமென்று பிரதியுத்தர மொன்றுஞ்சொல்லாமல் சமாதிசெய்திருந்தார். **ஸ்வரூபானந்தசுவாமிகளின்** சந்நிதானம் பட்டமையால் வந்த வித்வான்களனைவரும் இராப்பகலென ஒன்றுந்தெரியாமல் மூன்றுதினமளவும் பரிபூரணநிஷ்டையிலிருந்தார்கள். நாலாநாள் **தத்வராய சுவாமிகள்** திருக்கண்விழித்தபின்பு அவ்வித்வான்களும் எழுந்து சுவாமிகளையும் தத்வராயசுவாமிகளையும் நமஸ்காரம் பண்ணி "நாங்களறியாமையினால் ஆக்ஷேபித்தோம்,

தங்கள் சந்நிதானத்தினது விசேஷம் ஏககாலத்தில் பதினா
யிரஞ் சிஷ்யர்கள் நேரிட்டாலும் பரிபாகப்படுத்தத்தக்க
வல்லபமுள்ளது" என்று அவர்கள் பலரும் இப்பிரபந்தங்
களைக் குறித்து ஒவ்வொரு கவிகளைச்சாத்தி பாணுக்கர்க
ளாய் வழிபட்டுப்போனார்கள்.

பின்பு **தத்வராயசுவாமிகள்** உலகோப
காரமாக வேதாந்த சாஸ்த்ரத்திற் குள்ளே சுவானு
பூதிக்கிசைந்து சாரமாயுள்ள செய்யுட்களையெல்லாந்
திரட்டிப், **பெருந்திரட்டு**, **குறுந்திரட்டு** என்னு
மிரண்டு சாஸ்த்ரத்தை அருளிச்செய்தார். இப்படி
யாகச் சுவாமிகளுட னிணைபிரியாமல் இருக்கும்
பொழுது **ஸ்வரூபானந்தசுவாமிகள்** யாதோ ஒரு
திருவிளையாட்டை நினைத்துத் **தத்வராயசுவாமிகளை**
வைத்துத் தாம் பிரிந்து புறப்பட்டுப்போகையில் இவரும்
பின்றொடரச் சுவாமிகளுந் தமக்கு நேரிட்டபடி வழி
யொன்றின்றிக் காடு நாடு மலைகள் முதலான விடங்களிற்
சுற்றித்திரிந்து சமுத்திரத்தின் சமீபத்திற்போயினார்.
தத்வராயசுவாமிகளும் உடனாகவேபோய் **ஸ்வரூபா
னந்தசுவாகள்** கடன்மேல் நடக்கக் கடற்ஜலம் விலகி
வழிகொடுக்க அதைக்கண்டு தாமும் கடலில்நடக்க ஜலம்
வழிகொடாமையால் கரையிலே நின்று பசுவை நீங்கிய
விளங்கன்றுபோலக் கதறித் திக்குகள்தோறுந் தேடும்
பொழுது **ஸ்வரூபானந்தசுவாமிகளுந்** தரிசனங்
கொடுத்துப் பின்பு அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய்
விளங்கினார். அதைக்கண்ட **தத்வராயசுவாமிகள்**
அதிசயமும் ஆராமையுமடைந்து சுவாமிகளுக்குச் செய்ய
வேண்டிய உத்தரகிரிகைகளெல்லா முடித்துச் சுவாமி
களையே நினைத்துக்கொண்டிருந்து பிரிவாற்றாமையாலோ
பேரன்பினாலோ சுவாமிகளையன்றித் தமக்கொரு செய

லின்மையினுலோ தாமும் உடனே பரிபூரண நிலையடைந்தார்.

இவர்களுக்குத் திருவலஞ்சுழியும் வாசஸ்தானம். **சிவப்பிரகாசசுவாமிகள்** சமாதி திருவாரூர் சமீபஸ்தானம். **ஸ்வரூபானந்தசுவாமிகள்** சமாதி திருவண்ணுமலேக்கும் விருத்தாசலத்திற்கும் மத்தியஸ்தானம். **தத்வராயசுவாமிகள்** சமாதி சிதம்பரத்துக்கும் விருத்தாஜலத்துக்கும் மத்தியஸ்தானம்.

இந்தச்சரித்திரம் மேற்படி சுவாமிகளுடைய பரம்பரை மாணுக்கர்கள் அனுப்பின பிரதிகளின்படி பதிப்பிக்கப்பட்டது.

தத்வராயசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

காப்பு.

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள் துதி.

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே—கொடியேனென்
றெண்ணு திமைப்பளவி லிங்ஙனே வீடளித்த
கண்ணு கடைபோகக் கா.

உ

சிவமயம்.

பாடு துறை.

முதலாவது

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

திருவடிமாலை.

கலிவெண்பா.

செழுந்தரணி தன்னிற் றிருவுருக்கொண் டென்னை
யுழுந்துருளும் போழ்தி னுணர்த்த - வெழுந்தருளி
வந்தவடி நாயேன் மனத்தால் வணங்கமதி
தந்தவடி யாளச் சமைந்தவடி - யந்தரத்து
வில்லும் வியன்கனவும் வெண்டேரு நீர்க்குமிழும்
புல்லும் மதிலெழுத்தும் போலவே - சொல்லளவாய்ப்
பொன்று முடற்குள்ள பொல்லாங்கெ லாநினைந்து
நின்று நடுங்கிமிக நெஞ்சழிந்தே - னென்றுணையே
கோற்றேனே மாயைக் குரம்பைக்கூத் தாட்டவினி
யாற்றேனே யென்ன வளித்தவடி - யாற்றலிலாத்
தொண்டனையா ளென்று தொழுது பழவடியார்
தெண்டனொடு விண்ணப்பஞ் செய்யுமடி - கண்டருளித்
தஞ்சமொன்று மில்லாத் தமியேனைத் தன்னருளா
லஞ்சலஞ்ச லென்ற வமலனடி - மஞ்சனஞ்செய்
நீக்தங்கொண் டென்னை யடியவர்த நேயத்தாற்
றீர்த்தமாட் டிக்கொண்ட செம்பொனடி - யாத்தமா
யச்ச மறநம் மடியானென் றூரமிர்த
மிச்சி றரவிசைந்த வீரனடி - விச்சையாற்
கட்டப் பிறவிக் கருவைக் கணமொன்றில்

வெட்டக் கழலிட்ட வீரனடி - கெட்டேனென்
றலம் பனமி லடியேன் மனமுருகக்
கோலம் புனைந்த குரவனடி - சீலமிகும்
பாங்காய நல்ல பழவடியார் தற்சூழப்
பூங்கோயி லுள்ளே புகுந்தவடி - யோங்கு
மிருவர்தே டுற்றவடி யிப்படிகண் காண
வருவதே யென்று மனநெக் - கருவியாய்ப்
பாயாத கண்ணென்ன கண்ணென்று பத்தர்கணம்
வாயார நின்று வழுத்துமடி - காயமுட
னண்ணு முயிரும் பொருளு நயந்துதத்தம்
பண்ணு வித்துக்கொண்ட பரமனடி - தண்ணியவென்
சென்னிமிசை வைத்தவடி சித்தந் திரித்தவடி
முன்னையறி வெல்லா முடித்தவடி - யென்னுருவு
காட்டுமடி கண்ட பொருளெல்லா மென்கண்ணில்
வாட்டி யென்னையே மலர்த்துமடி - கோட்டமற
நம்பத மல்லவிது நான்மறைமா வாக்கியத்திற்
றும்பதங்கா ணென்ற சுரூபனடி - யம்பரமாய்
நின்ற பரவுடலி னேராக வேயென்னை
யின்றி யிடவே யிருத்துமடி - யின்றெனது
மீண்ட விடத்தே விளம்பு மிதுவொழிய
மாண்டவிடத் தில்லையென வைத்தவடி - காண்டவிலா
வல்லை யறிந்தவறி வெங்கேகா ணென்றருளான்
மெல்ல விளம்பிவிழிப் பித்தவடி - தொல்லைமறைத்
தற்பதத்தின் மெய்ப்பொருளாந் தற்பரமா யிச்சகத்தி
னுற்பவத்தை யெல்லா மொழித்தவடி - கற்பிதமாம்
பூட்சி யிரண்டும்போய்த் போதமாய்ப் போகுதலு
மீட்சியு மின்றி விளங்குமடி - காட்சியுங்
கண்ணுகக் காணுங்கண் டந்தவடி கண்ணென்று
மெண்ணாத வண்ண மிருத்துமடி - வண்ணந்தான்
மாமறைக ளோதரிய வாசாம கோசரத்தை

யூமை மொழியா லுணர்த்துமடி - யேமமுற
வாங்கி முழுது மலர்த்தாளி லென்னைமகிழ்
தூங்க வளித்த சுரூபனடி - யீங்கமிர்த
மூறி யகநிறைந்து தித்தித் துடனுயிர்க்கா
ரேறுந்தேக் கிட்டுச் சுடருமடி - தேறித்
தெவிட்டாது நின்றவடி தீப்பிறப்பு மாள
வுவட்டாதென் னுள்ளே யுதித்துப் - பவத்தில்வரு
மூலநடங் கண்டவா றெப்பவே மீட்டென்னை
ஞானநடங் கண்டு நயந்தவடி - யூனில்வரு
மச்சந் தவிர்த்தவடி யங்கைக் கனியாகி
நிச்சங்க மாகி நிகழ்ந்தவடி - பிச்சரைப்போற்
கத்தாமல் வைத்தவடி கண்ணுகி நின்றவடி
வித்தார மெல்லாம் விளைத்தவடி - சித்தத்தி
லெண்ணேது மாய்த்தவடி யென்னைவாழ் வித்தவடி
கண்ணேகண் ணுகக் கரைத்தவடி - யெண்ணுற்ற
காலங் கடந்தவடி காமங் கடிந்தவடி
சீலங் குடிகொண்ட செம்பொனடி - ஞாலமெலா
முன்பிழைக்க வல்லவடி முற்றுந் துடைக்குமடி
யென்பிழைக்குச் சால விரங்குமடி - யன்பினொடு
மூவருந் தேடுமடி மூர்த்தியாய் வந்தவடி
யாவருங் காண விருந்தவடி - பாவியேன்
சென்னிகுடி கொண்டவடி சித்தம் புகுந்தவடி
சொன்னிகழா நின்ற சுரூபனடி - முன்னைவினை
மாள மிதித்தவடி வல்வினையே னைத்திருத்தி
யாள மதித்துவந்த வண்ணலடி - நாளுக்கு
நாளும் புதியவடி நல்லடியா ரோடெனையு
மாளும் படியிசைந்த வையனடி - மாளாவென்
கள்ளத்தை வாங்குமடி கண்ணுகு மானந்த
வெள்ளத் தெனைப்புகுத விட்டவடி - யுள்ளத்திற்
கொண்டகோ ணீக்குமடி கோகனகன் றொழுமடி

யண்டர்கோ னேத்தமிக வஞ்சுமடி - தொண்டரெலாங்
கொண்டு குலவுமடி கொங்கு கமழுமடி
பண்டை நிலையிற் பதித்தவடி - கண்டவர்தம்
பாவத்தை நீக்குமடி பாகொத் தினியவடி
* யாவத் தனமான வம்பொனடி - வீவற்ற
வாதி பகவனடி யாதித் தனைமுதலாஞ்
சோதிக்குஞ் சோதியாந் துய்யவடி - யாதுக்கு
மீதாகி நின்றவடி மேல்கீ ழிலாதவடி
யோதாம லுண்மை யுணர்த்துமடி - பேதாதி
பேத மறுத்தவடி பேச வினியவடி
போதக் கனமாம் புனிதவடி - யாதியு
மந்தமு மற்றவடி யாரணங்க டேடுமடி
பந்தமும் வீடும் படைக்குமடி - சிந்தைக்கு
மப்பாலாய் நின்றவடி யன்பர்க் கணியவடி
யொப்பான செய்யவடி யொப்பிலடி - யிப்பிறவி
மாற்றுமடி தன்னை வழங்குமடி மாதவர்கள்
போற்றுமடி யின்பம் பொழியுமடி - நோற்றிலர்கட்
கின்னலாய் நின்றவடி யென்னுள்ளத் தின்னமிர்தாய்க்
கன்னலாய்த் தேனாய்க் கலந்தவடி தன்னிலைபோய்
வாராது வந்தவடி வாழ்வறவாழ் வித்தவடி
யாரா வமிர்தான வம்பொனடி - தீராவெவ்
வஞ்ச மறுக்குமடி மானங் கடிந்தவடி
நெஞ்ச மறிய நிறைந்தவடி - துஞ்சல்பவப்
போக்குவர வற்றவடி பொன்னனை செய்யவடி
யாக்க மழிவற்ற வண்ணலடி - யாக்கையுடன்
முத்தி யளிக்குமடி மூவா முதல்வனடி
பத்தி வலையிலகப் பட்டவடி - வித்தியா
னுள்ளற் கரியவடி யுண்ணெக் கவருண்ண

* ஆவத்துக்குத்தனமென்பது-ஆவத்தனமென மருவிற்று.

வள்ளத் தமிர்தான வள்ளலடி - தெள்ளூற்ற
வின்சொன் மதிப்புலவோ ரேத்தப் பெருவடியென்
புன்சொ லுவந்த புனிதனடி - யென்சென்னி
செய்த தவமான செம்பொனடி தீவினையேன்
கைதவங் காணுக் கருணையடி - பைதலென
வாவாவென் றென்னை யருட்கண்ணாற் பார்த்தருளி
வாவாவென் றென்றலையில் வைத்தவடி - காவார
வாழ்த்த மனநினைய மாமலர் தூவய்க்கரங்கள்
சூழ்த்தச் செவிக டுதிகேட்பத் - தாழ்த்தத்
தலைதந்த வள்ளலடி தாமரையோ னுண்மை
நிலையும்பர் காண நிகழ்த்த - வலதின்றி
யற்ற பொருளிதுவே யாரணத்தி லாணையே
மற்றில தென்று மழுவேந்த - முற்றுலகிற்
றக்கவர் நால்வரே தத்துவ ஞானத்திற்
பக்குவ ரென்று பகரவரன் - சக்கிரக்கை
யாண்டகை தன்பா லறியாது வாழித்தேர்ப்
பாண்டவனுக் கோதப் பதிணெண்கா - லீண்டுலகிற்
கையின் மணியென்ன யாவர்க்குங் கண்ணளிக்குஞ்
செய்யசரு பானந்தன் செம்பொனடி - மையலாய்க்
கன்று மறுசமயக் கத்திற் கலையாம
லொன்று மொழிவற் றுளவெல்லா - நின்ற
படியே சிவமாக்கிப் பார்த்தென்னை யாண்ட
வடியென்னை யாண்ட வடி. (1)

ஆக கண்ணி - 65

நேரிசை வெண்பா.

வடிவிலா மாயையால் வந்த பவத்திற்கு, முடிவிலா
முத்திப் பொருட்கு - மடியோரி, னீண்ட பெருமா
னிகளமறப் போதமளித், தாண்ட பெருமா னடி.

திருவடிமாலை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இரண்டாவது

சிவப்பிரகாசசுவாமிகள்

திருவருட்கழன்மாலை.

கலிவெண்பா.

திருவார் செழுங்கமலச் சீராரும் பொற்றா
ளருமா முனிவரமரர் - பெருமால்கொண்
டின்னஞ் சுவடொற்றிக் காணாதங் கேதமுற
முன்னை யொருமூவர் தாமுயலப் - பின்னவியற்
பாதகமே செய்துழலும் பாவியே னைப்பொருளா
நாதனுடல் சாத்தி நலந்திகழப் - பேதையேன்
றன்னைவலிந் தாண்டருளித் தாவாத வென்பவத்தை
முன்னமுறு மூலமல மாமாயை - தன்னினொடுஞ்
சேரத் துணித்துச் சிறியேனைத் தானாக்கச்
சீருற்ற கோவத்தைச் சீர்ப்பதியில் - வீரைப்
பெருமான் சிவப்பிரகா சப்பெருமான் பேரா
வருண்மா மகடுறவி யாயுந் - திருமா
மகள்வீறு சாந்தியொடு வாழ்கருணை யன்பாந்
துகடீர் தயைமாதர் சூழ - மிகுஞானச்
சித்தர்கணஞ் சேவிப்பச் சீராரு நல்லன்பர்
பத்தியுட னின்று பரவியிட - வெத்திசையு
மாரணங்க ளாகமங்க ளாத்தர்மொழி யென்கின்ற
*பாரணங்க ளெங்கும் பரந்தொலிப்பக் - காரணந்தான்
யோகாந்த ஞான வுயர்முத்தி யண்டபத்தி
லேகாந்த பீடத் திலிதிருந்து - சோகாந்த
வெங் ||கோல கால மிகப்பெருத்த வெவ்வினையாம்

---

* பாராயணங்களென்பது - பாரணங்களென மருவிற்று.

|| கோலாகலமென்பது - கோல காலமென மருவிற்று.

பொங்கார் மயனெறியிற் போய்நரகி - லங்கே
தலைகீழா வீழ்வேனைத் தன்னருளா கின்ற
வலியாலே தானெடுத்து வன்பாய் - நிலையதுற
நெஞ்சத் தினைவணக்கி நீள்வஞ்சப் பற்றெல்லாந்
துஞ்சத் துகளாகப் பார்த்தருளி - நஞ்சதுறு
மென்கோண் முழுது மெழிற்கணைற் றுன்விழுங்கி
நன்கேது மில்லாதே ஞய்த்தலையி - லன்போடும்
வைத்தவடி வாசாம கோசரமென் றாரணங்கள்
பித்துறுபே ரன்பாய்ப் பிதற்றுமடி - யெத்தவருந்
தேடுமடி தேட்டமெலாந் தீர்க்குமடி திண்ணன்பிற்
கூடுமடி கூடற் கரியவடி - பாடியிடும்
பத்தர்க்கு நல்லவடி பாதகனே னைப்பிடித்து
முத்திப்போ கத்தின் முழுத்துமடி - சித்தத்தை
யாற வளித்தவடி யாசை யறுக்குமடி
யூறு முளத்தை யொருக்குமடி - வேறதற
தன்னை யளிக்குமடி சால வினியவடி
யென்னை யுருக்கியின் பித்தவடி - முன்னையொரு
மூவர்க்கு மூலவடி மூவாது சாவாது
தேவிற் பொலிந்து திகழ்ந்தவடி - தாவற்ற
சுத்தசுக போதவடி சொல்லிற் படாதவடி
பெத்தமொடு முத்தியிற்பே ரின்பவடி - யெத்தியெனை
யாரவென வந்தவடி யாயேனை யாண்டருளும்
பேரருளாற் றன்பெரும்பித் தானவடி - சீரருளா
லெல்லை யிறந்தவடி யென்றுமுள தாயவடி
சொல்லுமனஞ் செல்லரிய தூயவடி - தொல்லைவினை
போகத் துரந்தவடி பூரணம தாயவடி
மாகத் தவருண் மறைந்தவடி - யோகத்தின்
மெய்த்துமுடி வாயவடி மெய்யன்பி லார்க்கென்றும்
பொய்த்தவடி ✿ பூமரபாய் நின்றவடி - நித்தலுமென்
போதபேரவலங் கண்டும் பிசகலறச்

✿ பூமராய் என்றும் பாடம்.

சீரார் திருக்கருணை செய்யுமடி - யோராதே
யென்றுமப ராதமே செய்திடினுந் தான்முனிவை
யொன்று மறியாத வொப்பிலடி - கன்றுமனப்
புல்லினத்தே நான்மறந்தும் போகாமைத் தன்னன்பர்
நல்லினத்தை யேகூட நல்குமடி - யல்லலுறுஞ்
சாதி குலச்சடலச் சங்கற்ப நான்சாடப்
போத மளித்த புனிதவடி - மேதக்க
வெட்டாமி யோகங் களும்பயனுங் கோதெனநான்
விட்டே விளையாட வைத்தவடி - துட்டாய
வென்கொடுமை நெஞ்சத் திருந்தகலா தேயருள்செய்
நன்கதனுன் மிக்கு நயந்தவடி - தன்கருணை
காட்டவெனை யாண்டவடி காயமதாய் மாளுமெனை
மீட்டவடி யுள்ளே விழித்தவடி - யாட்டினொடு
பண்ணாகி நின்றவடி பாவனைதீர்த் தாருள்ளக்
கண்ணாய் மணியாய்க் கலந்தவடி - யெண்ணுதற்கு
நான்மறைகள் கூசுமடி நன்கறியே னேத்தியிடு
மூனவுரை கேட்க வுவந்தவடி - மோனமதாற்
றன்முடிவு கூறுமடி தன்பெருமை பாராதே
யென்னை யிங்ஙனுள விசைந்தவடி - பன்னுமறை
மூலமென வோதுமடி மூடனே னென்புருக்குஞ்
சீலமதாய் நின்று திகழ்ந்தவடி - காலமவை
கண்டவடி காலங் கடந்தவடி யென்னுயிரை
யுண்டவடி யுள்ளொளியாய் நின்றவடி - மண்டுபவக்
காடு சிதைத்தவடி கண்ணாகு மானந்த
நாடுதனை யெனக்கு நல்குமடி - கேடனே
னன்பதறுந் தீங்கொழிய வள்ளூறு முள்ளந்தந்
தின்பமுறவென்னையிங்ஙன் வைத்தவடி - முன்பின்றே
வேதித் திலகுமடி மெய்யரனு பூதியினாற்
சாதித்துக் காட்டியிடுஞ் சம்புவடி - பேதிக்கு
மெய்ப்பொருளு மாயவடி யாவுங்கழன்றவடி

முப்பதமு மோதி முடிந்தவடி - சிற்பதமாய்
நின்றபடி நின்றவடி நேரேயென் கண்குளிர
வொன்றுமடி யோருவமை யற்றவடி - சென்றடையு
மெப்பதமு மாயவடி யேழையர்க்கு நல்லவடி
யொப்புவமை தான்றனக்கா யுள்ளவடி - யெப்பழைய
கோளும் விரகெவையுங் கொண்டவடி கூழையனை
யாளு முவந்தடிமை கொண்டவடி - நாளுமுறு
நண்புசெறு மென்றனையு நாணிவிடா தேபிடித்துப்
புண்செயுமென் புன்மையெலாம் போக்குமடி - கண்டு
கூர வினியவடி கூற வரியவடி [களி
பார்வையற மெய்யே பணைத்தவடி யூரொடுபே
ரின்றி யிலகுமடி யேகாந்த மாயவடி
நன்றினொடு தீங்கதிலா ஞானவடி - வென்றிமிகுந்
தூய துறவினர்பாற் றுன்னுமடி தூவிஷய
மாயமுறி லங்கே மறையுமடி - காயமது
பேணியிடும் பெற்றியரைப் பேயாக்க வல்லவடி
காணுமவை முற்றுங்கண் ணுக்குமடி - நாணமெலாந்
தீர்த்தவடி செத்தினிப்போய் நான்பிறவா வண்ணமெனைப்
பார்த்தவடி பாதாதி கேசமுறச் - சீர்த்த
வருளே பொழியுமடி யாய்வொன்று மில்லா
மருளேனை மாயாமைக் காத்துத் - தெருளாவென்
சித்தம் சிவமாக்கிச் செய்தவெலா மெய்த்தவமா
வைத்தெனைவாழ் வித்துவந்த வள்ளலடி - யெத்திறமு
நாணுக நல்குமடி ஞாலமெலா மானவடி
வாணுடர் காண வருந்துமடி - யூனோ
டுயிருடைமை யானவெலாங் கொண்டவடி யோரேன்
மயலறவென் சென்னிதனின் மன்னி - நயமதுறச்
சென்ற நனவைத் திரித்துத் திரிந்தவிடத்
தோன்றும் விகார மொழித்தவடி - கன்றுமிருள்
காணு வளித்தவடி காண்கின்ற வக்கரியாய்ப்

பேணுமிரு டன்னைப் பிரித்தவடி - மாணுணர்வு
தானாகி நின்றவடி தன்னிற் பகுதியினை
யானா தழித்தழியா தானவடி - தானா
டறிவெங்கு மாயுள்ளா யெல்லா மறிந்து
பிறிவின்றி நின்று பிறங்கிச் - செறிகின்ற
தோற்றந் திதியழிவுந் தன்கணே தோன்றியிட
ஆற்றத்துக் கோவா தொளிருமடி - யேற்றத்திற்
றாணிகழ்ந்த கோளவையுஞ் சாற்றிப் பரன்மிகுதி
யானெனவே யாவளித்து நின்றவடி - மேணிகழ்ந்த
கோளவையுங் குற்றமெனக் காட்டியக் கோண்மழுக்கி
நீளும் பரன்கனவாய் நின்றவடி - மாளவெறு
மூய்த்தவளி காரமதா யோங்குமடி யோதரிதாய்ச்
சுத்தவெதி ரித்தமறத் துன்றுமடி - யத்தி
லறிவயர்வங் கின்மையினா லாய்ந்தற்ற வத்தங்
குறியிலிது விங்கெனலாய்க் கூடி - நெறிமையினிற்
போந்துணர்வாய் ஞாலத்து வேராய்ப் புகுந்துணர்வு
தேய்ந்து செருகியிடுஞ் சீரழிவால் - வாய்ந்தபரன்
றன்சுழுத்தி யாகுமெனச் சுட்டியது தான்கழன்று
நன்பரமே யாகி நயந்தவடி - முன்புகலு
மீரியல்பாய் நின்ற விகுதி பகுதியும்போ
யோரியல்பாய் நின்றங் கொளிருமடி - தீர
வுதயாத் தமனமுமற் றேதவத்தை யும்போ
யிதயாத்த மாகி யிலங்கு - மதுபார்த்துத்
தீர்ந்து கழன்று தெளிவாய் நிரந்தரமா
யார்ந்த வுணர்வுருவ மானவடி - போந்தவித
னிற்றிகழும் விச்சுவமே செய்ததுபா ரென்றருள
* வித்தனையு நானென் றியம்பியிடு - மித்திகழ்வாள்
நின்றபடி நேரே யிதம்வே றெனத்தோன்று
மென்றியல் குற்ற மெனக்கேற்கக் - கன்றலறக்
காட்டுமடி யிவ்வளவுங் காணு முபாதிகளை
வாட்டிய திங்கினித்தான் மன்னிநிகழ் - சேட்டுணர்வின்

* இனவெதுகை.

மேற்கிடந்த மாசறுத்த லென்றுவெதி ரித்தமுந்
* தீர்த்திதமுந் தானாய்த் திகழ்ந்தவடி - பார்த்த
வனிதமுடன் றுனிதமு மற்றொளிரு மம்பொற்
புனிதவடி பூதவுல குண்ட - தனதுசெய
றுனு மிறந்தவடி சாற்றவறி தாயவடி
யான வுபசமன மாயவடி - மோனபதந்
தம்பிரான் வந்து வெளிப்படுமித் தானமென
நம்புமா காட்டி நயந்தவடி - யெம்பரம
தின்றி யெழிறிகழு மெல்லையிலாப் பேரொளியாய்
நின்றபடி நின்ற நியலவடி - யென்றுந்தா
னேத வுலகி னுலப்பில்சுக சாகரமாய்
நீதியது தானாய் நிகழ்ந்தவடி - யீதெனவெ
தானிருந்து காட்டத் தயங்குமூ மைக்குடத்தி [றைந்தே
* னீர்நிறைந்தாற் போனிறைந்து நின்றவடி - தேனி
யெற்புத் தொளைதொறுமங் கேறிமயிற் கால்கடொறு
|| மிக்குத்தித் திக்கும் விமலவடி - தக்க
வொருமையயா லித்திகழ்வெ லாமொன்று சித்திப்
பெருமைபே ரைபுலனு மாரக் - கரவிலா
வெள்ளவெளி யாயவடி மேவுமருட் கண்ணதனாற்
கள்ளமற வெவ்வுருவுங் காணுமடி - தொள்ளைச்
செவிவழிய தின்றித் திகழொலியாய் நின்ற
நவையிலடி நாடற் கரிதாய்ச் - சுவையதுறு
நாவினலன்றி நலமாரத் தித்திக்கு
மோவிலா வின்சுவையா மொப்பிலடி - மேவு
முடற்பரிச மின்றி யொழிவறுபே ரின்பத்
திடப்பரிச மாகித் தெரிவுற் - றுடைக்குமிழான்
மேவு மணமின்றி விரிவொடுக்க மின்றாகித்
தாவின் மணமாய்த் தயங்குமடி - பாவியேன்
சென்னிகுடி கொண்ட வடி தீவினையே னெஞ்சதனின்

* மூன்றுமெழுத்தின வெதுகை. || இனவெதுகை.

மன்னி யிருந்தவடி நான்மறந்துந் - தன்னொழிய
வுன்ன றவிர்த்தவடி யொன்றாகி நின்றவடி
யன்னையினும் தானெனக்கன் பானவடி - நன்னயமா
மன்பர்க் கெளியவடி யன்பதிலா நெஞ்சதுறும்
வன்பர்க்குச் சால வலியவடி - யென்பற்றாம்
வஞ்சத்தைச் சாடுமடி வாராது வந்தவடி
கொஞ்சிட் டுபநிடங்கள் கூவுமடி - தஞ்சமதாய்
நின்றபடி நின்றவடி நேரேயென் மோகத்தைக்
கொன்றவடி யுண்டிலையென் கோண்முழுது - மன்றியு
மாற்றமது வாட்டுமடி வாழ்வறவாழ் வித்தவடி [மென்
போற்றுமடி யாரைமிகப் போற்றுமடி - யாற்றா
தருணினைந்தங் கள்ளூறு மன்பர்தஞ் சிந்தை
வெருளதற மெய்யே பொலிந்திங் - கிருளுமனத்
தென்னைப் பொருளாக வென்போ லுடல்சாத்தித்
தன்னைத் தருந்தம்பி ரான்றனடி - சென்னிக்கண்
வைத்து மனமகிழ்ந்து வாயார நான்வாழ்த்தும்
பித்ததுவாம் பேரன்பே தந்தருளே - னத்தா
சிவப்பிரகா சாபோற்றி சீமானே போற்றி
யவக்கடலு லாழ்வேனை யாண்ட - தவக்கடலே
போற்றி சயசய பல்லாண்டு பல்லாண்டு
போற்றி சயசய போற்*றீ. (2)

ஆக கண்ணி-96.

நேரிசை வெண்பா.

என்புன் றலைமன்னு மின்பத் திருக்கழலை
யன்பொன்றி யேத்த வனவரத - மின்பஞ்செய்
தாண்டானே தந்தருள் செய்யல்லது வேறொன்றையு
வேண்டா மையுமருள்வாய் மெய். [நான்

திருவருட்கழன்மாலை முற்றுப்பெற்றது.

---

* வகையுளி - நீட்டல்விகாரம்.

உ

சிவமயம்.

மூன்றாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

போற்றிமாலை.

கலிவெண்பா.

வானாடர் கோனு மலரோனு மாலோனுங்
கானாடு கின்றநுதற் கண்ணோனுங் - தாநாட
மாட்டார் மதிமயங்கி மாயமறையி னீறுகளுந்
தாட்டா மரைதேடித் தானாற்றச் - சேட்டார்
முனிவரெலாங் காணார்போய் முந்நீரி னுள்ளே
பனிவருங்கா லத்துப் படிந்துந் - துனிபெருகுங்
கோடையினில் வெய்ய கதிருங் கொடுந்தீயும்
* பாடு மெரியப் பதைபதைத்தும் - வாடித்
தலைகீழாய் நின்று தபித்துச் சலமோ
டிலைகாய் கிழங்குகாற் றெய்திற் - றலமாகக்
கொண்டயின்றுங் காடுங் ○ குமிடு மிடமாகக்
கண்டுயின்று மிங்ஙனே காயத்தைக் - கொண்டு
படக்கடவ வெத்தனையும் பட்டாலும் பட்டு
விடக்கடவ ராக விதித்திங் - கடற்புலன்க
ணீத்தார்க டங்க ணினைவுங் கடந்தகமே
பார்த்தார்க் கதிதூரப் பட்டிருண் - டேத்துவார்க்
கின்ன தெனவறிய வில்லா வியல்பதனா
லன்ன வரையு மயர்ப்பித்துத் - தன்னுருவ
மாணென்ன வன்றி வலியென்னப் பெண்ணென்னப்
பேணும் வகையின்றிப் பேசுங்காற் - காண
வொருவழியு மின்றி யுரையுணர்வுக் கெட்டாத்

* பாடு=பக்கம்-உம்மையிடைச்சொல். ○ குமிடு=குன்று.

திருவடிவை யுள்ளங்கைச் சேர்ந்த - தொருகனிபோற்
கண்டோமென் பார்காட்சி யாவையுங் கைகடந்
துண்டோ விலதோவென் றோர்வுமறத் - திண்டாடப்
பண்ணிப் பரம கருணையினு லோருருவாய்
நண்ணித் திருஞான நாட்டத்தைத் - திண்ண
மளித்திடினு மன்பர்க் ககமதிப்பின் முன்வந்
தொளிப்படுமா போலே யொளித்தும் - வெளிப்படா
யெம்பிரா னென்றிரந்தும் யாவர்க்கு மெய்தரிய
தம்பிரா னுயேற்கித் தாரணிக்கே - செம்பொற்
கழல்காட்ட வாகமெலாங் கண்ணுகக் காணே
னழல்காட் டியமெழுகே யாகே - னெழில்போற்ற
வாயுா யிரங்காணேன் மாருப் பெருங்களிவந்
தோயா துருகு முளங்காணேன் - காயம்
புரையுள்ள வெல்லையும்போய்ப் பூரிக்கக் காணேன்
கரையுந் திறந்தானுங் காணேன் - றிரைகொண்ட
வாழிபோ லார்த்தோங்கி யாகாயத் தோடுநில
னேழையே னுலித் தெழுந்துவிழேன் - வாழே
னுருகேன் பெருகே னுடையானே யுன்னிப்
பருகேன் பரவேன் பதையே - னொருகால்
விழிபனியேன் வெய்துயிரேன் மெய்சோரேன் விம்மே
னொழிவறவே நின்றுருக்கி யூனைக் - கழிவுறவே
பாரேன் பயந்துள்ளம் பாதாதி கேசமுற
வேரேன் வியவேன் விதிர்விதிரே - னீராய்க்
கரையே னெனதுடலங் கம்பிக்கக் காணேன்
விரையேன் மலர்ப்பதத்தே வீழே - னுரையுங்
குழறேன் றழுதழுத்துக் கூத்தாடே னெஞ்சைக்
கழறேன்கண் ணீர்சொரியக் காணே - * னுழரே
னுளியே யடியே னுருவியப்புங் காணேன்
களியேனுன் செய்யும்வகை காணேன் - றெளிவிலே
னுற்ற வறிகிலே னத்தா கழல்போற்றி

* உழறேனென்றும் பாடம்.

தோற்று சுரூபச் சுடர்போற்றி - நாற்றிசையுங்
கீழ்மேலு மெங்குங் கிளரொளியா யப்புறம்போய்ச்
சூழ்மேவி நின்ற சுடர்போற்றி - யூழ்மேவு
காயங் கரைவித்த கண்போற்றி காற் * றியமான்
ரோயந் தரைவிண் சுடர்மூன்று - மேய
வருவித்த வல்லபம் போற்றி யவைமாற்
றொருவித் தகம்போற்றி யுன்னைத் - தெரிவித்த
வாபோற்றி நின்னை வளைவோ ருளம்விட்டு
நீபோக் கிலாத நிலைபோற்றி - தீபத்
தொளியின் றெளிவாய வோருருவம் போற்றி
களியொன் றியகழல்கள் போற்றி - யெளிவந்து
பேயேனை யாண்டு பிழைபொறுத்தென் பேதைமையை
நீயே தவிர்க்கு நெறிபோற்றி - தாயேயென்
றந்தையே போற்றி தமியேனை யாட்கொண்ட
வெந்தையே யீசா விறைபோற்றி - பந்த
மறுத்தானே போற்றி யடியேன் பிறப்பை
வெறுத்தானே போற்றி வினையான் - மறுத்துன்
றிருவருளைக் காலெனது சித்தந் திரித்த
வொருவிரகே யுத்தமனே போற்றி - பருகமிர்த
மானனே போற்றி யடிநாயே னெஞ்சிடையே
தேனூகித் தித்திக்குஞ் சீர்போற்றி - யானு
ரவனியின் வந்தாள வாற்றுகிலேன் போற்றி
சிவனயன்மா லாந்தேவே போற்றி - தவமிலியே [ட்கு
னென்செய்தேன் போற்றி யிறைபோற்றி யெப்பொரு
முன்செய்தா னேமுழுது நீபோற்றி - நின்செயலிங்
காரறிவார் போற்றி யனைத்துமா யல்லாத
பேரறிவே போற்றிவெறும் பேயேற்குப் - பாரறியத்
தந்தாய் மலர்ப்பாதந் தம்பிரா னேபோற்றி

---

* இயமானனென்ப தியமானெனக் கடைக்குறை விகாரமாயிற்று.

சிந்தா குலந்தவிர்த்த சீர்போற்றி - கொந்தாருந்
தாளிணைகள் போற்றி தரிக்கிலேன் காண்போற்றி
யாளெனையுங் கொள்வதழ கோபோற்றி - மாளாமே
காத்த கழல்போற்றி நாயேன் கவலையெலாந்
தீர்த்த விழியின் றிறம்போற்றி - வார்த்தைவெறு
மொன்றுலே யெண்ணிறந்த வூழிவரு மென்பவத்தைக்
கொன்றனே போற்றி குறிபோற்றி - பொன்று
மிதமோ டகமேவு மென்மயலை யாய்த்த
மதஞான வாரணமே போற்றி - பதகக்
கலையோ தலைவலைகள் காண்டற் கரிய
நிலையேயென் னின்மலனே போற்றி - சிலைபோலு
மென்னெஞ் சினைநெகிழ்த்த தென்செய்த வாபோற்றி
முன்னஞ்செய் தாய்மூர்த்தி யேபோற்றி - யின்னந்
தெளிகிலேன் போற்றி தெளியாத வென்னை
* விளிகிலேன் வித்தகனே போற்றி - யளிபவர்த
முள்ளத் தமிர்தே யுடையானே யோபோற்றி
தெள்ளத் தெளிவே செயபோற்றி - கொள்ளக்
குறைவிலா வின்பக் குணக்கடலே போற்றி
யிறைவனே யென்னுனைக்கேன் போற்றி - முறையோ
கைம்மாறு காணேன் கருணைப் பெருங்கடலே [நான்
யம்மானே போற்றி யடிபோற்றி - பொய்ம்மாயந்
தீர்த்தாய் பிரானே பிரானே செயபோற்றி
காத்தாய் கருணு கரபோற்றி - மூர்த்தியே
மூலமே போற்றி முழுதழிய வுள்புகுந்த
கோலமே போற்றியெனைக் * கோப்பழித்த - சீலத்தின்
வித்தகமே போற்றி வினையேனை நின்றருக்கு
முத்தமனே போற்றியுடை யாய்போற்றி - பத்திக்
கடலா மடியவர்முன் காசினிமேன் மாய
வுடலா னதைநானென் றுள்ளி - யடலார்

* பிறவினை தன்வினையில் வந்தது. * கோப்பு=கூட்டம்.

புலனெறியே போவேனைப் புண்ணியநீ யாள்கை
நலனதுவே நாயகனே போற்றி - சலமதிபோ
னின்று குலைகுலையு நெஞ்சந் திரித்தனிர
கொன்று மறியே னுரையிறந்த - குன்றமே
போற்றி புனிதாநின் பொற்கழலே யெப்பொழுதுஞ்
சாற்ற வளித்த சதுர்போற்றி - தோற்றமெலா
நீயேகாண் போற்றி நினைவணங்கா தாரெல்லாம்
பேயேகாண் போற்றிவெரும் பித்தனே - னாயேனான்
சொல்லும் வகையறியேன் சோத்தெம் பிரான்போற்றி
கல்லு மனங்கரைத்த கண்போற்றி - யல்லும்
பகலு மடியேனை யாண்டவா பார்மேற்
புகலும் வகையருளாய் போற்றி - சகலமு
முன்னிற் பிறந்திறக்க வொன்றிற் பிறந்திறவாத்
தன்னந் தனியேநின் றாள்போற்றி - யென்னைப்பி
லென்னையாட் கொண்ட விறையே முறைபோற்றி
முன்னையாய்ப் பின்னாய் முழுதுமாய் - மன்னும்
பொருளாய பூரணனே போற்றிதாள் போற்றார்க்
கிருளா யிருப்பவனே போற்றி - யருளேது
மற்றேன்காண் போற்றி யடியே னடையவுனைப்
பெற்றேன் பிழைத்தேன் பெருமானே - சிற்றின்பம்
வேண்டாவேண் டாபோற்றி வெவ்வினையே னுள்ளுருக்கி
யாண்டானே போற்றி யடிபோற்றி - தூண்டுசுடர்ச்
சோதி துறந்தோர் துணையே கழல்போற்றி
யாதி யறிவே யருள்போற்றி - பேதையேன்
றேழாநின் செம்பொற் றுணைமலர்த்தாள் கானாநான்
வாழேன்காண் போற்றி மதிபோற்றி - யேழையே
னாற்றுகிலேன் போற்றி யருளாய் கழல்போற்றி
தேற்றமெனக் குன்சே வடிபோற்றி - போற்றி

சுரூபானந் தச்சுடரே யென்றுணையே போற்றி
திருவேயென் செய்தவமே போற்றி - கருவாய
மூலமே போற்றி முடிவே யடிபோற்றி
ஞாலமே விண்ணே நலம்போற்றி - தூலமே
நுண்மையே போற்றிமிகு நுண்ணுணர்வோர் தங்கருத்தி
னுண்மையே போற்றி யொளிபோற்றி - கண்யேவிக்
காண்பதெலா நீயொழியக் காணேன் கழல்போற்றி
பூண்பதினி யுன்பொற் கழல்போற்றி - யாண்பெணலி
யல்லானே போற்றி யடியேன் பிழைபொறுக்க
வல்லானே போற்றி மதியிலேன் - பொல்லாதே
னென்றறிந்து மாட்கொண்டாய் போற்றிநீ யெவ்விடத்து
நின்றறிந்த நின்மலபோ தம்போற்றி - யொன்று
மறியே னுடையா யடைக்கலநான் போற்றி
சிறியே னிடர்சிதையாய் போற்றி - குறியேது
மில்லாத வின்பப் பெருங்கடலே யேத்தினர்க்கு
நல்லா யெனையா ணயம் போற்றி - பல்லாண்டு
போற்றி சயசய பல்லாண்டு பல்லாண்டு
* சீர்த்திற மேதுந் தெரியாதேன் - றோற்றியவா
விண்ணப்பஞ் செய்தவிது வேதங்கள் கண்டுதுதி
பண்ணப் பெறுதமலர்ப் பாதத்தே - நண்ணுமே
யென்போல வெல்லாப் படியாலுங் கீழெனக்கு
முன்போ ருயிரில்லை முற்றுணரிற் - பின்பு
முளதாகா திப்பரிசே யுள்ளேனை யாண்ட
ㅇ பளகாவென் பாக்கியமே போற்றி - யுளகாலங்
கொண்டாடி நாவுன் குணம்பரவ நின்கோலங்
கண்டார நாயேன்றன் கண்ணிரண்டு - மண்டாநின்

---

* மூன்றுமெழுத்தினவெதுகை.

ㅇ பழகாவென்பது-பளகாவென எதுகை நோக்கி வந்தது.

கீர்த்தியினை யெப்பொழுதுங் கேட்டென் செவியுவப்ப
மூர்த்தி கழலே முடிசூட - வேத்துதற்கு
வானவருங் காணாத மாணிக்கப் பாதமலர்
ஞான மணம்பருக நாசியெனு - தூனடைய
வுள்ளமாய் நின்றுருக வோருடம்புங் கண்ணுறைகி
வெள்ளமாய் நீர்சொரிய நான்வியப்ப - வள்ளலே
யுன்னடியா ரேவற் றொழிலுவந்து நான்செய்யப்
பொன்னடிதா போற்றி புகழ்போற்றி - யின்ன
மதுவே யிரக்கின்றே னாயிரங்கால் போற்றி
யிதுவே பெறிலடியே னென்றுங் - கதியேது
மில்லாப் பிறவியிலே யென்றும் பிறந்தாலும்
பொல்லாதென் றீதே புரிபோற்றி - கல்லாக்
கயவேனை யாண்ட கருணைக் கடலே
செயபோற்றி செம்பொற் கழல். (3)

ஆக கண்ணி 88.

3-வது, போற்றிமாலை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நான்காவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

புகழ்ச்சிமாலை.

கலிவெண்பா.

திருநாமம் போற்றுந் திறமறியேற் கிந்த
விருநா னிலத்தி னிடையே - யொருநாம
மோருருவ மொன்றுமிலா வுன்மேனி காட்டவருஞ்
சீருடைய செம்பொற் றிருவடியா - யாரமிர்தே

தித்திக்குந் தேனே தெளிவிலா நாயேற்கும்
பத்தித் திறமிருக்கும் பண்பளித்தாய் - முத்திக்
குடையானே யென்னையாட் கொண்டானே யெண்டிக்
குடையானே யென்னையுடை யானே - கடையானேன்
மாளா வகைவந்த வள்ளலே மெய்ப்படவே
யாளா மடியவர்கட் கன்பனே - சூளா
மணியே மரகதமே மாற்றிலாச் செம்பொ
னணியே யெனக்கணியை யானாய் - இணியவெறும்
பொய்யு மிருளும் பொருந்து மனங்கரையச்
செய்யு மருட்கட் செழுஞ்சுடரே - மெய்யன்பா
லாளான நல்ல வடியார் பிழையென்றுங்
கேளானே யென்னுடைய கேளானே - மீளார்க்குத்
தோன்றானே தோற்றி யளித்தழிக்குஞ் சோதியுரு
மூன்றானே யோரிடத்து மூன்றானே - வான்றீகான்
மண்ணலாய் நீரலாய் மாமலர்த்தாள் சூடாதார்க்
கண்ணலாய் நாயேனுக் கண்ணலாய் - பெண்ணலா
யாணலா யன்றி யலியலா யென்றனக்குங்
காணலாய் வந்த கருணையே - நாணிலா
தென்னையு மாண்டருளு மெந்தையே யென்மனமாங்
கன்னையு மாறு கடைக்கணித்தா - யன்னையினு
நல்லானே வேண்டியவா நான்செய்ய முத்திதர
வல்லானே யென்றனக்கு வாய்த்தானே - சொல்லோடு
செய்திமன மொவ்வாத தீமையேன் செய்பணியுங்
கைதவமே யென்றறியக் கல்லானே - மைதீர்ந்த
சோதி யுருவே சுரூபானந் தச்சுடரே
யாதி யுடனடுவீ றற்றானே - நீதியா
மேலானே கீழா மடியேற்கு வீடளித்த
காலானே நாயேன்றன் கைப்பொருளே - நாலான

வேதங்க ளேமுதலா மெய்ந்நூல்க ளாலுன்றன்
பாதங்கள் போற்றறிய பண்புடையாய் - வாதங்கட்
கெட்டானே முன்னூல்க ளெண்ணுகின்ற வெட்டுருவத்
தொட்டானே சிட்டருளத்தமிர்தே - கிட்டானே
விண்ணோர்க டங்களுக்கு மேதினிமே னீதியிலேன்
கண்ணார வந்தருளுங் கார்முகிலே - பண்ணார்
மொழியார் விழிவலையான் மொத்துண்டு நாயே
னழியாமைக் காத்த வரசே - யொழியாதே
யெப்பொருட்கு மெவ்விடத்து மெக்காலத் துங்கலந்த
*செப்பொருளே யெப்பொருட்குஞ் சேயானே யப்பொ
கப்பொழுது மாராவமிர்தே யடியடைந்தார்க் [ழுதைக்
கெப்பொழுதுந் தித்திக்கு மின்சுவையே - செப்பரிய
பூவோன் முதலாகப் புல்லீறு பல்லுருவாய்
நீவேறு பட்டாய் நிராமயனே - யாவேறு
பால்போ லொருதன்மைப் பட்ட பரம்பொருளே
நூல்போ யுணர்வரிய நுண்ணுணர்வே - வேல்போலுங்
கண்ணார்தம் பார்வையாற் கட்டுண்டு கள்ளமுறும்
பண்ணார் மொழிகள் பலவுங்கேட் - டண்ணாந்து
நிற்கு மதியிலியே னேயமிலா னெஞ்சென்னுங்
கற்கறையச் செய்ததிருக் கண்ணனே - நற்கமலப்
பாதந் தொழவறியாப் பாவியேற் குன்னறியும்
போதந் தரவந்த புண்ணியனே - யேதங்
கெடுத்தானே கேடிலா நின்பாதங் காட்டி
யெடுத்தானே யென்னா ருயிரே - தடுத்தாண்டு
கொண்டானே யேதுங் குணமிலே னென்றறிந்துந்
தொண்டாகக் கொண்ட சுடரொளியே - கண்டா oரொன்
றில்லாத தீங்கரும்பே யாவர்க்குங் கீழேனுக்
கல்லாதா ருள்ள வறியானே - பல்லுயிரு

---

* செம்பென்பது - செப்பென வலித்தல் விகாரமாயின.

o ஒன்றுமென்பதின்-உம்மை விகாரத்தாற்றொக்கது.

மீன்றானே யேழையேன் கண்ணொழிய யாவர்க்குந்
தோன்றாது நின்ற சுரூபனே - மூன்றாய
காலமே காலங் கடந்திடமே யெப்பொருட்கு
மூலமே யாவு முடிந்திடமே - கோலங்
கரியாய் வெளியாய்நீ செய்யாய் கருத
வரியா யெளியா யனந்த - விரிவே
யொடுக்கமே பற்பலவா யோதுகின்ற லோகத்
தடுக்கமே யவ்வுலகுக் காணி - யடுத்தவடி
வாகும் பளிங்கேபோல் யாதினுக்கு மவ்வவையாய்
நீகுன்றி லாத நிறையொளியே - யோகொன்றி
லொட்டானே யொன்றறியா வுன்மத்தன் கையிலகப்
பட்டானே யெட்டாய பல்லுயிரே - யெட்டா
வகலமே வண்மையின்யற் றண்மையே யெண்ணுஞ்
சகலமே யொன்றாநீ தானே - பகலிரவொன்
றில்லா விரவியே யிவ்வண்ணத் துண்ணுருவைச்
சொல்லாதே நான்காணச் சொன்னவனே - யெல்லாமாய்
நின்றானே யொன்றுபலா நின்மலனே துன்மனத்தி
லொன்றானே நீமுடிவி லொன்றானே - குன்றா
வொளியானே யென்னை யுவந்தாண்டு கொள்ள
வெளியானே சால வெளியாய் - தெளியாதேன்
வெற்றவெறும் பொய்யேன் மெய்யடியார் போலுன்சீர்
கற்றுப் பிதற்றுமது காதலொடுங் - குற்றமெனக்
கொள்ளா தெனக்குங் குரைகழறந் தாட்கொண்டு
விள்ளாதென் னுள்ளிருக்கும் வித்தகனே - யெள்ளா
வறிவே யறிவடங்கு மாலயமாய் நின்ற
செறிவே யெலாங்கடந்த தேசே - பிறிவதறத்
தேசாய மேனி தெளிந்தடைந்தோர் சேர்ந்தமைந்த
வாசாம கோசரமே மற்றெவைக்கு - நீசான்றாய்

நின்று யடியேற்கு நீயளித்த கண்ணதனு
லொன்ருகப் பார்த்தளவி லுன்னையலா - தின்றி
யிருந்த தினியடியே னேதாமென் றென்று
திருந்து புகழுன்னைச் செய்வேன் - பொருந்தவுனை
யாதி யிமையோர்க ளவ்வுலகின் றிவ்வுலகிற்
போத முனஞ்செய்த புண்ணியத்தா - ருதன்
றரணி மிசையதனிற் ருளடைந்தார் சன்ம
மரண மறவருள வந்து - கரணங்கட்
கெட்டா வொளியை யிதுவென்று கண்காணு
மட்டாக்கு மென்று வரநினைந்து - கிட்டாராய்
நன்மையான் மிக்கவர்க ணன்றுணங்க நாடரிய
தன்மையான் றன்னைத் * தரவென்னக் - கெண்மையாற்
றன்னு லவத்தை பலவாகத் தான்பாவித்
தென்னு லனைத்து மிலவாக்கித் - தன்னுகத்
தன்னுலே யென்னைத் தனதுருவே தானுக்கி
யென்னுலே தற்றுதித்த வென்னனை - முன்னுன
வென்னரச னென்னப்ப னெம்பெருமா னென்றென்று
நின்னரிய பொன்னடிக்கே நின்றிறைஞ்சி - யுன்னரிய
வீசனே யெந்தையே யாவர்க்குங் காண்பரிய
தேசனே யென்றென்று செப்புவார் - நேசமொடுன்
பாதம் பணிவார் பரம்பரனே யென்றிசைப்பார்
வாதங்கட் கெட்டாத வாழ்வென்பார் - போதத்தா
லாய்தற் கரிய வறிவென்பா ரென்னவலங்
காய்தற்குத் தோன்றுங் கனலென்பார் - மாய்தற்கே
வல்லேனை மாளா வகைகாக்க மண்ணில்வரு
நல்லோனே யென்று நலங்கிளப்பார் - பல்லுயிர்க்குங்

---

* தரவெனக்கென்பது தரவென்னக்கென வொற்றில்வழி யொற்றை யுண்டாக்கியது.

கோன்றானே யென்பார் குருபரனய் வீடருளுஞ்
சான்றோனே யென்று சதுரழிவார் - தோன்றுபெருஞ்
சோதியே யென்பார் சுரூபானந் தாவென்பா
ராதியே யென்பா ரகமகிழ்வார் - நீதியழிந்
தார்ப்பா ராற்றுவா ரரலிப்பார் கோலத்தைப்
பார்ப்பார் மலர்ப்பாதம் பற்றுவார் - வேர்ப்பார்
விழுவார் தொழுதெழுவார் விழுவார் விம்மி
யழுவா ரதிசயிப்பா ராவார் - வழுவாம
லிப்படிநீ யெப்பிறப்பு மாளி லெழில்வீடாஞ்
* செப்பதமுந் தீதென்று செப்புவா - ரெப்பொழுதும்
போற்றுவார் நல்ல புகழ்மாலை கொண்டடிமே
லேற்றுவா ரென்செய்வே மென்றுரைப்பா - ராற்றே
முடையானே யென்பா ருரைமறப்பார் யார்க்குங்
கிடையானே யென்று கிளப்பார் - கடையேனைத்
தொண்டாகக் கொண்டருளுந் தூயோனே நாயடியேன்
கண்டானே யென்று களித்திடுவார் - கொண்டுகொண்
டேத்துவார் கும்பிடுவா ரெந்தாய்நின் கோலத்தைப்
பார்த்துவாழ் வார்நின் பழவடியார் - நாத்தழும்பப்
போற்று மவருட் புலையேனை யும்வைத்துச்
|| சீர்த்த திருமேனித் திறங்காட்டிச் - சாற்றுமறை
நாடும் பரம்பொருளாய் நான்றெளிந்து பக்தியுடன்
பாடும் பரிசுபணித் தருளித் - தேடுகின்ற
விண்ணோர்கள் புண்ணியநீர் மெய்விரும்பா தன்னுடைய
கண்ணீரா மஞ்சனமே காதலித்துப் - பண்ணாரும்
வேதமுதல் வெவ்வேறு போற்றிசைத்த மெய்ம்மாலை
பாத மணியாதிப் பாரதனி - லாதமிலி

* செம்மென்பது, செப்பெனவிகாரமாயிற்று.
|| சீர்த்தவென்பது, மூன்றுமெழுத்தினவெதுகை.

நாயேனை நீயாக்கி நானோதும் பாமாலை
யாயாம லாதரத்தோ டாங்கணிந்து - தேயமெலா
மாக்குந் திருப்போ னகமமுது செய்யாதென்
ஞக்கு முயிரை யமுதாக்கி - நீக்கின்றி
நின்று யிதுநினையே னெஞ்சுருகே னுள்ளழியே
னுன்றாள் பணியும் வகையுணரே - னென்றுகப்
பாரே னுனையடியேன் பாவியேன் வையமெலா
மாரேனீ யாண்ட வருளுரையே - னூரூர்போய்ச்
சாற்றே னகமகிழேன் சம்பிரமத் துன்பாதம்
போற்றேன் புகழ்ந்து புகழ்ந்துரையே - னாற்றேனான்
செய்யும் வகையறியேன் றீவினையேன் சேவடிசேர்ந்
துய்யும் வகையருளா யுத்தமனே - பொய்யன்றி
மெய்யேநான் செய்கின்ற விண்ணப்பங் கேட்டருளி
யையே யருள வதுவேண்டுந் - துய்யதிருப்
பாதந் தொழுவென்கை பார்மிசைமேல் வந்தாண்ட
நாதன் றனைத்துதிக்க நாமனமுங் - கேதமறச்
சிந்திக்க வின்னருளைச் செய்யதிரு மேனியைக்கண்
பந்திக்க வென்புன் றலைபரனே - வந்திக்க
வென்று முரைப்ப ரெழிலடியார் யானதனி
லொன்று முரைக்க வுளத்தெண்ணே - னென் - பொன்றுங்
கடையெலாங் காய்பசியை யஞ்சுதலா னாயேன்
விடயமே மெய்விரும்ப லுற்றேன் - கொடுவினையேன்
மாயவிட யத்தே மயங்கா வகையருள
றீய தெனிற்சமிக்கச் செய்தருளல் - காயந்தான்
வீய வருளல் விரும்படியார் சிந்தையகத்
தாய பெரும்பத்தி யாங்கருள - னீயருளிச்
செய்யா தொழிதியேற் றீவினையேன் போய்நரகுக்
கையா வொருவ னெனவமைவேன் - மையகத்தா

ருன்னடியே னேதேனு மானு லுனையிகழ்வா
ரென்னுடைய நீநெஞ்சை யாரரிவார் - பொன்னடிகள்
கூடும் பரிசு குறித்தருளி மற்றவைகொண்
டாடும் பரிசெனக்கு மன்பருளிக் - கோடுமனன்
போகுந் திறமருளிப் புண்ணியனே நின்னுருவே
யாகுந் திறனே யருள். (4)

ஆக கண்ணி 87.

4.வது, புகழ்ச்சிமாலை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐந்தாவது,

சிவ சிவ சங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அளவி றந்தது வருள்சிவ சிவசிவ
அகநி றைந்தது வடியிணை சிவசிவ
வுளமி றந்துயி ருணர்வொடு பரமற
வொளிரு கின்றது சிவசிவ சிவசிவ
களவு துன்றிய கனமல னுளகிறை
கழல்கொ ளன்பது கரையில சிவசிவ
தெளிவி னன்குறு தெளிதரு மனுபவ
திதிதி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (1)

உபநி டங்களு முவமையில் கலைகளு
மொருமை யிங்குற வறைதரு மொருபொரு
ளபய நன்குற வருளிட வுருவுகொ
டதுந டந்தது சிவசிவ சிவசிவ

வுபய வின்பமும் மூவகையு மொழிவர
    வொளிரு கின்றது சிவசிவ சிவசிவ
நிபம தொன்றற நிகழனு பவதிதி
    நிகரி றந்தது சிவசிவ சிவசிவ. (2)

வகையி றந்தது சிவசிவ சிவசிவ
    யனமி றந்தது சிவசிவ சிவசிவ
வகம தொன்றிய வனுபவ திதியமிர்
    தளவி றந்தது சிவசிவ சிவசிவ
தகுவ தன்றுள வடியவர் திரளொடு
    சலனை வஞ்சனை யெனையுமொர் பொருளென
விகமெ மூந்தரு ளிடலது கருணையி
    னெலையி றந்தது சிவசிவ சிவசிவ (3)

ஒளிரு நன்கழ றுதிசெய வரியந
    லுயநி டங்களு மொருவிர கறிகில
துளப னன்குறு மயன்முத லிமையவர்
    * தொடர்வு மஞ்சுவர் சிவசிவ சிவசிவ
யளிய தன்சழ லெளிதினி லளவரு
    மதிச யங்கொடு துதிசெய வெனையருள்
வளநி னைந்தென துளமுக விறைகழல்
    வருசு தந்தர வலிசிவ சிவசிவ. (4)

அளவை கொண்டுந விறைகழ லடைதர
    வலம ருங்கல ருளவலி சிவசிவ
வளமில் வன்கலு மிவருள மதில்வசம்
    வருதல் சங்கைய திலைசிவ சிவசிவ
வளர வன்பது விரசுழி யடியவர்
    மதியி லங்கிடு மிறைகழல் சிவசிவ

* தொடரவுமென்பது தொடர்வுமென இடைக்குறை விகாரமாயிற்று.

களவ நெஞ்சுடை யெனையுந லடிமைகொள்
கருணை யங்கடல் சிவசிவ சிவசிவ. (5)

உருகு நெஞ்சுடன் மயிர்புள கிதம்வர
வுரைத ளர்ந்தழு துவகைசெ யடியவர்
பருகு மின்பம திறைகழல் சிவசிவ
பகலொ டிங்கிர வதுமிலை சிவசிவ
திருகு வன்புற மெனதுள மிதுதிகழ்
திருவு ளஞ்செய்து செறிவிட மிதுவென
வருத லென்செய்த படிசிவ சிவசிவ
வளமை யென்புகல் வதுசிவ சிவசிவ. (6)

நடலை கொண்டிர வொடுபக லறமிக
நடுந டுங்கிடு மெனதுள மதுதனை
முடலை வன்பிணை யுடலழி பொருளுயிர்
முழுதை யுங்கொடு சிவசிவ சிவசிவ
கடலை யின்பந லமிழ்தினை யெனதுற
கரத லந்திகழ் மணியென வருளிய
படியி தென்செய்த படிசிவ சிவசிவ
பரம பண்டித னருள்சிவ சிவசிவ. (7)

ஒருக ணந்துய ரறும்வகை யதுவற
வுகளும் வன்பவ வுததியின் மடிதரு
மிருக ணின்றிய வுறுசெவி டுரையுமி
லிழிசெய் வன்பிண வெனையுமொர் பொரு
வருத ருந்திரு வருள்சிவ சிவசிவ [ளென
வடிவு கொண்டவ லபமிது சிவசிவ
* வருள்க ணன்றியொர் பொருளிலை சிவசிவ
வமல னென்செய்த படிசிவ சிவசிவ. (8)

* அருள்கண் வினைத்தொகை.

உளம தொன்றிய வொருநிதி சிவசிவ
வுடனி கழ்ந்திடு மொளியது சிவசிவ
வளவி றந்தந லமிழ்தது சிவசிவ
வகில மின்றிய வருள்சிவ சிவசிவ
வளம்வி ளம்பிட விரகிலே சிவசிவ
வணம தொன்றிடும் வகையிலே சிவசிவ
வெளிதி கழ்ந்தில கியதுதி சிவசிவ
விகிர்த னென்செய்த படிசிவ சிவசிவ. (9)

கருணை யம்புய முகமலர் சிவசிவ
கருணை யங்கட விருவிழி சிவசிவ
வருணை யந்திடு மடியிணை சிவசிவ
வழகு துன்றிய வடிவது சிவசிவ
விருணை யந்திடு மிடருறு பிறவியை
யெறியு மெந்தைதன் மறமது சிவசிவ
திருந டன்றன தருள்சிவ சிவசிவ
சிவநி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (10)

சிவசிவசங்கீர்த்தன முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஆறுவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

துவாதசநாமசங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேச வாதிமறை நாலு மோர்விரகு
பேசி லாமைநனி பேசு பாதநம
கூச வானவர்கள் கூற யானுனடி
கூறு யானுனருள் கூரு கோலநம

தூச வாபரண மார மாலைதரு
சோபை மாதருட றாய்தில் பாதவரை
கேச வாதியென வேச வாய்மையருள்
கேச வாயநம கேச வாயநம. (1)

வேறு

ஆராய வேதமுடி வானாத பாதநம
வாசாபி சாசமற வேயாளு பாதநம
சீராய வானவர்க டேவாதி தேவநம
தேனாரு பாதமலர் சீராக வோதுதொறு
நீராய வாணவரை நேர்காணா பாதநம
நீதான தாகுமென நேரோது மாசில்பொரு
ணாராய ணாயபத மாநாட வோதிநம
நாராய ணாயநம நாராய ணாயநம. (2)

வேறு

வாத வாதரறி யாத பாதநம
மாகர் நாடரிய வேக பாதநம
வோது வாரறிய வேத நாலுமன
மோர்வு றாததென வோது பாதநம
சீத வாதவழல் சேரு மாதவர்கள்
சேரு மாறனடி தேரு மாறருளி
மாத வாவிலழி வேலை யாளுநம
மாத வாயநம மாத வாயநம. (3)

வேறு

தாரம் போதுபொரு டானென் றோதிநம
தாரம் பாலர்பலர் சார்பென் றோதிநம
வீரம் போதுதலை மீதந் தாளுநம
வேகம் போதிலெரி மாகங் காலவனி
நாரம் போதகனு மாவிங் கோதிநம
ஞானம் போயழிய நாசஞ் சேரியம
கோரம் போகவேலை யாளுங் கோல நம
கோவிந் தாயநம கோவிந் தாயநம. (4)

கட்ட மாம்வினை கைத்த தாணம
கத்தும் வாதியர் கைப்ப டாய்நம
விட்ட மானவர் பத்தி யாய்நம
வெற்றி யாளவல் வித்த காநம
வெட்டு மாவுரு வத்த னேநம
வெட்டொ ணுவரு வத்த னேநம
வெட்ட மாவர விட்டு வாய்நம
விட்டு வேநம விட்டு வேநம. (5)

வேறு

பிறைசூடு வோனுமரி பிரமாவு மாதிநம
பெருவான மாதிநில வரைநாச காரிநம
துறைகூறு வாதருள மிருளான பாதநம
சுரூபாவெ ணுவுருகு மவர்காணு சோதிநம
வறைகூவி நாயனைய வெனையாளு பாதநம
வமரேச ராலுமறி வரிதாய பாதநம
மறைசூடி காபரண வணியான பாதநம
மதுசூத னயநம மதுசூத னயநம. (6)

வேறு

புரையற்றி யாவையினு நிலையுற்ற பாதநம
புகழுற்ற தோறுமுடல் புளகித்து ணேயமொரு
கரையற்ற மாதவர்க டமைகைத்த லாமலக
கனியொக்க நாடிமிகு களியுற்ற பாதநம
வுரையற்ற தாயுமறை யுணர்விற் படாததென
வொழிவற்ற சோதிவர வழியிட்ட வீரநம
திரையற்ற வார்கலிய தெனவைத்த பாதநம
திரிவிக்ர மாயநம திரிவிக்ர மாயநம. (7)

வேறு

சோம னுதிசுடர் பூமு னயபொரு
டோமி லாதவுயிர் தோறு மேவிநம
நாம நாடுருவம் யாவு மாகியொரு
நாம ரூபமறு நாத பாதநம

தாய்மு ஞகிவரு சார்பி யாவுநின
தாள லாதறிவி லாத தாபதர்கள்
வாய்ம ஞலயம்வி டாத சோதிநம
வாம ஞயநம வாம ஞயநம. (8)

வேத ராகியுடன் வீடு சேரும்வகை
மேவு மாதரவி ஞர்க ளாயகில
பூத ராலும்வழி பாடு மேவுமிரு
போதெ ஞவுமுரை யாடு மாயநம
மாத ராதலம வான நாடர்தொழு
மாக ராசர்பத மாய்வி லாமையிலே
சீத ராதரவில் வீத ராகரறி
சீத ராயநம சீத ராயநம. (9)

வேறு

கழல்சூடு வாரிதய கமலால யாயநம
கலிகாலன் வாயின்மணி யிடுகால காலநம
வழல்சேர்மு னேயழியு மெழுகாக வேயுருகு
மடியார்க டாமறிய வுளதான பாதநம
குழல்சேரு மாறின்மொழி மடவார்கள் காதன்மிகு
கொடியேனை யாளவொரு குருவான கோலநம
வெழில்சேரு மாமுனிவர் தொழுமாதி நாதநம
விருஷிகேச வாயநம விருஷிகேச வாயநம. (10)

சித்தரா ஞர்களறி சிற்பிரகா சாயநம
செற்றமார் வாதின்மயல் செற்றதா டாளநம
மத்தரா யோதுபத கத்தில்வா தேயொழிய
மற்றிலா தாரமருள் வைத்தமா மாயநம
நித்தமா வேவல்செய்து நிற்கவே ராதுனடி
நித்தமா மேவல்செய்து நிற்கமா லாகுமதி
பத்தரா ஞர்கள்பெறு பத்மபா தாயநம
பத்மநா பாயநம பத்மநா பாயநம. (11)

வேறு.

ஆழதை தியவனி யாகாச மாகிநம
வானு நீமுழுது மாகாத சோதிநம

சிழத வாகனன்மு னும்வானு ளோர்பரவு
தேவேச ரானுமறி வாகாத தேசநம

மா * ழது நான்மறைகள் வாசாம கோசரமென்
வாடாத பாதமலர் வாயார வோது ० தொறுந்

தாழது காரமென லாகேசர் சார்புநம
தாமோத ராயநம தாமோத ராயநம. (12)

கட்டளைக்கலித்துறை.

கேசவனாராயணன்கிளர்மாதவன் கேடொன்றிலாத்
தேசமர்கோவிந்தன்விட்டுமதுத்திரிவிக்கிரமன்
வாசமுன்வாமனன் சீதரன்மன்னுமிருடிபத்ம
னசமிருமோதரனுருவாய்நின்றநாயங்களே.

ஆருவது, துவாதசநாமசங்கீர்த்தனம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஏழாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

நமஸ்கார சங்கீர்த்தனம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மயக்குறு மாயையி னல்விழி மறைத்தலி னலறி யேன்வழி, துயக்குறு நீள்வினை யாகிய் துயர்க்குழி நானணு காவண, மியக்கற வேயரு ளாம்விழி யெனக் கரு ளாலரு ளாயுறு, தியக்கற வேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (1)

---

* முதுவென்பது - மூதென நீட்டல் விகாரமாயிற்று.

० தொறுமென்பது - தொறுவென முற்றும்மை விகாரத் தாற்றொக்கது.

கணத்தினி லேபவ மாகிய கடற்றுயர் போயழி யாவிடப், பிணத்தினை யேனழி யாவகை பிடித்தெனை யாள்பெரு வேதிய, குணத்தினை யேதுமி லாயருள் குறித்திடு சீரடி யார்தம, தெணத்தினி லேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (2)

இருக்கொடு மால்பிர மாதிக ளினைத்தய ராவுற வாடிடக், கருக்குழி யேசர ணாயுழல் கடைப்புலை யாமெனை யாளிட, வுருக்கொடு தானெறி ரேமனி யுளத்தினி லேகல வாவுறு, திருக்கற வேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (3)

நடத்தின னேயுல கோடுயிர் நவிற்றிடு பேதமு மாயவை, கடத்தின னேவினை யாடிடு கருத்தினை யாரறி வாரெனை, யடர்த்திடு மாயையி னாருயி ரறப்பறி யாவுள மேமனா, திடத்தின னேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (4)

இளைத்திட மாதவர் தாமின மிகத்தினின் மாணுடனா யெனை, வளைத்தரு ளாம்வலி யாலுற வணக்கியென் மாமயல் வேரற, விளைத்தலி லாவினை வாகிய வீழுப் பொருளேயடி யாரவர், இளைத்திடு மாரமிழ் தேதிகழ் சிவப்பிர காசந மோநம. (5)

கதற்றத வானல மேதுமில் கலைக்கட லூடலை யாவகை, யிதத்தொரு மாமொழி யால்வெறு மிமைப்பொழுதேமுடி வோதியென்,மதத்தெழு மாமன மாகிய மருட்கருவோடழி வாம்வகை, சிதைத்துள மேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (6)

வகுத்தனை வான்முதல் பூதமு மயக்குறு மூனதும் வேறெனப், பகுத்தவை தோறுளை யாயொரு பகிர்ப்பதிலாத பராபர, தொகுத்துல கோடுயிர் தேர்பர துவக்கினை யானனா காவகை, செகுத்துள மேதெளி வாய்திகழ் சிவப்பிர காசந மோநம. (7)

மறுத்தன ஞானன தாரருண் மருட்டிற மாமதி கேடதிற், பொறுத்திட லேபெரி யோர்கடன் புரைத்திற மேதுமி லாவகை, யறுத்திணை யாரடி நீழலி லமைத்தழி யாவறி வாமுனைச், செறித்திடு வாய்தெளி வாய்திகழ் சிவப்பிர காசக மோகம. (8)

அருத்தியி னோடடி யார்பணி யமைத்துள நாளடி யேனினி, கருத்துரை காயமு நேர்படக் கலக்கற வேசெயு மாறரு, ளொருத்தியை யாகம தாவமைத் தொருக்கிய யோகுணர் வாயெனைத், திருத்திய தேவர்க டேவநற் சிவப்பிர காசக மோகம. (9)

விரித்தனை வேதமொ டாகமம் விளைத்தனை போகமும் வீடதுந், தரித்தனை யாவையு மாயவை சதுர்ப்பட வேகல வாவணம், புரித்தனை நீபரி பூரண புலத்தய ராவழி வேனுயத், திரித்துள மேதெளி வாய்திகழ் சிவப்பிர காசக மோகம. (10)

7-வது நமஸ்காரசங்கீர்த்தனம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எட்டாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

போற்றிசங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருவுருவிற் பிறந்தடியேன் கழியா வண்ணங்
கருணைவடி வாய்வந்த கழலே போற்றி
யுருகுமனத் தடியருட னெனையு மாண்ட
வுண்மையனே கழல்போற்றி யுடையாய் போற்றி

பொருவதறத் திகழொளியா யுள்ளத் தூறும்
பொற்புடைய பேரமிர்தே புனிதா போற்றி
தெரிவருநற் றேவர்கடந் தேவே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (1)

முன்னவனும் முதனடுவீ றின்றி நின்ற
முழுமுதலே யடிபோற்றி முனியே போற்றி
யென்னையுமோர் பொருளாக வாண்டு கொண்ட
வெல்லையிறிருக் கருணையனே யிறையே போற்றி
பன்னுமறை யீறுகளோர் கோடி யாலும்
பரிசிதென வரியபரம் பொருளே போற்றி
தென்னவனே சயபோற்றி தேசே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (2)

பிறிவதுவா யுலகதனி லநந்த பேதப்
பின்னமதாய்ப் பிணக்கிறந்த பெரியோய் போற்றி
குறியதிலா வானந்தக் குன்றே போற்றி
குரைகடலே யடிபோற்றி குரவா போற்றி
மறுவதிலா மரகதமா மணியே போற்றி
வள்ளலே வைப்பேயென் வாழ்வே போற்றி
செறிவதுவே சயபோற்றி தேசே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (3)

என்றுமொரு படியாகி நின்றே யிந்த
வுலகுயிரா கித்தழைத்த வெந்தாய் போற்றி
பொன்றுமுடம் பளவதுவா யுழல்வேன் றன்னைப்
பூரணமா வேதித்த புனிதா போற்றி
குன்றலிலா மெய்ஞ்ஞானக் கோவே போற்றி
குரைகடலே யடிபோற்றி குறியே போற்றி
சென்றடையாப் பதமளித்த சிவமே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (4)

ஒப்புனக்கு நீயேயா முணர்வே போற்றி
யோங்கிமையோர்க் கறிவரிய வொளியே போற்றி
யிப்பிறப்பை யறுத்திடுவா னேழை யேற்கே
யெளிவந்த பெருமையனே யீசா போற்றி
யப்புறத்துக் கப்புறமா யனுக வொண்ணு
வதிதூர மேபோற்றி யணியாய் போற்றி
செப்புதற்கு நாவொன்று மறியேன் போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (5)

மாறுத பத்தியினுக் கெளியாய் போற்றி
மதியிலேன் றனையாண்ட மைந்தா போற்றி
வேறேது மில்லாத வினையே போற்றி
வித்தகனே யடிபோற்றி விமலா போற்றி
யாறுத பேருவகைக் கண்ணீ ரன்ப
ரகம்விட்டோ ரடிநீங்க வறியாய் போற்றி
தேறுகா ருண்ணின்றுந் தெளியாய் போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (6)

அறிவேது மில்லாத கடையே னுத
வறிந்தருளி வைத்தெனை யாண்டாய் போற்றி
குறியேது மில்லாநல் லடியார் செல்வக்
கோதில்குலத் தெனைச்சேர்த்த குரவா போற்றி
முறியாத வானந்த மூறு வெள்ள
மூலமே போற்றியருண் முகிலே போற்றி
செறியாத செறிவேயென் றெளிவே போற்றி
சிவப்பிரகா சக்கனியே போற்றி போற்றி. (7)

எல்லாமா யீறின்றி நின்றாய் போற்றி
யேதுமிலா வென்னையுமாட் கொண்டாய் போற்றி
கல்லாமை யடியேற்குக் கல்வி யெல்லாங்
கடந்தபெரும் பதமளித்த கண்ணே போற்றி

யல்லாதொன் றில்லாத வறிவே போற்றி
யத்தனே போற்றியரி யானே போற்றி
சொல்லாலீ தெனவரிய சுகமே போற்றி
சுரூபானந் தக்கனியே போற்றி போற்றி. (8)

இன்னிசையா யியலாகிப் பயனாய் நின்ற
வின்னமிழ்தே போற்றியிணை யிலியே போற்றி
மன்னியமா னுடனாகி யன்பர்க் கெல்லாம்
வாழ்வறவாழ் வளித்தாண்ட மணியே போற்றி
யன்னையிலு நல்லன்பா யருளானாயே
ஞழாமைக் காத்தெடுத்தாட் கொண்டாய் போற்றி
துன்னியநற் பேரின்பச் சுகமே போற்றி
சுரூபானந் தக்கனியே போற்றி போற்றி. (9)

போற்றுமவ ருளத்தமிழ்தாம் பொன்னே போற்றி
பூரணனே போற்றிபுரா தனனே போற்றி
வேற்றுவிகா ரங்களெலாந் தீர்த்தாட் கொண்ட
வேதியனே விண்ணவனே விமலா போற்றி
சாற்றியமா மறையோடு மூவர் காணாத்
தத்துவனே சயபோற்றி தலைவா போற்றி
தோற்றமெலா மாய்நிகழுஞ் சுடரே போற்றி
சுரூபானந் தக்கனியே போற்றி போற்றி. (10)

8-வது, போற்றி சங்கீர்த்தனம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஒன்பதாரவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

திருநாமசங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமாலுஞ் சேவின்மிசைத் திகழ்வானும் பூவின் மிசைச், செறிவானுஞ் சீர்பெருகு மறைநாலுந் தேடியின மருமாலங் காயயர வடியேனென்றுகவென, தகவேநின் றாமிழ்த மிகமேவும் பாதநம, வெரிமாகங் காலொடுயிர் தரைநீரென் றாழ்மதியே, னிருநாலங் காகியவை யலவாகுங் கோலநம, துரிசாமென் றீயவினை யறநாளுங் கூரவருள், சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (1)

பலவாயொன் றாகிநிகழ் பரமானந் தாயநம, பரவாநின் றார்கள்பரு கமிழ்தாகும் பாதநம, மலவாகந் நீர*வென தலைமேவும் பாதநம, வலிதாநெஞ்சூடுருக வருவாயுன் பாதநம, வுலவாவன் பாலுருகி யுடையாயென் றேலமிட, வுரியார்கண் காணவரு மொளியாருங் கோலமொரு, சொலவாலென் பாலருள விசைவாயுன் பாதநம, சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (2)

மதியாதுன் பாதமலர் மருவாவென் பாவிமன, மருவாநின் றாமிழ்தம் வளராநின் றுய்பெருக, விதியாதென் றேதவினி யினியாய்நின் காருணிய, வியல்போவென் றேதிலல திறைவா வெஞ்சாதமுழு, நிதியாயன் பாயெ

---

* என் என்பது எனவென வகாரச்சாரியை யிசைநோக்கி வந்தது.

னது னிறைவாயன் போடுபக, னிசிதானெஞ் சானதுக வருகாநின் றேகழல்க, டுதியாநின் ருரொழிய வறியாய் நின் பாதநம, சுரூபானந் தாயநம சுரூபானந்தாயநம. (3)

கனியேயென் கோபெரிய களியேயென் கோகடவு, ளமிழ்தேயென் கோவரிய கதியேயென் கோவினிய, தனியேயென் கோவடியா சரணேயென் கோவெனது, தவமேயென் கோவெனது தலைவாவென் கோமுனிவர், முனியேயென் கோவென்முழு முதலேயென் கோகருணை, முகிலேயென் கோவிறைவ முறையோவென் கோவெனது, துனியேரும் பார்வையருள் சுகமேயென் கோவருள்செய், சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (4)

உலகாய்நின் றுய்விர வியுயிராய்நின் றுயலகி, லுணர் வாய்நின் றுயடைய வுடையாயென் றுலொளிசெய் திலகா ருன் கோலமல தெதுதானுண் டாய்நிகழ்வ, திதுதானன் றுருமென வெதுவேறுண் டாமிறைவ, கலகாய்நின் றுவு மிது கலகாநின் சீரலது, கதிவேறுண் டாகமதி கருநாசென் றாயமுடி, *துலகாநின் றுளலது சுமைவாதன் பாகினிலே, சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (5)

குறையாதொன் றுனுமற நிறைவாகும் பாதநம, குறியாநின் சோதிதரு குரவாநின் பாதநம, சிறையா வென் றீமனமு ளுறைவாய்நின் பாதநம, சினமார்வந்தீர வருள் தெளிவாகும் பாதநம, மறையாலங் கோர்முனிவர் கணமாகஞ் சேரமரர், மதியாலுன் றுளில்வழி படுமாநின் றுயுமறு, துறையாலுஞ் சார்வரிய சுடரேநின் பாதநம, சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (6)

வழுவாவன் பாலினிய மனனுல்வந் தார்மதுர, மொழி யாலன் றுனமது மலராலுன் றுள்கடொழு, தெழுவாரிங்

---

* துலகவென்ப திடைக்குறை - அர்த்தம் துலக்கமுள்ளவன்.

காதரவொ டிறைவாவென் றோலமிட, வெழிலாருந்
தீமெழுக தெனவேநின் றுவலுட, னழுவாரிந் த்ராதியர
னயன்மாலங் காகவருள், வலியாருங் காணும்வகை யடி
யேனுன் றுளிணைக, டொழுமாவந் தாளுமென துணையா
கும் பாதநம, சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (7)

அழலாலுண் டாயகட லதுவாகுந் தீயபவ, மதிலே
நின் றுழுமெனை யருளாலன் போடரிய, கழலாகுஞ் சீர்
பெரிய கரையேவந் தேறவருள், கனியேநின் கோலமல
ரடியேகண் காணவரு, ளெழிலாருஞ் சீரடிய ரடியாலங்
கேவுதொழி, லினிதாமன் போடுமென சிரமேகொண்
டாருமிது, தொழிலாநெஞ் சோடுநின தடியேனுங்கூட
வருள், சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (8)

உரையாடுந் தோறுமென துளமானந் திரதிசயமொழி
யா தன்பாயுருகி விழியாறங் கோடிகிரு, திரையாய்வந்
தாலுமென செயலாலன் றீதொர்செயல், சிறியேனென்
றுலுமிது தெரியேனந்தோ வருள்செய், புரையாதொன்
றுலுமறு புலையேனெஞ் சாரும்வகை, புகுதாவெஞ் சாம
லுழல் புலமாகுந் தீயமிகு, * துரையாவுந் தீரவெழு சுடரா
கும் பாதநம, சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (9)

அறவாநின் பாதநம வறிவாநின் பாதநம, வமலாநின்
பாதநம வருளேநின் பாதநம, இறவாநின் பாதநம செறிவே
நின் பாதநம, சிவமேநின் பாதநம, வுறவாநின் பாதநம
வுயிரேநின் பாதநம, வுணர்வேநின் பாதநம, வொளியே
நின் பாதநம, துறவாநின் பாதநம, சுகமேநின் பாதநம,
சுரூபானந் தாயநம சுரூபானந் தாயநம. (10)

9-வது, திருநாமசங்கீர்த்தனம் முற்றுப்பெற்றது.

* துரை - வேகம்.

சிவமயம்.

பத்தாவது,

மகாதேவம்.

கலிவிருத்தம்.

தேறுமைய துற்றேதினி கற்போலவன் னெஞ்சுற், றுறுவெனை யாராவமிழ் தந்தோசெய்த தென்று, னீறுயெழ வன்பாசமே நெஞ்சார நிறைந்தே, மாறுத மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (1)

பற்றேதையு மற்றுரவர் நிற்கப்பழு துற்றே, யற்றே னென வாராவமிழ் தந்தோசெய்த தென்றுன், றுற்றா நிறைந்தேசுக சிற்சாகர மாயே, வற்றுத மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (2)

ஆசைக்கட லுற்றேயழி வேனைப்பொருளாவந், தாசற்றநல் லாராவமிழ் தந்தோசெய்த தென்றுன், றேசுற்றென துள்ளேசுக சிற்சத்தது வாயே, மாசற்ற மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (3)

குடியாவடி யோமாமெனை யாட்கொண்ட தனக்கே, நெடிதாகிய வன்பாயிட நித்தன்செய்த தென்றுன், படியேது மிறந்தேபரு காநல்லமிழ் தாயே, வடிவாய மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (4)

முட்டாநிய மத்தேனலன் முத்திக்குற முற்றும், விட்டேனல னற்றேனலன் வீரன்செய்த தென்றுன், கட்டாமிரு பாதிக்கறை யற்றுர்கரி மேலா, மட்டாய மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (5)

விதியார்கலை மேவும்மலை யின்றாயொழி வின்றா, யித மோடக மல்லானெனை யந்தோசெய்த தென்றான், கதியா யொளிர் கண்ணாயென தெண்ணேது மிறந்தே, மதியாய மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (6)

* எழிலுற்றலை யின்றாயலி யோனிக்கதி தோறு, மழலுற்றழி வேனைப்பர னந்தோசெய்த தென்றான், பொழி வுற்றுல கெங்குப்பூர ணப்பூரண மாயே, வழுவற்ற மஹா னந்த மஹாதேவ மஹாதேவ. (7)

அற்றார்த மகத்தேயமிழ் தச்சாகர மாயே, வற்றாதவ ளத்தானெனை யந்தோசெய்த தென்றா, னற்றாயினு மிக்கார நலத்தானுவ மத்தான், மற்றேது மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (8)

கருவுற்ற பவச்சாகர முற்றேகழி வுற்றே, வெருவுற் றழி வேனைப்பர னந்தோசெய்த தென்றா, னுருவற்றரு வற்றேயெ னுளத்தேயமிழ் தானான், மருவற்ற மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (9)

முந்தாவம ரர்க்கும்மறி வொண்ணானடி யார்பா னந் தாத நலத்தானெனை யந்தோசெய்த தென்றான், றந்தா ளிணை தந்தானுயிர் கொண்டாளொரு தானாய், வந்தாரு மஹானந்த மஹாதேவ மஹாதேவ. (10)

10-வது, மஹாதேவம் முற்றுப்பெற்றது.

* எழில் - வலி.

உ

சிவமயம்.

பதினொராவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

அருட்கழல் விளக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புகழ்மி குகனலி சிறக்கவோ புவியகம் விளைவு பெருக்கவோ, மகிழ்தரு மூவகை யுயிர்க்கெலாம் வளமிடை யறமிக வைக்கவோ, தகுமறை மறையவர் மிக்கதா பதர்சுரர் பசுவின முற்றெலா, மிகமிகு பெருவள முய்க்கவோ விறை கழ லடியர் விளக்கலே. (1)

மனுநெறி யுலகில் விளக்கவோ மவுனரு * ளுலகின் முழுத்தவோ, நினைவரு முலகி லுயிர்க்கெலா நிலவிய விதம தளிக்கவோ, வுனவரு முயிர்க ளுளத்தெலா மொழிவரு புத்த முணர்வொளிர் விக்கவோ, வெனஇறை கமலமலர்ச் செய்தா ளெழில்பெற வடியர் விளக்கலே. (2)

அருளற மெவையும் விளக்கவோ வறுசமயமு மெய் விளக்கவோ, பொருணெறி யெவையும் விளக்கவோ பொழி லவை முழுதும் விளக்கவோ, வெருளறு சிவம தெறித்து நேரிலகிடு மியல்பு விளக்கவோ, வெருளறு கமல மலர்ச் செய்தாள் விரைவுட னடியர் விளக்கலே. (3)

தொலைவினை முழுது மறுக்கவோ துயருறு பிறவி தொலைக்கவோ, வலைகெழு மவலமறுக்கவோ வளவறு மழகு விளக்கவோ, நிலையுறுமடியர் நினைத்தசீர் நிகழ்தரு முழுது முடிக்கவோ, வெலையறு சுரூபன் மலர்ச்செய்தா ளெழில் பெற வடியர் விளக்கலே. (4)

---

* உள் - மனம்.

கதுவிய மயல்கள் கலுழ்ச்சிநோய் கடுகிய வெகுளி கழற்றவோ, விதமுறு மூலக மழித்துளே மிகுதருபுரண மளிக்கவோ, விதமுட னகமு மழித்தசீ ரெழில்பெற விசைய விழித்துநேர், பொதுவுறு நிறைவ தளிக்கவோ புனிதன தடிகள் விளக்கலே. (5)

அறைவுறு சமய வகைக்கெலா மமைவுறு சமமவை யளிக்கவோ, நிறைவொடு குறைவ திறக்கவோ நிலவிய நிறைவை நிகழ்த்தவோ, விறவறு பரம சுகத்தையே யெவருளுமிலக முழுத்தவோ, செறிதரு குரவன் மலர்ச் செய்தா டிகழ்தர வடியர் விளக்கலே. (6)

அலைதரு கலைக ளகற்றவோ வமைவுறு மிரத மளிக்கவோ, விலதுள தடைய விறக்கவோ வெழின்மிகு மொருமை யெறிக்கவோ, நலமிகு மடியர் நினைத்ததாய் நவையற நிகழுநலத்தையே, யிலகிட வெளிநினளிக்கவோ விறைகழ லடியர் விளக்கலே. (7)

அசைவறு முனிவர் தவத்திலே யழலொடு புனல்கள வற்றுளே, வசையற முயலும் வருத்தமார் வளர்தரு துயர மரிக்கவோ, நசைகொடு விடய விடத்துளே நடலைசெ யெனையு நினைத்துநே, ரிசைதரு கழல்க ளளிக்க வோ விறைகழ லடியர் விளக்கலே. (8)

அதிசய மிகவு மெனக்குமா லயன்முத லமர ரயர்ப் பொடே,யிதமக மதனி லிளைக்கவேயிடருறு மவலவெனக் குளே, யுதிசெயிவ் வுலக முயிர்க்கண்மே லுளபர முழுது மொளித்தசீர், நிதியினை நிகழ வளிக்கவோ நிமலன தடிகள் விளக்கலே. (9)

11-வது, அருட்கழல் விளக்கம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

பன்னிரண்டாவது

அபயம்.

கலிவிருத்தம்.

வேண்டே னிமையோர் பதமே விடமுந்
தீண்டேன் மணில்வாழ் சிதைபோ கமது
மாண்டே யறுவேன் மயறீர் வகைவந்
தாண்டா யடியே னபய மபயம் (1)

வேண்டா மையைவேண் டுதலா கியகோள்
பூண்டே யுழல்வேன் புரைதீர் பொருளாத்
தூண்டா தொளிர்சோ தியதாம் வகைவந்
தாண்டா யடியே னபய மபயம். (2)

பொய்யா முடலு முலகும் பொருளென்
றுய்யா வகையா லுழல்வே னுளமே
மெய்யே புகுதா வினையா வினைவா
மையா வடியே னபய மபயம். (3)

போதோ னெடுமா லரன்வா னவரு
மேதே தெனவை யுறவே யெனையாண்
டேதே யிவனே யெனவந் தருளு
* மாதா வடியே னபய மபயம். (4)

---

* ஆதன் = குரு.

துரிசா கியசுற் றமதா கியதொல்
லரவா டியெழுந் தணையா வகைதா
னுருவா யெனையாள் பவனே யொழியா
வருளா பரனா வபய மபயம். (5)

தாய்தந் தைகுலம் பொருள்கல் வியெனும்
பேய்வந் துறவே பிறிதொன் றறியா
தோய்வந் துறுவே னுளமே யுணர்வே
யாய்வந் தவனே யபய மபயம். (6)

தன்னால் வினையுஞ் சகசீ வபரந்
தன்னா லழியுந் தனதாம் விழியா
லென்னா லெனையென் னிலெனக் கருளு
மன்னே யடியே னபய மபயம். (7)

வேதா கமமே முதனூ லலைவா
லீதா மிதுவன் றெனவோ திடுமப்
பேதா திகளா யொருபே தமிலா
வாதீ யடியே னபய மபயம். (8)

அன்பா மிமையோ ரயர்வெய் திடவே
* யின்பான் முருடா யெனையா ளவிரைந்
தென்போ லுருவா யெனையுண் டொளிரு
மன்பே யடியே னபய மபயம். (9)

இருளே வெளியே யிழிவே யுயர்வே
தெருளே மருளே செறிவே புரையே
மருளேன் மனனே மணிவீ டறியா
வருளே யடியே னபய மபயம். (10)

12-வது, அபயம் முற்றுப்பெற்றது.

---

* இன்பான்முருடு = பாராய்மரம்.

சிவமயம்.

பதின்மூன்றாவது

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

சரணம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பவமற முனிவோனே சரணஞ் சரணம்
பகவற முழுதானாய் சரணஞ் சரண
மவமற வெனையாள்வாய் சரணஞ் சரண
மடியிணை தருவானே சரணஞ் சரண
நவமற முணர்வேயுன் சரணஞ் சரண
நணுகரு மொளியேயுன் சரணஞ் சரணந்
தவமுறுபயனேயுன் சரணஞ் சரணஞ்
சயசய குரவாவுன் சரணஞ் சரணம். (1)

உயர்வற வுயர்வோனே சரணஞ் சரண
முலகமொ டுயிரானாய் சரணஞ் சரண
மயர்வறி வறுநாதா சரணஞ் சரண
மவமுறி லணுகோனே சரணஞ் சரணங்
கயவரு ளிருளானாய் சரணஞ் சரணங்
கரதல மணியேயுன் சரணஞ் சரணஞ்
செயலறு முணர்வேயுன் சரணஞ் சரணஞ்
செயசெய குரவாவுன் சரணஞ் சரணம். (2)

அறுசம யமுமானாய் சரணஞ் சரண
மறமற மகல்வோனே சரணஞ் சரணம்
வெறுமறி வுருவானாய் சரணஞ் சரணம்
விளைவறு விளைவேயுன் சரணஞ் சரண

மறுகலில் பதமேயுன் சரணஞ் சரண
  மறுவறு மணியேயுன் சரணஞ் சரணஞ்
செறிதரு தெளிவேயுன் சரணஞ் சரணஞ்
  செயசெய குரவாவுன் சரணஞ் சரணம். (3)

படருறு வினைநாசா சரணஞ் சரணம்
  படிமுதன் முழுதானாய் சரணஞ் சரண
மிடரற வெனையாள்வாய் சரணஞ் சரண
  மெனையெனி லருள்வானே சரணஞ் சரண
முடலுயி ருணர்வானாய் சரணஞ் சரண
  முருகுள நிறைதேனே சரணஞ் சரணந்
திடமுறு முணர்வேயுன் சரணஞ் சரணஞ்
  செய செய குரவாவுன் சரணஞ் சரணம். (4)

களிமய லதுகாய்வாய் சரணஞ் சரணங்
  கருதரு பரனேயுன் சரணஞ் சரண
மொளியினி லொளியேயுன் சரணஞ் சரண
  மொழிவறு முணர்வேயுன் சரணஞ் சரண
மளிதரு கனியேயுன் சரணஞ் சரண
  மருள்பொழி யமுதேயுன் சரணஞ் சரணந்
தெளிதரு சிவமேயுன் சரணஞ் சரணஞ்
  செயசெய குரவாவுன் சரணஞ் சரணம். (5)

சுகமது வடிவானாய் சரணஞ் சரணஞ்
  சுருதியின் முடிமேலாய் சரணஞ் சரண
மிகபர மறுமீசா சரணஞ் சரண
  மிணையிலி யிறைவாவுன் சரணஞ் சரண
மகமுறை யமலாவுன் சரணஞ் சரண
  மடியர்த மரணேயுன் சரணஞ் சரணஞ்
சகமது முழுதானாய் சரணஞ் சரணஞ்
  சயசய குரவாவுன் சரணஞ் சரணம். (6)

அறிவறி பவனுனாய் சரணஞ் சரண
மறிபொரு ளதுவானாய் சரணஞ் சரண
முறிவறு சுகமேயுன் சரணஞ் சரண
முழுதுணர் முனியேயுன் சரணஞ் சரணங்
குறைவறு நிறைவேயுன் சரணஞ் சரணங்
* குணகட லமிழ்தேயுன் சரணஞ் சரணஞ்
செறிதரு பவநாசா சரணஞ் சரணஞ்
செயசெய குருவாவுன் சரணஞ் சரணம். (7)

விரகரு ளிரியாயுன் சரணஞ் சரண
மிகுமொளி விமலாவுன் சரணஞ் சரண
மானரி யயனேயுன் சரணஞ் சரண
மகமித மறுசோதீ சரணஞ் சரணம்
பரவுற வினியாயுன் சரணஞ் சரணம்
பழுதறு முணர்வேயுன் சரணஞ் சரணஞ்
சிரமுறு தவமேயுன் சரணஞ் சரணஞ்
செயசெய குருவாவுன் சரணஞ் சரணம். (8)

செருவது மிகவேகொண் டலையுஞ் சமயஞ்
செறிவற வழகாருங் கழறந் துளமே
மருவியென் மதியாயென் மதியன் றியிலே
மலர்தரு சுரூபாவுன் சரணஞ் சரண
முருவுட னருவாயொன் றதுவன் றியிலே
யுரையுட னுணர்வாய்நின் றவையொன் றறவே
தெரிதரு தெளிவாமுன் சரணஞ் சரணஞ்
செயசெய குருவாவுன் சரணஞ் சரணம். (9)

சடவுடல் வடிவாய்நின் றுழல்வேன் றனையுந்
தமவொரு பொருளாவிங் ககிலந் தனிலே
மிடைதரு மிமையோரங் கலம்வந் திடவே
விரைவொடு வருவாயுன் சரணஞ் சரணந்

---

* குணக்கடலென்பது-குணகடலென இசைநோக்கித்தொக்கது.

தடையற வடியார்தந் திரள்சென் றவர்முன்
றழன்முக மெழுகாகின் றுருகும் படியென்
றிடவுள நெகவேதந் தருளுந் சரணஞ்
செயசெய குருவாவுன் சரணஞ் சரணம். (10)

13-வது. சரணம் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

பதிநான்காவது
அடைக்கலம்.

கலி விருத்தம்

தந்தை தாய்மனை வீடெனுந் தன்மையிற்
சிந்தை யானது சென்றழி யாவகை
யெந்தை யேகுறிக் கொண்டெனை யேன்றுகொ
ளந்த மாதியி லாயுன் னடைக்கலம். (1)

பேன்மை கல்வி விழுப்பம் வியப்பினிற்
றூனெ னுள்ளஞ் சலித்து விழாவகை
ஞான நாயக னேகுறிக் கொள்ளெனை
யானை யாவறி யேனுன் னடைக்கலம். (2)

காம லோபங் கதமத மாதியிற்
போம தாமுளம் போய விடாவகை
யேம நானறி யேன்குறிக் கொள்ளெனைச்
சேம மேதெளி வாயுன் னடைக்கலம். (3)

வஞ்ச மேமகிழ் வேமடி மானமா
நஞ்ச பேயுள நண்ணியி டாவகை
யெஞ்ச லில்லறி வேகுறிக் கொள்ளேனை
யஞ்சி னேனடி யேனுன் னடைக்கலம். (4)

சமய வாதங்கள் சாற்றுபே தக்கலைச்
சுமையி லேயுளந் தான்று வளாவகை
யமைவி லேனையஞ் சேலென் றருளிடு
விமைய வாவிறை வாவுன் னடைக்கலம். (5)

விரத மோடு தவர்பல வெந்நெறிப்
புரைத னூடுளம் போய்ப்புலம் பாவகை
வரத னேகுறிக் கொள்ளுள மாக்கனி
யிரத னேயிறை வாவுன் னடைக்கலம். (6)

சீத மோடழு றீமை நலங்குல
மேத மொன்றற வேயுள மொத்திட
நாத னேகுறிக் கொண்டு நடத்தெனை
* யாத னேனறி யேனுன் னடைக்கலம். (7)

பஞ்ச மோடு மழையடை பூசனேய்
நெஞ்சி ○ னாரை நிலைகுலைக் கத்தகு
நெஞ்ச தொன்றி னிலைதள ராவகை
யஞ்ச லென்றரு ளாயுன் னடைக்கலம். (8)

மிஞ்சி யேமிடை செய்விகற் பங்களா
னெஞ்சொர் போதொரு வர்க்குநி லாமைகண்
டஞ்சி வந்துன் னடைக்கலம் பூண்டவென்
னெஞ்சு மேவி யிருந்தரு ணின்மலா. (9)

---

* அறிவிலான். ○ ஆரையுமென்னும் முற்றும்மை-ஆரையென விகாரத்தாற்றொக்கது.

தாக மேபசி யேதணி யாதிடுஞ்
சோக மோகத் துளந்துவ ளாவகை
யேக நல்லறி வேகுறிக் கொள்ளெனை
யாக னேயடி யேனுன் னடைக்கலம். (10)

அடைக்கல முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

பதினைந்தாவது,

சிவசங்கரம்,

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

வினைமங்கிட விங்குரு வங்கொடு
வெறுமொன்றறி வின்றிய வென்றனை
நினைவங்கது வின்றி நிரந்தர
நெறியென்கண நெங்கு நிகழ்ந்திட
வினமின்றி யொருங்கி யவிழ்ந்திட
விருவென்றிறை வன்செய்த நன்செய
றினையுஞ்சக மென்பது மொன்றிலை
சிவசங்கர சங்கர சங்கர. (1)

பகவிங்கிர் வென்ப திறந்தொரு
படிநின்றொளிர் கின்ற பரம்பொரு
ளகநின்று திகழ்ந்திடு கின்றமை
யறிவங்கயர் வொன்ற தறும்படி
தகவிங்கிது கண்டுகொ ளென்றிறை
சரணந்தலை தந்திட முன்றிகழ்
செகநன்பர மங்குபி ரிங்கிலை
சிவசங்கர சங்கர சங்கர. (2)

சட வன்பிணி துன்ப தரஞ்செறி
தசைவன்பிணம் வன்கழு குண்டியிவ்
வுடலின்பம தென்றழி யும்பொரு
ளுடன்மங்கிடு மொன்றறி வின்றிய
சடனென்றன புன்றலை தன்றிகழ்
சரணந்திசை யெங்கு நிறைந்துள
திடம்வந்து தெளிந்து திகழ்ந்தது
சிவசங்கர சங்கர சங்கர. (3)

உலகங்களு மும்பர் பதங்களு
மொருவுந்திண மென்பது மொன்றற
நிலவும்பர னன்கழ றங்கிய
நிகழன்பர்த நெஞ்சு நிறைந்தது
கலகங்கொள் பவங்க ளிறந்தன
கரணங்க ளடங்க மடிந்தன
செலவுஞ்செய லன்றி யிருந்தது
சிவசங்கர சங்கர சங்கர. (4)

இதமங்கக மென்ப திறந்தன
விகநன்பர மின்றி யொழிந்தன
விதமங்குற வன்சம யங்களும்
வெறுமொன்றல தின்றி முடிந்தன
பொதுவொன்றற வெங்கு நிறைந்துள
புனிதன்கழ லெங்கு நிகழ்ந்தது
* திதம்வந்து தெளிந்தொளிர் கின்றது
சிவசங்கர சங்கர சங்கர. (5)

விரதங்கட வங்கண் முடிந்தன
வினைவெம்பவ பந்தி செறிந்துள
O கரமொன்றிய வங்குல் கழிந்தது
கரையின்றிய வின்பம் விளைந்தது

* திதம் = இருக்கை. O கரம் = சிறுமை

சரதந்தனை யன்றிய தொன்றுமி
றலைவன் சரணங்கள் சமைந்தென
சிரம்வந்து செறிந்து திகழ்ந்தது
சிவசங்கர சங்கர சங்கர. (6)

எவமன்றிய தொன்றறி வின்றிய
வெனையன்ப ரொடங்குற நன்றிசெய்
தவவன்பர்க டம்பர மன்றன
சரணங்களை யென்றலை தந்திட
நவமொன்றற வெங்கு நிறைந்துள
நயனந்திக ழின்ப நெடுங்கடல்
சிவநின்று திகழ்ந்திடு கின்றது
சிவசங்கர சங்கர சங்கர. (7)

இறைநன்கரு ளின்செய லென்சொல
வெழினன்கண மொன்றிலை யங்கதின்
மறையெங்கணு நின்று புகழ்ந்திடு
வளம்வந்து வரம்பதி றந்தது
வறிவங்கயர் வின்றி நிறைந்தென
வகநின்றமிர் தம்பொழி கின்றது
சிறைவன்பவம் வெந்து விழுந்தது
சிவசங்கர சங்கர சங்கர. (8)

பனுநன்கலை யின்கண றைந்திடு
பருவங்கள் கழன்றொளிர் பங்கய
தனநன்கழ றன்றிக ழன்பர்க
டலையன்றியு மென்றலை தந்தொரு
வினமின்றிய வின்பம் விளைந்திட
விருவென்றிறை வன்செய்த விஞ்சையோர்
தினையும்புக லுந்திற மொன்றிலை
சிவசங்கர சங்கர சங்கர. (9)

புணியங்கண் மறங்கள் பொலிந்திடு
புலனங்கர ணங்கண் மடிந்தன
பிணிதங் * கவ வென்பது தன்றிகழ்
பெருவன்குல சண்டை கழிந்தது
இணையின்றிய வின்பமெ னன்கழ
லிரவங்கொடு நண்பக லின்றியோர்
திணமங்கொழி வின்ஞெளிர் கின்றது
சிவசங்கர சங்கர சங்கர. (10)

சிவசங்கர முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

பதினாறுவது

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

அபயவரதம்.

கலிவிருத்தம்.

அத்த னேயறி வானந்த நாடனே
சுத்த னேசுரூ பானந்தச் சோதியே
நித்த னேயப யங்கிகழ்ந் திட்டிடச்
சித்த னேதிரு வுள்ளத் தடைத்திடே. (1)

அமல மாகிய வானந்த நாடனே
மும்மல மாமிருள் போக்கிய மூலமே
விமல மாமப யம்விளங் கிட்டிட
வமல னேதிரு வுள்ளத் தடைத்திடே. (2)

அருள னேமிக ழானந்த நாடனே
பொருள லேயுே மாளுடைப் புண்ணியா

* அவாவென்பது=அவவெனக்குறியதன் கீழாக் குறுகிற்று.

தெருள னேயப யந்திகழ்ந் திட்டிட
வருள னேதிரு வுள்ளத் தடைத்திடே. (3)

ஆசி லாவறி வானந்த நாடனே
மாசி லாமன மன்னுஞ் சுரூபனே
யீச னேயப யம்மிலங் கிட்டிடத்
தேச னேதிரு வுள்ளத் தடைத்திடே. (4)

ஏக னேயெழி லானந்த நாடனே
சோக மேது மிலாருட் சுரூபனே
* யாக னேயப யம்மமர்ந் திட்டிட
யோக னேதிரு வுள்ளத் தடைத்திடே. (5)

நண்ண லேனவி லானந்த நாடனே
யெண்ணி லேனையு மாண்டரு ளீசனே
திண்ண மாரப யந்திகழ்ந் திட்டிட
வண்ண லேதிரு வுள்ளத் தடைத்திடே. (6)

மாறி லாமகிழ் வானந்த நாடனே
யாறு வாருளத் ○ தண்ணிக்கும் கன்னலே
யீறி லாவப யம்மிலங் கிட்டிடத்
தேற லேதிரு வுள்ளத் தடைத்திடே. (7)

அருத்த னேயம லானந்த நாடனே
கருத்த னேயெனை யாள்கரு ணையையா
திருத்த னேயப யந்திகழ்ந் திட்டிட
வொருத்த னேதிரு வுள்ளத் தடைத்திடே. (8)

ஐய னேயரு ளானந்த நாடனே
பொய்ய னேனுள மேவும் புனிதனே

---

* ஆகனென்பதற்கருத்தம் = சகளீகரித்தவனென்பதாம்.
○ அண்ணித்தல் = தித்தித்தல்.

மெய்ய னேயப யம்விளங் கிட்டிடச்
செய்ய னேதிரு வுள்ளத் தடைத்திடே. (9)

நம்ப னேஞான வானந்த நாடனே
வம்ப னேஹுள மன்னுஞ் சுரூபனே
யம்பொ னேயப யம்மணிக் திட்டிடச்
செம்பொ னேதிரு வுள்ளத் தடைத்திடே. (10)

அபயவரத முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

பதினேழாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

அருட்பத்து.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருணை யாகின்ற கண்ணுடைக் கரும்பே
கன்ன லேநற் கலைக ளெப்பொருணைப்
பொருள னேபுலை யேனையும் பொருளாப்
பூமி தன்னில்வந் தாண்டதோர் புனிதா
தெருள னேசிவப்ர காசனே தேனே
திகழு மன்பர்தங் கவலையை நீக்கி
யருள னேயஞ்ச லஞ்சலென் றன்ப
ரின்ப நண்குற வங்கணு வருளே. (1)

ஓது மாமறை யாயிரங் கோடி
யுணரு மாறற வோங்கொளி யாய
நாத னேநணு காருளத் திருளே
ஞான வாரமிர் தேநலஞ் சுவையே

சீத வாரருட் சிவப்பிர காசா
திகழு மன்பர்தங் கவலையை நீக்கிப்
போத வின்பமும் போகமும் புகழும்
பொருவி லன்பரைப் பொருந்திட வருளே. (2)

தேவ தேவனே சிவப்பிர காசா
சிற்சு ரூபநற் செழுஞ்சுடர்த் தேனே
பாவ நாசனே பத்தர்த மெய்ப்பிற்
பழுதி லாதநற் றுணைவனே பரமா
வாவ வென்றன்பர் கவலையை நீக்கி
யளவி லாவின்ப மழகுற வருளா
யோவி லாவரு ளேவடி வாய
வுத்த மாமத்த னேனுளக் கனியே. (3)

நின்னை யன்றியோர் பொருளிலர் நினையு
நினைவு வேறிலர் நின்னையே திகழும்
பொன்னும் போகமும் புகழொடு வலியும்
பொருந்து மூர்மனை காணியும் புகலு
மன்னை யுஞ்சுற் றமுமற்ற துணையு
மாக வேநினைந் தன்றியொன் றறியா
வன்ன வன்பர்தங் கவலைய தகல
வளவி லின்பநன் கழகுற வருளே. (4)

தென்ன வன்சேரன் றிகழ்தரு சோழன்
றேச மங்கங்கு திகழ்த்தர சாளு
மன்னர்நீ யலமைச்சர் நாற்படைத் தலைவர்
மற்று மியவர் மதியுநீ மனநீ
யுன்னை யேதுணை யாகநன் குடைய
வொப்பி லன்பர்தங் கவலையை யொழித்துத்
தென்ன னேசிவப் பிரகாசத் தேனே
திகழு மன்பருக் கின்பநன் கருளே. (5)

வேத கீதனே விண்ணவர்க் கரசே
மெய்யர் மெய்யனே பொய்யர்தம் பொய்யே
யாத னேனப ராதமே செய்தே
னாயி னுந்நினை யன்றிமற் றறியேன்
சீத னேசிவப் பிரகாசத் தேனே
திகழு மன்பர்தங் கவலையை நீக்கி
நாத னேயின்ப நன்குற வருளாய்
நாயி னேனையு மடிமை கொண்டானே. (6)

முனிவி லாதபே ரருளுடை முனியே
முத்த னேயொப்ப மிக்கவ ரில்லாத்
தனிய னாகிய சம்புவே தலைவா
தத்து வாபத்தர் வைத்தமா நிதியே
கனியு மாவருட் கற்பகக் கனியே
காத லாவன்பர் கவலையை நீக்கி
யினிதி னின்பமு முவகையு மருளா
யென்னை யாளுடை யெம்பெரு மானே. (7)

அன்பி லேனுக் கழிவுறு போகத்
தாசை வெள்ளமு மயலுமே யுடையே
னென் *பொ லாமணி யேயிவை கண்டு
மிரங்கி யேன்றுகொண் டாண்டதுன் னருளே
யின்ப னேசிவப் பிரகாசத் தேனே
யேழை யேன்குற்றங் குணமெனக் கொண்டு
நன்பொ னேயன்பர் கவலைதீர்த் தின்ப
நல்க வேண்டுமெ னற்றவப் பயனே. (8)

நின்க ழற்குநா னன்பில னாத
னீயு நானுமே யறிவமத் தனைமற்
றுன்க ழற்குநா னடிமையென் பதுநா
னுலகெ லாமறி யும்பொரு ளதனாற்

* பொல்லாமணி = பொள்ளாமணி.

றன்ப முற்றிடி ஞானுனைச் சிரிப்பர்
சுரூப நன்குறிற் றதிப்பது முனையே
யன்ப தற்பொருட் டும்மரு ளாலு
மன்ப ரின்புறத் துன்பறுத் தருளே. (9)

திருந டத்தர சேசுரு பாவென்
றிகழு நல்லருட் சிவப்பிர காசா
வுருவெ டுத்துவிட் டிடைவிடா துழலு
முற்ப வக்கடு வாகிய வொருவா
பருவ துற்றநல் லன்பர்தந் துயரைப்
பாற வேசெய்துன் பழுதிலா வின்ப
மருவி டச்செய்திவ் வுடலுள தனையு
மகிழ வைத்துள மன்னிநீ யருளே. (10)

17-வது. அருட்பத்து முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

பதினெட்டாவது.

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்மீது

காரணாற்காணுக்கரணத்திகழ்ச்சி.

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

தொழுந்தேவர் நின்றயரத் துன்பப் பிறப்பி
லழுந்தே லெனவெனைத்தா ளுடிப் புறத்தி
னுழுந்தார் பொழுதி னுரைத்தா னுரைத்த
செழுந்தேற லுண்ணுச் செவியுஞ் செவியே
தேசிகன்சீர் கேளாச் செவியுஞ் செவியே. (1)

அரும்பி முளையா யலராகிக் காய்த்துக்
குரம்பை பழுத்துதிர்ந்தோர் கொள்கைவா யின்னுந்
திரும்பிப் புகாமே சிவன்கோயில் கொள்ள
விரும்பத் தவமில்லா மெய்யென்ன மெய்யே
மெய்க்கோயி லாகாத மெய்யென்ன மெய்யே. (2)

ஒளிக்கு மொளியா வொளியுருவங் கொண்டு
வெளிக்க ணெழுந் தருளும் வேதியனைக் கண்டு
துளிக்கு மருவி சொரியச் சொரியக்
களிக்குந் திறமிலாக் கண்ணென்ன கண்ணே
கருணைக் கழல்காணாக் கண்ணென்ன கண்ணே. (3)

பொற்றா மரையவனும் புத்தேளி ராயவர்தஞ்
சற்றா மரசாய்ச் சகத்தே பிறந்திறந்து
சுற்றா மரைபோற் சுழலா வகையாண்ட
நற்றா மரைமுரலா நாசியு நாசியே
ஞான மணங்கவரா நாசியு நாசியே. (4)

உயர்ந்தவா னோரு மொளிமறையும் போற்றப்
பயந்தவா பாராதிப் பார்மிசையே யென்னை
யயர்ந்தவா ஓடி யழிவேனை யாள
நயந்தவா பாடாத நாவென்ன நாவே
நற்சுரூபா னந்தனென்னா நாவென்ன நாவே. (5)

மலரோன் முதலார் மறைகோடி கோடி
கலைதேடி நின்றயராக் கண்காண வந்தென்
றலைதேடித் தந்த தடந்தாளிற் றாவ
வலர்தேடிப் போகா வடியு மடியே
யாலயஞ்சூழ் போகா வடியு மடியே. (6)

குழலே யனையமொழிக் கோல்வளையார் மாயச்
சுழலே யுழலுமனத் தொல்வினையேன் செல்லு
மழலே யனைய பிறப்பறுத்த வம்பொற்
கழலேவல் செய்யாத கையென்ன கையே
கடிமலர் தூய்த்தொழாக் கையென்ன கையே. (7)

உவமந் தனக்கி லுபநிடதந் தேடுஞ்
சிவமுந் திருவுருவாய்த் தீயேன தெல்லாப்
பவமுங் கெடவருளும் பங்கயத்தே வீழத்
தவமுன்பு செய்யாத தலையுந் தலையே
தலைவன்றாள் சூடாத தலையுந் தலையே. (8)

ஓர்பாடு மூவர்கள்பாற் றேவர்கள்பாற் செம்மைமிகு
மார்பாடுஞ் சாராத வானந்தன் றான்வந்திங்
கோர்பாடு மில்லே னுளமறிய வுள்புகுந்த
நேர்பாடு தானினையா நெஞ்சென்ன நெஞ்சே
நெக்குநெக் குள்ளுருகா நெஞ்சென்ன நெஞ்சே. (9)

இம்மை மறுமை யெனப்பகரு மின்னல்சேர்
பொய்ம்மை யுருவாகிப் பொன்றாமைப் போதமாய்
மெய்ம்மையா னந்தம் வெறுமின்ப மாய்விளங்குந்
தம்மைப் பெறுகல்லார் தரமென்ன தரமே
தற்சுரூப னாகாதார் தரமென்ன தரமே. (10)

18-வது, காரணற்காணாக் கரணத்திகழ்ச்சி முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

பத்தொன்பதாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

சீர்பாதவல்லபம்.

கலிவிருத்தம்.

ஆபத் தனமாகு மாபத் துணையாகு
மாபத் தினைவேரோ டரியும் மயிலாகு
மாபத் ததுமேவா வரணம் மதுவாகு
மாபத் தறுசம்பத் தமலன் கழறானே. (1)

இடருக் கிடராகு மிடரற் றிடமாகு
மிடரைப் பொடிசெய்தற் கெறிநற் படையாகு
மிடருக் கிசைவொண்ணு வெழிலா ரரணாகு
மிடரற் றிடுமின்பத் தினறபொற் கழறானே. (2)

அழிவுக் கழிவாகு *மழிவற் றிடமாகு
மழிவைக் கருவேரோ டரியும் மயிலாகு
மழிவற் றெழிலாரு மன்பர்க் கருண்மிக்குப்
பொழிநற் சுரூபன்றன் புனைபொற் கழறானே. (3)

துயரைத் துயர்செய்யுந் துயரற்றிட மேவுந்
துயரைத் துகள்செய்யத் தொடுநற் படையாகுந்
துயர்மற் றணுகாதல் லரணத் துணையாகுந்
துயரற் றிடுமின்பச் சுரூபன் கழறானே. (4)

---

* அழிவற்றவிடமாகுமென்பது — அழிவற்றிடமாகுமென மருவிற்று.

சோகத் திருளுக்குச் சுடர்பொற் சசியாகுஞ்
சோகத் திரள்சாடத் தொகுதண் டமதாகுஞ்
சோகத் தொடுமோகத் தொடர்வற் றிடமாகு
மேகச் சுரூபன்ற னின்பக் கழுருனே. (5)

கோபத் தழலுக்குக் குளிர்நற் புனலாகுங்
கோபத் திருளுக்குக் குளிர்பொற் சசியாகுங்
கோபப் பகைவெல்லக் கூர்நற் படையாகுஞ்
சார்புற் றவருள்ளத் தலைவன் கழுருனே. (6)

மயலைத் தடிசெய்யு மதமத் தனைசெய்யுங்
கயமுற் றிடுகாமக் களியைப் படவெய்யும்
பய * மற் சரமாதிப் படையைக் கெடமோதுஞ்
செயநற் சுரூபன்றன் செம்பொற் கழுருனே. (7)

மறுமைப் பிணிதீர்நன் மருநக் கடுவாகுஞ்
சிறுமைத் தனமத்தத் திரளைப் பொடிசெய்யு
o முறுமைக் குணமிக்கீ டணையைக் கெடமோதுஞ்
செறிநற் சுரூபன்றன் செம்பொற் கழுருனே. (8)

திருவைச் செறிவிக்குந் திகழப் புகழ்விக்கு
முருவைப் பொலிவிக்கு முணர்வைக் கிளர்விக்கும்
பொருவற் றிடுநன்மைப் பொருளைப் புணர்விக்குங்
குருநற் சுரூபன்றன் குளிர்பொற் கழுருனே. (9)

நினைவுற்றன வெல்லா நிகழ்வித்திடு மின்பத்
தனமிக்கிடு ஞானத் தொடுநற்குண சீல
மினமுற்றிட நல்கு மெழினற்சுரூ பன்றன்
புனைபொற்கழ லன்புற் றவருட்பொலி வுற்றே. (10)

19-வது, சீர்பாதவல்லப முற்றுப்பெற்றது.

---

* மற்சரம் = பொறாமை.

o முறுமை = மேன்மை.

சிவமயம்.

இருபதாவது

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

திருப்பல்லாண்டு.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த
குறள்வெண் செந்துறை.

ஊனை மொழித்துரை யொன்றாலே தானுக்கு
முத்தமற் குப்பல்லாண் டோத வாரீ
ருருவோ டருவாகி யன்றாகி யொன்று
முணர்வினுக் குப்பல்லாண் டோத வாரீர்
ஞானமு ஞேயமு ஞாதுரு மாயல்லா
நாதருக் குப்பல்லாண் டோத வாரீர்
நல்ல சிவப்பிர காசற்குப் பல்லாண்டு
நாத்தழும் பப்போற்றி யோத வாரீர். (1)

என்னே யெனையும் பொருளாக வாண்ட
வியல்பினுக் குப்பல்லாண் டோத வாரீ
ரிப்படி யென்னவொண் ணாவின்ப வெள்ளத்துக்
கெப்பொழு தும்பல்லாண் டோத வாரீர்
முன்னேயெல் லாமாய் முளைத்தன்றி நின்ற
முதன்மைக்குப் பல்லாண் டோத வாரீர்
முத்தி திருவாய் மொழியும் பிரகற்கு
முப்பொழு தும்பல்லாண் டோத வாரீர். (2)

கல்விக் கடலைக் கடக்கும் படிபார்த்த
கண்ணுக்குப் பல்லாண்டென் றோத வாரீர்
கற்போலு நெஞ்சங் கரைத்தாள வல்ல
கருணைக்குப் பல்லாண் டோத வாரீர்

செல்வத் திருக்கழல் சூட்டு மடியார்
திருவுக்குப் பல்லாண்டென் ஜேத வாரீர்
செய்ய சிவப்பிர காசற்குப் பல்லாண்டு
சித்தங் களிக்கநின் றேத வாரீர் (3)

வாவென் றழைத்தென் சிரத்திற் கழல்வைத்த
வண்மையற் குப்பல்லாண் டோத வாரீர்
மாமறை தேடிட மாலுட னய்வந்த
வல்லவற் குப்பல்லாண் டோத வாரீர்
தாயில்லா மாலயன் றேடியுங் காணுத
தத்வற்குப் பல்லாண்டென் றேத வாரீர்
சாற்றுஞ் சடங்கெல்லாஞ் சாடிய கண்டற்குச்
சந்ததம் பல்லாண்டென் றேத வாரீர் (4)

பந்தப் பெருங்கடல் பாழ்படப் பார்த்த
பரிசுக்குப் பல்லாண்டென் றேத வாரீர்
பாத மளித்த பரிசுக்குப் பல்லாண்டு
பல்லா யிரத்தாண்டென் றேத வாரீர்
சிந்தைப் பரப்பற மீட்டென்னைக் காட்டிய
செல்வற்குப் பல்லாண்டென் றேத வாரீர்
செய்ய சிவப்பிர காசற்குப் பல்லாண்டு
சித்தங் களிக்கநின் றேத வாரீர் (5)

ஈற்றடிமிக்கு நான்கடியான்வந்த
கலித்தாழிசை.

மூர்த்திகண்மூ வருமறியா முழுமுதல்வத் தோருருவா, யார்த்தபெரும் பாசமெனு மாரிருள்வா யழிவேனுக், கோர்த்துணரும் வகையருளி யொருநொடியிற் பிறப்பறவே, பார்த்தெனையாட் கொண்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பரவரிய காதனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (6)

நீங்காத பெருந்துயரா னெருக்கியெனைச் சுழற்றியிடு, மாங்காரந் தவிர்த்திடவோ ராரியனு யெழுந்தருளி, யோங்காரத் துட்பொருளை யொருமொழியி னளித்தெனையும், பாங்காக வாண்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பத்திவலைப் பட்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே. (7)

மண்பாலப் பாதலர்பால் வானோர்பான் மற்றுமுள, வெண்பாலு மெய்தரிய பேரின்பம் யானெய்த, நண்பாக வந்தருளி நலலடியா ருடனெனையும், பண்பாக வாண்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பாராமற் பார்த்தவற்குப் பல்லாண்டு கூறுதுமே. (8)

மயலதனுன் மறந்துபிறந் துழன்றிடுமிம் மதியிலியேன், பயமதெலாந் தீரவரு வாளுருவா யெழுந்தருளி, நயமதுற வுட்புகுந்து ஞானகனப் பேரொளியாம், பயனதுவாய் நின்றவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பத்தருயி ருண்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே. (9)

முத்தியுமுத் திப்பயனு முழுதுணர்மெய்ஞ் ஞானமுமாஞ், சித்தியுமச் செய்தவமு மாயசிவப் பிரகாச, னெத்தியெனை யாண்டுள்ளங் குடிகொண்டங் கெல்லையிலாப், பத்தியுமாய் நிறைந்தவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பராவமிழ்தாய் நிறைந்தவற்குப் பல்லாண்டு கூறுதுமே. (10)

செற்றமுட னுர்வமதஞ் செறிகோப முலோபமெனும், பற்றதனுற் பவக்கடலுட் பதைத்துழன்று கழிவேற்கு, நற்பதமு நன்னெறியு ஞானமுமாந் தம்பதமே, பற்றதுவா வளித்தாற்குப் பல்லாண்டு கூறுதுமே, பால்புரைநீ றணிந்தார்க்குப் பல்லாண்டு கூறுதுமே. (11)

திருகலுறுந் திண்மனத்தைச் செப்படைவே திருத்தி
யிட, வுருவருவ மொன்றுமிலா வுத்தமனா ரோருரு
வாய்ப், பெருகியவெம் பேதைமையாம் பிணிகெடுத்துப்
பேரின்பப், பருகமிர்தாய் நிறைந்தவற்குப் பல்லாண்டு
கூறுதுமே, பாமாலை யுகந்தவற்குப் பல்லாண்டு
கூறுதுமே. (12)

போக்கினொடு வரவதுவாய்ப் பொன்றுமுடம்
பளவாகி, நீக்கமிலா நெடுந்துயரா னீள்சுழிப்பட் டழி
வேனை, யாக்கமுட னழிவதிலா வானந்த மாக்கியென்
றன், பாக்கியமாய் நிறைந்தவற்குப் பல்லாண்டு கூறு
துமே, பார்முழுது முண்டவற்குப் பல்லாண்டு கூறு
துமே. (13)

இகபரமா யெண்டிசையா யெல்லாமா யீறின்
றிப், பகவெனலாம் பகிர்ப்பறவே பணைத்தல்லாப் பரம்
பொருளாய், மிகல்குறைவொன் றின்றியெலாந் தானே
யாய் வெளிப்பட்டுப், பகர்வரிய நாதனுக்கே பல்லாண்டு
கூறுதுமே, பங்கயத்தா ளளித்தவற்குப் பல்லாண்டு
கூறுதுமே. (14)

அரிபிரமன் முதலாய வமரரெலா மலமாக்கத், தெரிவரிய
செய்யசிவப் பிரகாச னெழுந்தருளிப், பொருவதிலா
நாயேனைப் பொருளாக்கி யுட்புகுந்து பரிவதுசெய்
தாண்டவற்குப் பல்லாண்டு கூறுதுமே, பார்ப்பரிய
சோதிக்குப் பல்லாண்டு கூறுதுமே. (15)

20.வது, திருப்பல்லாண்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்தோராவது
ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்
திருவந்திக்காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முருகலர்தார் வரைமார்பா மூவர் கோவே
முத்திநெறி யறிவிக்க நாயி னேற்குந்
தருகழலாய் பருகமிர்தே தத்துவநற் சுடரே
தயாதரனே தவளநகைத் தையறிருக் கணவா
வரிகருகப் பெரிகியமர்த் தரிசிதறக் கணைகட்
டருளறமிக் கிருகுழைசெற் றவனிகொளப் பிறழுந்
திருநயனத் திருவனையா ரந்திக்காப் பெடுத்தார்
செய்தருளத் திருவுளமென் றிருநடநாயகனே. (1)

அருண்மேனி யமர்ந்தானே யானந்த பலையே, யணைந்தவர்தம் பெருவினையை யடர்த்தருளு மருந்தே, செருவாரும் பிறவியறுத் தெனையாண்ட தேனே, திரு விருக்கும் வரைமார்பா தெய்வவலஞ் சுழியாய் பொரு வேலை யிடழித்துக் கயலினையும் வெருட்டிப், பொங்கி யிரு குழைதுரந்து பொருதிளையோ ருயிரைப், பரு குசின விழிமடவா ரந்திக்காப் பெடுத்தார், பழுதறுநின் றிருவுளமென் பரம்பொருளா முருவே. (2)

இலகுமறைக் கெழின்முனிவர்க் கிமையவர்கட் கரியா, யெனையடிமைக் கொளவெனையொத் திசையவுருப் புனைவா, யுலகுயிர்தற் பரமதெனத் திகழ்வொடு

* நெற் றகனே, யுரையுணர்வைக் கழியமிகுத் தொளி ருசிவச் சுடரே, கலகவிழிக் கரியகுழற் குழல்சொன் மொழிக் கடினக், களபமுலைக் கதிர்செய்நகைக் கனிப வளத் துவர்வாய்த், திலகநுதற் றிருவனையா ரந்திக் காப் பெடுத்தார், செய்தருளத் திருவுளமென் றேவர் கணா யகனே. (3)

பரிதிமதிக் கனல்புனல்கால் புரைதரைமற் றுயிராய்ப்,
பகர்பொருளித் தனையுமலா நிகழறிவுக் கறிவே
சுருதிமுடிக் கறிவரியாய் கருதுமவர்க் கெளியாய்
சுரூபானந் தச்சுடரே தொழுநினையார் புகுதங்
கருவிருளிற் கருகிமலர்க் கழலிணைகட் புலனுர்
களியுலவிக் கடவுடிருக் கருணையெனப் பெருகித்
திருவொளியிற் றிகழ்விழியா ரந்திக்காப் பெடுத்தார்
செய்தருளத் திருவுளமென் றேவர்கணா யகனே. (4)

சாவாது மூவாது தனிமுதலா முருவே
தாழ்சடையோன் மால்பிரமன் முனறியா வறிவே
யாவாவென் றடியவர்கட் கருளளிக்கு மமிர்தே
யற்புதனே யகண்டமுமா யன்றிநின்ற சுரூபா
பூவாரு மடிகமலம் பூண்முலையுங் கமலம்
பொருந்துகர முங்கமலம் பொருகயற்கண் கமலந்
தேவாநின் றிருவனையா ரந்திக்காப் பெடுத்தார்
செய்தருளத் திருவுளமென் றேவர்கணா யகனே. (5)

குரவாநற் குணக்குன்றே யந்திக் காப்புக்
கோதிலமிர் தக்கடலே யந்திக் காப்பு
வருவோடங் குருவல்லா யந்திக் காப்பு
வடைந்தவர்தம் பெருவாழ்வே யந்திக் காப்பு

---

* நெற்று = முதிர்வு

மருவாருங் குழன்மடவா ரந்திக் காப்பு
வந்தெடுத்தார் மன்னவனே யந்திக் காப்புச்
சுரூபானந் தச்சுடரே யந்திக் காப்புத்
தூய்மறையி னுட்பொருளே யந்திக் காப்பு (6)

தரவு கொச்சகக்கலிப்பா.

ஊனாகி யூன்றுமிட முள்ளளவுங் கள்ளமறத்
தானான தன்மையினைத் தானளித்த தன்மையனே
தேனாரு மொழிமடவார் திருவந்திக் காப்பெடுத்தார்
கானாரு மலரலங்கற் கற்பகமே காண்பாயே. (7)

வானாடர் மால்பிரமர் மறைகலைக டெரிவரிய
ஞானானந் தச்சுடரே நாயேனை யாட்கொள்வாய்
மானாரும் விழிமடவார் வந்தந்திக் காப்பெடுத்தா
ரானாதிங்கவர் செய்பணி யருளாயென் னுடையானே ()

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரவணியுஞ் சடைமுடியா யந்திக் காப்பு
வன்றயன்மாற் கரியானே யந்திக் காப்புப்
பரவடியார் கிரவரியா யந்திக் காப்புப்
பார்த்தருக் கறிவரியா யந்திக் காப்பு
வரைமகடன் பங்குறைவா யந்திக் காப்பு
மாதேவ னேசிவனே யந்திக் காப்புச்
சுரர்பரவும் பெரியோனே யந்திக் காப்புச்
சுயம்பிரகா சப்பொருளே யந்திக் காப்பு. (9)

கன்றுகுணி லாயெறிந்தா யந்திக் காப்புக்
கற்றுணர்ந்தோ ருளத்துறைவா யந்திக் காப்புக்
குன்றுகுடை யாயெடுத்தா யந்திக் காப்புக்
கோகனகைத் திருமார்பா வந்திக் காப்பு

வன்றிலங்கை செற்றவனே யந்திக் காப்பு
வரவணையிற் றுயில்வோனே யந்திக் காப்பு
மன்றல்கமழ் துளவணியா யந்திக் காப்பு
மதகரிக்கொம் பொசித்தவனே யந்திக் காப்பு. (10)

21-வது, இருவந்திக்காப்பு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்திரண்டாவது
ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்
திருநீற்றுக்காப்பு.

நேரிசை வெண்பா.

எல்லையிலா வூழியெலாம் யானெனதென் றெய்த்துவரு
மல்ல லறுத்தென்னை யாண்டவனே—தொல்லை
யறிவே யனைத்துமா யன்றியென்னு ணின்ற
செறிவே திருநீற்றுக் காப்பு. (1)

சுரூபானந் தாவென்னுர் தொல்வினைநீ காப்பாய்
கருமானன் சேராமை காப்பாய்—யரவணிகைக்
காப்பா யயனைப் படைத்துமா லாயுலகைக்
காப்பாய் திருநீற்றுக் காப்பு. (2)

செல்லுலவுஞ் சோலைச் சிராப்பளியா யென்பாரை
நல்லபுகழ் நன்றுடையா யென்பாரை—வல்லபடி
காப்பாழ் கிடவாமை நம்பாகா வென்பாரைக்
காப்பாய் திருநீற்றுக் காப்பு. (3)

காதி வருமறலி கைப்பாசத் தாற்பிணிப்புண்
டேதமுற நாயே னிறவாம—லாதி
யுரியார் புகழு மொருவனே கண்டங்
கரியாய் திருநீற்றுக் காப்பு. (4)

எவ்வுலகு மோடி யிளைத்தெந்த யோனிதொறு
மவ்வுருவாய் நாயே னழியாம—லெவ்வ
மறுத்தா யடியா ரலைப்பவங்கண் மாளக்
கறுத்தாய் திருநீற்றுக் காப்பு. (5)

22-வது, திருநீற்றுக்காப்பு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்துமூன்றாவது

அநுபவரூபம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முத்தியை மேவ நானிங்ஙன் முற்பட மேவி மொய் கழற், பத்தியை மேவ மேனிகொண்டு பத்தர்கள் சூழவே புகுந், தெத்தியெ ஞவி வாரியுண்டு மெற்றுதி பேணு மீசனை, யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (1)

தத்தம ஞேவி காரமென் று* தற்குண ராது வீடுறப், புத்தக மோதி மாளுகின்ற புத்தர்முன் னை வாதிகள், கத்தில் விழாத வாறுவந்து கைக்கொளுநாய ஞர் தமை, யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே (2)

* தன்னையுணராதென்பது — தற்குணராதென வேற்றுமை மயங்கிற்று.

பொத்திய வூன மாகிவந்த புற்புத மாகிநா னெனுது,
சத்திய ஞான மானவின்ப தத்துவ மாகு வானென,
வித்தக வேட மேவிவந்த மெய்க்குரு நாய னுர்தமை,
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (3)

அத்தனை வேறி லாதெழுந் தத்தமி யாத சோதிசிற்,
சத்தென வேத மோதுதொந் தற்பொரு டானி தாமெனச்,
சித்தநல் வேட மாகிவந்து செப்பிய நாயனுர்தமை, யெத்
தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (4)

சித்த விகார மாகிநின்று சிற்சட வேறு பாடுசெய், பெத்
தமும் வீடு மாய்மயங்கு பித்தது தீரு மாறு சத், சித்தென
தாக மாகவொன்று செப்பிய தேசி கேசனை, யெத்தனை
யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (5)

வித்தக மாக வேபரந்து மெய்ப்பொருள் போல மேதினி,
கத்தலமேவு மூதையப்பு கட்டழல் சோம சூரியர், சித்
திய மான னுகினைந்த சித்திர காரி யார்தமை, யெத்தனை
யூழி மாதவஞ்செய் திப்படி காண வாவதே. (6)

இத்தனை யோர்வு முதநெஞ்சி லிட்டிடை மாதர் பாலுற,
மத்தரின் வீழு மாறுகண்டு வைத்தெனை மாசில் சோதி
மெய்த், தத்துவமாக வேதகஞ்செய் சற்குரு நாய
னுர்தமை. யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண
லாவதே. (7)

முத்தனை மூல நாடிலொன்றை முற்படு மாதி மூலனைச்,
சுத்தனை மேனி தானிதென்று சுட்ட வொணுத சோதியைச்
சித்தனை வேறி லாவனந்த சிற்சுக லோக தாயியை, யெத்
தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (8)

ஒத்ததொவ் வாத தாயலைந்த வுற்பவ வேலை பாழ்பட,
நித்த மெய்ஞ்ஞான மாமனந்த நிற்குண தீர மேறிநற்,

பத்தர்கள் பாடி யாடவந்த பத்ம * விராச பாதனே, யெத்தனே யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (9)

தொத்தற மாடு வீடுமைந்தர் சுற்றமொ டாசை மாறி நற், பத்திமெய்ஞ் ஞான மேவுசிந்தை பற்றி விடாது மேவுகின்ற, வுத்தம சீல ரோடும்வந்தெ னுச்சியின் மேவு பர்தனே, யெத்தனே யூழி மாதவஞ்செய் திப்படி காண வாவதே. (10)

23-வது, அனுபவரூபம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்துநான்காவது,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

பிரார்த்தனை.

கட்டளைக்கலித்துறை

ஊனு யுயிரா யுணர்வா யுருகிக் கரைந்தொழியாத்
தேனுகி நின்றுநித் தித்திடு வாய்சிவ னேசிறியே
னூனு ரோமஞ் சிலிர்ப்பவொண் கண்ணீ ரருவிதர
வானு துருக வடியே னுளமென் றணுகுவதே. (1)

அணுவுக் கணுவா யகண்டமு மாயழி யாமுதலா
யுணர்வுக் குணர்வா யொழியாது நின்ற வுனைநினைந்து
கணமுற்ற போது மமையாது கற்ற வெனக் கதறி
யிணையற் றழுது திரிதர வென்றெனக் கெய்துவதே. (2)

* விராசம் = ஒளி.

துவந்துவ மாகி வருகின்ற பற்றுந் துடைத்தினிய
நவந்திகழ் பாத நினைந்துள் ளுருகிக் கோலமிட்டுக்
*கவந்தியுங் கையி லிடும்பலி யுமன்றி யொன்றுமின்றி
யுவந்தடியே னெய்த நீயரு ளாயெனக் குள்ளவனே. (3)

உள்ளவ னேயொன்று மன்பரல் லார்கட் கொளித்துநின்ற
கள்ளவ னேயுன் கடைக்கண் படாதவர் போலடியே
னள்ளலி லேநின் றழுந்தாத வண்ண மறிந்தடிமைக்
கொள்ளவ னேகுரு வாகோதி லானந்தக் கொள்கையனே ()

கொள்ளும் பொருளனைத் தும்மழித் துக்குறை யாநிறைவா
யுள்ளும் புறம்பு மொழியாது நின்றொளி ரும்முணர்வே
யெள்ளும் பலியும் புறந்திணை யுமன்றி யொன்றுமின்றி
விள்ளும் படியரு ளாய்மெய்ய ருள்ளத்துமெய்ப்பொருளே()

மெய்ப்பொரு ளேமெய் யடியார்கள் வாரி முகந்துகொண்ட
கைப்பொரு ளேகலங் காவறி வேகலங் கும்மவர்க்குப்
பொய்ப்பொரு ளேயென் றன்புந்தியில் வந்து புகுந்துநின்ற
செப்பொரு ளேசிறி யேனறி யேனென்கொல் செய்வதுவே.

செய்வது செய்யாச் செயலது வாய்ச்சின மாசையென்னு
மையல தின்றி மறையறி யாத வடிவமதா
மையம தேபண்ணி யார்க்கும பாமன்றி யாருமின்றி
வையமெல் லாம்பித்த னாமனென் றேச வருவதென்றோ (7)

வருவதும் போவது மாய்வரு கின்ற வழக்கறுத்துப்
புரிவதுஞ் செய்தென்னை யாண்டுகொண் டாய்பரி பூரணனே
பரிவதுன் பாலன்றிப் பாவையர் மாட்டென் றன் பையுணெஞ்சந்
திரிதரு கின்றதென் னேசிறியேன் செய்த தீவினையே, (8)

---

* கவந்தி = கோவணம்.

தீவினை யேன்சிறி யேனறி யேனென் றறிந்துகொண்டு
நீயெனை யாண்டன்று கொண்டதெனின் றுமந்நீயலையோ
நீவிடிலன்று பிடித்தவக் காடெனதேயதன்றோ
நாயடி யேனறி யேனுடை யாய்நலந் தீமையுமே. (9)

மேவிடு கின்ற பதிதனமோடெவை யும்வெறுத்துப்
* பாவிடுநூலிற் பரந்தெழு கின்ற பதைப்பு மின்றி
யோவிடு கின்ற கரணத்த ஞயுள் விழித்துணையே
யாய்விடு கின்றிடு நாளடி யேற்கென் றருள்வதுவே. (10)

அருளது வேவடி வாகிப் புவியில்வந் தாண்டு கொண்டு
மருளது தீர மறவாதினையா வரமருளித்
தெருளது செய்த சிவப்பிரகாசச் செழுங்கனியே
யருளது வேயுடை யாயழியா யிந்த வூனினையே. (11)

24.-வது, பிரார்த்தனை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்தைந்தாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

அருணெறி விளக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டை யாசிரிய விருத்தம்.

ஆரிய ஞர்திரு மேனியை யங்ஙனநாள் * திடுமாகாதே,
யண்டமு மாயையு மங்கழி யாவறி வாயிடு மாகாதே,

* பாவிடுநூறி யென்றும் பாடம்.

* இதேதலுமென்பது — இடுமென விகாரமாயிற்று.

காரிய காரண மான வுபாதி கழிந்திடு மாகாதே,கற்பனை முற்று மிறந்த பெருங்களி கைப்படு மாகாதே, பாரி யல் பாகிய பந்த வினங்கள் பறிந்திடு மாகாதே, பாதக னேனை யுயக்கொள் பரன்கழல் பாடுது மாகாதே, யேரி யல் பாகிய வின்பவெள் ளம்பெரி தெய்திடு மாகாதே, யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (1)

அன்றென வாமென நின்றெழு சங்கைய ழிந்திடு மாகாதே, யாசை யினங்க ளடங்க மடிந்தழி யாவிடு மாகாதே, சென்று பரந்தெழு சிந்தை திரிந்து தெளிந்திடு மாகாதே, தேவர்க ளும்மறை யுத்தெளி யாதமை தின்னம தாகாதே, துன்றி வரும் பொறி யும்புல னுந்துக ளாய்விடு மாகாதே, துன்பமு மின்பமு மாகு பவங்க டொலைந்தன வாகாதே, யென்று நிரந்தர வின்பம திங்ஙன மெய்திடு மாகாதே. யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (2)

தன்னழ காரடி யென்றலை மீது தழைப்பன வாகாதே, தானல தேது மலாதமை நெஞ்சு தரித்திடு மாகாதே, பொன்னணி யாரடி யிற்பொடி யேயுடல் பூசுது மாகாதே, பூசுர ஞர்புர ணத்திரு மேனி பொலிந்திடு மாகாதே, யுன்னிய பின்னுணை ராமை யொளித்தமை யோர்வரி தாகாதே, யொன்றெனி லன்றி யொழிந்து கழன்றதொ ரொண்பொரு ளாகாதே, யென்னையெ னுணர் கின்றது தானுமி றந்தது தாகாதே, யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (3)

கற்பனை யானவை முற்றினி லுஞ்செல் கருத்தறு மாகாதே, கங்குல் கழிந்துணர் வாகிய நண்பகல் கண்ணுறு மாகாதே, யற்ப மகத்துண ராமையில் வந்துள வானவை யாகாதே, யங்கையி லாமல கக்கனி போல்

வதோ ரற்புத மாகாதே, பற்பல வாயெழு முற்றும்
வெறும்பசி பூரண மாகாதே, பாவக மேதுமி லாவுள மேவு
பரம்பொரு ளாகாதே, யுற்பவ முற்று மொழித்தவ ருட்டிற
* மோதுது மாகாதே, யொப்பில் சிவப்பிர காச னருட்
கணி னுட்கடை பட்டிடினே. (4)

எல்லையி லூழி யெலாம்வரு நாளென தேகிய தாகாதே,
யென்பணி யன்பரு டன்கொள வெந்தை யிசைந்திடு
மாகாதே, கல்லை நெகுங்கனி செய்தெனை யாளு கணக்கிது
வாகாதே, காதன்மெய் யன்பர் கருத்து மிகக்களி கூர்தரு
மாகாதே, யல்லி லுடன்பக லின்றி யருட்கட லாடுது
மாகாதே, யண்ட மெலாமறி வாய்ந மகத்து ளடங்கிடு
மாகாதே, சொல்ல திறந்த சுகக்கனி வாய்மகிழ் தூங்கிடு
மாகாதே, சோதி சிவப்பிர காசன் விழிக்கடை துண்
ணென வைத்திடினே. (5)

சம்புவி னன்பத மெங்கு நிறைந்து ததும்பிடு மாகாதே,
தம்மையு ணுதவர் தம்மு ணிறைந்தது தாமய லாகாதே,
கம்ப மெழுந்து கரங்கள் குவிந்துக ணீர்தரு மாகாதே,
காரண ரடி யார்நடு வெய்தல் * கடைப்படு மாகாதே,
யும்புரு மிம்பரு நின்றய ரொண்பொரு ளுள்ளொளி
யாகாதே, யூழிதொ றூழியெ லாம்வரு மாயையொ
ழிந்திடு மாகாதே, யெம்பர மின்றி யிருந்தவி ழின்னரு
ளெய்திடு மாகாதே, யெந்தை சிவப்பிர காசனருட்க
ணெழிற்கடை பட்டிடினே. (6)

கன்றிவ ருஞ்சம யங்கள்பொய்ம் மாயைசெய் கற்பித
மாகாதே, கல்வியெ னும்மவ லக்கவ லைக்கடல் கையற

---

* ஓதுவது மென்பது ஓதுதுமென விகாரமாயிற்று.
* கடைப்படுதலு மென்பது கடைப்படுமென விகாரமாயிற்று.

னண்ணுது மாகாதே, வென்று பகைத்திற மாயையும் வேரற வீசுது மாகாதே, வேண்டிய வாவினை யாடியு முத்தி விளைந்திடு மாகாதே, யின்றித மும்மக மும்மறி வாகி யிலங்கிடு மாகாதே, யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (7)

பாடிய நான்மறை யீரொலி நின்று பணைத்திடு மாகாதே, பாவக மேது மிலாவுள மேவு பரம்பொரு ளாகாதே, கூடிய சாதி குலங்கள் குணங்கள் குலைந்திடு மாகாதே, கோரணி யாகிய கோமுழு தின்குடி கேடிது வாகாதே, தேடிய தாமல தின்றி யிருந்து திகைப்புறு மாகாதே, தேவர்க ளுஞ்சக முந்தெளி யாதமை திண்ணம தாகாதே, பேடியல் செங்கம லப்பத மென்றலை யெய்துவ தாகாதே, யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற் கடை பட்டிடினே. (8)

புண்ணிய பாவ வினைத்தளை யும்பொடி யாய்விடு மாகா தே, போக மெலாமினி மெய்யடி யார்கள் புணர்ச்சிய தாகாதே, பெண்ணலி யாணவை யன்றி யிருந்துள பேரொழி லாகாதே, பேயனை யேனையு மாள விசைந்த பெருந்தன்மை யாகாதே, விண்ணவர் தேடிட மேதினி மேல்வரும் விச்சைய ஞகாதே, மேவரும் வேத விழுப் பொருள் வந்து வெளிப்படு மாகாதே, யெண்ண மெலா மடி யாரடி யேவிட லென்றெழு மாகாதே, யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (9)

அருக்க ருருத்திர ரிந்திரன் மாலய னுமவ ராகாதே, யலக்க ணுறக்கொடி யேனையு மாட லருட்கழ லாகாதே, திருக்கறி னும்முறி னுஞ்சிவ மாய்விடல் திண்ணம தா காதே, தேசிகனாரு ளின்பெரு மைத்திற மாவதி தாகா தே, யுருக்கி யுருக்கி யுளுத்தைய ழித்தமு தூறிடு மாகா

தே, யோதறி யேனுடை யாய்முறை யோவென வோது மாகாதே, யிருக்கை தனக்கிய லிப்படி யாகி யிருக்கும தாகாதே; யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே. (10)

25-வது. அருணெறிவிளக்க முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இருபத்தாருவது

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

குயில்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேலைய மரர்க்கு மேலாம் விண்ணவன் மண்ணிலி ழிந்து, மாலையுங் காலையு மில்லா வகையென் றலைமிசை வைத்த, காலை யருணற் கடந்த காலுடை யானையென் கண்ணைச், சோலையில் வாழுங் குயிலே சுரூபனை நீவரக் கூவாய். (1)

அச்சந்த மாலு மயனு மல்லா தவரு மறியா, ரிச்சந்த மென்று மறையு மியம்புவ தொன்றெண வென்ற, னுச்சந் தலைமிசை யேதன் னொண்மலர்ப் பாதங்கள் சூட்டி, யச்சந் தவிர்த்தெனை யாண்ட வழகனை நீவரக் கூவாய். (2)

முத்திக் கரசென்று தன்னை மூவாத மூவருந்தேட, வெத்திக் கடையேனை யாண்டிங் கீர்த்தெனை யென்பூடுருக்கிப், புத்திக்கும் வாக்குக்கு மென்னைம் புலன்களுக்

கும் புலமாகித், இத்திக்கு மின்னமிழ் தத்தைச் சிவப்பிர காசனைக் கூவாய். (3)

சாத்திரங் கற்றுப் பிதற்றித் தலைமையுண ராதவ ரோடே, காத்திர மேவடி வாகிக் கழிந்து விடக்கட வேனைப், பார்த் திரங் கிப்பழ வேதம் பன்னும் பரமபதத்தை, மாத்திரை யொன்றின் வழங்கும் வள்ளலை நீவரக் கூவாய். (4)

ஓதி யுணரப் படாத வொன்றென் றுபநிட மோது, மாதியு மந்தமு மில்லா வானந்த நாட னருளால், வேதிய வேடம் புனைந்தென் விரகை யழித்த விரகன், கோதிக் கனி யுண் குயிலே குருபர னைவரக் கூவாய். (5)

மரித்தல் பிறத்த லிலாத மாசறு சோதியை நீயென், றுருத்தலை மாற்றம தாக வுபநிடத் தோதி விடாதே, பிருத்தியி திப்பரி சென்ன வின்பவெள் ளத்தெனை யிட்ட, நிருத்தனை யாவையு மான நிமலனை நீவரக் கூவாய். (6)

காலமு ஞாலமும் விண்ணுங் காலுங் கனலும் புனலுந், தூலமு நேர்மையு மாகிச் சொல்லும் பொருண் முற்று மல்லான், கோலங் கொடுவந் தடியேன் குடிமுழு தாண்ட குழகன், நீலநிறக் குயிற் பிள்ளாய் நிமலனை நீவரக் கூவாய். (7)

கந்த மலர்ப்பொழி றோறுங் கனியுண்டு வாழுங் குயிலே, தொந்த வினையற நோக்கித் துணையடி யென்றலை வைத்துச், சந்தமிது வென்ன வொண்ணத் தன்னை யெனக் கருள் செய்த, பந்தமும் வீடு மிலாத பரஞ்சுடரை வரக் கூவாய். (8)

* சோத்த முனக்குக் குயிலே சுராதிபர் நின்று துவள வூத்தை யுடம்பள வாகி யூதாரி யாயழி வேற்கு, மோத்

---

* சோத்தம் = அஞ்சலிபந்தனம்.

தின் முடிவுரைத் தற்கு முன்னவு மொண்ணாத வொன்றை, வார்த்தை யொன்றாலே யளிக்கும் வல்லபனை வரக் கூவாய். (9)

பொன்னலர் சோலைக் குயிலே புத்தேளிர் பொன்னடி கூட; வின்னலங் கெய்தவிம் மண்ணி லேழையேன் றன்னுள் புகுந்த, கன்னலைத் தேனை யமிழ்தைக் கனியைப் பிறவிக் கடுவை, யென்னலங் கொண்ட பிரானை யிறைவனை நீவரக் கூவாய். (10)

முன்னான் மறையின் முடிவு மொழியு முழுமுதறன்னைத், தன்னாக வென்னை யுவந்து தாளிணை யென்றலை தந்த, வென்னா யகனை யென்கண்ணை யென்னுயிர்க் கின்னமிழ் தத்தை, பொன்னான வாயாற் குயிலே புண்ணியனை வரக் கூவாய். (11)

சுந்தர நீல நிறத்துச் சோலையில் வாழுங் குயிலே யிந்திர சாலம தென்ன யாவையுங் காட்டி மறைப்பா, னந்தர நாடுபுல் லென்ன வவனியில் மானிட னாகி, யெந் தர மாள விசைந்த வின்னமிர் தை வரக் கூவாய். (12)

தன்னுடைச் சோதியிற் றுஞ்சல் பிறப்பற விந்தச் சகத்தே, மின்னிடை யாளொடுங் கூடி வேதிய வேடத்தின் வந்து, பொன்னடி சூட்டியென் னுள்ளே பூரண வானந்த மாக்கி, யென்னிடர் தீர்த்த பிரானை யிளங் குயிலே வரக் கூவாய். (13)

26-வது குயில் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

இருபத்தேழாவது,

அன்னைப் பத்து.

கலிவிருத்தம்.

தனியி லிருந்தித் தலைமத்தந்த நாத
ரினிய படியென்று னன்னே யென்னு
மினியவர்க் கொப்பது மின்னமிர் தாய்பால்
கனியுள தன்றுகா ணன்னே யென்னும். (1)

அச்ச மறுத்திங் கடிதலை வைத்தவர்
நிச்சம் புதியர்கா ணன்னே யென்னு
நிச்சம் புதிய நிமல னருளினை
யிச்சந்த மென்னவோ வன்னே யென்னும். (2)

தோற்றுவ தெல்லாஞ் சுரூபமாய்த் தோற்றவோர்
மாற்ற மருளினா ரன்னே யென்னு
மாற்ற மருளிய வல்லபங் கண்டெனக்
காற்றவொண் ணாதுகா ணன்னே யென்னும். (3)

நாரா யணனைய னாடரி தானவர்
வாராது வந்தார்கா ணன்னே யென்னும்
வாராது வந்தென்னை வாழ்வித்த நாயனார்
சீரா ரருளென்னே யன்னே யென்னும். (4)

விண்ணாதி தோன்று விழியளித் தாண்டது
மெண்ணா திருவென்று ரன்னே யென்னு
மெண்ணா திருந்த வியல்பை யிதுவென்ன
வொண்ணா துரைக்கவு மன்னே யென்னும். (5)

ஏகமாய் நின்றாரை யிங்கிரண் டென்பவர்
மோக மணவர்கா ணன்னே யென்னு
மோக மணவரென் றெங்கண் முதல்வனு
ராகமஞ் சொன்னார்கா ணன்னே யென்னும். (6)

தற்பதந் தொம்பதந் தாமாய வப்பத
மிப்பத மானவ ரன்னே யென்னு
மிப்பத மாய வியல்பை யிதுவென்று
செப்ப முடியுமோ வன்னே யென்னும். (7)

ஊனு யுயிரா யுணர்வா யழிவேனைத்
தானாக வாண்டவா றன்னே யென்னுந்
தானாக வாண்ட தகைமை நினைதொறு
மானு தருகுமா லன்னே யென்னும். (8)

இரண்டடியா யீற்றடி மிக்குவந்த கலித்தாழிசை.

வேண்டிய வாவினை யாடிட வீடளித்
தாண்ட வருளென்னே யன்னே யென்னு
மாதி யருளென்னே யன்னே யென்னும். (9)

செய்யாமை யுஞ்செய லும்மறுத் தாண்டவா
வையா வதிசய மன்னே யென்னு
மழியா வதிசய மன்னே யென்னும். (10)

27. வது, அன்னைப்பத்து முற்றுப்பெற்றது.

சிவமயம்.

இருபத்தெட்டாவது
ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்
அடியவர்திறத்து நிந்தாஸ்துதி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

காயமா ளிகைய துண்டு மூவர்கா தலிக ளுண்டு வாயல்காப் பறிவுமுண்டு வளம்படு சமத மாதி, யாயநற் சுற்ற முண்டங் கடக்கரும் பொருளு முண்டு, தூயநற் சுரூபா னந்தன் றொண்டர்க டுறந்த தென்னே. (1)

அன்பர்பா லார்வ முண்டங் கரும்பவச் செற்ற முண்டு, வன்பதார் விஷயந் தன்மேன் மாறிடாக் குரோத முண்டு, முன்புறப் பக்க மேல்கீழ் முழுதுமா நிதியு முண்டு, துன்பமில் சுரூபா னந்தன் றொண்டர்க டுறந்த தென்னே. (2)

ஒன்றொடுங் கலந்தி ராத வுறவின்மை பெரிது முண்டு, பொன்றினு மசைவு றுத முரண்வலி புகலி னுண்டு, கன் றிடும் வயிரி யோடுங் கலக்கமி லன்புண் டென்றாற், றன்றருட் சுரூபா னந்தன் றொண்டர்க டுறந்த தென்னே. (3)

கல்லுறு சிந்தை யெல்லாங் கரைக்கும்வல் லபமு முண்டு, வல்லவர்க் கொருகா லத்து மிரங்கிடா மறமு முண்டங், கெல்லையற் றிடுமி ரக்க மிறையொடு மிகவுண் டென்றாற், றொல்லைநற் சிவப்ர காசன் றொண்டர்க டுறந்த தென்னே. (4)

முன்பினு மலைவு தீர மொழிதரு விரக துண்டு,
நன்கொடு தீங்கு காணா ஞானமாஞ் செருக்கு முண்டு,
வன்புறு துன்பம் வந்தான் மயக்கமில் களிப்ப துண்டு,
துன்பமில் சுரூபா னந்தன் றொண்டர்க டுறந்த
தென்னே. (5)

கோத்தவை குலைத்து மேலாங் குணமின்மை
பெரிது முண்டு, பார்த்தவ ருயிர்கண் ணாலே வாங்கு
பண் பின்மை யுண்டங், கேத்துறு மேழை கட்கே
யெளிவரு மியல்புண் டென்றா, லாத்தனன் சுரூபானந்த
னன்பர்க டுறந்த தென்னே. (6)

உலகியல் புறவு ணர்ந்த வுன்மத்த மிகவு முண்டு,
தலைவன தருள தன்றித் தணிப்பரும் பித்து முண்டு,
மலைவுறு பகுதி போந்து வாதனை மாண்ட துண்டு,
நிலையுடைச் சுரூபா னந்த னேசர்க டுறந்த தென்னே. (7)

தள்ளினு மிறைவ னன்பர் தமைவிடாப் பாச
முண்டு, நள்ளினு மிதரர் தம்மை நணுகிடாத் துவேஷ
முண்டு, துள்ளும்வன் னெஞ்ச வஞ்சர்க் கருளிடாச்
சேரா முண்டாற், றெள்ளுநற் சுரூபா னந்தன் சித்தர்க
டுறந்த தென்னே. (8)

* எத்தினர்க் கருத்தே செய்தங் கெளிவரு மிச்சை
யுண்டு, தோத்திரச் சூழ லூற்றுச் சுழலும்வன் பற்று
முண்டு, சாத்திரப் பேய்க ளுக்குச் சலனஞ் செய்
தவறுண் டென்றாற், நீத்தனற் சுரூபா னந்தன் சித்தர்க
டுறந்த தென்னே. (9)

---

* எத்தினர்க்கருத்தென விசைநோக்கி மிருந்தது.

கரையில்பே ரின்பத் தாராக் காமுகர் விஷயகோப, ருறையறு பொருடம் முன்ளே யொளித்துப்பே ணிடுமு லோபர், முரிவில்பே ரின்பத் தீசன் வயமுயிர் காணு மோகர், நிரையுமெம் மதமுந் தாமா நிமலர்க டுறந்த தென்னே. (10)

வரும்பவத் தாருச் சிற்ற மாற்சரி யத்தர் தன்னைத், தருங்குரு பரன்று என்றித் தாழ்ந் திடாத் தெம்பர் தீர, வரும்பவ நாச னெங்கட் குண்டெனு மகங்கா ரத்தர், பரம்புமா யாவை சூன்ய பண்ணினர் துறந்த தென்னே. (11)

நிலவருட் பொறையர் நேதி நேதியே நிரூப கத்தாற், குலவுறு நற்சந் தோஷர் குருபரன் முழுது மென்னச் சொலிறைையுற் றிடும் வி வேகர் தோய்வெதி ரிக்த சாந்தர், தொலைவில்சித் தவிரோ தத்தர் தூயவர் துறந்த தென்னே. (12)

உற்றவா ரோபி தங்க ளொழிந்தவா றுதரு மாமான், முற்றுமாய் மொழியி றந்து முடிந்தமோ னத்த ராயாற், பற்றுவி டின்றி நின்ற பராமிழ்தா னந்தர் தாமாற், றுற்றசீர்ச் சுரூபா னந்தன் றொண்டர்க டுறந்த தென்னே. (13)

சுட்டிய வெவையுந் தாமாய்த் துறக்கவே றொன்றின் றுணல், விட்டதும் விடாது மன்றி வேதமோர் நான்கும் பேணப், பட்டிடு மளவு மல்லாப் பரம்பரன் சுரூபா னந்தன், சிட்டர்க டுறந்தா ரென்னும் வார்த்தையுஞ் சிறப்ப தன்றே. (14)

28-வது. அடியவர்திறத்து நிந்தாஸ்துதி முற்றுப்பெற்றது.

சிவமயம்.

இருபத்தொன்பதாவது,

நெஞ்சிற்குரைமவுரை.

நேரிசை வெண்பா.

உப்பகன்ற நீர்க்கூழு முண்டாற் பசிகெடுமா
லப்பதுண்டு கூவல்குள மாறதனி - லிப்படியைப்
பார்த்தமையாய் நெஞ்சே பரந்தெழுந்து சென்றாலும்
பேர்த்துளதின் மேல்வருமோ பேறு, (1)

பல்காய நற்கறியும் பானெய்ப்பழத் தோடடிசில்
செல்வாய தேசஞ் செறிந்தாலு - மெல்லவுணை
யூட்டாவூ ழுண்டே லுறுபிணிமற் றியாதொன்றால்
வீட்டாதோ நெஞ்சே விரைந்து. (2)

நல்ல வறுசுவைதா னுக்கினுனி மாத்திரமே
யெல்லை யிருவிரலே யல்லதிலை - மெல்ல
விருவிரலைத் தான்கடக்க மாட்டாதே நெஞ்சே
பொருகடலைத் தான்கடப்பாய் போய். (3)

ஆடை யழகினைநன் காதரித்தே யாங்கதற்கென்
றோடி யுறுபொருளுக் குற்றழன்றாய் - கூடியதேல்
வண்ணா னெலிமருவார் வைப்பிடமற் றின்னவற்றா
லெண்ணாயோ நெஞ்சே யிடர். (4)

கந்தையொடு வெண்ணீறு கன்முழைபாழ்க் கோயில்பல
முந்தையுள சீத முறுமென்னில் - வெந்துயரக்
கோடையினிற் கோவணமுங் கூடமிகை யித்தனைகா
ணுடையினிற் காரியந்தா னுங்கு. (5)

நீயா யமையாய் நினைந்தோடிக் கிட்டாமை
யேயா வமைந்தா யிடர்நெஞ்சே - சாயோ
கடையானார் காய்பசிக்கே கால்குலைவர் கற்றோ
ரடையாரோ வாங்கமையின் பால். (6)

அமையாதே பெற்றதனா லாங்காங்கு நன்றென்
றிமையா தெழுந்தோடு கின்றாய் - சமையாச்
சிறுமைக்கு வித்ததுவாந் தேறாய் மனனே
மறுமைக்கு மஃதே மறைப்பு. (7)

ஆற்றங் கரைப்பசுத்தா னக்கரையோ டிக்கரையாய்த்
தோற்றும் * பசுப்பைத் தொடர்வுறுமே - யாற்ற
வதுவேபோ னெஞ்சே யலைந்தலைப்பட் டோடு
மிதுவே யுனக்கிதனாற் பேறு. (8)

இருந்தவிடத் தேதும்வரக் கண்டிருப்ப தன்றோ
பெருந்தகைமைக் காபரணம் பேதாய் - மருந்தெனவே
யாங்கினியார் தங்கடையிற் சென்றிடினு மாதரியார்
பாங்கிதுகாண் பாழ்நெஞ்சே பார். (9)

உணர்ந்தார்க் குடம்பு மிகையென் றுலக
முணர்ந்தா ருணர்ந்தே யுரைத்தா - ரிணைந்தாம்
பொருண்முழுதும் விட்டாலும் பொய்யுடம்பிற் காதன்
மருளதுவா நெஞ்சே மறித்து. (10)

இல்லாத தில்லை யுளதுதவி ராதென்று
நல்லார் துணிபொருளை நாடுங்கா - லெல்லா
மமைந்தபடி யேவருமா லாங்கசைவெ னெஞ்சே
சமைந்தபொரு டாமறிவார் தாம். (11)

* பசுப்பு = பசுமை.

இங்கேதன் னானுயிரை யேதமறக் கண்ட விடத்
தங்கே யெலாமமைய லாயிருக்க - வெங்கேனுங்
காடு மலையுங் கடந்துடம்புக் காய்வருந்தி
யோடுவதெ னெஞ்சே யுரை. (12)

அமைதற் குபாய மறிந்திடநீ வேண்டிற்
கமையுற்ற ஞானக் கரும்பைத் - தமையுற்ற
வாரியர்பாற் பெற்றங் கவரடிக்கே யேவலினை
யோரியல்பாற் செய்நெஞ்சே யுற்று. (13)

நீடுந் தலைகீழ்கான் மேலாகி நின்றாலுங்
கூடும்படி யொழியக் கூடாதா - லோடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக்கண் டாறி
* யிருந்தாலோ நெஞ்சே யினிது. (14)

நல்லோரை மேவி நலங்கிடக்க வங்குள்ள
பொல்லாங்கு கொண்டாடிப் போகாதே - யெல்லா
மருளியவா செய்தங் கலதொழிநீ நெஞ்சே
பொருளியல்வே றில்லையினிப் போற்று. (15)

வைதலும் வாழ்த்துதலும் வார்த்தையினிற் கற்பித்து
நையுமது நெஞ்சே நலமன்று - மெய்தும்
புரையிடத்து வாயுப் புரைக்குமொலி யென்றே
யுரையிடத்துக் கோளொழிநீ யுற்று. (16)

ஒன்பதுவா யாலு மலஞ்சொரிய வூத்தைகமழ்
புன்புலையாங் குற்றப் புலாலுடம்பை - யன்புடனே
யேத்துவார் வைவா ரிழிவுழைப்பா ரல்லாதா
ராத்தமா மெய்யுணர்வார்க் காங்கு. (17)

---

* இருந்தாலன்றோ வென்பது - இருந்தாலோவென
மரீஇயிற்று.

வாயுவன னீர்பிணிதான் மற்றும் பலபலவா
வாயசட வேதுவினை லாம்பயனுக் – கேயவொரு
செற்றநலங் கொண்டிலையேற் சேதனவே துத்தனையு
மற்றவண நெஞ்சே மதி. (18)

ஆர்வமொடு செற்றத்தை யாரிடத்துங் கொள்ளாதே
சாரமுள தெவ்விடத்துந் தான்கொண்டு - தீரவுணர்
நல்லோர்தஞ் சொல்லை நழுவாமை நீகொண்டு
நில்லா யிதுவே நெறி. (19)

பெற்றதுவே கொண்டமைந்து பேரிழவிற் கொல்காதே
குற்றநல மென்கோள் குறுகாதே - மற்றும்
பயனின் மொழியாதே பார்த்துளமே நல்லோர்
நயமுமற வாதே நட. (20)

பொய்க்கனவும் பேய்த்தேரும் போலுமுடல் போமள
சிக்கெனவே நாதன் றிருவடியை - நெக்குருகிப் [வுஞ்
பூண்டுவிடா தேகிடந்து போற்றியிடு நெஞ்சேநீ
மீண்டுபிற வாதே விட. (21)

ஆண்ட வியல்பை நினைந்து நினைந்துருகி
வேண்டிமிக மெய்யன்பை மேன்மேலு - மாண்ட
வடியிணையே பூண்டமைவா மாரமிழ்தை நெஞ்சே
யொடிவறவே நீயுண் டிரு. (22)

29-வது, நெஞ்சிற்கமைவுரை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பதாவது,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

திருச்சாழல்.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

இறையுணர்த்து மளவினிலெக் காலமுமெய் யுணர்வானோங், கறையுடல மளவெனமுன் கலங்குவதங் கென்னேடி, கிறையவனல் விறகிருக்க நிகழ்மதன மில்லாக்காற், சிறுகறையா னரித்துலைல்போற் றிகழ்ந் திடுங்காண் சாழலோ. (1)

அருமறையா கமமநந்த முகங்களினா லுரைத்தாலு, மரியபரம் பொருளினையிங் கறியவொண்ணா தென்னேடி, யருமறையா கமமறைந்தென் னாரியனா யெழுந்தருளித், திருவடியை யருளினல்லாற் றெரியாகாண் சாழலோ. (2)

மாத்திரையி லொருமொழியான் மாமுனிமீட்டு ணர்த்திடுமேற், சாத்திரநூற் பார்ப்பதனாற் றருபயனென் சாற்றேடி, சாத்திரத்தாற் றற்பரத்தைத் தானிதென வறியவொண்ணா, வார்த்தையிது கலகமென வடித்திட லாஞ் சாழலோ. (3)

எங்குமொழி வறநிறைந்த வெல்லையிலாப் பேரின்ப மிங்கொருமா னிடனாகி யெழுந்தருள்வ தென்னேடி, சங்கைகெட மான்கொடுமான் பிடித்தாற்போற் றானுடம் பாய், நங்கணுடம் பழிப்பதற்கு நடந்ததுகாண் சாழலோ. (4)

சாழல் - ஓர் விளையாட்டு.

ஒப்பரியா னெண்மலர்த்தா ளளித்தலுமே யுலகுயிர்
மற், றெப்பொருளுங் கண்டதிலை யென்செய்தவா றியம்
பேடி, யெப்பொருளு மாய்நின்ற திணையடியே யாதலி
னுன், மெய்ப்படவே கண்டவர்க்கு வேறிலைகாண்
சாழலோ. (5)

உடம்பிலா னுடம்பாகி யுடம்பழித்துத் தானாக்கத்,
திடம்படவே மொழியுமதங் கென்பெறத்தான் செப்
பேடி, யிடம்படவே மறுபயனங் கில்லாத புயன்மழை
போ, லடங்கவழி யாப்பொருளா வருளினன்காண்
சாழலோ. (6)

இப்படிவே றறவிறைவன் யாவையுந்தா னுயிருக்க,
மெய்ப்படவே சமயங்கள் பிணங்குவதென் விளம்பேடி,
செப்பிடவே திமிரமுறு நயனத்தோர் மதிபலவா,
மப்படியே யறுசமய மலத்திடுங்காண் சாழலோ. (7)

இருந்தபடி சிவமாகி யிருந்ததனை யெமக்களித்த,
பெருந்தவர்க்குக் கைமாறு தானுண்டோ பேசேடி,
யருந்தவற்குக் கைம்மாறொன் றிலையருளை நினைந்ததனு,
லெரிந்தவழன் பெழுகெனவென் புருகிடல் காண்
சாழலோ. (8)

வானோரு மண்ணோரு மறையுமறு சமயமுமங்
கேனோரு மலமாக்க வெமக்களித்த தென்னேடி
யேனோரு மலமாக்க வெமக்களித்த தெம்பெருமான்
மானுய சுதந்தரமே மற்றிலைகாண் சாழலோ. (9)

செய்யசிவப் பிரகாசன் சிறியோமை யாண்டருளி
யையமற நங்குலமுன் னாட்கொண்டான் காணேடி
யையனருட் டிறநினையே னழிந்துவிழுந் தெழுந்தலறேன்
மெய்ம்முழுதும் விதிர்விதிரேன் வினையேனுன் சாழலோ.(10)

30-வது, திருச்சாழல் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

முப்பத்தொராவது,

பழித்துரைமாலை.

அடிநான்காய்த் தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

விரித்தகண்ணிற் றிரித்தகண்ணில் விழித்தகண்ணி லெல்லா, மிகுத்துருவி நின்றேயும் விளம்பவொண்ணா வீசன், றரித்துவந்த திருமேனி தன்னையெனக் களித்துத், தானேதா னாக்கவந்த தன்மைவேடங் * கிடிகொள். (1)

உரைத்தபொருள் யாவையிலும் புரைத்தலின்றி நின்றே, யுரையுணர்வா லுணரவொண்ணா வொளிமிகுத்த வொருவன், வரைத்துவந்த திருமேனி மன்னன்மயக் கறுத்து, மலர்க்கழல்கள் சூட்டவென்றே வந்தவேடங் கிடிகொள். (2)

தோன்றிநின்ற பொருள்களெல்லாந் தொட்டுநின்றே யாவுந், தோன்றாமை தோன்றிநின்ற தொன்றலொடு வந்து, வூன்றிநின்ற வுணர்வுதன்னை யுணர்வானி லிருத்தி, யுள்ளநிறங் கொள்ளவந்த கள்ளவேடங் கிடிகொள். (3)

நிகழ்ந்துநின்ற பொருள்களெல்லாஞ் செருமிநின்றே யாவுந், தெரிவரிய பெரியபிரான் றீர்ந்துவந்த கோல, நிகழ்ந்துவந்து முகந்தரித்து நிகழ்வுகெட முழுத்தி, நிகழ் வானி னிறங்கவர நிகழ்ந்தவேடங் கிடிகொள். (4)

---

* கிடிகொளென்பது - பழிப்புரை - திசைச்சொல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த
குறள்வெண்செந்துறை.

உருத்தவவ்வ விடந்தோறு மொப்பிலாப்பெருங் கண்ணே
யுதய மாக்கிக்
கருத்தற்ற விடந்தோறுங் காண்பானு யெனையங்கே
கரந்தா னென்னே (5)
கெட்டவவ்வ விடந்தோறுங் கேடில்லாப் பெருங்கண்ணே
கெழுமு வித்துப்
பட்டவென் றுயர்தீரப் பழையதன் னிலையிலே
பதித்தா னென்னே. (6)

வேறு

உன்னரிய தன்னமே யென்னுயிரை யொடுக்கி
யொழியாமை யெவ்விடத்து மழியாமை காட்டித்
தன்னடியே னுமாறு பின்னையெனக் களித்த
தத்துவனர் தங்கருணை சாற்றலா மளவோ. (7)

31.வது, பழித்துரைமாலை முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

முப்பத்திரண்டாவது,

தோழிக்குரைத்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முத்தே வருந்தேடு மூலப் பொருடன்னை மொய்குழலாயேயடி கேளாய், பித்தா முபாதிப் பெருந்துயர்ப் பவ்வப் பிறவிப் பிணிக்கோர் மருந்தா, மத்தாடு மைம் புலன் றன்னின் வழிமாறி மனவுரை மாண்டவருளே, சித்தா யொளிருஞ் சிவப்பிர காசர் திருவடித் தாமரை காணே. (1)

சொல்லிய ஞானிக் கினிப்பிறப் பில்லாமை தூமொழி யாயேடி கேளாய், நெல்லு முதலாம் விதைக ணெருப்பில் வறுத்தான் முளையாதாற் போல, வல்லும் பகலு மறவே சுட்ரு மறிவாம் வடவை யெரியில், வெல்ல வரும்பவ வித்தா மவிச்சையும் வேவ லான் மேன்முளை யாவே. (2)

துய்யமெய்ஞ் ஞானிக் கிருவினை கூடாமை தோகை நல்லாயேடி கேளாய், பொய்ய வுடற்செயல் புத்துடம் பாதலாற் போந்த வவிச்சையற் றுத்தான், பொய்யாய வூனி லறிவுக்கு முன்புள்ள விச்சையோ டேவெந் தறு மான், மெய்ய வறிவால் விளங்கலான் மேல்வினை மேவாது வெந்தறுந் தானே. (3)

கோதற்ற ஞானி யிருந்திடுந் தன்மையைக் கொங்கைநல் லாயேடி கேளாய், வாதற்ற மாமறை முற்றுஞ் சிரங்களால் வந்தது வாழ்த்திநின் றேத்தி, யோதற் கரிய வுணர்வின்ப மேயா யொருகற் பனைகளு மின்றி, யாதுக்கு மங்கங் கதுவாகி யன்பர்க் கறிவா யிருந்திடுந் தானே. (4)

மெய்ஞ்ஞானி கட்கு விரதங்கள் கூடாமை மெல்லிய லாயேடி கேளா, யஞ்ஞான மாயையைச் சுட்டுக் கொடல்ல தறிவுதி யாது இத்த, விஞ்ஞான மாயையி னுலதன் காரியத் தாகும் விரத மயருன், மெஞ்ஞான மாகி விளங்கலான் மேல்வினை மேவலொன் றுலுமே வாதே. (5)

உரையன மாண்டுள்ள வொண்கழ லான்றன்னை யொப்பிலா தாயேடி கேளாய், புரைதன வோடு கனவு சுழுத்தி புகலுந் துரியமுன் னுக, வரைமுழு துங்கழன்

றேபாத் தோடுயிர் வையமுங் கண்ணில் விழுங்கிக், கரையிறந் தின்பக் கடலா யிருந்திடுங் கண்ணே கண்ணுயிடல் காணே. (6)

32-வது, தோழிக்குரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்துமூன்றுவது,

அறுதியுரைத்தல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

இந்த வுடலம் விடுவதன் முன்விரைந் திப்பவந் தீரா விடில், வந்துவந் துபல ஞெப் பிறந்தெய்த்து மாண்டே விடுவர் * கிடீர் (1)

சாதல் பிறத்த லெனுங்கேடு தானறத் தம்மை யுணரா விடில், போதல் வருதலாற் பொன்னூச லாட்டொரு காலத்தும் போகா கிடீர். (2)

உம்மை யுணர்ந்து பவச்சுடு காட்டை யொப் போடே கழலா விடி, லிம்மை மறுமையி லேபிடித் தும்மை யெல்லாம் படுத்துங் கிடீர். (3)

ஊனே வடிவென்றல் விட்டுத்தன் னுண்மையை யுள்ளவா காணு விடின், மானு மழுவுமாய் வந்தாலும் வன்பவ மாளா திருக்குங் கிடீர். (4)

இப் ० பிறப் பில்லே தமையுணர்ந் தெல்லாப் பிறப்பு மொழியா விடிற், றப்பி யுடல்கொண்டு கொண்டு சதங்கையுங் காலுமாய் நிற்பர் கிடீர். (5)

---

* கிடீரென்பது - பழிப்பிடைச்சொல் - தேசிகம்

० பிறப்பிலேயென்பது-பிறப்பில்லேயென விரித்தல் விகாரமாயிற்று.

ஆறி யறிவே வடிவென் றிருந்தல்ல லெல்லாங் கழியாவிடிற், சூறைகொண் டேமாயை யும்மையூ ஞக்கித்தோற் பாவைக்கூத் தாட்டுங் கிடீர். (6)

மேலா லறிவோ மெனுதே விரைந்தும்மை மெய் கண்டு கொள்ளாவிடிற், கோலாகலஞ்செய்து வந் தும்மை யாசாபைசாசங் குமைக்குங் கிடீர். (7)

பந்தசங் கற்பனை யிற்றலை வைத்துப் படாதெலாம் பட்டிடாதே, யெந்தை கழல்சூடி லெங்கெழி லென் ஞாயி றென்றிருக் கல்லாங் கிடீர். (8)

நாடிக் குரவன் கழறலை வைத்துண ராதானை நானென் றிடிற், கூடிப் பெருஞ்சுற்ற ○ மத்தின் றலை யிலே கொள்ளியை வைக்குங் கிடீர். (9)

மெய்யே யுரைத்த வறுதிசொற் கொள்ளார் விலங்குவேதாள மொப்பா, ரையோ பவங்கடந் தேற லோர் காலத்து மாணையே யில்லை யில்லை. (10)

33.வது, அறுதியுரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்துநான்காவது,

அருமையுரைத்தல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

நான்மறை யோதிப் பொருளுரைத்து நாடறியக் கல்வி சாற்றினுலுந், தானது வாகை யரிதுகாணுஞ் சலிப்பற நிற்கை யரிதுகாணும். (1)

○ அதின்றலையென்பது - அத்தின்றலையென விரித்தல் விகாரமாயிற்று.

இணங்காமை யெல்லா மறத்துறந்தே யிருட்டற வேதாந்த மோதினும், பிணங்கா திருக்கை யரிது காணும் பேரின்ப மாகையரிது காணும். (2)

எல்லை யிலாகம மேறவோதி யேதுக்க ளெல்லா மியம்பினு, மல்ல லறுக்கை யரிதுகாணு மறிவாயி ருக்கை யரிதுகாணும். (3)

(சைனசந்நியாசம்.)

பற்றற விட்டுத் தலைப றித்துப் பாணியைப் பண் ணிப் பயின்றக்காலு, முற்ற நிலைநிற்கை யரிதுகாணு முடிய நிலைநிற்கை யரிதுகாணும். (4)

ஆறுசமயப் பொருளுங் கற்றே யங்குள்ள தர்க் கங்கள் சாற்றினும், மாறியிருக்கை யரிதுகாணு மது விதுவாகை யரிது காணும். (5)

வேறு பிறிதிலா மெய்ம்மைதன்னை வித்தாரமாக விளம்பினு, மாறியிருக்கை யரிதுகாணு மவிரோத மாகை யரிதுகாணும். (6)

தேறி யுலக மனைத்தினையுஞ் சிற்பர மாகநாஞ் செப்பினு, மாறியிருக்கை யரிதுகாணு மவிரோத மாகை யரிதுகாணும். (7)

34-வது, அருமையுரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்தைந்தாவது,

வளவியுடன்படுத்தல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

இமைத்து விழிப்பதற் கில்லைவாணு ளிதிலுள்ள துன்பங்க ளெண்ணில்கோடி, யமைத்துனைப் பார்த்தல் லலறுநெஞ்சே யாண்டவ னென்றன் றரற்ற * வாரீர் (1)

* வாரீரென்பது - நெஞ்சையுயர்த்திக்கூறல்.

மின்னிது நொய்திவ் வுடம்பின்றன்மை மேன் மேலும் வந்திடும் வேதனைக, ளென்னதே யிவ்வுடம் பாவதானு லாய்வானை யெப்போது மாயவாரீர். (2)

இல்லாது வேண்டினும் வந்திசையா வுள்ளது தள்ளினு மூட்டுமானு, லெல்லாம் வரக்கண்டோ ரிச்சை யின்றி யிருந்த படியே யிருக்க வாரீர். (3)

என்னுணே கேளிஃ தொன்று நெஞ்சே யேதேனுஞ் செய்தினி யுள்ளகாலந், தன்னுக நாயோமை யாண்டு கொண்ட தாள்களை யோவாது சாற்ற வாரீர். (4)

பொன்று முடம்பு பொருந்துமின்பம் புன்னுனை நீராகும் புன்மைநெஞ்சே, யென்றபி னெல்லாம் வீழ விட்டே யிருந்த படியே யிருக்க வாரீர். (5)

ஒன்றெனி லாயிர கோடிதுன்ப மோய்வின்றி யேவரு மோரினெஞ்சே, யொன்றுமற் றுள்ளநா மாயிருந்தே யுளநாள் கழிக்க வொருப்ப டரே. (6)

35-வது, வளவியுடன்படுத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்தாருவது,

மநோரதம்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

மூளுந்தனு நாலு முகனுந்தேட மூல மொருகுரு மூர்த்தியாகிப், புகுந்தடி யார்தொழ வீற்றிருக்கும் பூங்கோயி லாக நான் பெற்றிலேனே. (1)

மறைகளு லென்று மறிவரிய மலரடி கண்டுநான் வாழும்வண்ண, மிறைவனார் தன்றிருக் கோயிறன்னி லேதேனு மொன்றாகப் பெற்றிலேனே. (2)

பாசங்கள் வேரைப் பறிக்கும் வண்ணம் பலிக் கென்று பேரிட்டுப் பையப்பையத், தேசிக னார்தா மெழுந்தருளுந் திருவீதி யாகநான் பெற்றிலேனே. (3)

உள்ளூறு நோய்கண மொன்றின் மாற்று மொப் பிலானந்தரை யுள்ளூறுதோறு, மன்ளூறு சிந்தையார் கண் சொரியு மானந்தக் கண்ணீர்நா னாக்கிலேனே. (4)

பாமாலை கொண்டு தனையருளப் பாவியேன் கண் காணப் பாரில்வந்த, சீமான் புகழ்கேட்க வாக மெங் குஞ் செவியாய்த் திகழ்ந்திடப் பெற்றிலேனே. (5)

அச்சந் தவிர்த்தென்னை யாண்டு கொண்ட வருளை நினைதொறு மன்புகூர, வுச்சி தொடங்கி யடியளவு முள மா யிருக்க நான் பெற்றிலேனே. (6)

கருவேலை யுள்விழுந் தாழுமென்னைக் கண்டஞ்ச லென்றுவந் தாண்டுகொண்ட, வருண்மேனி காணவ நந்தகோடி யாகத்திற் கண்ணாகப் பெற்றிலேனே. (7)

அவமே பிறந்திறந் தாழுமென்னை யாழாம லஞ்ச லென் றாண்டுகொண்ட, தவராச னைப்பா டிடமயிர்க்கா றனைல்லாம் வாயாகப் பெற்றிலேனே. (8)

போதந் திரண்டருண் மேனியாகிப் புலையேனை யாளப் புவியில்வந்த, பாத மணமுண்டு வாழகாசி பதினா யிரங்கோடி பெற்றிலேனே. (9)

கழலிணை யாவருங் காணவந்த காரணனார் தாமெ ழுந் தருளும், பழவடி யார்திரு வாசறோறும் படியாய்க் கிடக்கநான் பெற்றிலேனே. (16)

36-வது, மநோரத முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்தேழாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

ஏவலுக்கிசையாக்கரணத்திகழ்ச்சி.

அடிநான்காய்த் தம்மிலொத்துவந்த இரட்டைக் குறள்வெண்செந்துறை

ஓவாதே பிறந்திறந் துழிதரு மென்னை, யோகோ
வென் றருள்செய்யு மொளியாருஞ் சுரூபன், றேவா
நற் றிருமேனி நினையாத கண்க, ளவையெல்லாங் கண்
ணல்ல செந்நீர்பாய் புண்ணே. (1)

தடையில்லைத் திருவாசல் சகலமுஞ் சுரக்குந், தன்
னையே தரவல்ல தலைவள்ளல் சுரூப, னொடிவறக் கொடி
கட்டி யிருக்கவு முயிர்க, ளோடிவந் தடையாத வுணர்
வின்மை யென்னே. (2)

கல்லாத முழுதையுங் கற்பித்தோர் மொழியாற்,
கடையோமைப் பொருளாகக் கடைக்கண் வைத்தளித்த
வல்லாளன் சுரூபன்சீர் நினையாத மனந்தான், வன்
பாறை யிரும்பன்று வலிதீது வலிதே. (3)

37-வது. ஏவலுக்கிசையாக்கரணத்திகழ்ச்சி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

முப்பத்தெட்டாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

ஏவலிசைத்தல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த
குறள்வெண்செந்துறை.

கேளாய் செவியேநங் கீழ்மைகண்டும் புகுந்தாண்டவன்
மாளாத சீர்த்தியே மன்னு மொலியெங்கு மாகவே. (1)

உடலேநீ மேவும் பரிசெலா நம்மை யுடையவன்
றிடமாந் திருமேனி யானதிண் மைகண்டுந் தேராய்நீ. (2)

வாராய் நயனமே வாராதே வந்தெம்மை யாண்டானைப்
பாராய் முழுது மவனாகி நின்ற பரிசினை. (3)

நாவேநீ யுண் ணுஞ் சுவையெல்லா நம்மை யுடையவன்
றேவா ரடியாய திண்மைகண் டுண்ணவுந் தேராய்நீ. (4)

* வாச முழுதுமவ் வாசாம கோசர மானவ
னாச மிலிகோல மானநன் மைகண்டு நாசியே. (5)

வாராய்பிர விர்த்தியே வாராதே வந்தெம்மை யாண்டவன்
சீரார் திருப்பணி யாகவே செய்யாய் செயலெல்லாம். (6)

ஓராய் நிவிர்த்தியே யொன்று மொழியா விறைவரைச்,
சேரா தவருடன் சிந்தை கனவிலுஞ் சேராதே. (7)

மனமேநீ சங்கற்ப மாக நினையும் பொருளெல்லாங்
கனமாம் பரஞ்சுடர் கற்பனை யாகக் கருதாய்நீ (8)

---

* இச்செய்யுளிற் பயனிலைதொக்கது.

சித்தமே நீசிந் தனையாய் நினையும் பொருளெல்லாம்
வைத்த மலரடி யல்லதின் மைகண்டு வாழாய்நீ. (9)

ஐய மறவிட்டறுதி யிடுமிப் பொருளெல்லாஞ்
செய்ய சிவப்பிர காசரென் றேதெளி வாய்மதிநீ. (10)

38-வது, ஏவலிசைத்தல் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

முப்பத்தொன்பதாவது நற்குறி.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

பாரும்பரனு ரருளவருங்குறி பாதாதிகேசமுங் கம்பித், தோர்வுமிழந்து வுரோமமுகிழ்த்து வுள்ளமுந் தீமெழு காய்விடுமே. (1)

கலையும்வளையுடன் கற்புமிழந்தறி மாலுங்கரை யறுமே, யலையுங்கடலே ழுணுவெனுமன்பர்பா லையன் வருங்குறியே. (2)

என்புமுருகி யெதிரிலின்பவ்வெள்ள மெங்கும்ப ரந் திடுமே, தன்பெருந்தன்மைதன் னுமறிவொண்ணாச் சம்பு வருங்குறியே. (3)

ஊனுமுயிரு முணர்வுமுணர்விடை யாதுமுருகி யொன்றாய்த், தேனுமமிழ்துமாய் கின்றுதித்திடுஞ் செய்யோன் வருங்குறியே. (4)

சதுரைமறந்தறி மால்கொண்டுதன்னையுந் தானிழந் தோவியம்போ, லெதிர்வுங்கழிவுமற் றின்பமீதூருமா லெந்தை வருங்குறியே. (5)

விச்சையவிச்சை விவேகாவிவேகங்கள் விடுபற்றுங்களவிற், றுச்சதுணர்த லிலாலைமபோற்றேன்ருது தூயோன் வருங்குறியே. (6)

உரையுந்தழுத்துள மும்முருகிக்கண்ணு மொப்பிலாருகியோடும், புரையுமறநினைக் கின்பமீதூரும் புரணன் வருங்குறியே. (7)

39-வது, நற்குறி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பதாவது பல்லி.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அருவுருவ லானுருவ மாகிவரு மாகி
லாதிமறை தேடரிய வண்ணல்வரு மாகிற்
சுரூபனெனை யுடையநல தோழன்வரு மாகிற்
றுளக்கமற நல்லதிசை சொல்லுசிறு பல்லி. (1)

ஓடுமன நம்மினுட னுறவுசெயு மாகி
லுள்ளநிலை மெள்ளவுணர் வாகிவரு மாகி
ஞடுமிட மெங்குமறி வாகிவிடு மாகி
னல்லகுர னல்லதிசை சொல்லுசிறு பல்லி. (2)

செப்பமுடி யாதபொருள் செப்பவரு மாகிற்
சிலுப்பற விருத்தவல தீரன்வரு மாகி
லிப்பவ மறுத்தகழ லிங்கன்வரு மாகி
லின்னமொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. (3)

ஆறவடி வைக்கவல வாதிவரு மாகி
லருஞ்சிவ மெனக்கெளிய வையன்வரு மாகில்
வேறுமொழி யாவிரகன் வீதிவரு மாகின்
மீளவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. (4)

இரவுபக லொழியவரு மிரவிவரு மாகி
லின்பவடி வானசிவ மிங்ஙன்வரு மாகில்
விரவியெனை யாளவல வீரன்வரு மாகின்
மீளவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. (5)

என்னுளமிழ் தூறிநிறை யின்பம்வரு மாகி
லென்றுமொழி யாதபர மீசன் வருமாகின்
மன்னுமுணர் வாகிய மணாளன்வரு மாகில்
வாழவொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி. (6)

உம்பர்க டமக்கரிய வும்பன்வரு மாகி
லுரையுணர் விறந்தவுணர் வுருவன்வரு மாகி
லெம்பர மறத்திகழு மின்பம்வரு மாகி
லின்னமொரு கால்வரவு சொல்லுசிறு பல்லி (7)

40-வது, பல்லி முற்றுப்பெற்றது

உ

சிவமயம்.

நாற்பத்தொன்றாவது, கொடி.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

கருவார் புழுச்சிறைக்கே கடையேன் புகாதவண்ணங்
குருவாகி வந்தான்வரிற் கொடியே யுவகை கூறே. (1)

மாலும் பிறவிரயன் மாத்திரையொன் றிற்றீரக்
கூறும் விரகன்வரிற் கொடியே யுவகை கூறே. (2)

தோலான் மறைத்தமலச் சுமையினைநா னென்கின்ற
கோலாகலந் தீர்த்தான்வரிற் கொடியே யுவகைகூறே (3)

தொண்டில்லை யல்லர்நாயேன் றொழும்புகந்தாண்டு
கொண்ட, கொண்ட லெழுந்தருளிற் கொடியே யுவகை
கூறே. (4)

நற்றேவர் நின்றுணங்க நாயேனை யாண்டகோலங்
குற்றேவல் கொள்ளவரிற் கொடியே யுவகை கூறே. (5)

நாமாதீத மானதன்னை நாயேற்கு நல்கவந்த
கோமா னெழுந்தருளிற் கொடியே யுவகைகூறே (6)

உரையுணர் வற்றதொன்றை யுள்ளங்கை நெல்லிபோலக்
குரைகழ றந்தான்வரிற் கொடியே யுவகைகூறே. (7)

திண்டாடத் தேவரெல்லாஞ் சிறியேனைக் கண்டுகொண்டு
கொண்டாள வந்தான்வரிற் கொடியே யுவகைகூறே. (8)

ஞாலமும் விண்ணுநிற்க நாயேனை யாண்டுகொள்ளக்
கோலமாய் வந்தான்வரிற் கொடியே யுவகைகூறே. (9)

நெடியானு மயனுநிற்க நேயமிலா நீசனெனைக்
குடியாக வாண்டான்வரிற் கொடியே யுவகைகூறே. (10)

வேறு.

கோகிலக் குஞ்சுதம் பிள்ளைபோலுங் குறித்தே வளர்க்குங் குலக்கொடியே, யேகநற்சோதியை யென்னை யாளு மெம்பிரானை யிங்கெழுந் தருளென்னே. (11)

41-வது, கொடி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பத்திரண்டாவது, கோழி.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண் செந்துறை.

சாவாதுமூவாது தன்னைத்தந்த தம்பிரானிங்கே யெழுந்தருள, நாவாரநாதன் றிசையைநோக்கி யழைத்திடாய் கோழிக் குலக்கொடியே. (1)

கண்டாருயிருண்டு நம்மைநல்குங் கருணாலயனிங் கெழுந்தருள, வண்டனிருந்த திசையைநோக்கி யழைத்திடாய்கோழிக் குலக்கொடியே. (2)

மோனமொழியான் முழுதுமோதி முடித்தவெங்
கோமா னெழுத்தருள, ஞானவிநோதன் றிசையை
நோக்கி யழைத்திடாய்கோழிக் குலக்கொடியே. (3)

42-வது, கோழி முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

நாற்பத்துமூன்றாவது, கூடல்.

கலிவிருத்தம்.

மாலும் பிரமனு மற்றுள்ள தேவரு
ஞாலமு நிற்பா ரரூபந்தான் சாற்றி
யால மெனைக்கொண் டமிழ்தந் தனைத்தந்த
கோலம் வருமாகிற் கூடுவாய் கூடலே. (1)

43.வது கூடல் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

நாற்பத்துநான்காவது
ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்
கிளிப்பயிற்று.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

மூலந் தனக்கில்லா மூல மென்னீர்
முழுதுமாய்த் தானை முளைத்தா னென்னீர்
காலங்கண் மூன்றுங் கடந்தா னென்னீர்
கண்ணுக்குங் கண்ணாய்க் கழன்றா னென்னீர்
கோலங் குருவுருவாய் வந்தா னென்னீர்
குடிமுழுது மாட்கொண்ட கொண்ட லென்னீர்
சீலம் பரவரிய செல்வ மென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (1)

பந்தமாய் வீடாய்ப் பரந்தா னென்னீர்
  பாவிப்பார் பாவனைக ளானு னென்னீர்
சந்த மிதுவென்ன வொண்ணு தென்னீர்
  தன்னை யருள்குருவாய் வந்தா னென்னீ
ரந்தமிலா வன்பிறவி தீர்த்தா னென்னீ
  ரருட்கழல்க ணந்தலையில் வைத்தா னென்னீர்
சிந்தைதன்னிற் றித்திக்குந் தேனே யென்னீர்
  சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (2)

சாற்றுஞ் சடங்கறுத்த தாளா னென்னீர்
  தத்துவ னேயென்னீர் தலைவா வென்னீர்
போற்றுவார் தம்மைவிடாப் பொன்னே யென்னீர்
  புரையறவே தானினைந்தாற் போகா னென்னீர்
காற்றுங் கறங்கு மெனச்சு விக்குங்
  கருத்தைக் கலக்க மறுத்தா னென்னீர்
சீற்றமி னெஞ்சகத்துச் சேர்வே யென்னீர்
  சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (3)

உலவாத * பூமாரா யோங்கு கின்ற
  வுள்ளொளியே யென்னீ ருடையா யென்னீர்
கலவாதெல் லாங்கலந்து கண்டு நின்ற
  கண்ணே கருமணியே பாவா யென்னீர்
பலவாகி நின்றே பகிர்ப்பொன் றில்லாப்
  பரமனே யென்னீர் பழையா யென்னீர்
சிலைபோலு மென்னெஞ்சிற் சேர்ந்தா னென்னீர்
  சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (4)

கற்பனைக ளெல்லாங் கழித்தா னென்னீர்
  கருவாகி நின்றுருளிருங் கண்ணே யென்னீர்
நிற்பனவுஞ் செல்வனவு மானு னென்னீர்
  நினைவறவே தானினைந்தா னிற்பா னென்னீர்

* பூமார் = மகத்துவமுடையவர்.

சொற்பலவா நூல்பலவுஞ் சொன்னு னென்னீர்
துரிசறுத்தாட் கொள்ளவல்ல சோதி யென்னீர்
சிற்பரமாய் நின்றொளிருந் தெளிவே யென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (5)

கூறு பலசமயங் கோத்தா னென்னீர்
கூறற்ற ருள்ளத்துக் கோற்றே னென்னீ
ராறுறு மையைந்து நாலேழ் தொண்ணூற்
றாற மவைவகுத்தங் காகா னென்னீர்
மாறாத வல்வினைநோய் மாற்ற னென்னீர்
மாசறுத்தாட் கொண்டருள வந்தா னென்னீர்
தேறாதா ருள்ளத்துச் சேரா னென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (6)

இந்திரசா லம்போல வெல்லாந் தன்னு
ளிதமிதமா கக்காட்ட வல்லா னென்னீ
ரந்தரமொன் றின்றியெல்லாங் காண்பா னென்னீ
ரண்டர்க் கறிவரிய வத்த னென்னீர்
தொந்த விருண்மாய்த்த சுடரே யென்னீர்
துணையடியென் சென்னிமிசை வைத்தா னென்னீர்
சிந்தையுள் ளேமன்னிச் செறிந்தா னென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (7)

அன்னையினு மென்றனக்கு நல்லா னென்னீ
ரமிழ்தத்து வான்சுவையே பயனே யென்னீ
ரென்னை யெனக் கென்னுலே யென்னிற்றந்த
வின்னமிழ் தேயென்னீ ரிறைவா வென்னீர்
பன்னுமறைக் கெட்டாத பாதா வென்னீர்
பழவடியார் பண்டாரப் பொருளே யென்னீர்
சென்னிமிசைக் கழல்சூட்டி யாண்டா னென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (8)

பொல்லாவென் போல்வாரைத் தேடி யாளப்
பூமியினின் மானுடனாய்ப் போந்தா னென்னீர்
நல்லார்க ளெல்லாரு நிற்க நாய்க்கு
நற்றவிசிட் டெனையாண்ட நாதா வென்னீர்
கல்லாமை கற்பித்த காளா யென்னீர்
கருணைத் தடங்கடலே யென்னீ ரென்னீர்
செல்லாத மீளாத செல்வ மென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர். (9)

ஒப்பொருவ ரில்லா வொருவ னென்னீ
ருத்தமர்க்கே கண்ணா யுதித்தா னென்னீ
ரெப்பொருளுந் தானா யிசைந்தா னென்னீ
ரிடையறா வானந்த வெள்ள மென்னீர்
தப்பறவே யென்னைவலிந் தாண்டுகொண்டு
தாளிணையென் சென்னிமிசை வைத்தா னென்னீர்
செப்பரிய சுவானுபவத் தேற லென்னீர்
சிவப்பிரகா சக்கனியே யென்னீ ரென்னீர்; (10)

அன்னூறு முள்ளத் தடியார் மெய்யி
லணுகிநோ யினையறுத்திட் டினிமே லொன்று
நள்ளாமை காத்துவந்த நம்பா வென்னீர்
நானேநீ யாய்நயந்த நாதா வென்னீர்
விள்ளாமை யோர்கணமு மடியார் கூட்டம்
விரவியினிக் குறைக்காலம் போக்க காயேற்
குள்ளானே யருளியினி யுடலம் வீயோ
துணர்ந்திருந்தே யொழிவிப்பா யென்னீ ரென்னீர். (11)

44-வது, கிளிப்பயிற்று முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பத்தைந்தாவது,

குறையுரைத்தல்.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த
குறள்வெண்செந்துறை.

கொண்டாள் குரவனே கூர்மய றீரானேற்
கண்டா ருயிருண்ணுங் கண்டக னென்பேனே. (1)

என்பணி கொண்டென்று மின்புரு னேன்மாயை
வன்ப ருயிருண்ணு மறவன்கா ணென்பேனே. (2)

45-வது, குறையுரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பத்தாறுவது, வரவு சாற்றல்.

அடி நான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தோரணங்க ணாட்டு *மேடோ சோலையெங்குஞ் செய்யுமேடோ, தாணுறைகள் பொதிந்தெங்குந் துய்ய விளக் கேற்று மேடோ, வாரணமு மயன்முதலா மமருமங் கயர்வுறவே, யாதனெனை யாண்டுகொள்ள வாரியன்காண் வருகின்றான். (1)

வீதியெங்கும் வெள்ளைமணல் பரப்பிநீரை விடு மேடோ, வெற்றிக்கொடியுடனே விதானமேற் கட்டு மேடோ, வாதிவேத நாலுமுர சாகவறைந் தாடுமேடோ, வன்பருள்ளங் கோயில்கொள்ள வெங்கணாதர் வருகின்றார். (2)

* ஏடர்களோ வென்பது ஏடோவெனப் பன்மை ஒருமையாய் வந்த வழுவமைதி.

சோகமோ காதியெல்லாந் துணித்துநீர் விடுமேடோ, தொந்தமுற்ற பந்தமுற்றுந் துவக்கறுத் திருமேடோ, வாகமாக வருளாலே யவையவங்க ளதுசாத்தி, யாறவடி வைக்கவெங்க ளண்ணலார்காண் வருகின்றார். (3)

வீணைவங்கி யங்களாலே வேதகீத மோதுமேடோ, விழுந்தெழுந்திங் கோலமிட்டு விரகழிந்திட் டாடு மோடோ, பேணுமன்ப ராவியுண்டு பேராதுள்ளங் கோயில்கொள்ளப், பெத்தமுத்த மற்றவின்பப் பெரு மானார்தாம் வருகின்றார். (4)

பூமியெங்கும் பொற்பூமாரி பொழிந்துநின் றிடு மேடோ, பூரணப்பொற் குடங்களும் பூவிரியு மெடு மேடோ, தாமமெங்கு நாற்றுமேடோ தலையிணு வாடு மேடோ, தம்மையன்பர்க் களிக்கவென்று தம்பிரானார் வருகின்றார். (5)

46-வது வரவுசாற்றல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பத்தேழாவது,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

அர்ச்சனை.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை.

என்னைக் குறித்தா ளெழிலார் திருமேனி
மன்னற் கிடும்பீட மதியிலேன் காதலே. (1)

ஓது மறைக்கு மும்பர்க்கு மரியவர்
பாதம் விளக்குநீர் பண்பிலே னீர்மையே. (2)

ஆனாதி லாகாத வானந்த நாடர்க்குப்
போனக மாவது புலையே னுயிர்தானே. (16)

தெள்ளத் தெளிவாகுஞ் சிவப்பிர காசர்க்குக்
கள்ளப் பொறிபுலன் கறியமு தாகுமே. (17)

போற்றுமன்பர் நெஞ்சிற் பொருவில் சுரூபருக்
கேற்றுங் கறியென்ற னீடணை யாவுமே. (18)

கண்ணுக்குக் கண்ணாகும் கருதரு மீசருக்
கெண்ணப் படுங்கறி யெல்லாமென் பாசமே. (19)

செப்பரிய மேனியெங்கள் சிவப்பிர காசர்க்கு
முப்பழ மென்குண மும்மல முற்றுமே. (20)

ஞாலமெலா மாகி நின்றிடு நாதர்க்குப்
பாலுடன் றேனுமென் பாவக முற்றுமே. (21)

திக்காலா தியொன்று மில்லாத செல்வருக்
கக்கார மாவது மென்மதி யாகுமே. (22)

அறிவு வடிவாக வருள்செய்த வீசர்க்கு
நறுநெ யமிழ்தென்ற நாயேன் பவந் தானே. (23)

விண்ணோர்கள் வாடமண்ணோர் வீறெய்த வந்தார்க்குத்
தண்ணீ ரமிழ்தென்றுந் தாவில்லா மாயையே. (24)

உறையற்றோ யென்னை யுண்டார்க் கடைகாயும்
வருமென்மூவேழ் சுற்றமும் வன்பவம் யாவுமே. (25)

சிலுகற்ற சிற்பர மாகிய செல்வர்க்கு
நலகற்பூர மென்னை நண்ணுவோ ராவியே. (26)

வார்த்தையொன் றிலேயென் வன்பவ மாய்த்தார்க்குத்
தோத்திரந் தானென்னுச் சொல்லுவ தெல்லாமே; (27)

தாமே தமக்கொப்பாந் தத்துவ நாதர்க்குப்
பூமாரி யாவதென் புன்றலை தாழ்வதே. (28)

47-வது, அர்ச்சனை முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

நாற்பத்தெட்டாவது, அனுபூதி நிலயம்.

கலித்தாழிசை.

தல்லுந் தொம்முமாறு யென்றுநீர் போகாதீர்
சற்றே மறித்துக் காட்டீர்
புல்லியுமைத் தந்தினிப் போகலா மோதான்
பொன்னீ வலஞ்சு ழீரே
போதக் கயிற்றாலே கட்டிக்கொண் டுள்ளைத்தேன்
போகலா மாகிற் போகீர்
போதப் பெருமாளே பூரண போதரே
போகலா மாகிற் போகீர். (1)

வேதங் கீதைசொல் விற்றென்றுநீர் போகாதீர்
மெய்யும்மைக் காட்டித் தந்தீ
ராதி புராணரே யானந்த நாடரே
யங்ஙனே போக லாமோ
வள்ளூறு முள்ளத் தளையிட்டு வைத்தே
னங்ஙனே போக லாமோ
வாதி புராணரே யானந்த நாடரே
யங்ஙனே போக லாமோ. (2)

48.வது, அனுபூதி நிலய முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நாற்பத்தொன்பதாவது, உயிருண்ணி.

கலி விருத்தம்.

மறைநான்முக னரன்வானவர் மயல்கொண்டின மயரப்
பொறையாமுட லளவாயுழல் புலையேன் பொருளாக
முறியாவெள முழுவின்பம தருவாகிய முதல்வ
னறைகூவியெ னகமன்னிய வருடானதி சயமே. (1)

பூதங்களை நானென்றுள போதம்முண ராதே
வாதம்பல சொல்லியவ மேமாய்வுறு வேனை
வேதங்களு மறியாமல ரடிசூட்டிய விகிர்தன்
பேதங்கெட வுள்வந்தமை பேசவறி யேனே. (2)

காணேனவ னன்றிப்பிறி தொன்றும் முளவாக
காணேனய வில்லாமையி னன்றும்மது வன்றும்
பூணேனினி யொன்றும்புனி தன்ருளிணை யன்றி
வீணேசெய்தே னுளமன்னிய விகிர்தன்செய்த விரகே. (3)

எறிமாருத மெனவேதுலை மனமா மயறவிர
மறியாவுள மழியாவறி வுருவாகிய வளவன்
செறிவார்கழ லடியென்றலை சேர்த்தியெனை யாண்ட
தறியேனுள மழியேனரு வினையேன்செய்த வவமே (4)

பலவொன்றென வறியேன்பக லிரவென்பது மறியே
னலதொன்றையு மறியேனறி வானந்தம தறியே
னலஞென்றிய மறையீறவை நவில்கின்றிடு பிரமங்
குலவுங்குரு பரனெனைக் குறிக்கேடுசெய் தனனே. (5)

தத்தொய்பத மோதியொரு சற்றும்முண ராதே
மத்தம்முறு வார்தம்முடன் மால்கொண்டுழல் வேனை
யத்தன்னடி சூட்டியறி வாக்கியொளி காட்டி
மெய்த்தன்மைய வருள்செய்தமை வினையேனறி யேனே. (6)

முன்னாய்முழு துங்கண்டிடு மூவாமுத லொருவன்
கன்ஞூரி கொண்டென்கன வஞ்சங்கரை வித்துத்
தன்னூரு ளடியாரொடு தகுவித்தெனை யாண்டே
யென்ஞருயிர் முழுதுண்டதோ ரின்பமறி யேனே. (7)

நற்ருயொடு சுற்றும்பொருண் முற்றும்முற வற்றுக்
கற்ருரொடு கற்பார்களை யற்றம்மற விட்டுத்
தெற்ருர்மனஞ் செற்றச்சிவ னற்ருளிணை பற்றிக்
கற்ருவென வுற்றுக்கசிந் துருகித்திரி வேனே. (8)

அன்ருமென வொன்ருயறி வின்ருயறி கின்ரு
யொன்ருவது மன்ருயொழி வின்ருயொழி கின்ருய்
நன்ருயது மன்ருய்நடு வின்ருய்முடி வின்ருய்
நின்ருய்பிறி தன்ருயெனை யுண்டாயுள நின்றே. (9)

சீரார்சிவன் வந்தென்றனி நெஞ்சஞ்சிவ மாக்கிப்
பாராவிழி யாலேபவ பாசம்பறி வித்து
நேராவினை யுந்தானெடி துண்டானுள நின்றே
யோராவமிர் தானுனிது வென்னே யிதுவென்னே. (10)

49-வது, உயிருணி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பதாவது, அச்சோ.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த,
குறள்வெண்செந்துறை.

எழுகடலுங் குலவறையு மேழுலகு மென்வஞ்சத்
திறைக்கும் போதா, விழிகடையே னுளமன்னி யிணை
யிலிநீங் காதிருந்தா னச்சோ வச்சோ. (1)

துடித்துமனம் புலன்வழியே தூறுசெய்து மாறு படுந் துணையிலேனை, யடித்தடித்துப் பாலூட்டி யானந் தமெனக் களித்தா னச்சோ வச்சோ. (2)

சாதலென்றும் பிறத்தலென்றுந் தடுமாறு மிருவி னையின் றளையை வாங்கி, யாதலென்று நடராசன் றிரு வுருவ மெனக்களித்தா னச்சோ வச்சோ. (3)

நட்டா *ருந் தம்முடனு நலம்போலப் பொய் நடித்து நலமி லாதேன், பட்டா °ருங் கண்டிருந்தும் பழவடியா ருடனுண்டா னச்சோ வச்சோ. (4)

குடிமைகுல மாச்சிரமங் கோத்திரசூத் திரமனைத் துங்குலைந்து போக, வடிமைகொண்ட நடராசன் திரு மேனி யெனக்களித்தா னச்சோ வச்சோ. (5)

50-வது. அச்சோ முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்தொராவது,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

நல்லேன்.

குறள்வெண்செந்துறை.

செய்ய மேனிக்கு நல்லேன் றுய்ய
செங்கனி வாயிற் சிரிப்பிக்கு நல்லேன்
மைய நீர்த்தார்க்கு நல்லே னென்னை
வாழ்வர வாழ்வித்த வண்மைக்கு நல்லேன் (1)

---

* உம்மை யிடைச்சொல்.

° பட்டாருதலுமென்பது பட்டாருமென விகாரமாயிற்று.

ஆரா வழகுக்கு நல்லே னைய
  னணிந்த மாலைக்கு மார்புக்கு நல்லேன்
சீரார் கருணைக்கு நல்லே னையன்
  றித்தித்த வார்த்தைக்கு நல்லே னல்லேன். (2)

பார்த்த பார்வைக்கு நல்லேன் செய்ய
  பங்கயக் கண்ணுக்கு நல்லே னல்லேன்
வார்த்தைக் குச்சால நல்லே னென்னை
  வாழ்வித்த காலுக்கு நல்லே னல்லேன். (3)

கூரு நோக்குக்கு நல்லேன் ஞானக்
  குற்றுடை வாளுக்கு நல்லே னல்லேன்
வீரன் காலுக்கு நல்லேன் கட்டும்
  வீரக் கழலுக்கு நல்லே னல்லேன். (4)

மீட்ட விரகுக்கு நல்லேன் மேனி
  விட்டுப் பொழியுங் கருணைக்கு நல்லே
னூட்ட வருளுக்கு நல்லே னெங்க
  ளைதார் சிவப்பிர காசர்க்கு நல்லேன். (5)

51-வது, நல்லேன் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

ஐம்பத்திரண்டாவது, ஐயகோ.

ஊடினும் போகில னையகோ
  யுதறினும் விடுகில னையகோ
பாடிலன் பழியில னையகோ
  படிறுசெய் தென்னைமாய்த்தா னையகோ. (1)

வலியப் பிடித்தாண்டா னையகோ
  வாயைப் புதைத்தாண்டா னையகோ
கலவிக்க ளூடாண்டா னையகோ
  கண்ணேகண் ணுக்கண்டா னையகோ. (2)

52-வது, ஐயகோ முற்றுப்பெற்றது.

சிவமயம்.

ஐம்பத்துமூன்றாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

தாய் வார்த்தை.

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த
குறள் வெண்செந்துறை

வாசாம கோசரம் வந்ததென்றாள்
வானவ ரேயாக்க மாமலர்த்தாள்
கூசாதென் சென்னியில் வைத்ததென்றாள்
குளித்தாள்கண் ணீர்கொண்டு கோதைதானே. (1)

சென்னியில் வைத்த கரங்களென்றா
டிருக்கற நோக்கிய நோக்கமென்றாள்
வன்னிமுன் வைத்த மெழுகதென்ன
பாறா துருகினாள் வாணுதலே. (2)

தீண்டுவ னேசெய்ய பாதமென்றா
டிருமாலுங் கண்டில னேடியென்றா
ளாண்டவ னேயென்றாள் பின்னையொன்று
மறிந்தில னேயென்றா ளாயிழையே. (3)

வாசக மொன்றென்றா ளிப்பிறவி
மாண்டதென் றாள்செய்த வல்லபந்தான்
பேச விரகில்லை காணுமென்றாள்
பேசா திருந்தாளென் பேதைதானே. (4)

உன்ன வரிய பொருளதென்றா
ளோதவொண் ணாதென்றா ளப்பொருளைச்
சொன்ன விரகென்றாள் பின்னையொன்றுஞ்
சொல்ல வறிந்தில டூய்மொழியே. (5)

எத்திக் கடையேனை யாண்டதென்று
  னெப்போது மின்னமிழ் தாகிநின்று
தித்திக்கு மேதிரு வார்த்தை யென்றாள்
  செய்வ தறிந்திலள் சேயிழையே. (6)

கைம்மாறு காணேன் கருணைக்கென்றாள்
  கம்பித்தாள் காயங்கண் ணீர்சொரிந்தாள்
விம்மா வழுதாள்பின் செய்தசெய்கை
  விளம்பு மளவோவென் மெல்லியலே. (7)

எத்துவ தேயடி யேனுமென்று
  மின்ன மறியா மறைகளென்றாள்
சாத்துவ தேதிரு மேனியென்று
  டரிக்க வறிந்தில டையறனே. (8)

உரியேனல் லேன்மற் றொருவர்க்கென்று
  ளுடையா னடிப்போ தொருகணமும்
பிரியே னெனச்சொன்னாள் பேச்சொழிந்தாள்
  பித்தியா னாளென்றன் பெய்வளையே. (9)

ஒருமேனி கொண்ட பரிசேயென்று
  ளுள்ளத்தா லுள்ளவொண் ணாதென்று
டிருமேனி யெல்லாங் கருணையென்றாள்
  செய்ய சுரூபனென் றுடிருவே. (10)

53-வது, தாய்வார்த்தை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்துநான்காவது, தோழியுரைத்தல்.

குறள்வெண்செந்துறை.

குருபா னரென்றாள் கோலமென்றாள்
  கோதி லருட்குணக் குன்றமென்றாள்
பெருமறை காணாது பீடுவாடப்
  பேயேற் கெளிவந்த பித்தனென்றாள். (1)

கருணை பொழிகின்ற கண்களென்றாள்
கருக்கெட வைத்த கழல்களென்றாண்
மருளற வென்னைத்தா னுக்குவித்த
வல்லப மென்றாள்பின் வாக்கிறந்தாள். (2)

பூங்கோயி லென்றாள்பொற் பீடமென்றாள்
புனிதனை யென்றாள்பொன் மேனியென்றா
ளாங்காண வந்த நலமதென்றா
ணயனநீர் மல்கி யணிழந்தாள். (3)

மீட்ட விரகென்றாள் வேறுகாணாள்
விழியால்வே தித்த வீரமென்றா
ளாட்ட வரிதென்றா ளாடவொண்ணா
நலமாஞ் சிவப்பிர காச னென்றாள். (4)

செய்ய திருப்புன் முறுவலென்றா
டிருவான கோலத்தின் சீர்மையென்றாண்
மெய்ய னுரைக்கு முறையி தென்றாள்
விம்மினாண் மேன்மேலு மேவினளே. (5)

செய்ய வழகென்றாள் சென்றடையாத்
திருவென்றாள் சீமான் சுரூபனென்றாள்
பையப் பவம்பாழ் படவிழித்த
பார்வையென் றாள்பார்ப் பற்றனளே. (6)

செந்தா மரைமுகஞ் செய்யவாய்கண்
திருப்பாதங் கைகளுஞ் செய்யமேனி
யந்தா மரைபெற்ற தார்பெறுவா
ரகத்தா மரையா லமிழ்தமென்றாள். (7)

54.வது, தோழியுரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது, எம்பாவை.

குறள் வெண்செந்துறை.

உண்பானு முடுப்பானு முழல்வானு முடல்சாத்திக்
கண்காண வரிலலது கலக்கறுமோ வெம்பாவாய் (1)

ஆண்பெணலி யனைத்துயிர்க்கு மாதார மாயிடினுங்
காண்படியே வரினலது கலக்கறுமோ வெம்பாவாய். (2)

55.வது, எம்பாவை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்தாறுவது, அக்கைச்சி.

குறள் வெண்செந்துறை,

பிணஞ்சுடு தடி யென்ன வென்னைக் கொண்டே
பெரும்பற்றை யெல்லா மறச்சாடி
யணைந்த வென்னையு மப்படி யீறில்போ
தத்தில் விட்டனு போகத் திருந்தானே. (1)

ஆதி மாயையென் னக்கைச்சி யந்த
வாண்மக னுற்ற போதே கெட்டேன்
போதந் தானுஞ் சுமையென்று வீறில்
போதத்தில் விட்டனு போகத் திருந்தானே, (2)

ஓது மாயையென் னக்கைச்சி யொப்பிலா
னென்னுற வுற்ற போதே கெட்டேன்
போதந் தானுஞ் சுமையென்று வீறில்
போதத்தில் விட்டனு போகத் திருந்தானே. (3)

56-வது, அக்கைச்சி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்தேழாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

மால்.

குறள் வெண்செந்துறை.

சால மாலானே னம்மே யென்னைத்
தானாகப் பார்த்த செந் தாமரைக் கண்ணுக்குச்
சால மாலானே னம்மே
ஞாலங் காண்கிலே னம்மே யெங்க
ணையனார் தந்திரு மேனியல்லான்
ஞாலங் காண்கிலே னம்மே. (1)

பேச வறிகிலே னம்மே தன்றன்
பேரா வருளும் பெருந்தன்மை யுங்காட்டிப்
பேராசை யாக்கினா னம்மே
தேசு திகழுங்கா ணம்மே யெங்கள்
செய்ய சிவப்பிர காசன் திருமேனி
தேசு திகழுங்கா ணம்மே. (2)

57-வது, மால் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

ஐம்பத்தெட்டாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

குரவை,

அடி நான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சதுமறைக் கரியதா டமியனுக் கெளிவந்த
தன்மையைப் பாடியே குரவையிடு
தம்பிரா னெனையாண்ட கருணையின் பெருமையைச்
சகமெலா மறியவே குரவையிடு
கதுவுமுற் பவந்தனைக் கணத்தினிற் கருவறக்
கடைக்கண்வைத் தமைபாடிக் குரவையிடு
கல்வியு மழிந்தது கருத்தெல்லா மிறந்தது
கண்ணேகண் ணுய்த்தென்று குரவையிடு. (1)

ஒப்பிலா வொருமொழி யதனாலே முழுதையு
மோதிய வளம்பாடிக் குரவையிடு
வூழிநிலை யாய பவபாச மொருகணத்
தொழித்தவா றதுபாடிக் குரவையிடு
செப்பிட வரியதோர் தெளிவந்தெ னுளநின்று
தித்திக்குந் திறம்பாடிக் குரவையிடு
சிறியோமைப்பொருளாகத் தேடிவந் தாட்கொண்ட
செய்யசே வகம்பாடிக் குரவையிடு. (2)

உலகேழும் விழுங்கிய வொளியாகு முணர்வையு
முண்டவொண் கழல்பாடிக் குரவையிடு
வுருவாகி யருவாகி யலவாகி யொழியாத
வுண்மையா னிலைபாடிக் குரவையிடு

சலமாரு மதியென்னக் குலையுமென் னுளனேதற்
சிவமாக்குந் தகைபாடிக் குரவையிடு
சதுரான மொழியும்புன் முறுவலுந் தமியேனைச்
சதுரழித் தமைபாடிக் குரவையிடு. (3)

58-வது. குரவை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஐம்பத்தொன்பதாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

* குணலை.

அடி நான்காய்த் தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

மறைசொ லும்பொருண் மனித வேடமாய்
வந்த தென்றிடு குணலை
மாலு மாலுறும் பதமென் சென்னியில்
வைத்த தென்றிடு குணலை
யறைக டற்றிரை மனமி மைப்பிலே
யழிந்த தென்றிடு குணலை
யறி வுருவமா யலது கண்டிட
வரிதாய்த் தென்றிடு குணலை. (1)

இறந்து போய்வரும் வழிதூர்ந் துபுல்
லெழுந்த தென்றிடு குணலை
யிவ்வு டம்பொடே யிருந்து முத்திக்கே
யிருந்தோ மென்றிடு குணலை

* குணலை என்பது - வீராவேசத்தாற் கொக்கரித்தல்.

மறந்து முன்னியு மிராத போதமாய்
வாழ்ந்தோ மென்றிடு குணலே
வள்ள லாருள் செய்த வல்லப
மறவோ மென்றிடு குணலே. (2)

சுருதி களொரு கோடி சொல்லியுந்
தோன்ரு தென்றிடு குணலே
சுரூபா னந்தனோர் சொல்லி லானந்தந்
தோன்று மென்றிடு குணலே

கருத வொண்ணுத பொருளைக் கண்ணுலே
கண்டோ மென்றிடு குணலே
கருணை யங்கழ றன்னைக் கண்டுகண்
களித்தோ மென்றிடு குணலே. (3)

சொலவி னில்வரு கலைய லைவலைத்
தொலைத்தோ மென்றிடு குணலே
சொலவ றுஞ்சுக சுரூப வாரியிற்
சுகித்தோ மென்றிடு குணலே

மலவு டலினின் மதிசெ யும்மதி
மறந்தோ மென்றிடு குணலே
மதிய ழியவே வருமதி யையு
மதித்தோ மென்றிடு குணலே. (4)

நிரந்தர வின்ப வெள்ள மெங்கணு
நிறைந்த தென்றிடு குணலே
நிகில மென்பது மறவியுங் கூட
நிகழா தென்றிடு குணலே

யிருந்து பாரென்ற விரகையெப் பொழுது
மியப்பி நின்றிடு குணலே
யிப்ப டியேநாம் வாழத் தந்தானை
யேத்தி நின்றிடு குணலே. (5)

59-வது, குணலை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அறுபதாவது, பகடி.

அடிநான்காய்த் தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

கழியாமை யூழியூழி யுறவாகி வருகின்ற
கருவினை நாசனென் றிடுபகடி
கண்டிருந் தெனையாளக் கழல்காட்டிக் கொடியிட்ட
கருணைமா மலையனென் றிடுபகடி
விழியாலே தனையாக வெனைமாளச் சதுர்செய்த
விரகினை யுடையானென் றிடுபகடி
விரவியே யுடலுயி ருலகங்கண் முழுதையும்
விரவாத வீரனென் றிடுபகடி. (1)

சதகோடி விதமாக வெழுந்திடுஞ் சடங்கினைச்
சாடிய சதுரனென் றிடுபகடி
சதுமறை யொருமூவர் தலையுற வணங்கியுஞ்
சாருதற் கரியானென் றிடுபகடி
மதமானந் துணையாக வஞ்சத்தே செலுமென்னை
வலிந்துவந் தாண்டானென் றிடுபகடி
வாசாம கோசர வடிவினை மலர்க்கையின்
மணியென்ன வளித்தானென் றிடுபகடி. (2)

அறிவானோ டறிபொரு ளாகியே யெழுஞ்செல
வழகுறத் திரித்தானென் றிடுபகடி
யறிபொரு ளறிவினி லறிவித்தவ் வறிவையு
மறிவானி லழித்தானென் றிடுபகடி
பொறிபுலன் கரணங்கள் புகல்சிவ பரனென்னும்
பொருளற விழித்தானென் றிடுபகடி
பொருவில்லா வொளியாகிப் புரையற நிறைந்துள்ள
புரணமே யானோமென் றிடுபகடி. (3)

60-வது, பகடி முற்றுப்பெற்றது.

சிவமயம்.

அறுபத்தொராவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

கழல்.

கலித்தாழிசை.

ஒன்றிய சிந்தையு ளொன்றாய் நிகழுமே
யின்றென்னை யாண்டவ னின்பக் கழ
லிதுவென்ன வொண்ணாத விறைவன் கழல். (1)

இருந்துதி கொண்டென் பிறவிநோய் தீர
மருந்தாகி மண்ணின்மேல் வந்தகழன்
மற்றொன்று மில்லாத வள்ளல் கழல். (2)

முத்தி யடியேன்கண் முன்னே நிகழ்ந்திட
வெத்தி யெனையாண்ட வின்பக் கழ
லெல்லாமா யல்லா விறைவன் கழல். (3)

நாநா விதந்திர நாடரி தாய்வெறுந்
தானகத் தந்த தலைவன் கழ
ருவா மறைதேர் தனிபொற் கழல். (4)

அஞ்சாதே யென்றவ் வரந்தை யழியவென்
குஞ்சிமேல் வைத்த குரவன் கழல்
கூற்றந்தைக் கொன்ற குழகன் கழல். (5)

ஆறும் படிநல்கி யாறு நெறிகளும்
வேறின்றி நின்று விளங்குங் கழன்
மெய்யுணர் வாய்நின்ற வீரன் கழல். (6)

ஏழை யடியே னெழுபிறப் புங்கெட
வூழி முதல்வ னுணர்த்துங் கழ
லுணர்வான வானந்த வுண்மைக் கழல். (7)

எண்ணு வமரர்க்கு மெட்டரி தாகியென்
கண்ணன கண்ணு ரமிழ்தக் கழல்
கடையேனை யாண்ட கருணைக் கழல். (8)

ஒன்ருரு முற்ருரு மில்லா வகையென்னைத்
தன்னுகத் தந்த சதுரன் கழல்
சங்கை யறுக்குந் தலைவன் கழல். (9)

பத்தி யடியவர் சித்தத்து ளேநின்று
தித்திக்கமிழ் தூறுந் தெய்வக் கழல்
சிற்சுரூ பானந்தர் செம்பொற் கழல். (10)

61-வது, கழல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அறுபத்திரண்டாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

அம்மானை.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அஞ்சின் பிணக்கை யறுக்கலா மம்மானை
யன்னிய மொன்றற் றிருக்கலா மம்மானை
துஞ்சும் பிறவி துடைக்கலா மம்மானை
சுரூப னடியிணை சூடிடு லம்மானை. (1)

கண்மூடிக் காண நினையார்கா ணம்மானை
கண்மூடு வார்தம்மைக் காணுகா ணம்மானை
விண்மூடுஞ் சோதி விளங்குமே லம்மானை
விழியா துறங்கா திருக்கலா மம்மானை (2)

காலதிசை தேசங்கள் கண்டோனா மம்மானை
காணுநமை யவைதாங் காணுகா ணம்மானை
கோல மறிவல்ல தில்லைகா ணம்மானை
கொள்கைகொள் ளாமை குலைந்தோங்காணம்மானை. (3)

அல்லும் பகலு மறியோங்கா ணம்மானை
யானந்த மேவடி வானோனா மம்மானை
சொல்லும் பொருளுங் கடந்தோனா மம்மானை
சுரூபானந் தத்தின் சுதந்தரமா மம்மானை. (4)

62-வது அம்மானை முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

அறுபத்துமூன்றுவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

பந்து.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஓதா ரணங்க ளுயர்ந்து போற்று
முண்மை யுணர்வி வுலகுக் கெல்லா
மாதார மாகிய வப்பொ ருளே
யருளே வடிவா யெழுந் தருளி
யூதாரி யாய்நா னழியா வண்ண
முச்சியின் மேலே யுவந்து வைத்த
பாதார விந்தங்கள் பாடிப் பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (1)

கொடியிடை யார்கனி வாயுங் கண்ணுங்
  கொங்கையு மென்று குலாவு மாந்தர்
நொடியிடைப் பட்டு நுடங்கு வேலை
  நோவாமே நோக்கியென் னோர வுள்ளச்
செடியிடை வந்து புகுத நல்கிச்
  செய்ய சிவப்பிர காச னிந்தப்
படிமிசை வந்த பரிசு பாடிப்
  பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர் (2)

பெண்பை யுதிரச் சிறையிற் புக்குப்
  பெருந்துய ரெய்திப் பிறந்துண் டாகும்
புண்பையை நானென்று போற்றி மாய்ந்து
  புழுவார் நரகிற் புகும் வேலை
பொண்பை யரவணை யோனுங் காணா
  வொண்மலர்ப் பாதங்கள் சூட்டி யாண்ட
பண்பை நினைந்துகண் ணீர்த தும்பிப்
  பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (3)

அந்தர வானத் தவருங் காணா
  வந்த வொளியி லசைவொன் றின்றிச்
சுந்தர வேடம் புனைந்த ருளிச்
  சுரூபானந் தனென் றுயரந் தீரச்
சிந்துரச் சேவடி சென்னி சூட்டிச்
  செய்ய திருவாய் மலர்ந்த போதே
பந்தனை தீர்ந்த பரிசு பாடிப்
  பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (4)

வேதமு மாகம கீதை களு
  மிருதி புராணமும் வேத மார்க்கர்
வாதமும் வல்லவ ருள்ளத் துள்ளு
  மன்னியுந் தோன்றாத வள்ளல் வந்து

பூதமும் பவுதிகந் தானு மற்றும்
போதமே யாகிப் புரிந்து தோன்றிப்
பாத மளித்த பரிசு பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (5)

ஓரவுஞ் சொல்லவு மொண்ணா தென்ன
வுபநிட முள்ளத்திற் றூனு மன்பு
கூரவுங் கூறு மிறைவன் வந்து
கொடுவினை யேனையாட் கொண்டா னென்று
வாரவ னிங்கிவ ணுறென் றோதி
யங்கையோ டங்கை யடித்து நக்குப்
பாரவ ரேசும் பரிசு பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (6)

திருகா வொருகாலுஞ் செவ்வி தாகாச்
சித்தந் திரித்த திறத்தை யுன்னி
யுருகா வரிவி சொரியக் கண்க
ளுயரா விழியா வொழியா வென்று
மருகா பெருகா வழியா வாகா
வணுகா வகலா வயரா வுன்னுப்
பருகா வமிழ்தினைப் பாடிப் பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (7)

ஏதாதி யேதந்த மென்று தேடு
மிமையவ ரேமாந்து நிற்க வின்னம்
வேதாதி நூலால் விளம்ப வொண்ணா
மெய்ப்பொருண் மானுட வேடஞ் சாத்திப்
பேதாதி பேத மிலாத தன்னைப்
பெறவ ருள்செய்த பெருந்த கையைப்
பாதாதி கேசம் பரவி நின்று
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (8)

அந்தமு மாதியு மில்லா வொன்றென்
றோண மோது மதுவே யன்றிச்
சந்தமி தென்னவொண் ணாதே யென்னுந்
தம்பிரா னென்னைத்தா னாக்கி யென்றற்
செந்தமிழ் மாலை புனைந்து கொண்டே
செய்ய சுரூபன் றிருவ ருளாற்
பந்தமும் வீடுமில் லாமை பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (9)

சாத்திரங் கற்ற சதுர ரெல்லாந்
தத்துவ மொன்று பலவ தென்று
காத்திர மாகக் கழிந்து போகக்
கருணைக் கடல்கண்ணிற் காண வந்து
நாத்திரங் கத்தன் புகழே பாடி
நற்றொண்டு செய்திட நாயே னையும்
பார்த்தருள் செய்த பரிசு பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (10)

தேகாதி யாகி யழியு மென்னைச்
செய்ய கருணையாற் சீசீ யிங்ங
னாகாது காணென் றருளிச் செய்தே
யைம்புலத் தாலைம் பொறியை நோக்கிப்
போகாத வண்ணம் புரிந்து நோக்கிப்
போதப் பெருங்கண் பொருந்தத் தந்தப்
பாகார் மொழியினைப் பாடிப் பாடிப்
பந்தடிக் கவ்வாரீர் பாவை நல்லீர். (11)

63-வது, பந்து முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அறுபத்துநான்காவது,

பாங்கிக்குரைத்தல்.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை

சொல்லெல்லா நாத மென்னவும் பெற்றோஞ்
சும்மா விருக்கை தொழிலாகப் பெற்றோ
நல்லவ னன்பரு ணாஞ்சேரப் பெற்றோ
நாயனார் தாந்தந்த வாழ்விது பெண்ணே. (1)

படுக்கை படுதரை யாகவும் பெற்றோம்
பாணியி லேபலி கொள்ளவும் பெற்றோ
முடுக்கையுங் கோவண மாகவும் பெற்றோ
மொன்றுங் குறைநமக் கில்லைகாண் பெண்ணே. (2)

எல்லாரு நம்மை யிகழ்ந்திடப் பெற்றோ
மிம்மை மறுமையச் சங்கெடப் பெற்றோ
நல்லான் மலரடி நாஞ்சூடப் பெற்றோ
நாயனார் தாந்தந்த வாழ்விது பெண்ணே. (3)

வேண்டாமை யென்னும் விழுச்செல்வம் பெற்றோம்
வேண்ட லெனும்பிணி வேறறப் பெற்றோ
மாண்டவ னென்றுகு மன்பினைப் பெற்றோ
மையோ விதென்ன தவஞ்சொல்லாய் பெண்ணே. (4)

எய்ப்பற்ற சீரை யுடுக்கவும் பெற்றோ
மெங்ஙனு முள்ளானை யென்னெனப் பெற்றோம்
பொய்ப்பத்தி மெய்ப்பத்தி யாகவும் பெற்றோம்
புண்ணிய னார்தந்த வாழ்விது பெண்ணே. (5)

64-வது, பாங்கிக்குரைத்தல் முற்றுப்பெற்றது

சிவமயம்,

அறுபத்தைந்தாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

வியந்துரை.

அடிநான்காய்த் தம்மிலொத்துவந்த இரட்டைக்
குறள்வெண்செந்துறை:

பாழ்த்த பிறப்பற்றுப் பார்ப்பா னும்போய்ப்
பாராப்பற் றற்றபா தத்தைப் பார்த்து
வாழ்த்தவா ரீர்பெண்காள் வாழ்த்த வாரீர்
வளமாஞ் சுரூபரை வாழ்த்த வாரீர். (1)

தோற்றமெ லாந்தாமே யாகும் வண்ணஞ்
சொன்ன விரகினைச் சொல்லிச் சொல்லிப்
போற்றவா ரீர்பெண்காள் போற்ற வாரீர்
பொருவில் சுரூபரைப் போற்றவாரீர். (2)

ஊற்றமெல் லாமுடைந் துக்கு நைந்திங்
குரைமாண்ட பேரின்பத் துய்த்த வெள்ளஞ்
சாற்றவா ரீர்பெண்காள் சாற்ற வாரீர்
தற்சுரூ பன்பொற்றாள் சாற்ற வாரீர் (3)

ஓர்க்கொணா வின்பமோர் மாத்தி ரைக்கு
ளொளிர்வித்த வல்லப முன்னி யுன்னி
யார்க்கவா ரீர்பெண்கா ளார்க்க வாரீ
ரழகார் சுரூபனென் றார்க்க வாரீர். (4)

65.வது, வியந்துரை முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

அறுபத்தாறுவது, சுதந்தரன்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

ஏழை யேற்கெளி வந்த சுதந்தர
னெண்ண ரெண்ணிலெட் டாத சுதந்தரன்
வாழ நாமுமெல் லாமடி யாருடன்
மனித னுய்வர வல்ல சுதந்தரன். (1)

கருது தற்குமெட் டாதவ னைம்புலன்
காண வேவர வல்ல சுதந்தர
னொருது வட்டமிட் டேகழி யாவனை
மென்னை யாட்கொள வல்ல சுதந்தரன். (2)

மூவ ரோடுமுப் பத்துமுக் கோடிமா
முனிவ ருக்குமெட் டாத சுதந்தரன்
பாவி யேனள வாகிவந் தென்னையும்
பார்வை தானறப் பார்த்த சுதந்தரன். (3)

சதுரி ழுந்தழு மன்பர்த மன்புளே
தானி ருந்தழ காருஞ் சுதந்தர
னதிருந் தன்கழல் சென்னிவைத் தென்னையு
மன்ப ரோடுவந் தாண்ட சுதந்தரன். (4)

66.வது, சுதந்தரன் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அறுபத்தேழாவது, தெய்வம்.

இரட்டைகுறள் வெண்செந்துறை.

பந்தமறப் பார்த்தருளிப் பாதமலர் சூட்டிப், பார்ப்பதறத் திரித்தருளிப் பாரென்று நேரே, சிந்தையுள்ளே காட்டித்தந்த தெய்வங்கிடீர் தெய்வஞ், சிஞ்சிலுப்புப் பொத்துந்தெய்வந் தெய்வமன்று கிடிகொள். (1)

நடுக்குமிகு முடம்புதனை நடத்திக்கொடு திரிந்து, நாசம்வந்த போதாக நானென்செய்வே னென்னுந், திடுக்கங்கெடப் பண்ணிவிடுந் தெய்வங்கிடீர் தெய்வஞ், சிஞ்சிலுப்புப் பொத்துந்தெய்வந் தெய்வமன்று கிடிகொள். (2)

67-வது, தெய்வ முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அறுபத்தெட்டாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்த சுவாமிகள்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

இறைவல்லபம்.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பந்தனை யெல்லா மொருங்கும் படிசெய்ய
பங்கயக் கண்வைக்கவும்
பார்த்த பார்வையே பார்க்கும் படிசெய்ய
பாத மலர்வைக்கவுஞ்

சிந்தை யழித்துச் சிவமாக்கி யிங்ஙனே
 தித்திக்கு மாவைக்கவுஞ்
செய்ய சுரூபனுர்க் கல்லது வேறொரு
 தேவராற் செய்யலாமோ. (1)

அழிவின்றி யென்று மொருதன் மையினின்
 றருண்மேனி கொண்டிடவு
மண்டரும் பண்டை யருமறை யுந்தேட
 வரயா வெனையாளவு
மொழியு மனமுங் கடந்த தமையென்கண்
 முன்னே நிகழ்ந்திடவு
முற்று மொழியாச் சுரூபனுர்க் கல்லது
 மூவராற் செய்யலாமோ. (2)

காணும் பொருள்களுங் கண்ணுகக் காணும்
 படிகடைக் கண்வைக்கவுங்
காட்சியு மாட்சியு மற்ற தமையிங்ஙன்
 காணக் கழல்வைக்கவும்
பேணு மடியா ருளத்தைக் கரைத்திங்ஙன்
 பிச்சாடத் தான்வைக்கவும்
பேரின்ப நாதனுர்க் கன்றிமா லீசன்
 பிரமனுற் செய்யலாமோ. (3)

கள்ளப் புலனுங் கரணங்க ளென்றுங்
 கருத்தழிந் தோடிடவுங்
கருத்தழிந் தோடித் திரிந்திட் டவையெலாங்
 கண்ணேகண் ணுக்கிடவுந்
தெள்ளத் தெளிந்து செயலுஞ் சிவமாகச்
 செய்யாமை செய்திடவுஞ்
சிவப்பிர காசனுர்க் கல்லது வேறொரு
 தேவராற் செய்யலாமோ. (4)

68-வது, இறைவல்லப முற்றுப்பெற்றது.

சிவமயம்.

அறுபத்தொன்பதாவது, பகவதி.

அடி நான்காய்த் தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சந்தமொன் றின்றி யிருக்க வேண்டுந்
தானே யழகிய னாக வேண்டு
மிந்த வுடம்பிலே காண வேண்டு
மெங்குந் தானாகி யிருக்க வேண்டும். (1)

காட்சியொன் றின்றி யிருக்க வேண்டுங்
கரத்தின் மணிபோலக் காண வேண்டு
மீட்சி செலவற் றிருக்க வேண்டும்
விடாதே பற்றாதே யிருக்க வேண்டும் (2)

உள்ளதெ லாந்தானே யாக வேண்டு
மொன்று மின்றிற்கே யிருக்க வேண்டுந்
தள்ளினும் விள்ளா திருக்க வேண்டுந்
தழுவினு ரேதான் றழுவ வேண்டும். (3)

வித்தின்றி யேநாறு செய்ய வேண்டும்
விளையாதே யெல்லாம் விளைக்க வேண்டுஞ்
செத்தின்றி யேசெத் திருக்க வேண்டுஞ்
செயலுஞ்செய் யாமையுந் தீர வேண்டும். (4)

அழியாத தாகாத தாக வேண்டு
மன்னிய மாகியொன் றாக வேண்டும்
விழியா திமையா திருக்க வேண்டு
மெய்யும்பொய் யும்மற் றிருக்க வேண்டும். (5)

அல்லும் பகலு மொழிய வேண்டு
மறிவறி யாமை யொழிய வேண்டுஞ்
சொல்லும் பொருளு மொழிய வேண்டுந்
* தூரிய தாயண்ணி தாக வேண்டும். (6)

உள்ளும் புறம்பு மொழிய வேண்டு
முறங்கி யுறங்கா திருக்க வேண்டும்
வெள்ள வெளியா யிருக்க வேண்டும்
விளங்க வெளிதா யிருக்க வேண்டும். (7)

69-வது, பகவதி மூற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எழுபதாவது, வாழ்க்கைப்பாடு.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தன்னிலே யெல்லா மிருக்கு மாகிற்
றானெல்லாத் துள்ளு மிருப்ப னாகிற்
பின்னிலன் முன்னில னவ னாகிற்
பெரிது முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (1)

குணக்குன்று தானு யிருப்ப னாகிற்
குணமிலி தானு மிரும்ப னாகி
வினைக்கொன்று மின்றி யிருப்ப னாகி
வின்றே முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (2)

அண்ட மணுவாப் பெரிய னாகி
லணுவண்ட மாகச் சிறிய னாகிற்
கொண்டார்கள் கொண்ட வடிவ னாகிற்
கூடி முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (3)

---

* தூரியது - தூரத்தது. தேசிகம்.

நல்லதுந் தீயது மல்ல ளுகி
ஞனுந்தா ளுகி யிருப்ப ளுகி
யில்லது முள்ளது மல்லளுகி
யின்றே முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (4)

ஒளியா யிருளா யிருப்ப ளுகி
யுருவா யருவா யிருப்ப ளுகிற்
களியாக் களியா யிருப்ப ளுகிற்
கடிதின் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (5)

ஓரா யிரம்பே ருடைய ளுகி
யுண்மைக் கொருபேரு மில்லை யாகில்
வாராதே நம்பால் வருவ ளுகில்
வந்து முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (6)

இருக்கச்செய் தேயெங்கும் போவ ளுகி
யிளமைமூப் பின்றி யிருப்ப ளுகி
யருக்கற்குந் தாளுெளி யாவ ளுகி
யன்றே முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (7)

சொல்லாதே சொல்லி யிருப்ப ளுகிற்
சுகசுகு பன்ளு யிருப்ப ளுகி
யெல்லாமா யல்லா திருப்ப ளுகி
யின்றே முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (8)

கண்ணின்றி யாவையுங் காண்ப ளுகிற்
கையின்றி யேகைப் பிடிப்ப ளுகி
யண்ணிய ளுயதி தூர ளுகி
யன்றே முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (9)

வித்தின்றி யேகா று செய்வ ளுகில்
விளையாதே போகம் விளைப்ப ளுகிற்
சத்திய மும்பொய்யு மல்ல ளுகிற்
சால முடிந்ததென் வாழ்க்கைப் பாடே. (10)

எக்காலு மென்றுங் கெடாத வன்னே
யெப்பொரு ளுந்தந்த வப்பொ ருளே
* துக்காய்ப் புகுந்து நின்றாட வேண்டுந்
தொந்தசி யென்று நின்றாட வேண்டும். (11)

70-வது, வாழ்க்கைப்பாடு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எழுபத்தொருவது, சந்நியாசம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்துகி லுந்தண்டு நீர்தரித் துச்சிகை னூறெசித் துச் செபங் கன்பண்ணி, முந்திநீர் நீரினிற் காக்கை போல முழுகித் திரியும் பிடார நீரே, பெந்தகா யம்மல நீரின் மூழ்கிப் பிரளய காலஞ் செபித்தக் காலும், வந்துணர் வாயபிரம மாமோ மதித்துநீர் பாரீர் o பிடார * நீரே. (1)

காமிய கன்மபா வம்பவத்தின் காரண மாமென்று கட்டுரைத்து, மோமமுன் னுமபி சராசமாதி யுற்றுநீர் செய்யும் பிடாரநீரே, யாமதொன் றில்லைமுன் புள்ளதன்றி யவற்று விகழ்கன்ம மாயுமக்கே, யேமமில்லாப்பவ மெய் திடாதோ வெங்ஙனே சொல்லீர் பிடாரநீரே. (2)

அன்ன மயமாதி கோசமெல்லா மகத்துளே யாகுதி செய்து தூய்தாய்ச், சொன்ன மறையை யுரைத்து நெய்யைத் தழலிற் சொரியும் பிடாரநீரே, யன்னிய மாய வியுகெருப்பிலாகுதி யாலவை போயகல, மன்னிய போதப் பிரமமாமோ மாசறப் பாரீர் பிடாரநீரே. (3)

---

* துக்கம்.

o பிடாரர் = பாம்பாட்டும் வேஷக்காரர்.

* நீரேயென்பது - நீரேயென விகாரமாயிற்று.

குந்தி மிதித்துக் குளங்கடுரக் கொள்ளேமண்ணுனுடறாய்மைசெய்து, சிந்துவுஞ் சேதுவுங் கங்கையாறுந் தேடியே யோடும் பிடாரநீரே, யிந்த வுடலாமலக்கடத்தை யெத்தனை தீர்த்தநீ ராட்டினுலு, மந்தமில் போதப் பிரமமாமோ வரய்ந்துநீர் பாரீர் பிடாரநீரே. (4)

ஏடு கொண்டு பாடையேறளவு மிடையின்றி யெல்லையில் சாத்திரங்கள், பாடமதோதித் தலைபறியப் பகருதற்கோதும் பிடாரநீரே, தேடுமுள் ளத்துக்கு மோர்வரியவிற்சுரூப மன்னகா ரியமோ, பாடமதோதிப் பலிப்பதுண்டோ பழுதறப் பாரீர் பிடாரநீரே. (5)

செந்துகி றண்டு தரித்தருனென் செபித்து விரல்கண் மூடக்கருனேன், முந்துநீர் சிந்தித்தன் மூழ்கருனேன் முண்டித்த லென்சடை கட்டருனே, னந்தமொன்றில்லா வமலமாய வாதிப் பிரம மகமதனு, லிந்தச் * சடலைகள் வேண்டுமோதா னெங்ஙனே சொல்லீர் பிடாரநீரே. (6)

71-வது, சந்நியாச மூற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எழுபத்திரண்டாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

தண்டு.

குறள் வெண்செந்துறை.

கோணுந்தண்டன் றெங்கடண்டு - குருகாட்டிற் காணலாந்தண்டு, காணுந்தண்டன் றெங்கடண்டு - கண்ணுகியவேகதண்டே. (1)

---

* சடலை = வீண்செய்கை.

மூன்று தண்டன் றெங்கடண்டு - மூலமாந்தண் டெங்கடண்டு, தோன்றுந்தண்டன் றெங்கடண்டு-சுருதி முடிசொன்னதண்டே. (2)

மடம்புகுதாதெங்கடண்டு - வைத்துவாங்காதெங்க டண்டு, சடம்புகுதாதெங்கடண்டு - சச்சிதானந்தமாந் தண்டே. (3)

மரத்தண்டலவெங்கடண்டு - மதியுள்ளவர்கொள் ளுந்தண்டு, வுரத்தண்டந்தாங்கியதண்டு - வுணர்வாகிய வேகதண்டே. (4)

சமயத்தைச் சாடிய தண்டு - சகலமுந் தாங்கிய தண்டு, சுமையற்றிருக்கின்றதண்டு - சுரூபானந்தனார் தந்த தண்டே. (5)

72-வது, தண்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எழுபத்துமூன்றாவது, தபோவனம்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை

ஆர ணக்கிளி கொஞ்சு தபோவன
மாக மக்குயில் கூவு தபோவனம்
பூர ணத்தரி வாழு தபோவனம்
பொருவில் சிறக்கன மாய தபோவனம். (1)

சமயி கட்கதி தூர தபோவனஞ்
சமத மத்திரள் சார்வ தபோவனம்
நமையு மிப்படி வைத்த தபோவன
நாத னாரு ளாய தபோவனம். (2)

73-வது, தபோவன முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எழுபத்துநான்காவது, ஊர்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

உலக முழுது முதித்திட மெங்களூ
ரொருதே வையு மற்றிட மெங்களூர்
கலகா நிலை யாகிய தெங்களூர்
கருணா கரனூர்கழ லெங்களூர். (1)

இந்தி யக்கள்வர் சேர்வில தெங்களூ
ரின்ப நற்பயி ரோங்கிய தெங்களூர்
பந்த மற்றவர் பற்றிட மெங்களூர்
பார்வை யற்ற பரம்பொரு ளெங்களூர். (2)

விரகர்க் கதி தூரம தெங்களூர்
விமலர் கட்கண்ணி தாகிய தெங்களூர்
துரிய யத்தொளிர் சோதிய தெங்களூர்
துய்ய நற்கரு ணைக்கழ லெங்களூர். (3)

74-வது, ஊர் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எழுபத்தைந்தாவது,
ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்
ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்
இருபிறப்பாளர்.

அடியிரண்டாய்த் தம்மினொத்துவந்த குறள்வெண்செந்துறை.

ஒன்பதுவாசலுடைய குடிலையுருவென்றுகொண்டி
டாதே, யின்பவறிவே வடிவானோன் றேவிருபிறப்பாள
ராவார். (1)

குப்பையா மிந்தக் குரம்பையைத் தாமென்று கோலங்கள் செய்திடாதே, யிப்பையை நீத்தறிவான வரன்றோ விருபிறப்பாளராவார். (2)

பொன்று முடம் பளவாகியிருப்பாரும் பூசுரராவார் களோ, வென்று முளவறிவான வரன்றோ விருபிறப்பாள ராவார். (3)

பொல்லாவுடம் பளவாகியிருப்பாரும் பூசுரராவார் களோ, வெல்லா முந்தாமாயிருப்பவரன்றோ விருபிறப் பாளராவார். (4)

புழுவார் குரம்பைதாமாகியிருப்பாரும் பூசுரராவார் களோ, வெழுவாயிறுவாயிலாதவரன்றோ விருபிறப்பாள ராவார். (5)

முப்போது நீரின்முழுகித்திரிந்தான் முனிவர்களா வார்களோ, விப்போதேமுத்தியடைந்தவரன்றோ விரு பிறப்பாளராவார். (6)

உளமதொருங்க வொருக்கியுபநிடத் துச்சத்தொரு பொருளா, யிளமை மூப்பின்றியிருந்த வரன்றோவிரு பிறப்பாளராவார். (7)

பருக்குமெலியுமிப்பாழுடற்காகப் பரந்துதிரிந்திடா தே, இருக்கின்முடிமேலிருப்பவரன்றோ விருபிறப்பாள ராவார். (8)

மறப்புநினைப்பு மிலாதவறிவே வடிவாய் மறந்து மினி, பிறப்பும்பிறப்புமிலாதவரன்றோ விருபிறப்பாளரா வார். (9)

சிந்தைநோய்தீரச்சிவப்பிரகாசன் றிகழத்திகத்தவல்ல வெந்தை சுரூபன்கழல் சூடிலன்றோ விருபிறப்பாளரா வார். (10)

75-வது, இருபிறப்பாளர் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எழுபத்தாறுவது, சிகை.

குறள்வெண் செந்துறை.

* வத்தாவொருகத்தியினாலே வைக்கின்றமயிர்ச்சிகை யன்று, சித்தாயுளவெப்பொருளுக்குஞ் சிகையாவதுவே சிகைதானே. (1)

சிரைக்கின்ற மயிர்க்சிகையன்று சிகையாவது சித் துருவாகி, யுரைக்கின்றவெனைப்பொருளுக்கு முச்சத் தொளிர்வுற்றதுதானே. (2)

மரிக்கின்றவுடம்பிலெழுந்து மாள்கின்றம யிர்ச்சிகை யன்று, தரிக்குஞ்சிகையாவதுமேலாய்த் தனதும் பரிலா ததுதானே. (3)

சிக்குற்றெரியிற் சுறுநாறுஞ் சிகையன்று சிகிச்சிகை போலே, யொக்கத்தனில் வேறறவொன்று யுச்சத்தொளி ருஞ் சிகைதானே. (4)

மயிரின்சிகைநன் சிகையன்று மாயாமயமாகி விரிந்த, வுயிருமுலகும் பாமும்போ யுச்சத் தொளிருஞ் சிகை தானே. (5)

76-வது, சிகை முற்றுப்பெற்றது.

---

* வத்தா = நாவிதன்.

சிவமயம்.

எழுபத்தேழாவது, பூணுநூல்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

புரத்தாற் றிரித்தமெய்ப் பூணுநூ லெங்கணால்
போத முடையவர் போற்றுநூ லெங்கணால்
கரத்தாற் றிரிக்கப் படாதநூ லெங்கணால்
கருத்தைத் திரித்திறை காட்டுநூ லெங்கணால். (1)

கார்ப்பாசத் தாற்றிரி யாதநூ லெங்கணால்
கண்ணேகண் ணாகத் திரிக்குநூ லெங்கணால்
வேர்ப்பாய் வெளுப்பிக்க வேண்டாநூ லெங்கணால்
வேதாந்த நூலால் விளம்புநூ லெங்கணால். (2)

காத்திரத் திற்பூண் டிடாதநூ லெங்கணால்
கழியா திடாதே யிருக்குநூ லெங்கணால்
சாத்திர வாயர் தரியாநூ லெங்கணா
றம்மை யுணர்ந்தோர் தரிக்குநூ லெங்கணால். (3)

ஊனக்கண் ணாற்காண வொண்ணாநூ லெங்கணா
லுடம்புடன் றாக்கொன் றிலாதநூ லெங்கணான்
ஞானக்கண் ணாற்காண லாகுநூ லெங்கணா
ஞான விதத்தை யறுக்குநூ லெங்கணால். (4)

கோத்தெல்லாந் தானே யுருவுநூ லெங்கணால்
குரம்பை யழுக்குப் படாதநூ லெங்கணா
லோத்தெலா மாகி முடிந்தநூ லெங்கணா
லுணர்சுரு பானந்த வுண்மைநூ லெங்கணால். (5)

77-வது, பூணுநூல் முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

எழுபத்தெட்டாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

* செட்டியார்.

அடி நான்காய்த் தம்மிலொத்து வந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

எட்டு மொன்பது மேழு மொன்றுமா
யிருந்த பொன்னெடுத் துரைத்திச் செட்டியார்
தட்ட றக்கழுஞ் சாக்கி னார்தாம்
வல்ல வல்லப மேயிந்தச் செட்டியார். (1)

கடையி லேபதி னாறு மாற்றுக்கக்
கண்ணானீ யாகக் கண்டு தந்தபொன்னுக்
கிடை யொன்றுங் காணேனென் செட்டீரே
யிதென்ன மாயஞ் சொல்லீர் செட்டீரே. (2)

உறுமு யிர்பர முலகெ னும்பணி
மூன்றையு மொக்கத் தட்டு மாறி
வெறுமொரு செம்பொன் னாக்கினீர் செய்த
வித்தக மென் சொல்லீர் செட்டீரே. (3)

கடையிலு மிருப் பாரிந்தச் செட்டியார்
கண்டிட மெங்குமுன் னாவரிச் செட்டியா
ரிடையிலு மெல்லாங் கொள்வ ரிச்செட்டியா
ரெழிலா ருஞ்சுரூ பானந்தச் செட்டியார். (4)

78-வது, செட்டியார் முற்றுப்பெற்றது.

---

* பொன்வாணிபன்.

சிவமயம்.

எழுபத்தொன்பதாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

பெருமாள்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

காலதிசை தேசமெல்லாங் கடந்துநின்ற பெருமாள்
கல்விக்கடல் வீழாமே காத்தருளும் பெருமாண்
ஞாலமுயிர் பரமென்ன நடித்தருளும் பெருமாண்
ஞானவினோ தப்பெருமா ணம்முடைய பெருமாள். (1)

உலகமிகு சமயங்க ளொழித்தருளும் பெருமா
ளொன்றாலுந் தமையாரு மொவ்வாத பெருமாள்
கலைபன மொருநொடியிற் கரிசறுத்த பெருமாள்
கண்ணாக வேயென்னைக் கரைத்தருளும் பெருமாள். (2)

நாயேனைப் பொருளாக நயந்தருளும் பெருமா
ணம்மைநம்மி லேநமக்கு நல்கியிடும் பெருமாள்
பேயான வெனையாண்ட பெருங்கருணைப் பெருமாள்
பேணித்தொழு மடியவரைப் பித்தேற்றும் பெருமாள்.(3)

தன்னடியே னெனவென்னைத் தாமளித்த பெருமா
டன்னைத்தான் றிருமேனி சாத்திவந்த பெருமாள்
பொன்னடியென் சென்னியிலே பொறித்தருளும் பெருமாள்
புழுவின்றலை யபிடேகம் புனைந்தருளும் பெருமாள். (4)

அந்தரமே போகாமே யாண்டருளும் பெருமா
ளப்பொழுதைக் கப்பொழுது மாறாத பெருமா
ளெந்தரமு முவந்தாள விசைந்தருளும் பெருமா
ளிப்படியென் றியம்பரிய வின்பவெள்ளப் பெருமாள்.(5)

மூலபண் டாரத்தை வழங்கியிடும் பெருமாள்
முத்திக்கிங் கெனைஞான முடிசூட்டும் பெருமா
ளாலமாம் பவப்பகையை யறுத்துவிடும் பெருமா
ளடியிணைக டருஞ்சுரு பானந்தப் பெருமாள். (6)

மாலயனுக் கெட்டாமை வளர்ந்தவ ரெம்பெருமாள்
வந்தென்னைக் குடியாக வாழ்வித்த பெருமாள்
காலையென் றலையின்வைத்த கண்ணுடைய பெருமாள்
கைக்கனியே யெனவென்னைக் காட்டியிடும் பெருமாள். (7)

இறந்துநான் பிறக்கின்ற விடர்தீர்த்த பெருமா
ளிமையவர்க ளேமாக்க வெனையாண்ட பெருமாண்
மறந்துநான் பிறவாத வளந்தந்த பெருமாண்
மாறாதென் னுள்ளத்தே மகிழ்ந்திருந்த பெருமாள். (8)

ஆராத வன்புக்கே யகப்படுமெம் பெருமா
ளகமதியைப் பிறர்க்களித்திட் டாட்டியிடும் பெருமாள்
வாராதே வந்தென்னை வாழ்வித்த பெருமாள்
மலர்ப்பதங்க டொழநல்ல மதிதந்த பெருமாள். (9)

அடியவர்த முளத்தச்சந் தவிர்த்தருளும் பெருமா
ளஞ்சாதே யெனையாண்ட வாண்பிள்ளைப் பெருமாண்
மிடியறவே யெனைப்பார்த்த வித்தகப் பெருமாள்
விழியாத வுறங்காத விழிதந்த பெருமாள். (10)

திறலுறு பகைமூவர் குறும்பறுத் துலகேழுந்
திகழ்ஞானத் திருவாணை செலுத்தியிடும் பெருமா
ளறிவுட னறியாமை கழலமிக் கொளிரு
மழகாருந் தனையன்பர்க் களித்தருளும் பெருமாள் (11)

வஞ்சவேட வன்னியரை வல்வினையால் வலிந்து
வன்பவபா சச்சிறையில் வைத்தருளும் பெருமா
ளஞ்சுவன்ன பூதமா யகிலங்கண் முழுது
மறிவாகத் திகழ்செங்கோ னடத்தியிடும் பெருமாள் (12)

இந்திரன்வா னவர்மூவ ரிறைஞ்சியேவல் செய்ய
வென்னுளிருந் திடும்பெருமா ளென்னையாண்ட பெருமா
ளந்தமிலா ஞானப் படைவெள்ள முழுது
மானந்தப் படைவீடு முடையவெம் பெருமாள். (13)

எதிரின்றி யுலகேழு மினிதாளும் பெருமாள்
யானெனதற் றிடவெனக் கெளிவந்த பெருமாள்
சதுரொன்று மனத்தார்க்குச் சதஞ்செய்யும் பெருமா
டவராச ராசர்தற் சுரூபரெம் பெருமாள். (14)

முழுதுமா மடியன்பர் முடிசூட்டும் பெருமாள்
முதலிடை முடிமூவ ராண்டெழுதிய பெருமா
ளழுமன்பி லவருள்ளத் திருளாகும் பெருமா
ளழகாருஞ் சிவப்பிர காசரெம் பெருமாள். (15)

சித்தமண் டபத்தன்பாந் திகழ்சிங்கா சனத்தே
சிதையாத வறிவாகித் திகழ்ந்திடும் பெருமாண்
மத்தனு மெனையுமோர் பொருளாகப் புவியின்
மனிதனுய் வலிந்தாட்கொண் டருளிய பெருமாள். (16)

வலியாரு மெளியாரு மாய்வாரா வண்ணம்
வழுவாம னெறியன்பால் வளர்த்திடும் பெருமாள்
சிலைபோலு முளமெல்லாஞ் சிவமாக்கும் பெருமா
டேவராச சச்சிவப் பிரகாசப் பெருமாள். (17)

79-வது, பெருமாள் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எண்பதாவது, முத்திரை.

அடிநான்காய்த்தம்மிலொத்துவந்த
இரட்டைக்குறள் வெண்செந்துறை.

செத்துப் பிறக்கக் கொடாதெங்கண் முத்திரை
செம்பிற் செறிக்கப் படாதெங்கண் முத்திரை
யத்தத்தி னுத்திர மாமெங்கண் முத்திரை
யாலின்கீழ் நால்வர்க் கரன்சொன்ன முத்திரை. (1)

எண்ணி லிலக்கிட் டிடாதெங்கண் முத்திரை
  யெண்ணுவா ரெண்ணங் கடந்திட்ட முத்திரை
பண்ணி யழிக்கப் படாதெங்கண் முத்திரை
  பார்ப்பறப் பார்க்கும் பரஞான முத்திரை. (2)

வெண்ணூலிற் கோவைப் படாதெங்கண் முத்திரை
  வேதமா நூலின் விளக்கின்ற முத்திரை
பெண்ணு ணலாத பெருமான் றன்முத்திரை
  பேசற் கரிய பெரியோன்றன் முத்திரை. (3)

80-வது, முத்திரை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எண்பத்தொராவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

திருவெம்பாவை.

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்
கொச்சகக்கலிப்பா.

எல்லையிலாப்பாவகத்தா லெத்தனையோ காலமுநான்
மல்கிய வல்வினையா மாயமலர்ப் பள்ளியிலே
புல்லித் துயின்று புரையாய பொய்ப்பிறவித்
தொல்லைக்கனவிற் றுயருழந்து சோர்வேனை
யல்லிக் கமலத் தயன்மா லறிவரியான்
கல்லைப் பிசைந்து கனியாக்கும் விச்சையினாற்
சொல்லற்று நின்று சுடரு முணர்வாக்கி
மெல்லத்தான் மிக்கானைப் பாடேலோ ரெம்பாவாய்.(1)

நில்லாத செல்வத்தை நித்த மெனுங்கருத்தாற்
பொல்லா விஷயத்தே புக்குறங்கு கின்றேனைச்
சொல்லான் மனத்தாற் ஜெடர்வரிய நற்சிவம்வந்
தெல்லே யெழிறிகழு மேனி யது சாத்தி
நல்லாளோர் பாகனுய் நாதன் வலஞ்சுழியான்
வல்லாள னென்னை யெழுப்பி யுணர்வாக்கி
யொல்லாத பாவனையி னுள்ளே யுறவழுத்தி
யெல்லாங் கழற்றியவா பாடேலோ ரெம்பாவாய். (2)

அஞ்ஞான மூடி யகல்கின்ற வாரிருளாம்
பொய்ஞ்ஞால மென்னும் புரையிற் றுயிலாதே
பைஞ்ஞா ணரையானற் பார்ப்பதியோர் பாகத்தா
னெஞ்ஞான முங்கடந்த வெந்தை வலஞ்சுழியான்
செஞ்ஞாயி றென்னத் திகழும்பொற் சேவடிக
ளஞ்ஞான மாய வெழுந்ததுகா ணுயிழையீர்
மெய்ஞ்ஞான மாகநமை வேதித்த மெய்யருளே
யஞ்ஞா வுளமுருகிப் பாடேலோ ரெம்பாவாய். (3)

அறியாமை யென்னு மழியாத மாயப்
பிறியா வினையிலினந் துஞ்சுதியோ பேதாய்
முறியாத வின்ப முழுவெள்ள முன்னேன்
செறிவாரைத் தானுகச் செய்யும் பெருமான்
சிறியோமை யாண்டருளுந் தேசிகனுய் வந்தான்
வெறியார் குழன்மடவாய் வெய்ய விருண்மாண்ட
தறிவா யெழுந்ததுகா ணனந்த வெள்ளக்
குறையா நிறைவினையே கூறேலோ ரெம்பாவாய். (4)

கோதாடு மின்சொற் குதலைக் கிளிமொழியார்
வேதாள மையலிலே வீழ்ந்தே கிடப்பேனை
ஞாதா வருஞ்சிவ னுதன் வலஞ்சுழியான்
பாதார விந்தப் பராவமிழ் தம்பணித்து

மாதா வெனமுன்னி வந்தெடுத்தாட் கொண்டருளிப்
பாதாள மேழுலகு மேனிலமும் பாவெவையு
நீதா னெனவருளி நித்தமாந் தன்னிலைமை
யோதாமை யோதியவா பாடேலோ ரெம்பாவாய். (5)

மேன்மைகுலங் கல்வி விழுப்ப மெனுஞ்செருக்கான்
மானமெனு மையனுளே வாளா கழிவேனை
நான்மறைக ளுடரிய நற்சிவனோர் மானிடனாய்
வானவருங் காணா மலரடியென் சென்னிமிசைத்
தானமர வைத்துத் தமியேனை யாண்டருளி
ஞானமுடன் ஞேயமற ஞாதுருவஞ் ஞானமழித்
தான முழுதினையு மங்கே யறவிழுங்கித்
தான்முழுது மானவா பாடேலோ ரெம்பாவாய். (6)

மண்ணாகி வானாய் வளியா யெரிநீரா
யெண்ணாகி யெல்லா வுயிர்க்குயிராய் நின்றானை
நண்ணாது நாயே னடலைப் பிறவிதனிற்
புண்மூடி வைத்த புழுவார் குரம்பையினின்
றெண்ணா தழிவேனை யெந்தை வலஞ்சுழியான்
கண்ணா ரமிழ்தன் கழல்காட்டி யாண்டருளி
யுண்ணே ருணர்வாக்கி யோர்வரிய பாவனையும்
பண்ணா வழித்தானைப் பாடேலோ ரெம்பாவாய். (7)

முத்தனை மூலத் தனிச்சுடரை முற்றுமாஞ்
சுத்தனைச் சோதி சுரூபானந் தக்கடலை
யெத்தன்மை யோருக்கு மெய்தரிய சேவடியை
யித்தன்மை யோர்சிறியோ ரென்னா தளித்தருளும்
பித்தனைப் பேத மபேத முபயமற
வொத்துணர்வே யாக்கி யொழியா நிறைவளித்த
நித்தனை நின்மலனை நீடொளியை நிர்க்குணனை
யத்தனை யாரமிழ்தைப் பாடேலோ ரெம்பாவாய். (8)

தானே முழுதாய்த் தழைத்துமுத விற்சிதையா
வானோர் பெருமான் வலஞ்சுழியா னென்றென்றே
னானே யரும்பி விழுந்தெழுந் தோவலறேன்
வானோரு மண்ணோறு மற்றெவருந் தாமறியாத்
தேனார் மலரடியென் சென்னி யினிற்பொறித்து
நானாகி நின்ற நடுவு நிலையழித்துத்
தேனே யமிழ்தமே கன்னல்சே ரின்சுவையே
கோனேயாய் நின்றவா கூறேலோ ரெம்பாவாய். (9)

கல்வியெனும் பல்கடலிற் கானலமிழ் தம்பருகி
யெல்லையில் பல்சமயத் தெய்த்தே சுழிவேனை
யல்லலறத் தன்கருணை யாரமிழ்தத் துள்ளழுத்தி
நல்ல மலர்ப்பாத நாயேற் கினிதளித்துச்
செல்ல லறத்திருத்தித் தேற்றி யுணர்வாக்கி
மெல்ல வியோமத் தழுத்திமிகு வேதகத்தே
செல்ல வளித்த சிவபெருமான் றன்கருணை
யெல்லை யிலாதவா பாடேலோ ரெர்பாவாய். (10)

கற்போலு நெஞ்சங் கரையக் கருதரியா
னிப்பா லுருவாகி யென்னுட் புகுந்தருளித்
தற்பாற் படுத்திச் சதுரழித்துத் தானெனக்குச்
சொற்பான் மனப்பாற் சுருதிப்பா லென்றியம்பு
மப்பாலைக் கப்பாலவ் வானந்த மாக்கியவப்
பொற்பே நினைந்து பதைத்தலறிப் போதகனை
வப்பா வடியேனை யாண்டசுரு பானந்தா
வொப்பாரி லாதேயென் றூடேலோ ரெம்பாவாய். (11)

களியாத வின்பக் களியாகு மன்பர்க்
கொளியாகு மல்லாதார்க் குள்ளத்தே நின்றும்
வெளியாகா னாயேனை மீட்டவா சொல்லிக்
களியாது பாவியேன் கல்லென்ன நெஞ்சி

ஞெளியாகி யுள்ளணின் றுருக்கிக் கரைந்தா
னளியோ வளவில்லை யந்தோ தரியேன்
றெளிவாகி யொத்துணர்வாய்த் தேனூறுஞ் செய்ய
வளிசே ரமிழ்தைமுகந் தாடேலோ ரெம்பாவாய். (12)

ஒன்றாகி வேறா யுருவா யருவாகி
யன்றாகி யாமா யழிவாகி யாக்கமுமாய்க்
குன்றாத சீராய்க் குறைவாய் நிறைவாகி
நின்றா னுயிர்கட் குயிரா யொழிவின்றி
யென்றுமில னெம்மைப்போன் மாலிடனாய் வந்தருளிப்
பொன்றாமை நாயேனைப் போதம் வடிவாகத்
தன்றா ளிணையருளி லல்லது சாரவொண்ணா
வென்றாதை யென்னரசென் றாடேலோ ரெம்பாவாய். (13)

எங்கோன் வலஞ்சுழியா னென்றென் றிராப்பகலா
நங்கோல் வளைசோர நாயேற்கு முன்வந்து
தங்கோலங் காட்டித் தமியேற் கறிவருளி
யங்கே யமிழ்தூறு மானந்தத் துட்கலந்
திங்கே யெமைச்செய்த தென்னென் றெடுத்துரைப்போ
மங்கோ ரவனை யறியாதார் மாலயனு
மிங்கே யிவரறிதல் பித்தென் றுலகாற்ற
னங்கோ னருட்கடல்சேர்ந் தாடேலோ ரெம்பாவாய். (14)

ஆரா வமிழ்தை யடியேற் கெளிவந்த
பேரா வொளியைப் பிதற்றி நினைதோறு
நீரா யுருகியெ னாவி நெடுங்கண்கள்
சோரா விதிர்விதிராச் சொற்றளர்ந்து மெய்யரும்பத்
தாரா யெனவலறேன் றுயசியேன் மேன்மேலு
மாராக நானுன் னடியார்கண் முன்னந்தோ
தீராத தீவினையைத் தீர்த்த சிவக்கனியே
யாராத வன்பை யருளேலோ ரெம்பாவாய். (15)

பொன்னா ரடியானே போற்றினர்க்கு மெய்ப்பொருளே
யன்னா ரமிழ்தத் திரளே யடியேனைக்
கன்னா ருரித்த கருணைத் தடங்கடலே
யன்லோநா னாவா தரியே னழிந்தொழிந்தேன்
பன்னா ளமிழ்தப் பரங்கருணைத் தேன்பருகி
நின்னா வடியவரு நீயு மெழுந்தருளி
யென்னவ றீர வெழிலாருங் கூட்டத்தை
மன்னே யருண்மற்று வேண்டேலோ ரெம்பாவாய். (16)

வானோர் பிரமன் புரந்தரன்மான் மற்றெவருங்
கானே படர்ந்துலர்ந்தும் புற்றெழுந்துங் காண்பரியா
னானே வடிவா யுழலுமெனைத் தான்வந்து
தேனார் மலரடியென் சென்னி யினிற்சேர்த்து
நானேநீ யென்றருளி நம்மையழித் தாட்கொண்ட
கானே யமிழ்தே கரும்பே யெனவிரும்பி
யூனே யுருகி யொழியாத நற்சுரூபத்
தேனே பருகிமகிழ்ந் தாடேலோ ரெம்பாவாய். (17)

தோற்றும் பொருண்முழுது மென்கண்ணிற் றோற்றிய
னாற்ற வலைமுழுதும் யானே பிறிதில்லைத் [பின்
தோற்றும் பொருளுஞ் சுரூப மெனவுரைத்தா
யேற்றிய விப்பொருணீ யாமாறெ னென்றார்க்குத்
தோற்றுவதுன் கண்ணாலே பார்த்துத் துணியினல்லாற்
சாற்றுவ தென்னந்தோ சங்கரா வாற்றுகிலேன்
றேற்றத் தெளிவே திகழ்ந்துருகா வென்மனக்க
லாற்றத்தை யொல்க வுருகேலோ ரெம்பாவாய். (18)

அண்ணா வமிழ்தே யடியேனை யாண்டருளிக்
கண்ணாகி யென்றன் கருத்தழித்த கற்பகமே
யுண்ணா வமிழ்தே யுடையானே யுன்றனைநான்
கண்ணாரக் கண்டு களித்தேன் கருதரியாய்

பெண்ணே வடிவுருவோ வாணோ பிறவெவைையோ
வெண்ணே வியாதென்றார்க் கென்னுரைக்கே னெம்
விண்ணே ரயரா வினையேனை யாண்டதிற [பெருமான்
மண்ணே வடியேற் கருளேலோ ரெம்பாவாய். (19)

போற்றியென் சென்னி பொறித்த நற்சேவடிகள்
போற்றியென் சிந்தைப் புரையறுத்த பொன்னடிகள்
போற்றியென் னுள்ளம் புகுந்த மலரடிகள்
போற்றியென் னுள்ள மழித்தசெம் பொற்கழல்கள்
போற்றி யுணர்வாகி நின்றபொற் றாமரைகள்
போற்றி வியோமமுமாய்ப் போய்மிகுத்த பூங்கழல்கள்
போற்றி குறையா நிறையாத பேரின்பம்
போற்றிப் புகழ்ந்துருகி யாடேலோ ரெம்பாவாய். (20)

81-வது, திருவெம்பாவை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எண்பத்திரண்டாவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள்

இரண்டாந் திருவெம்பாவை.

வெண்டளையான் வந்த
இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

ஓத வரிதென் றுடநிடங்க ளோதுபொருட்
பாத மளித்த பரிசினை யாம்பாடப்
பேதையர் போலத் துயிலுதியோ பெய்வளையாய்
நாதன் றிருநாமங் கேட்டலுமே நாட்டங்க
ளோத மெடுப்ப வுரோமஞ் சிலிர்த்துருகுஞ்
சூதன கொங்கைச் செயல்சொல்ல லாமளவோ
வீதே யருள்பெற்று யாரே யிவளல்லான்
மாதே வணிவியந்து வாழ்த்தேலோ ரெம்பாவாய். (1)

சிட்ட மறைப்பொருடன் சீரடியார் கூட்டத்தை
யெட்டனைப் போதும் பிரியா யிதுகால
மட்டலர் கோதாய் வளருதியோ மாதரீ
ரெட்டியோ சந்துக் கிரவிக்கு மின்மினியோ
கட்டக் குளப்படிநீர் கங்கைப் புனற்கொப்போ
வட்ட வுருவ னடியர்குழா நான்கூடு
மட்டமோ வீதொழிய வாய்வந்த வாறுங்க
ளிட்டமே சொல்லு மெமையேலோ ரெம்பாவாய். (2)

இந்திர சாலப் பிறப்பறுக்க வெம்போல
வந்த பெருமானை வாழ்த்துதொறும் வாழ்த்துதொறுஞ்
செந்தழல் சேர்மெழுகாஞ் செல்வி கடைதிறவா
யெந்தரமு மன்புக் கிசையாதே யாயிடினு
முந்துமுறை பொய்யாமை யுண்டாக வெங்கட்குங்
கந்தமலர்க் குழலி கைதவ மல்லகாண்
சிந்தை யினுண்மை திருவுள்ள மேயறியு
மெந்தம் விருப்பமுமிங் கீதேலோ ரெம்பாவாய். (3)

திண்ணமா வாறோ வலியோ தெரிவையோ
வண்ணந்தான் செய்த்தோ வெளித்தோ மரகதமோ
வண்ணித்தோ சேய்த்தோ வருவோ வுருவோவென்
றெண்ண மறியா திமையோர்க ளோமாக்கக்
கண்ணெதிரே வந்தாண்ட சண்ணைக் கருமணியைப்
பண்ணைச்சுவையின் பயனையாம் பாடவுன்
கண்ணுறுந் துயிலுமோ கண்ணா ரமிழ்தான
வண்ணனை வாயாரப் பாடேலோ ரெம்பாவாய். (4)

வாட்டடங் கண்ணி வளருதியோ வானவர்கள்
கேட்டு மறிவரிய கேடில் விழுப்பொருடான்
காட்டிக் கழலெமது கண்களிப்பச் சென்னிமிசை
சூட்டிக் கரணங்க ளெல்லாமுந் துஞ்சும்வகை

மீட்ட விரகுந்தன் மெய்யுணர் மெய்ஞ்ஞான
நாட்ட மளித்த நலனு நனிதேறும்
வாட்டடங் கண்களிப்ப வாயார நாம்பாடித்
தீட்டு நுதலாய் திறவேலோ ரெம்பாவாய். (5)

எல்லை யிருவர்க் களப்பரி தாய்நின்று
சொல்லும் பொருளுங் கடந்த சுடரொளிந
மல்லற் பிறவியற வாரருளா லைம்புலனும்
புல்லத் திருமேனி சாத்திப் பொலன்கழறந்
தெல்லையி லின்பத் தழுத்தி யெமையாண்ட
வல்லபம் பாடி வழுத்த மடமாதே
கல்லு முருகாதோ கண்ணுக்குங் கண்ணானை
யெல்லாமா யல்லானைப் பாடேலோ ரெய்பாவாய். (6)

வேத முடிவுக்கு மேலாய விண்ணவர்க்கு
மீதென் றுணர்வரியா னெங்கட் கெளிவந்த
நாதனை யல்லா னவிலாய்நல் லன்பர்சொலுங்
கீதமலாற் செவியிற் கேளாய்நீ கேட்டொறுங்கண்
ணேத மெடுக்க வொழியா வுடையான்சீ
ரோத வுணரா துலகத்தார் போனீயுஞ்
சீத மலரமளி சேரப் பெறுதியோ
மாதே துயிலுணர்ந்து வாழ்த்தேலோ ரெம்பாவாய். (7)

ஆதி மறைப்பொருட்கு னன்புடைமை யெப்போது
மாதே குலவும் பரிசு மறந்தனையோ
பேதினியோ ரந்தரத்தி லுள்ளோர் விசும்புள்ளோர்
பாதலத்தோர் யாவர்களும் காணாப் பரஞ்சுடரிப்
பூதலத்தே போந்தருளிப் பொன்னங் கழலளித்த
நீதியெலா நின்று நெடும்போது நின்கடைக்கே
யோத வுணரா யுடையானுக் கன்புடைமை
யிதே யிருக்கும் பரிசேலோ ரெம்பாவாய். (8)

யோர்த்த வருமறைக ளோரா யிரமுகத்தா
லேத்த வரும்பொருணு மீதென்று காணவொரு
வார்த்தை யருள்செய்த மாவல் லபம்பாடிப்
பூத்த புனற்றடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (12)

அங்கயன்மே லாதலா லாருயிர்க் காதாரத்தா
லெங்குந் துறையா யிருத்தலான் முத்திவருஞ்
சங்கங் குலவுதலாற் றண்ணளியாற் றண்கணே
யங்கமல மாதலா லங்கமலம் போக்கலா
லங்கழுநீ ருண்மையா லந்தணர்கொண் டாடுதலா
லெங்கோனே யென்ன வெழிலா ரிருஞ்சுனையின்
மங்காமை நம்மை வலிந்தாள வந்தருளும்
பங்கே ருகம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (13)

ஓசையா யூரு யுருவா யுறுசுவையாய்
வாசமாய் வாக்காய் மனமாகி மன்னுயிராய்ப்
பாசமாய் வீடாய்ப் பகலா யிரவாகி
யீசனு யாவர்க்கு மெல்லாமா யல்லாத
தேசன் சிறியேற்குச் செம்பொற் கழலளித்த
நேச வருளை நினைந்து நினைந்துருகி
யீசனை வாயார வெப்போதும் யாம்பாடி
வாச மலர்த்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (14)

வாணய னம்பனிக்கும் வாழ்த்து மனங்கவர்ந்தா
ளுணலிபெண் ணல்லா னெனினு மழகியவா
காணீரென் கண்ணுலே யென்னுங் களிகூரு
நாண மிழந்தா ணறுநுதலார் தங்கையுங்
காணுள் கலைபேணுள் கற்பனையுந் தான்கேளா
ளூணு முறக்கு மொழிந்தாண்பற் றும்பரையும்
பேணு ளிவளையிங்ஙன் பித்தேற்றும் பெற்றியனைத்
தானுவை யாம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (15)

வானகமும் வையகமு மெல்லா மறைப்பொருடான்
போனக மாக்கியவா போலப் புணரியெலாம்
பானம் பருகி யெழுந்து பரன்போல
வானை யறநிறைந்து மாமாயா வல்லியென
மேனி மிகக்கருகி மெய்யுளம்போல் வில்லிட்டு
ஞானம்போன் மின்னியரு நான்மறையி னேர்முழங்கித்
தானந்த மில்லாதான் றந்தவா னந்தத்தை
மானப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (16)

வானோருங் கோனு மலரோனு மாலோனு
மேனோருங் காணு மிறைவன் றிருவருளான்
ஞானோ தயமுன்னர் ஞாலம்போன் ஞாயிறெனும்
பானு தயத்திற் பனிமதியந் தாரகையா
மீனோ குவபோல் விழியால் வினைநீக்கி
யூனே ருயிருடைமை கைக்கொண்டொரு மொழியாற்
றேனகத் தந்தருளுந் தம்பிரான் றுள்பாடி
மானே மலர்த்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (17)

மிதியாநஞ் சென்னிமிசை வேதாகமங்க
ளிதிகாச மெல்லா மெடுத்துரைத்த வின்பக்
கதிகாண நாமுமெலாங் கைக்கனிபோற் காட்டி
விதியோனு மாலும் விடையோனு மொன்று
முதியோர் பரவிவரு மூவர் பதமு
மதியே மெனநம்மை வாழ்வித்த நாதன்
பதியா நமக்களித்த பங்கயத்தாள் பாடி
மதுவார் மலர்த்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.(18)

அந்தா மரையயனு மாலு மறிவரிய
செந்தா மரைப்பதநஞ் சென்னி யுறச்சேர்த்திச்
சிந்தா குலந்தீரச் செய்து செழுஞான
நந்தா வமிழ்தான தன்னைஞா னக்கண்டங்

இந்தாபா ரென்றருளி யிப்படியே நார்வாழத்
தந்தானைப் பாடித் தழுதழுத்து நாட்டநீர்
சிந்தா வுருகாநஞ் சிந்தை களிகூர
நந்தா மலர்த்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.(19)

அன்னையே வேண்டு மகப்போ லடியேங்க
ளுன்னை யிரப்போ முவந்துவந் துள்ளத்தா
னின்னன்பர்க் காளாயா நித்தம் பணிசெயநின்
பொன்னங் கழல்கட் புலன்விட்டுப் போகாதே
மன்ன மனங்களிப்ப வாயார வாழ்த்திடநின்
சின்னங்கள் கேட்பச் செவிசிந்தை தீயெழுகே
யென்ன வுருக வருளுதியே லெம்பெருமா
னின்னம் பிறக்கை யினிதேலோ ரெம்பாவாய். (20)

தாரணி வான்முழுதுந் தந்தாய் சரண்போற்றி
பாரணையப் பண்ணுநின் பாத மலர்போற்றி
யோரணுவா மண்டமென வோங்கும் பதம்போற்றி
நேரணுவு மண்டமா நேரியதாந் தாள்போற்றி
காரணத்தின் காரணமாங் கண்ணே கழல்போற்றி
யாரணத்தின் மெய்ப்பொருளா மாதி யடிபோற்றி
பூரணபோ தச்சுரூபா போற்றியடி போற்றியென்
றேரணவு மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (21)

82-வது, இரண்டாந் திருவெம்பாவை முற்றுப்பெற்றது.

இத்திருவெம்பாவைகள் இறுதியிலேலோ ரெம்பாவாயென்று கூன்பெற்றுவந்த வெட்டடிப் பஃறொடை வெண்பாவுமாகும்.



சிவமயம்.

எண்பத்திமூன்றாவது,

ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள்

இறைவற்காண்டற்கருமை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மத்துறு வேலை வாவென மற்றிமை யோரும்வேதமு
முய்த்தறி யாத பாதமெ னுச்சியின் மீது தானிட
வித்தக வேட மாய்வரு மெய்க்குரு நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (1)

கத்தற வாத நின்பெருங் கற்பனை நிர வோர்மொழி
யத்தினி லேப ராபர மற்புத மாக வேயருள்
சித்தநல் வேட மாய்வருஞ் சிற்சுக நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே (2)

பெத்தமும் வீடு மாயலை பித்தற வேப ராபர
மித்திற மோரெ ணுவிமை யிற்றெளி வாக வேசெய்து
சித்தமெ லாநி றைந்துநித் தித்திடு தேசி கேசனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (3)

சித்தவி கார வாதிகள் செற்றிய வாத நீளிருண்
மைத்துறு வேலை வாவென வைத்துணர் வாக வேயருள்
சுத்தநிர் பாணு வாய்மறை சொற்குரு நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (4)

சுத்தம காசு கோததி துற்றருண் மேரு பாமலை
மத்துறு நீச னேனையு மற்றடி யார்க ளோடுற
வுய்த்திங்ஙன் வாவெ னுவரு ளொப்பறு தேசி கேசனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே (5)

மெய்த்தருண் மேனி யாவொரு வித்தக வேட யாகிய
சித்தனு மாயு ளேநிறை சிற்பர நாத னார்தமை
யெத்தனை யூழி யூழிக ளெத்தனை மாத வங்கள்செய்
தித்தகு தேசி கேசனை யிப்படி காண லாவதே. (6)

ஒத்துமொவ் வாது போதிய வுட்டெளி யாதவாதிகள்
கத்தைவி டாவொ ணுவுறு கற்பனை மாள வேசெய்த
வித்தக வேத போதனை மெய்க்குரு நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (7)

நித்தம தாகி யாரண நிச்சய மாய நீதியை
யுய்த்தகை மேவு மாமணி யொப்பன வோர்சொலாலருண்
முத்தனை மூடனேனையு முற்றிடு தேசி கேசனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (8)

பத்தியு மோர்வு மேதுமில் பட்டிய தாகி யேசெலு
மத்தனை நாயி னேனையும் வைத்தடி மாறி லாதெழு
சித்தமிழ் தாக வேசெய்த சிற்பர நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (9)

மெத்தப ராதமே செய்து மெய்க்குரு டாகு வேனையு
முய்த்தருளே செய் தோலவென் னொப்பில்கிரு பாம கோ
சித்தருள் சேர் சிகாமணி செற்று சிவப்பிர காசனை [ததி
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. (10)

83-வது, இறைவற்காண்டற்கருமை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எண்பத்திநான்காவது,

அருட்டிருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போற்றிநின் னாமறை யிறமர் பொருளே
　புரையற நிறைந்தொளிர் போதனன் மாதே
தோற்றமு மிறுதியு மறநிகழ் கடலே
　துணையிணை யிறந்துள நிறைந்ததூ வெளியே
சீற்றமின் முனிவர்க டிளைத்தெழுந் தேனே
　சிவப்பிர காசனைப் பிறிவற நிகழு
மேற்றிய பொருளெனு மெழிறரு நகையே
　யிறையவ ளேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

உதயநன் கிரியினை யணுகினன் பரிதி
　யுடுமதி மழுங்கின வம்பர்வந் தடைந்தார்
சிதைவினன் புகழுரி யயனோடிந் திரனுந்
　திசைதொறு நிறைந்தனர் திகழ்தரு மடியா
ரிதயமண் டபத்தினி லெழில்கொளு மறிவா
　மெந்தைநற் சிவப்பிர காசனல் லெழில்சேர்
சுதையினின் சுவையே துறவியின் றுணையே
　சுடரொளி யேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

நற்றடங் குவளைகண் மலர்ந்தன குருகு
　நலம்பெறச் சிலம்பின நான்மறை முழக்க
முற்றன பல்லிய மொலித்தன வெங்கு
　மோங்கின தும்புரு நாரதர் கீதம்

பற்றற நினைபவர் பருகிடு மமிழ்தே
 பரமன தருளெனும் பகருதற் கரிய
நற்றவ மேயென துற்பவக் கடுவே
 நாயகி யேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)

ஒளியினுக் கொளியே யுயிரினுக் குயிரே
 யுருகிடு முளத்தினி லோங்கிலா வுணர்வே
யளியினுக் கெளியே யகில பூதங்கட்
 கன்னையு மாயத்த னாகிநின் றருளே
தெளிவினிற் றெளிவே சிவப்பிர காசன்
 றிகழ்திரு மேனிய ளாஞ்சிறப் புடைய
களிமயிற் பெடையே காரணப் பொருளே
 கனங்குழை யேபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

காலமு மூழியு மாகிநின் றவற்றின்
 கருவது வாயவை கழன்றகற் பகமே
சீலமு நோன்புமில் சிறியவென் றனக்குச்
 சிவநெறி யருளிய தேசிகத் திருவே
மூலமு மாய்முடி வாய்முடி வில்லா
 முத்தனைப் பெருநல முழுதருண் முகிலாங்
கோலநன் குயிலே குருமணிக் குகையே
 கோமள மேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

ஐம்பெரும் பூதமு மவற்றறி பதியா
 மைவரு மாயவை யன்றிநின் றருளே
யும்பரு முணர்வரி தாயவொண் ணிதியே
 யுலகமு முயிர்களு மாய்நிறிந் தாளே
கம்பனற் சிவப்பிர காசன தெழில்சேர்
 நாடரும் பரம்பொரு ளாகிய நறவே
யென்பர மெனவெனை யேன்றுகொண் டாளே
 யின்னமிழ் தேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

கனவினு மமரர்கண் டறிவருங் கருணைக்
   கழலிணை கழிகடை யேன்றனக் கருளி
நனவினின் வினவிவந் தாண்டுகொண் டாளே
   நாயகி யேநற வார்குழ லமிழ்தே
சொனமறை முடிவுக டுதிசெயும் பொருளே
   துரியமு மிறந்துசொற் கழிந்த தத்துவமே
புனமயி லேயிறைப் போதினும் பிரியாப்
   புண்ணிய மேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

நல்லடி யாருளக் கருத்தினை முடித்து
   நன்னலம் பெருகிட நயந்தநன் குயிலே
செல்லல தறவெனை யாண்டொரு மொழியிற்
   றிரித்தெனக் கருளிய தேசிகத் திருவே
பல்லுநன் பகலற வாரிய ஞர்த
   மழகுறு மேனியி லணிதிரு வருளா
மெல்லிய ளேவிளை யாவிளை வேயென்
   வேதக மேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

பிரமனை முதல்வரு பிபீலிகை யீருப்
   பெருகிய யோனிக டோறுமங் குயிராய்த்
திறமெனத் திகழ்தரு சிவனு மாகித்
   திகழ்ந்தலை கழன்றொளிர் சிவப்பிர காசன்
வரமுறத் திகழ்திரு மேனிய தாகி
   மன்னரு ளேமயற் பிணிக்குநன் மருந்தே
பரமென விருளுறு மனவெனை யாண்ட
   பனிமொழி யேபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

அம்பொருட் சுருதியின் சிரத்தினி லாடி
   யழகுரு மன்பர்த முளத்தின்வீற் றிருந்த
செம்பொருட் சிவப்பிர காசன தெழில்சேர்
   திருவரு ளாகிய தெய்வநல் லணியே

வம்பினிற் றிரிதரு மதியிலி நாயேன்
மனமிடாய் கெடவலிந் தாண்டுகொண் டாளே
யும்பருக் குணர்வரி யாயெமக் கெளியா
யொண்ணுத லேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

84-வது, அருட்டிருப்பள்ளியெழுச்சி முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எண்பத்தைந்தாவது,

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செயசெய வாழிநற் றேவர்க டேவே
சிவப்பிர காசவென் சிந்தையுட் டெளிவே
யயனுற வறவரு ளாரரு ளதுகண்
டாதர வோடுநின் னடியிணை பணிவோ
மயர்வுட னறிவெனு மவைகழன் றெங்கு
மாசற வேநிறைந் தருளிய வமலா
கயவரின் முதலுறு கழிகடை யெனையாள்
கருணைய னேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

வெருளற விவேகன்வந் தெழுந்தனன் மாய
விருளது கழிந்தது மாமறை யிருந்
தெருளுறு வலம்புரி சிலம்பின வெங்குஞ்
சிலம்பின சிவனரு ளாகம மெல்லா

மருளறு சமதம மாதிக ளெல்லா
மலர்ந்தன வறுபகை யழிந்தன ஞானப்
பொருளுறு கழல்களென் புன்றலை தருவாய்
பூரண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

கூடின மாமறை யீறுகள் கீதங்
குழறின வாகமங் குலவியு மறியாப்
பூவினி லயன்மா லரனொடிந் திரனும்
புகலரி தென்றய முறவெனை யாண்டு
போவதும் வருவதும் மறவுணர் வாக்கிப்
புகலரும் பாவனை புரையற முழுத்தி
யாவையுங் கழன்றக ணுக்கிய வரசே
யிருஞ்சிவ மேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)

இந்திரன் முதல்வரு மிமையவ ரொருபா
லிரவியு மதியுமா மேவல ரொருபான்
முந்திய தேவர்கண் மூவர்க ளொருபான்
முனிவர்க டுதிசெயு முழக்கங்க ளொருபால்
புந்தியி னினைநினைந் துருகியுள் ளழிந்து
பூரணநன் மலர்கொடு தொழவந்து நிறைந்தார்
வந்தெனக் கருள்செய்த மலரடி யானே
வானவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

ஐயுந்து மாகட லாக்கையி னுள்ளே
யடற்புல னரிப் புண்டறி வின்றி
மையுந்து மாமா னைப்பிறப் பின்வாய்
வருந்துகின் றேனைவந் தஞ்சலென் றருளிப்
பொய்யுந்து மூனைப் பிரித்துணர் வாக்கிப்
பொருந்திய சிற்கனங் காட்டிய புனிதா
மெய்யெங்கு மாக விழித்தகண் ணளித்த
விரிசுட ரேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

புழுமிடைத் தசும்புறு புலால்கம ழாக்கை
பொருளென வுழைதரு நோக்கியர் தங்கள்
குழுவிடை நினைந்தழிந் துகுதரு வேனைக்
கூவிவந் தாண்டிடுங் குரைகழ லரசே
கெழுமிடை யுலகங்கள் கிளர்தரு திசைகள்
கீழொடு மேல்பக்க முறுமுயி ரெவையும்
பழுதற மிகுவிழி யாக்கிய பரனே
பரஞ்சுட ரேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

அறிவினை வடித்தநற் கிளியது போல
வளவறு சாத்திர மழகுறக் கழறி
யறிவது பிறிதிலை விடயம தொழிய
வறிவறு மவருட னழிதரு வேனைச்
செறிதரு திருவடி சென்னியிற் சேர்த்தித்
திரித்தறி வாக்கியங் கேசிற மழித்துக்
குறியற மிகுவழி யாக்கிய கோவே
குருபர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

இரும்பினும் வலிதரு நெஞ்சினை யுருக்கி
யிடம்பெற மகிழ்தரு கோயில தாக்கி
யிரும்பது பருகிய நீரது போல
வென்னுயிர் பருகினை யின்னதென் றறியேன்
கரும்பினி லூறலு மமிழ்தமுந் தேனுங்
கலந்துறு சுவையெனக் களிதரு கண்ணே
பெரும்பய னேயென துண்ணிறைந் திருந்த
பேரொளி யேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

ஒன்றெனப் பலவென வுரைதரு பொருளா
யுருவரு வுண்மையு மின்மையு மாகி
நின்றநற் பொருள்களுக் குயிரது மாகி
நிறைந்தொழி வறநின்ற நேர்மைநின் வடிவை

யின்றெனக் கெளிவந்திட் டுளங்கையிற் கனியா
யிவனவ னெனவெனை யாண்டவற் புதனே
துன்றிய மறைதொடர் வரியநற் சுரூபா
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

நாய்வயி னுள்ளதோர் குணமது மில்லா
நலமிலி யாய்நர கினில்விழு வேற்குத்
தாயென லாகிவந் திணையடி சூட்டித்
தகவருட் பெருங்கணை யளித்தவென் றலைவா
பாவியே னீசெய்த பரிசது நினையேன்
பதைத்துரு கேன்கண்ணீர் சொரியவுங் காணே
னுயிருஞ் சோரே னலறிநின் றழியே
னருட்கட லேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

நாயினுங் கடையாய்க் கிடந்தவென் றனக்கு
நன்மலர்ப் பாதமென் சென்னியிற் பதித்துத்
தாயினுஞ் சாலத் தயாவுறப் பரிந்து
தரமறப் பொழிந்திடுங் கருணைநற் கடலே
யாயுநற் பிரமம தாக்கியு மமையா
தருட்கணை யளித்தமை யடியனேன் றரமே
நீயெனைப் பணிகொளு மாறது கேட்போ
நின்மல னேபள்ளி யெழுந்தரு ளாயே. (11)

85-வது, திருப்பள்ளியெழுச்சி முற்றுப்பெற்றது.

சிவமயம்.

எண்பத்தாறுவது,

ஸ்ரீ ஸ்வரூபானந்தசுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒருதிரு வொளியிலென் மதியொளித் துள்ளத்
தாமரை மலர்ந்துகண் ணீருகுத் ததுபோற்
பரிதியி னொளிவரப் பனிமதி யொளித்துப்
பங்கய மலர்ந்துகண் ணீருகுத் தனவாற்
கருதியு னடியிணை தொழுநினைந் தொருமுக்
கடவுளு மமரருங் கடைத்தலை யணைந்தார்
சுருதிக டொடர்சுரூ பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

மாவின மணிகனி செயமனங் களித்து
வாழுமங் குயிற்குலத் துடன்வளம் பெருகக்
கூவின வாரணம் பத்தியுட் புகுந்து
குழுமிய சங்கநல் வலம்புரி யுனக்காம்
பூவென விசைத்தனர் வீணையங் கிழவர்
பொருந்தினர் திருந்தடிப் போதுடன் கண்ணீர்
தூவினர் பெருஞ்சுரூ பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

ஊன்றனை நானென நினைந்துனை நினைய
வுளமிலி யேசெய்த களவினுக் கெல்லாஞ்
சான்றது வாகிநின் றமையறிந் தடியேன்
றரிக்கிலே னெனத்தா னுவந் தருளி

யீன்றவ ளினும்பரிந் தென்பிழை நினையா
தென்னைவந் தாளவிந் நிலத்தொரு வடிவாய்த்
தோன்றின னேசுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தருளாயே. (3)

கெழுமடி யார்கள்சங் கீர்த்தன மொருபாற்
கேட்கவு மரியநின் ருட்கம லங்கண்
டழுமடி யாரொரு பாலொரு பால்வே
தாகம புராணகீ தாதிக ளன்பா
லெழுமையு மாள்கவென் றேத்தொலி யொருபா
லிமையவ ரிடருற வின்பமுற் றடியேன்
றொழுமடி யாய்சுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

திகைத்திட மூவருந் தேவரு மறையுந்
தீவினை யேனையாண் டனைதிரு வருளின்
மிகைத்திற மென்சொலி வியப்புற வடியேன்
வேண்டிய வாவினை யாடவி டளித்தா
யுகைக்குமைம் புலன்களு முறுபகை யாறு
மோங்கெழு பிறவியு முதிரவென் றலையிற்
றகைத்தவ னேசுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

நோக்கிமுன் வினையற நுகர்வுறு விடய
நோக்குமிந் தியங்களின் போக்கறுத் தகத்தே
தாக்கிய வாதனை தன்னையுந் தவிர்த்துத்
தமத்தினைக் கடந்துணர் சாக்கிய தாக்கிச்
சாக்கிய சான்றுமத் தமித்துநின் றெளிருந்
தற்சுரு பமுமுப சமித்துனி லொன்றத்
தூக்கின னேசுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

முன்னவ னேமுடி வேயடி யேனை
முடிவின் பத்துற முழுத்துபே ருததி
யன்னவ னேயக நிறைந்தவா ரமிர்தே
யண்டமெண் டிசைசரா சரமள வற்ற
பின்னவ னேகமெல் லாமொரு மொழியிற்
பிறிதறத் திகழுநின் பேரொளி யாகச்
சொன்னவ னேசுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

கடலூறு திரைநுரைக் கணமெழுந் தடங்கக்
கலைகட லெழுந்தடங் காவகை போல
வுடலுயி ருணர்விவை யுனிலெழுந் தடங்க
வொன்றினி லடங்குத லுதித்ததில் லவனே
விடலரும் வினையிரு ளிடையல யருவேன்
வீடுகண் டிடர்கெட வெளிப்பட வந்த
சுடரொளி யேசுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

இடவிய படத்தினி லெழுதுசித் திரங்க
ளெல்லையில் பலவுள போலிருந் தாலுந்
தடவிய பொழுதிலப் படமல தில்லாத்
தன்மைய தெனவிறை தந்தமெய் விழியாற்
றிடவிய திருவுரு வல்லது காணேன்
திருவருள் பெறத்தவஞ் செய்தவர்க் கல்லாற்
றெருடர்வரி யாய்சுரு பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

மாயவ னேவடி வில்லதோர் வடிவே
வடிவுகொண் டவனியில் வந்தெனை யாண்டா
தாயவ னேமிகு தத்துவப் பயனே
சங்கரன் மாலயன் தனக்கரும் பொருளே

வாயவ னேயடி யேன்மனத் தவனே
வாக்கொடு மனமுற நோக்குதற் கரிய
தூயவ னேசுரூ பானந்தச் சுடரே
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

86-வது, திருப்பள்ளியெழுச்சி முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

எண்பத்தியேழாவது,

தத்துவப்பிரகாச நாயனார்

திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாழிய வாழிய மறைமொழி முடிவே
மக்களு மனைவியுஞ் சுற்றமும் பொருளு
மாழ்கய மதனிடைத் தாயமா யிலைநீ
ராகிய வியல்பினை யழகுறக் காட்டி
வீழ்தரு மூனுயிர் வேறுமப் படியே
விளங்கிட வருள்செய்து விண்ணவ ரெல்லாந்
தாழ்வு மரியபொற் றுளிணை தருவாய்
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

மாகரு முனிவரு மறைகளு மறியா
வளங்கெழு தாமரை மலரடி யடியேன்
சேகர மிசையினி லழகுறச் சேர்த்துத்
திகழ்நன வுங்கன வுங்கெட வைத்துப்

போகரு மையும்வர வருமையும் நிகழும்
புரையறு தொம்பதத் துரிசறு கரியைச்
சாகரத் ததிலே தந்தருள் பவனே
தத்துவ னேபள்ளி யெந்தரு ளாயே. (2)

பண்டுள மதத்தினைப் பாரென வடியேன்
பார்த்தது கண்டிலேன் பார்க்குமக் கரியே
கண்டன னெனவதிற் கண்செவி கைகால்
கடைநடு முதலிரு புறம்பின்முன் கீழ்மே
லுண்டுகொ லோவென வென்னறையுங் காணே
னொழிவறு மறிவதெ னொழிலுரு வெனவே
தண்டிவந் திணையடி தந்தருள் பவனே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)

போக்கிய வுலகுடல் சாக்கிய மாக்கிப்
பொருந்திட வடியனுக் கிருந்தமை யுரைத்த
வாக்கியங் கேட்டது மாற்றிய பின்னே
மன்னிய பரபுரத் தென்னைவைத் தவனே
பாக்கிய பலமென வந்தநின் னருளாற்
பவமணு காவகை யதுபரம் பொருளைத்
தாக்குத லொழிதர மொழிதரு பவனே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

அயனெடு மாயவ னுலகுக ளவர்க்கே
யருளுதன் மாறுத னினதரு ளெனவே
நயனுடை மொழிசெவிப் புலத்துமுன் னறிந்த
நானவ ராயனு பவித்தது மன்றிப்
பயனுடை யுருத்திரன் மகேசனு மாக்கிப்
பழித்தபின் சதாசிவ மளித்ததும் பழித்தாய்
சயமுறு மதிற்பரம் பொருளெனக் கருள்வாய்
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

இப்படி யிதுவென வியம்புத லரிதா
யிறையுறு காரண வுபாதியை விழுங்கி
யப்பொரு ளறிபொரு ளாகிய பரமா
யளவறு பவுதிக பூதமு மாகி
யெப்பொரு ணிகழுவ ததுதனை யடியே
னொலியில தாகிய பவங்கெட வருளாற்
றற்பர வொளியென வருளிய பரனே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

என்னிடை நீயுமற் றுன்னிடை யானு
மிருந்தபி னிரும்பெரும் பொருளவை யெவையுந்
துன்னிய வுலகமு நீயுமப் பரிசே
தோற்றிய நிலைமையு மாய்த்துள வுன்னை
மன்னிய கரதல மணியெனக் காட்டி
வருவது போகுவ தாகுமென் பிறவி
தன்னையோர் கொடியினில் வேரறுத் தவனே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

நீந்தரும் பெரும்பவக் கடலிடை வீழ்ந்து
நெடுங்கரை யேறுதற் கலமரு வேனை
யேந்தியுன் றிருவடி யாகிய கரைக்கே
யிளைப்பற விருத்திய வளப்பெருங் கடலே
வாய்ந்தசிற் கனம்புகுங் காலமி தெனவே
வருமித மழித்து * நின் பெருமித மழியச்
சாந்திதந் தசிபத மாக்கிய வரசே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

விதிமுறை காரிய காரண மாறி
விளம்பிய வுயிர்பரம் விளங்கிய் வதுபோ
லுதிதம தாகிய வாதனை மாறி
யொளிமண முதலிய நிகர்சிவ மருளி

* நின்பெருமிதம் - நீயானென்னுங்களிப்பு.

முதியநான் மாமறை முடிமொழி நாலு
முனமென முறைமுறை யினமற விறந்த
சதுர்பட விருந்தவப் படியிருந் தவனே
தத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

பங்கயர் தினகரற் குதவிய தெங்கே
பயோதர மதற்குல குதவிய தெங்கே
யிங்கிவை யொழியவென் செயனுமப் படியே
யென்பிறப் பறுத்தநீ யென்பெறக் கடவா
யங்கமோ டுயிர்பொருண் முன்னுமுன் னனவே
யாயினுங் கொண்டனை யவ்வழி யடியேன்
சங்கையி ரெழும்பல தேதுமற் றறியேன்
றத்துவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

87-வது, திருப்பள்ளியெழுச்சி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எண்பத்தெட்டாவது,

பரிபூரணப்பிரகாசநாயனுர்

திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உற்றறி வெழுவுள விருளகன் றதுபோ
லுதயம்வந் தெழவுடு வொளியகன் றனவா
னற்றட லுயிர்பொரு ளப்புடன் கவர்ந்து
நாண்மலர்த் தாளிணை நாயினேற் கருளிச்

சற்றென விசுவசாக் கிரகர ணங்கள்
சதுர்த்தெச செலவுநன் கலப்பழிப் பொன்றிற்
பற்றுத றிசைமுகர் பதமென வருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (1)

அண்டரும் பரமெழ வறிவகன் றதுபோ
லாதவ னெழவுடு மதியகன் றனவா
லெண்டிசை தொறுந்திரிந் தெனையறி யாதே
யெய்த்தெனை யாண்டுதை சத்தெனு மதிலே
கண்டுகொள் கனவையிவ் வணமென விருத்திக்
காமிய தாமதுட் கரணங்க ளுடனே
பண்டுல களந்தவர் பதமென வருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

பத்துட னுலையும் பதைப்பற விருத்திப்
பாரிருந் திவ்வண மென்றருள் புரிய
வத்தம துருவம தாயின தென்ன
வதுமிகு சுழுத்தியவ் வியத்தமா மாயை
யுத்தம வுருத்திர பதமுநற் பிரகிர்தி
யுனதுட லாமுதற் பாழ்சகற் வட்சணை
பத்திய தறிபிரா ஜனெனன வருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (3)

விரிவுறு காரிய வுபாதிக ளெல்லாம்
வேறுசெய் தறிவிராட் புருடனை யெனவுங்
கரியது வாகிநின் றன்னவை முழுதுங்
கழன்றன சம்சர்க்க வாக்கிய மதனுற்
றுரியம துணையறி தொம்பத மகேசர்
சொல்லுமுற் பூரண சோதியி லென்னைப்
பரமன விற்கர மணியென வருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (4)

காலமு ஞாதுருஞ் ஞானமு ஞேயமுங்
கண்டன னென்னி லிராசத மாயை
மேலொடு கீழ்பக்கம் விரவிய பின்முன்
விரிவுறு மவைபல மாயின வெல்லாஞ்
சாலவு மிரணிய கர்ப்பமு மிதுதான்
சதாசிவ கால பரன்கன விதுவெப்
பாலுயர் காரண வுபாதியென் றருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (5)

இதமக மறவிரு விவணமென் றருளி
யெழில்பர சுழுப்திகா ரணுதியிற் றதுவா
மதீதம நிதுவசகல் லட்சணை யதனு
லாசறு சொல்லுறு பாழிரண் டாம்பாழ்
பொதுவது புகவது போந்தட மன்றிப்
போதமு மழுங்குமவ் வியாகிர்த மிறுகல்
பதியுடல் சதாசிவ பராசத்தி யருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (6)

அருவமு முருவமு மாகிய பொருளே
யதீதமென் றருளிய தழித்தது வறிந்த
பொருளுணர் வதுபரம் விசிட்டவாக் கியத்தாற்
பொருவில்சிற் சுவலிதைதற் பதப்பொரு ளதுவா
மிருநில னெனமுத லருளிய பரிசே
யெழிலிரு பூரணத் தியல்குரு நனவிற்
பாமுற வெனதெழு பவமறுத் தருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (7)

மலமறு குருபதக் கனவினின் மருவு
மாசறு மாணவ சாத்திக மதனு
லுலகமோ டுயிருதன் மாத்திர பரமா
யுணர்ந்தது வேப்ரசா பத்தியென் றருளி

நிலவிய பரமம தாயவை முழுது
நிகழ்ந்ததின் றெற்கென நெடியவர் முதலே
பலவுல குண்டது மிதுவென வருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (8)

சீரணி சகதசகல் லட்சணை யதனுற்
செகமுழு துண்டதொர் செருக்கற மிகவே
யேர்குருசுழுத்தியி விருத்துப சாந்த
மிருபதப் பொருளுமொன் றுக்கிநின் றெளிர
வோருட லுயிரறி யொண்பர முழுது
மொன்றுமுப் பாழுளை யிறந்திட மதுவாய்ப்
பாரியல் சமைவுநற் பிருதுவியென் றருளப்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (9)

ஆரண முடிவினி லசிபதப் பொருளை
யருளுமுப் பூரண பூணபி ஷேகச்
சீரணி யடிகளென் சென்னியிற் சேர்த்திச்
செறிதர வகண்டவாக் கியமத னுலப்
பூரண துரியமென் மோனநல் விழியாற்
புணர்குரு சத்திய மாதியுற் பலத்தின்
பாரென நடித்துனி லயிக்கிய மாக்கும்
பரிபூர்ண னேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

88-வது, திருப்பள்ளியெழுச்சி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

எண்பத்தொன்பதாவது,

சிவப்பிரகாசசுவாமிகள்

நிந்தாஸ்துதி.

கட்டளைக்கலித்துறை.

உண்பதுகொண்டவர் தாமுயிர் கொண்டனரென் றுலகோர், பண்படவேமொழி கின்றனர் பார்க்கிலு டலதுமற், றெண்படு கின்ற பொருளது கொண்டிரங் காதுயிரு, முண்பது வேகட னுமுடையா னருட் கொப்பிலையே. (1)

செய்யாத செய்திடுஞ் சேர்ந்தவர் தங்குடி கேடு செய்யு மெய்யாக நல்லவர் போன்மேவி யேவினைக் கேடனுமா, யுய்யாத வண்ணமடைந்தோ ருயிருண்ப தென்றறியா, னைதயோ குருபர னென்றறி யாமை யகப்பட்டதே. (2)

துட்டனை வானவர் சோரனை மாமறைத் தூரனைவன் பெட்டனை யாரருட் பித்தனைப் பின்னிலி முன்னிலியை நட்டனை நள்ளருட் பத்தியி னன்கயிற் றாலடியார் கட்டனை நற்றவ ரென்கழற் றாழ்வர் கருத்திகழ்ந்தே. (3)

கருவிலி கற்பனை யின்றி முழுதுணர் கத்தன்முத்த னருவிலி மாண்பிலி மான மிலிமதிப் பாருமிலி, யுருவிலியோடுகொண் டுண்பலிக் கென்றுழல் வோனை யென்னே, பெருவலி மாதவ ரெம்பெரு மானென்று பின்செல்வதே. (4)

செயல்வேறு சொல்வேறு தேசிகன் செய்கை சிறிதுமொன்று, முயலே னெனுமுழு தும்முய லாகிற் குழற்றுமென்ற, னயலே யெனுமவை தானு மிருக்கு

மனைத்தினுள்ளும், பயிலே னெனுந்தன்று ளேபயி லாகிற்கும் யாவையுமே. (5)

என்றும் பிறப்பிலி யேற்ற மிழிவிலி யிச்சையிலி, நன்று மலது மிலிநடு வாதி முடிவுமிலி, பொன்று முடம்பிலி பொய்யொடு மெய்யிலி பூண்பதிலி, யொன் றுமிலியைநல் லோருடை யானென்ப ரோர்விறந்தே. (6)

ஊரிலி பேரிலி யுண்பதொன் றில்லி யுறுதுணையு, மாரி லியங்க மிலிகுண மில்லி யடைவதில்லி, நேரிலி நெஞ்சிலி நின்மித மில்லியை நீண்மறைகள், சீரள வேதுமில் லாத்திரு வோனென்று செப்புவதே. (7)

தட்டா னியாவினுஞ் சான்று னவன்சம யங்க ளுள்ளுங், கிட்டா மறையன் களர்கள்ள வேடன் மறைப்பறைய, னெட்டாத வூம ரகம்படியா னுல கம்படைச்சன், சிட்டார் சிவப்பிர காசனென் றேநின்று செப்புவதே. (8)

தேரினன் றுமருட் டேசிகன் சார்வெனச் சென் றடைந்தே, னொருமொன் றுவிடத் தேயென்னை மாய்த் தென் னரும்பவமா, மூருமொன் றுக வளைந்தறுத் தைம்புல மாதியுற்றார், பேருமின் றுயிடச் செய்தனன் செய்தவப் பேருளே. (9)

சாற்றுகின் றேனெவர்க் குங்கெடு வீர்தப்பி யோடுமின்கண், மூர்க்கனெங்கோன்முன் னகப்படின் மூவேழ்குலமணைந்தோர், சேர்க்கை யொன்றுக வளைத்துப் பிறப்பறுத் துச்சிவத்தே, யேற்றுகின் றுனிரங்கானென்ற ஞருபி ருண்டவனே. (10)

89-வது, நிந்தாஸ்துதி முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்.

தொண்ணூறாவது,

ஸ்வரூபானந்தசுவாமிகள்

அடிமடக்குஸ்துதி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்:

ஆசி லாமன மேவிய மெய்யனே
யகில லோகமு மாகிய மெய்யனே
பாச மோசன லோசன வீசனே
பழுதி லாமுழு தாகிய வீசனே
நேச மார்சுரூ பானந்த நித்தனே
நின்க ழற்புக ழார்கண நித்தனே
வாச கத்தொடு வாமனத் தானே
வள்ள லன்பர்கள் வாமனத் தானே. (1)

அன்பு நின்கம லக்கழற் குற்றதே
யளவி லுற்பவ முற்றகைக் குற்றதே
துன்ப வெள்ளந் துடைத்தசொல் லொன்றுமே
தொண்ட ருட்சுரூ பன்கழ லொன்றுமே
நின்ப தந்தொழு வாருத் தமர்களே
நிமல னன்ப ரெனக்குத் தமர்களே
யுன்பெ ருங்கரு ணைக்கள வில்லையே
யுபநி டத்துரை யிற்கள வில்லையே. (2)

அருள தேவடி வாகி யிருத்தியே
யாரு ஞானிக டம்மு ளிருத்தியே
யிருளும் வன்பவ மாள விழித்தியே
யென்னை நின்னுரு வாக விழித்தியே

மருளு மும்மதிண் மாளவு மெய்தியே
மாசு வத்து மறைந்தது மெய்தியே
வருள தார்சுரூ பானந்த வாரியே
வறிவி லேனுயி ருண்டதும் வாரியே. (3)

நந்தி டாதசெந் தீயனை யானையே
ஞான மாமத மேபொழி யானையே
வந்தி டாதுரு வாய்வரு வானையே
மன்னு தன்னிலைக் கோப்புயர் வானையே
சிந்தி டாவழி வேலையு மாளவே
சீறும் வன்பவம் வேரொடு மாளவே
வந்த நற்சுரூ பானந்த வள்ளலே
மாசி லன்பிலற் குள்ளது வள்ளலே. (4)

முடிவி லாவரு ளாலொரு மூர்த்தியே
முன்பு பின்பில தாகிய மூர்த்தியே
நெடிய வல்வினை வேரொடும் வெட்டுமே
நின்ம லன்றிரு மூர்த்தமவ் வெட்டுமே
யடிய ராயினு ராபத் தனமதே
* யளவி லின்ப மருளுந் தனமதே
யொடிவி லின்பஞ் சுரூபன் பதங்களே
யுற்று மீளிடு மற்றைப் பதங்களே. (5)

அல்ல வாதிக டங்கட் கரியனே
யளவி லந்தக் கரணக் கரியனே
பல்ல வாவினை பற்றவை பங்கனே
பத்த னைப்பய னாகிய பங்கனே
நல்ல நான்மறை யீறல மாக்கவே
நாயி னேனுளந் தானல மாக்கவே
தொல்லை வன்பவஞ் சுட்டுணர் வொன்றுமே
சுரூப னார்கழ லென்சிர மொன்றுமே. (6)

ஐம்பு லன்கர ணங்களுக் குத்தியே
யாதி மாயையை வேரொடு குத்தியே
யும்பர் வந்துணர் வாகி யுதித்தியே
யுள்ள நற்சுவை யாய்நின்று தித்தியே

* இவ்வடி அநேக புத்தகத்தின்று. ஓர் புத்தகத்திற்கண்டது.

யம்ப ராதியையம் பூதல கண்டனே
யழிவி லாவறி வாகி யகண்டனே
செம்பொ னேசுரூ பாவென நம்பியே
சேர வன்பரோ டாண்டது நம்பியே. (7)

கால தேசங் கடந்தவப் பாலனே
கருணை யானுல கம்பரி பாலனே
யோல வென்றன்ப ருக்குரு வாகியே
யொழிவி லின்பளிக் குங்குரு வாகியே
ஞால முஞ்சிவ மாக்கும் விரகனே
நன்றி வாருளத் தங்கும் விரகனே
சீல மேசிறி யேனுரு வந்ததே
சிற்சுரூபனென் னுள்ளுரு வந்ததே. (8)

பத்தி வன்கயிற் ருர்ப்புண்ணு மாகியே
பகரு லோக மலோகமு மாகியே
முத்தி யன்பர் தமக்கரு ளானையே
மூட ருக்குநன் கொன்றரு ளானையே
யத்தி யாகினை வாருளத் தர்க்கனே
யன்றும் வாதிகட் காயகு தர்க்கனே
யெத்தி நீபுகுந் தாள்வது மென்னையே
யின்ப நற்சுரூ பாவிது வென்னையே. (9)

கலையெ லாமறைத் திட்டது முன்னையே
காத்த ளித்துக் கரப்பதன் முன்னையே
யலையெ லாமற வாறினர்க் கண்ணலா
யைய முற்றலை வாதிகட் கண்ணலா
யெலையி லாதெழு மீறிலின் பத்தனே
யென்னை யாளு மெளிற்சுரூ பத்தனே
நிலையி னின்பளிக் குங்குரு வாதியே
நீச னேனு ளமைந்திடு மாதியே. (10)

90-வது, அடிமடக்குஸ்துதி முற்றுப்பெற்றது.

சிவமயம்.

தொண்ணூற்றொன்றாவது,

ஸ்வரூபானந்தசுவாமிகள்

வீட்டுநெறி.

நிலைமண்டில ஆசிரியப்பா.

அண்ட வுருவிற் பிண்ட முதிக்கும்
ஆழிமீன் போலும் வாழி சிவமுயிர்
இந்தத்தோற் றொடுக்கம் வந்தபல் லுயிர்கள்
ஈரெழு புவனம் பாரெழு முயிர்நிலை
உள்ளும் புறம்புங் கொள்கையொன் றறவிரு
ஊகை தானே யாது மானது
எழுத்தை யெழுது மெழுத்திலுண் டுறுபொருள்
ஏக மாவது யோக மாகும்
ஐய மின்றி யருளிறை யேசிவம்
ஒருபொரு ளின்றிச் சுரூபனை வணங்கு
ஓதல் வேண்டா தாத னிறைவு
ஔவியம் பேசா தது *ரோவ மாகும்
அஃகம் பெற்ற துயிர்க்குயி ரதுவென்
கருமை செய்மை வெண்மை யவனலன்
ஙப்பொரு ளாவ தப்பொரு ளாகுஞ்
சத்ததம் பாதுகை சிந்தையில் வணங்கு
ஞத்தி யுடையவர் முத்தி பெறுவர்கள்
அடவிய கடத்தைத் தடவிநிற் பதனில்
அணக்கோ ணற்றகிற் பிணக்கறு முத்தி
தற்பதந் துவம்பத நிற்ப தசிபதம்
நந்தி திருவடி சிந்திநா டோறும்
பந்த மென்பது சிந்தி யாது
மனன மரிக்கிற் சனன மரிக்கு
மயக்கற விருந்து மயக்கந் தவிர்

---

* ரோவம் = பாணம்

அரந்தை கெடுத்துப் பரந்தனை வணங்
குலக்கந் தியானங் கலக்க மருது
வந்தனை யடங்கிற் சிந்தனை சிவமாம்
அழகிய திருநடந் தொழுவத சிந்தியம்
இளம்பிறை சூடியே வளந்தரு சுடரொளி
தன்னை யறிவது பின்ன மறுவது
அனந்த வறமே மனந்தனை மரித்திரு
கவலை நின்றிடிற் சிவலை நின்றிடுங்
கால மூன்றுநின் பாலுற வறிந்திரு
கிரக வுதயந்தரு முடிவி லுயிர்நிலை
கீழ்க்குல ஞான வாழ்க்கை யிலாதார்
குருவொளி பிண்டந் தருமுயிர்க் குணர்வு
கூத்தும் பலமு மேத்துவ தசிந்தியங்
கெடுத்த சுழுனையி லெடுத்த துணர்வொளி
கேட லுணர்வொளி யாடிய சிவமே
கையது கூப்பி மெய்யுற வணங்கு
கொண்ட நிலையது கொண்டி டாநிலை
கோணு நிலையது காணு நிலையே
கௌவை யறுவது செவ்வை யுறுபொருள்
சத்தாதி யைந்தினு மொத்த தொருபொருள்
சாதி குலம தோது சுக்கிலஞ்
சிந்தனை யடங்குதல் வந்தனை யாகுஞ்
சீதள கமல பாதுகை பணிந்திரு
சுருதியம் பொருளே பரிதியம் பொருளது
சூழவே ழேழது வாழ்பயி ராகுஞ்
செய்யுஞ் செயலவன் செய்யுஞ் செயலே
சேட்டர்தா ளிணையை நாட்டிநீ வணங்கு
சைவ நெறியே யுய்யு நெறியது
சொர்க்க நரக முற்பவ விலங்கு
சோம்புற வாசை யாம்பொழு தறுத்திரு
ஞானபரை யந்த மோனஞ் சிவமே
ஞெகிழிப் பொறிபோ னின்றது சிலையே
ஞொள்கிய மனமுடை யோர்நுண் ணியரே
தகுதி யுற்றவர் பகுதி யற்றவர்
தாக்கொன் றறவே நோக்கினை நோக்குத்
திடம்பர ஞானி யுடம்பு நற்சிவந்

தீர விருந்து பாரிரு சரணந்
துஞ்சல் விழித்தன் மிஞ்சல் விட்டிரு
தூங்கும் யோகம் பாங்கு பெருது
தெள்ளி யறிந்து வள்ளலை வணங்கு
தேசிகன் சிவமென் ருசை யொன்றறநில்
தையு லுருவது மைய லுருவே
தொந்தனை யறவே நந்தியர்ச் சனைசெய்
தோற்றுஞ் சுடருள யேற்றிய தீபம்
நன்றிசெய் குருவை யென்றும் வணங்கு
நாட்டஞ் சொல்லும் வீட்டி னெறியை
நிருத்தஞ் செய்சிவன் குருத்தவ ராசன்
நீரும் பூவுஞ் சேருமன் பிதயம்
நுண்ணிய பொருளை நண்ணியர்ச் சனைசெய்
நூலொடு குருவுரை வேலைசிற் றாறல்
நெட்டை யொன்றற விட்டு நீயிரு
நேயந் தன்னி லேயுஞ் சுடரொளி
நைந்துனைந் துருகிச் சுந்தர வடிதொழு
நொடிப்பொழு தாசை யறவடி பரவு
நோக்கற விருந்து சேக்கையை நோக்கு
நௌவி விழியுமை செவ்வி சிவனுரு
பசுபதி பாசம் விசுவமெய் யறிவு
பாசந் தவிர வீசனை வணங்கு
பிண்டந் தனிலு மண்ட முதிக்கும்
பீதம் பிரபை யோதுமை பரமன்
புண்ணியர் மண்ணி லெண்ணிய ஞானிகள்
பூண்டதா ளிணையை வேண்டி வணங்கு
பெருகும் பிறவி யருகி பின்புறும்
பேத மறவே நாதனை வணங்கு
பையர வரையனே பொய்யறு பரமன்
பொய்யு மெய்யுஞ் சையெனு யவத்தை
போக்கு வரவற வாக்கையி லுணர்ந்திரு
பௌவப் பிறவி செவ்விதை கருத்து
மனமெனுங் கடத்திற் றனமென வறிவு
மாண்ட வுடலுயிர் பூண்ட வுறுபொருண்
மிக்கவித் தங்குர மொக்குநற் பொருளுயிர்
மீண்டுமி முளையிற் காண்டதா முயிருடன்

மூந்துட லுயிரிற் பிந்த வுதிக்கு
மூன்று காலமுந் தோன்றுமு னிடத்தின்
மெய்யு முடம்பு பொய்யு முடம்பு
மேலைச் செய்யிற் காலைப் பயிரிடு
மையல தறவே செய்பயிர் வளர்த்திரு
மொட்டும் பூவுஞ் சிட்டனுங் குருவு
மோன முதிக்கின் ஞான முதிக்கும்
மௌன வுண்மையே யெவனுறு மவன்சிவம்
யானென தறிகி லானது முத்தி
யூகித் துணர்வது போகற் கதியது
யோகமீ தான மாகி யாறிநில்
வடிவ திருந்த படியது வாகும்
வாக்கியமெய்ப் பொருளை யாக்கிய துரைத்திரு
விடாம விருந்து கெடாது கெடு
வீட்டின் பத்தைக் கூட்டுந் தேட்டறில்
வெள்ளையுஞ் சிவப்பும் வள்ளல் பாதுகை
வேண்டி யிருந்து வேண்டல்வேண் டாமை
வைப்பது பாதுகை மெய்ப்பது மதுவே. (1)

91-வது, வீட்டுநெறி முற்றும்பெற்றது.

உ
சிவமயம்.

தொண்ணூற்றிரண்டாவது,

சிவப்பிரகாசசுவாமிகள்.

நமசிவாய.

கலிவிருத்தம்.

சத்யாதி லட்ச ணபாரத்ம பராமிழ்தத்தைக்
கைத்தாரு மாம லகதற் சமமாகவென்னை
யுய்த்தாரு முன்ற னடியாரொடு காணும்வாழ
வைத்தாயுன் வல்ல பங்கர்த்த நமசிவாய. (1)

ஏற்ருரும் வேதச் சிரமோடம ரர்க்கு மெட்டாச்
சீர்ப்பாத புண்ட ரிகநாயனை யேன்சிரத்தின்
மாற்ருது கோயில் கொளவைத்தெனை வாழவைத்தா
யாற்றேன் கோலிவ் வருளுக்கு நமசிவாய. (2)

கற்ருரி லன்று கருதன்புடை யாரிலன்று
துற்ரு * ருட்சத்திற் சுகதுன்மதி நீசனேற்கு
வற்ரு மகாவி பவமாகிய தன்னை நல்கி
நற்ருயி லன்பு மிகுநாத நமசிவாய. (3)

இராகாதி சத்துருக் கெண்பீடையி ஞற்கலங்கிச்
சோகாதி துக்க மகவேதனை யிற்சுழன்று
போகாமே யஞ்ச லெனவந்தென துள்புகுந்த
பாகா ரருட் பகருமாறெ னமசிவாய. (4)

ஓவா மகாகிரு பையிறுலொரு மேனிசாத்தித்
தாவாத வன்பிறவி வன்கிளை தன்னைவெட்டித்
தேவாய தன்வடி வென்வடி வாக்கியாண்ட
தாவாலி தென்ன வருள்வெள்ள நமசிவாய. (5)

ஒன்ருக் கலாததொ ருட்சத்திற வெனைப்பிடித்துக்
கன்ருக் கிரங்கி வருகாதல்செய் தேனுவென்னத்
துன்றுற்ற பேரரு ளால்வந்தெனை நல்கியாண்ட
நன்றிக்கு நானேது செய்வேன்கொ னமசிவாய. (6)

பத்திப் பதத்தை யணுகாதொரு பாக்கியகீனன்
சுத்தச் சடந்தி கழுதுன்மதி நீசனேனை
முத்திப் பராமிழ்த முழுந்திட வைத்தநின்க
ணைத்தைச்செய் வேனேதுசெய்வேன்கொ னமசிவாய.

மூடர்க் கெலாம்பி ரதமன்முக ரிதறுதீயன்
கூடற்கொர் மேரு குணகீனன் கிருதக்நவேலை
யீடுற்ற வென்னை யிறையின்புற வாண்டதந்தோ
நாடற்கொ ணாத கிருபைவெள்ள நமசிவாய. (8)

---

* ருட்சம் = கோபம்.

ஆசைப் பெருங்க டலளற்றுறு மந்தனேனை
மாசற்றவன்ப ரிடைவைத்தொரு மாத்திரை தன்னிற்
றேசுற்ற சிற்சு கபராமிழ் தாக்கியாண்ட
வீசற் கிருபைக்கேது செய்வேன்கொ னமசிவாய. (9)

உத்த சுருதிக்கு முணார்தற்கரி தாயவுன்னை
யெத்திப் பிடித்தெ ளிதிலன்பி லெனக்களித்த
சித்திப் பதந்தி கழுஞ்செய்ய சிவப்பிரகாச
வித்தற் கிருபைக்கேது கைமாறு நமசிவாய. (10)

92-வது, நமசிவாய முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

தொண்ணூற்றிமூன்றுவது,

காப்புக்குறியுரைத்தல்.

நேரிசை வெண்பா.

பல்லா யிரமறைக்கும் பார்ப்பரிய வானவர்க்குஞ்
சொல்லான் மனத்தாற் றொடர்வரிதாய்ப் - பொல்லாத
நாயேனை யாண்டருள நாணாது வந்தருளுந்
தாயே தமியேனைக் கா. (1)

மாளாத வல்வினையை மாத்திரையின் மாற்றியெனை
யாளாகு மன்பருட ஞண்டருளி — நீளாக
மென்னே யெனைக்காட்டி யாலவுமா யாசற்ற
பொன்னே புலையேனைக் கா. (2)

பார்த்திடத்தும் பாரா திருந்திடத்தும் பல்விகற்பந்
தீர்த்திடத்துந் தீராச் சிலுகிடத்தும் — பார்த்துவரும்
வன்பேத மாளுவித்து மாளாத வின்பளித்த
வன்பே யடியேனைக் கா. (3)

அண்டாண்ட மற்றைப் பகிரண்டம் யாவையுமாய்ப்
பிண்டகண்டப் பேதப் பிறிவதுவாய்க் — கண்டுநின்ற
கண்ணா கமலக் கழலடியே னுக்களித்த
வண்ணா வடியேனைக் கா. (4)

உடம்போ டிருந்தே யுடம்பின்மை காணத்
திடந்தா னெனக்களித்த தேவே — யடங்காத
பேய்த்தேர்ச் சமயத்தார் பேரரலங் கேளாமை
தீர்த்தாய் சிறியேனைக் கா. (5)

ஒன்றுணரின் மெய்யே யுலகுணர லாமென்றங்
கொன்றுசொலி மன்றத்தி னுண்ணின்றே — குன்றலிலா
ஞானத்தாய் நல்ல நயனத்தாய் நால்வேத
கானத்தாய் நாயேனைக் கா. (6)

மார்க்கப் பிணக்காம் வழக்கறுக்க மன்றேறி
யார்க்கு மிறையறிவா மப்பொருளைப் — பார்த்துப்
பிணங்கா திருமினெனப் பேசிமழு வேந்து
மணங்கா வடியேனைக் கா. (7)

அஞ்ஞான வல்லசுர னுங்கமரு முப்புரத்தை
மெய்ஞ்ஞானத் தீயால் விழுங்குவித்துப் — பொய்ஞ்ஞா
கங்குல் கழித்தாய் கருதரிய பேருணர்வே [னக்
யெங்குமளித் தாயெனைநீ கா. (8)

பஞ்சவர்க்குச் சார்வதுவாய்ப் பற்றாத நூற்றுவரைத்
துஞ்சவிடத் துணித்துச் சொல்லிறந்த — வெஞ்சலிலா
ஞானத்தாய் நல்ல நயனத்தாய் நால்வேத
கானத்தாய் நாயேனைக் கா. (9)

மூலமே யென்றழைக்க முன்னின்றங் கோலலெனுங்
கோலமே செய்ய குருபரனே — ஞாலமே
விண்ணே பிறவே விரிந்தொடுங்க நின்றழியாக்
கண்ணே கடையேனைக் கா. (10)

ஐவா யரவமெனு மைம்புலனு நாகணையே
மெய்யாக மேவி விழித்துறங்கு — மையா
வறியேனை யாள வறிவுரு வாய்வந்த
செறிவே சிறியேனைக் கா. (11)

நனவாதி நாடுந் துரியமீ றுகச்
சொனநான் முகம்படைத்துத் தோன்றி — யினமேது
மில்லானே யேதுக்கட் கெட்டா வெழிலுருவா
நல்லானே நாயேனைக் கா. (12)

ஞானமதத் தாற்றருக்கி நாநா வறச்சிறி
யீனமத மாயையினை யீடழித்து — நானதற
நின்றுணரும் வாரணமே செக்குருகு மன்பருட
னென்றவெனைக் காத்திடுநீ யுற்று (13)

ஆறுமுக மெய்யே யமைந்தடைவார் தங்களுக்குக்
கூறும்வணம் வந்த குணக்குன்றே — வேறுநிகழ்
குன்றெறிந்தாய் குன்றலிலா வன்பருளங் கோயில்கொள
நன்றறிந்தாய் நாயேனைக் கா. (14)

மாது மருந்துண்ண வன்குழவி நோய்க்கதுபோ
ஞத வசோகத்து நன்கமைந்து — போதத்
திருகா வெறுவிகற்பச் சித்தமய நீர்த்த
வருகா வடியேனைக் கா. (15)

அவாவருத்தல் சாந்திமுத லாய்ந்ததெளி வென்னு
முவாமதிபோன் முக்குடைநின் றோங்கத் — தவாமதிபோய்
வீற்றிருந்தாய் வெம்பிறவி வேரோடும் வெந்துவிழ
வூற்றிருந்தா யுற்றெனைநீ கா. (16)

சொற்பயின்ற நற்கிளிபோற் சோராமை நூல்பலவுந்
தற்பயின்று * தர்க்கித் தனையுணரா — வற்பருக்குப்
பேயே யளித்தருளிப் பேரின் பெனக்களித்த
தாயே தமியேனைக் கா. (17)

---

* தர்க்கித்தென்பது = தர்க்கியென விகாரமாயிற்று.

நில்லா தவற்றை நிலையென் றுணராமை
யெல்லா மழியும்வண மெய்துவித்துப் - பொல்லாத
பித்தா முலகிற் பிணக்கறவொன் றாயுதித்த
புத்தா புலையேனைக் கா. (18)

கலைவேடர் கட்டுங் கதத்துவலைக் கெட்டா
நிலைவேட நெஞ்சினுளே காட்டிப் - பலவேட
மெல்லா மெழிலா ரடியராக் கண்டந்த
செல்வா சிறியேனைக் கா. (19)

அந்தமிலா வூழியெல்லா மாயொழிந்தே வந்ததெனப்
பந்தமெலாம விடப் பணிந்தருளி - நந்தலிலாச்
சோதி யெனக்குணரச் சொல்லாமற் சொல்லியவெம்
மாதி யடியேனைக் கா. (20)

அன்றுமுத லாக வடுத்தபொரு ளேவடிவா
யொன்று மறியா துழல்வேனை - நின்று
படியே சிவமாகப் பார்த்தெனையாட் கொண்ட
வடிவே யடியேனைக் கா. (21)

மடுவின் கரைமகவை வைத்ததாய் பார்வை
விடினங் கதுவிழுமா போலக் - கெடுவே
னுடையாய் திருக்குறிப்ப தோவியிடின் யார்க்குங்
கடையா மெனக்கருதிக் கா. (22)

தன்மத்த ராகுந் தவத்துளோர் தாநிற்க
வன்மைத் தனைத்தேடி வந்தாண்ட - வுன்மத்
துடையானே யொப்பொருவ ரில்லாத யார்க்குங்
கிடையானே கீழேனைக் கா. (23)

என்று மருளே யெனக்குடைமை யெம்பெருமாற்
கென்று மருளே யியல்பானா - லென்றுமுளத்
தெண்ணாமை யென்கடனா மேதுசெய்துங் காத்தருளக்
கண்ணாளா வுன்றன் கடன் (24)

93-வது, காப்புக்குறியுறைந்தல் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

தொண்ணூற்றிநான்காவது,

அதிசயப்பார்வை.

குறள் வெண் செந்துறை.

அருவாகியகண்டமுமாகி யானந்தமுமாகியபிரமங், குருவாயருள்செய்தமைபாரீர் கோதின்றிநிறைந்தமை பாரீர். (1)

விடியாவிருள்போயிடும்வண்ணம் வேதாந்தவிளக் கினையேற்றி, முடியாதிதிகண்டமைபாரீர் முத்திக்கரை சானமைபாரீர். (2)

செறிவாகியிருந்தவர்தாமே சீவன்சிவனென்ன விரண்டாய்ப், பிறியாவகைநின்றமைபாரீர் பிறவிப்பகை யற்றமைபாரீர். (3)

அறிவோடறியாமையிரண்டு மணுகாதணுகிச்சக மாகிப், பிறியாவகைநின்றமைபாரீர் பிறியிற்றனிலா தமைபாரீர். (4)

புரியாரரவானமைபோலே போகத்துலகங்களு தித்துத், தெரியாவகைநின்றமைபாரீர் தெரியிற்றெளி வானமைபாரீர். (5)

உலகம்மிரவாவதொழித்தெம் முணர்வேபகலாவ துணர்ந்து, கலகங்கடெளிந்தமைபாரீர் கருமங்கண் முடிந்தமைபாரீர். (6)

கன்னக்களர்தம்மையும்வீசுங் கண்வாய்முதலிந் திரியங்க, ளென்னைக்கவர்கின்றமைபாரீர் யானும்மத றிந்தமைபாரீர். (7)

ஊனாதியுளங்கடையாக வுணராமையினாலுளவாகி, நானாகியிருந்தமைபாரீர் நானும்மதறிந்தமைபாரீர். (8)

ஒடுவாசல்களொன்பதுடைத்தா யூனுகிவகுத்தசி றைக்கே, முடியாதிடுவேதனைபாரீர் மூலத்தனுகாதமை பாரீர். (9)

மங்கும்பிறவிக்கடன்மாய மதியென்னுமரக்கல மேற, வெங்குங்கரையானவமைபாரீ ரிமைப்பிற்பவமற் றமைபாரீர். (10)

அல்லற்றுவரும்பகலற்று வயலற்றறிவேவடிவாகிச், சொல்லற்றுளநின்றமைபாரீர் சுகமேவடிவானமைபாரீர். (11)

94.வது, அதிசயப்பார்வை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

தொண்ணூற்றைந்தாவது,

சிவப்பிரகாசசுவாமிகள்

அவனேநான்.

கலிவிருத்தம்.

என்னேயிப் பிறவிக்கே யிடைந்திடைந் திடுவேனைப்
பொன்னே யொத்திலங்கும் பூமச்சோதி கழல்சூட்டா
மின்னியொத் திடித்தாற்போல் வினையெல்லா மறுத்தபி
னன்னேயற் புதங்கேளா யவனேநா னேனே. (1)

அலைவாயில் வடுப்போலே யலைந்தலைந் தொருக்காலு
நிலையாத பிறவியை நிலைசெய்த படிகேளாய்
தலையாரப் பெருஞ்சோதி தாளிணை தரித்தபி
னலையாதங் கழிவில்லா வவனேநா னேனே. (2)

ஆடிதை யமாவாசி யலைகட லாடியுந்
தேடியு மோடியுந் திரிந்தேதுங் கண்டிலேன்
கூடிய வந்நாளிற் குரைகழ றரித்தபி
னாடியே தேடி யவனேநா னேனே. (3)

யாஞ்ச பவுதிகமாம் பரிணாம வுபாதிக்கே
மாஞ்சேது மறியாதே மயல்கொண்டு திரிந்தெங்கு
மோஞ்சேனைப் பெருஞ்சோதி யுணர்வேயென் றுணர்த்திட
வாஞ்சேயா னந்தமா மவனேநா னானேனே. (4)

கற்பனை தவமென்று கலைவீசு மாந்தர்த
முற்பனக் குழியிலே யுழைத்துணர் விலியேனை
நிற்பன திரிவன நீயேகா ணெனச்சொன்ன
வற்புதங் கண்டபி னவனேநா னானேனே. (5)

தோன்றிய வுடலுக்குந் துரகமா மனத்துக்குஞ்
சான்றாகிச் சலியாதே நின்றதற் சுரூபத்தை
யூன்றவென் மனத்திடை யுத்தம னுரைத்தபின்
னான்றேசஞ் சலமின்றி யவனேநா னானேனே. (6)

செறிவான வடிவினைச் ஸ்ரீபுரு ஷோத்தம
னெறியான மறையாலே நேதிநேதி யென்றுபின்
பிறியாத பேரின்பப் பிரமமே நீயென்றென்
னறியாமை தவிர்த்தபி னவனேநா னானேனே. (7)

பண்டைநான் முகனாரும் பரந்தநல் லுலகமுங்
கண்டவை நரகென்று கழித்தவர்க் கருள்செய்தான்
விண்டலர் பொழில்சூழும் விரையந் தணனாய்வந்
தண்டமுநீ யென்ன வவனேநா னானேனே. (8)

ஓராமை யேமூல முலகுக்கென் றுணராதே
பேராசை யுள்புக்குப் பிரமித்துத் திரிவேனை
வாராயென் றருள்செய்து மறைசொன்ன பிரமமு
மாராயி னீயென்ன வவனேநா னானேனே. (9)

அடியொடு முடிவினை யாராயி னிலையாகுங்
குடியொடு பதிகுலங் கோத்திர சூத்திரச்
செடியினை யறுத்திட்ட ஸ்ரீபுரு ஷோத்தம
னடியிணை சேர்ந்தபின் னவனேநா னானேனே. (10)

போதுக்கு மொளியான பூமநற் சோதிதன்
பாதத்தே பணிமாறத் தொடுத்தசொற் றொடைபத்துங்
கோதற்ற மனத்தார்கள் குருபர னருளாலே
வாதற்ற பிரமமே வடிவாகி யிருப்பாரே. (11)

95-வது, அவனேதான் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

தொண்ணூற்றாறாவது,

அவித்தியாப்பிரலாபம்.

எண்சீர்க்கழிநெடிலடியால்வந்தஆசிரியவிருத்தம்.

அறிவென்றோ ராண்மகனா ளவையறி யாதே
யவிச்சையெனும் பேதையேனு மவர்க்குமுன் னப்புகுந்தே
நெறிநின்று நெடுநாளெல்லா மென்னோடே நல்கி
கேயமெனும் விலக்குமாய் நின்றதற்குப் பின்பு
பொறியைந்தும் புலனைந்தும் பூமிமுத லைந்தும்
புந்திமன மாதிநாலும் புரியும்வாயு வைந்து
மெறிகின்ற விருவத்து நால்வரையும் பெற்றே
னென்னைவிடா வினையாளோடே போனார்காணு மாண்டே

பொய்யான வுறவாலே புத்திரரு முண்டாய்ப்
பூமிதனி னென்னைப் புறப்படவே புகுந்தேன்
மெய்யான வுறவாலே மிக்கவனை விரும்பி
வீடுகெட்டு வினைவுகெட்டு வேற்றுடம்பே யானா
ரையையோவிவ் வார்த்தைதனைச் சாற்றலாவ தொன்றோ
தம்பாவ மனைத்தினையுந் தள்ளிவிட்ட தன்மை
யையோவிவ் வாண்மகனா ரவனைவிடா ராண்டே
யவிச்சைகுல நசித்தாலன்றி யவனைவிடா ராண்டே. (2)

என்னையணம் புணர்ந்தநாளே யிரட்டைவளை யிட்டா
னேகனு யிருந்தவனே யனேகனுமிங் கானு
னன்னைசொல்லை மறுப்பானோ ராங்காரன் பிறந்தா
னந்தரமே யவர்க்குநல்ல வாசையையும் பெற்றேன்
பின்னையிச்சை புகுந்ததற்பின் பேர்த்திடவுந் தவிர்ந்தான்
பேதையேனு மிவர்க்குச்செய்த பிழைகண்டி லேனிதன்
முன்னமிவ ரெனக்குச்சால நல்லர்கிடீ ராண்டே [முன்
முகமாய மிடுவதன்மு னல்லர்கிடீ ராண்டே. (3)

சாந்தியொடு தாந்தியெனும் பாங்கியர்கள் சூழத்
தற்பரமா மறிவினொடே சமாதியிலே புகுந்தான்
பேர்க்கிடுதல் பறைந்திடுதல் பிறிந்தொருகாற் பாரான்
பிச்சியெனப் பிதற்றவிட்டுப் பேசாதே யிருப்பன்
றேர்ந்திரியே யமையாதோ செகத்திலுள்ளீ ரெனக்குச்
சிலவரோடே யோரஞ்செய்து சிவிப்பதிற் காட்டி
லோர்ந்திடிலிங் குரைக்கலாவ தொன்றுமில்லை யாண்டே
யோரமென்னும் பெருந்தீயில் வீழ்வதல்லா லாண்டே. (4)

அருவாகி யிருந்தவருக் கென்னொடடை யடைவா
லகிலமெல்லாம் படைத்தளிக்கு மாண்மைதனைக் கொடுத்
தொருவராலு முடியாத வுதவிதனைச் செய்தே [தே
தொருநாளென் குடிலகத்தி னடந்தாலோடிப் போவ
ரிருவர்புக்கார்க் கிதற்குமுன்ன மிவைகண்டது மில்லை
யென்னுடைய பொறையினாலே யிதுநாளிங்ங னடந்தேன்
புருடரிவ ராகையாலே பொறுத்தேன்கானு மாண்டே
பூண்முலையா ரிவைகள்செயப் பொறுப்பரோதானுண்டே (5)

எங்குமெங்கு மிவர்க்குநல்ல வின்னமிழ்தா யிருப்பே
னிகலோக பரலோக மென்னதல்லா லில்லை
யங்கங்கே வற்றையுண்டிட் டவளோடே யிருப்ப
ராண்மகனர் செய்யுங்குண மாற்றலாவ தொன்றோ
கொங்கைநல்லா ளிடுமருந்தாற் குணமிலியு மானுன்
கொச்சையேனு மிச்சித்தக்காற் கூடலாவ துண்டோ
வங்கணரென் குடில்வாயி லயர்த்தார்கானு மாண்டே
யவர்க்கிளையா ளந்தரங்க மானாள்கானு மாண்டே. (6)

அத்தலைக்கு மித்தலைக்கு மொத்திருக்கச் செய்தே
யாண்மகனார்க் கொருதவசி யறிவுசொலப் புகுந்தா
னித்தலையி லுறவறுத்தா னிளையவளைக் கொண்டே
யிதுவுமென்றன் விதிவசமோ வென்றிருந்தேன் சிலநா
ளத்தலையி லுறவினையு மப்படியே யறுத்தா
னாண்டிசெய்த வழகுதன்னை யார்க்குச் சொல்லுவேனான்
னொருத்தறுத்துச் சோதிவடி வாக்குவாரே பெண்ணே
சோதிக்குளே நாமும்புகத் துரியமில்லை காணே. (7)

சாக்கியாகி யவரங்ஙன் சலியாதே யிருக்கச்
சகமனைத்துஞ் சந்நிதிக்கே சாய்ச்சுகொடே போந்தேன்
பாக்கியமில் லாமையாலே பயல்களையும் பாரான்
பசித்தாலும் பயிக்கம்பண்ணப் பார்த்துக்கொடே யிருப்பன்
வாக்கினுக்கு மனத்தினுக்கு மெட்டாத நிலத்தே
மறையவளைக் கொடுபுக்கே வைச்சுக்கொடே யிருப்ப
னாக்கினாரே யழிப்பாரானாற் றடுக்கலாமோ வாண்டே
யடையக்குல நசிப்பதிங்ங னறிந்தோமே யாண்டே. (8)

அன்றிவன் வசத்தினொடு சத்துமல வாகி
யாண்மகனார் வெறுத்தவன்றே யநிருபதி யானே
னின்றெனக்குச் சனித்தனவு மிப்படியே யானா
லேந்திழையீ ரென்சொலுவே னிந்தக்கேடு தனக்கு
வொன்றிடனா லுலகுதனி லொருத்தியைப் போலிருப்ப
னோருபாயங் காணேனா லுணர்வுபுக்க பின்னை
யென்றுமிளை யவளைப்பார்த் திடுவர்காணு மாண்டே
யென்னைக் கடைக்கண்ணாலும் பாரார்காணு மாண்டே. (9)

அச்சட்டையா லன்னமேறி யகிலமாக வென்றிட்
டன்புடைய குணத்தினாலே யகிலமெலாம் படைத்தா
னச்சட்டையாற் புள்ளையேறி யுலகமெலாங் காக்கு
மொளியுடைய குணத்தினாலே யுவமையிலி யானான்
மச்சட்டையா லெருத்தையேறி யுலகமெலா மாள
மாயக்குணந் தானான வள்ளலெனைப் பாரா [டே
னொச்சட்டையா லுணர்வுதோன்றி யுண்மையானா ராண்
யோமுமிட்டுத் துரியமாக வுணர்ந்தார்காணு மாண்டே. (10)

96-வது, அவித்தியாப்பிரலாப முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

தொண்ணூற்றேழாவது,

* பாண்டியுரைவாரம்.

குறள்வெண்செந்துறை

ஏற்றப்பானைபோலிவ்வுடலை, யென்றுமென்றுநீரிற் றோய்த்தக்காலும், பேர்த்துப்பேர்த்துமிதுவூத்தையன்றோ, பேதமறுத்திடவற்றோசொல்லீர். (1)

அல்லலுடலைக்கழித்து, அறிவேவடிவென்றுணர்ந் திருப்பார்க்குச், சொல்லக்கடவதொன்றுண்டோ, சுருதி கடூற்றியளவிறந்தத்தை. (2)

கானலைநீரென்றுணர்ந்த, கரையுந்திரையுநுரையுங் கண்டாற்போற், றனல்லாவூனத்தாணுக்கிச், சாத்திர கோத்திரஞ்சாற்றுகின்றாரே. (3)

புத்திவிகற்பத்தைவிட்டுப், போதவடிவென்றுணர்ந் திருப்பார்க்கு, வித்தைகூத்தாடல்வேண்டுமோ, விரவி யுதித்தாலிருள்போமிடத்து. (4)

பரிதியொருவனுதிக்கப், பலகோடியண்டங்கள்பேத மானாற்போற், சுருதிமுடிவிலுதிக்கச், சொல்லும்பொரு ளுந்துலங்கிடுங்காணே. (5)

---

* பாண்டியுரைவாரமென்பது = பாண்டித்தியவுரையாம்.

பாத்திரபேதத்தினலே, பலகோடிபிரவிகள்பேதமா னற்போ, னேத்திரமானபிரம, நிகரிற்ப்ரபஞ்சமுமா யுதித்தானே. (6)

மதியைக்குறிப்பதிலக்காய், மாமரத்துச்சியைக் காட்டினற்போற், பதியைக்குறிப்பதிலக்காய்ப், பஞ்ச கோசச்சட்டைசாத்தினரே. (7)

செகத்தெங்குநிறைந்தவச்சிவனர்தம்மைச், சிந்தையி லன்றித்தெளிவுறார்காண், முகத்தைமுகத்தாலேகாண லாமோ, முன்கைபிற்கண்ணடிதாநெழிய. (8)

ஊனிலேயொன்பதுவாசல்விட்டங், கொருவனைக் காவலிருத்திவைத்து, வூனிலொருவனும்போனவாறே, யொன்பதுவாசலுநாய்புகுங்காணே. (9)

ஓங்குமுடியைத்தலையில்வைக்க, வுலகமெல்லாமரசாளு மாப்போ, லாங்காரந்தனையறிவோடேகூட்ட, வகிலமு நாமாயிருக்கலாமே. (10)

நெஞ்சிலேகட்டையடுக்கவிட்டு, நீட்டிநிமிர்ந்து கிடப்பதன்முன், னஞ்சையுமுள்ளேயடக்கிக்கொண்டு, யானந்தமாயறிவாகவல்லீரே. (11)

அம்மையுமப்பனுங்கண்டிருக்க, வந்தகனுருயிர்கொள்வ தன்முன்ன, மும்மையுமூனையும்வேறதாக, வுள்ளபொழு தேயுணரவல்லீரே. (12)

மக்களுங்கத்தமனைவிகத்த, மாயவுடலெரிகொள்வ தன்முன்ன, நிட்களமானவறிவுதன்னை, நும்வடிவாக நினையவல்லீரே. (13)

இருவினைப்பாசங்கழுத்தினிலிட், டேறவிறங்கவிழுப் பதன்முன்னங், குருவினைச்சென்றுபணிவீராகிற், கோதி லறிவோடேகூடலாமே. (14)

போதவடிவைமறந்து, பூமிக்கேவந்துபிறந்தவாறே, தாதாதவசியென்றேசிச், சங்கேதித்துத்தம்வடிவிழந்தாரே. (15)

தன்மயமானவுணர்வயத்துத், தரணியில்வந்துபிறந்தவாறே, யென்மகனென்றெடுத்துக்கொள்ள, யானுன்மகனென்றிசைந்திருந்தாரே. (16)

தளையுமிரண்டுளதன்டொன்றத்தைத்; தாயேயிடுவாருந்தாங்குவாருங், களையும்படியறியாமையாலே, காவித்திருந்தவாகண்டுகொள்ளீரே. (17)

வானாதிபூதங்கடோற்றுகைக்கும், வான்கருத்தும்புலன்றோற்றுகைக்கு, மூனாதிபேதங்கடோற்றுகைக்கு, மூண்மையுமாயுணர்வாயிருந்தானே. (18)

போதுபுலர்ந்துபுகுந்தனையும், புத்தியையெங்கேனும்போகவிட்டுத், தூதுவர்வந்துபுகுந்தவாறே, துடைகள்பறக்கத்துடங்கினாரே. (19)

கொத்தமுதலியொருவனுள்ளனவன், கொள்வதுமில்லைக்கொடுப்பதுமில்லைப், பத்துக்கூலிபத்துச்சேவகருமவன், பார்வையாலேபடையாயினாரே. (20)

கொல்லும்புலிபோலுயிர்பருகுங், கூற்றத்தின்வாயிற்குறுகிடாதே, சொல்லுமனமுமிறந்துநின்ற, சோதிகளென்றுசுகிக்கவல்லீரே. (21)

96-வது, பாண்டியுரைவார மூற்றுப்பெற்றது.

சிவமயம்.

தொண்ணூற்றெட்டாவது,

பார்ப்பானும், பறைச்சியும்.

குறள் வெண் செந்துறை.

அன்னமயமீதுடம்பு யறிவானந்தபோதமேயெங்கு, மென்னேபிராமணனீரே யேறப்போவென்குதிங்காரை. (1)

சோதியாய்நின்றதிங்கொன்று சொல்லுமுடம்பிது சோறு, சாதியாய்நின்றதிங்கேது சாயப்போவென்குதிங்காரை. (2)

பூண்டவுடம்பிதுபூதம் பரிபூரணமானதுபோத, மாண்டேபிராமணனீரே யகலப்போவென்குதிங்காரை. (3)

சுக்கிலஞ்சோணிதமன்றித் தோற்றுங்குலமுண்டோ சொல்லீ, ரெக்குலநல்லதென்னுதே யேறப்போவென்குதிங்காரை (4)

இறைச்சியெலும்புதோலன்றி யெனக்குமுனக்கும் வேறுண்டோ, பறைச்சிபோவென்னாண்டாய்பார்ப்பான் பண்டேநீபேய்கொண்டாயாதே. (5)

இருவருமொருவழிபோகச்சே யேறப்பாராய் பார்ப்பானெனைவிலங்கென்றா, னிருவர்விலங்கிலும்வழி விலங்காதென்றே னெத்தாலென்றானுமத்தாலென்றேன் (6)

உடலுக்குடல்பொய்யல்லவொன்றோ யுண்ணின்ற சோதிவிலங்கவொன்றோ, வுடலைப்பிராமணனீரே யகலப் போவென்குதிங்காரை. (7)

98-வது, பார்ப்பானும், பறைச்சியும் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

தொண்ணூற்றொன்பதாவது.

பறைச்சியும் பறையனும்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பரமான மதுவுண்டு பரவச னும்படி
பாதங்க டலைந்தா ராரேடா பறையா
வரமான குணமூன்று மழியவே யருள்செய்த
வானந்த நாடனென் றறியாயோ பறைச்சி. (1)

மெய்ஞ்ஞான மதுவுண்டு மெய்ம்மறந் திருக்கவே
மேலான பதந்தந்தா ராரேடா பறையா
வஞ்ஞான மழியவே யறிவினை யருள்செய்க
வானந்த நாடனென் றறியாயோ பறைச்சி. (2)

எண்ணிறந்த நரம்புகளு மிறைச்சிகளு முடைய
விந்திரியப் பொந்திரிய வழித்தாரார் பறையா
கண்ணெதிரே யெழுந்தருளிக் கலியுகத்தின் றெடுத்துக்
கரையேற விட்டாரென் றறியாயோ பறைச்சி. (3)

ஏற்றத்தாழ் வின்றிவரம் பொன்றுங் காணாமே
யெங்கும் போதவெள்ள மாவானேன் பறையா
வாற்றைத் தலையிலே தேக்கினான் காலிலே
யடைய வொதுக்கினேன் காணேடி பறைச்சி. (4)

சோதிமந் திரமுண்டு சுகியாமே சுகிக்கின்ற
வாதிமந் திரந்தந்தா ராரேடா பறையா
வாதியந் தமுமில்லா வறிவானந் தத்தேவர்
பாதமென் றலைதந்த தறியாயோ பறைச்சி. (5)

தன்னைத்தா னறியாத சாதியை மிகவுண்ணத்
தாளிணை தலைமிசை தந்தாரார் பறையா
யன்னத்தால் வருங்கோச மறிவன் றென்றிடு
மானந்த நாடனென் றறியாயோ பறைச்சி. (6)

கருமறை யும்படி திருமந் திரமுண்டு
களிக்கவே பதந்தந்தா ராரேடா பறையா
வருமறை முடிவிலு மறியவொண் ணாதிடு
மானந்த நாடனென் றறியாயோ பறைச்சி. (7)

ஊனைக் கழித்துண்மை யாமந் திரமுண்ண
யுபதேசந் தந்தவ ராரேடா பறையா
வானைக் கருள்செய்ய வன்றுவந் துதவிய
வானந்த நாடனென் றறியாயோ பறைச்சி. (8)

இருவினை யானது வேரறப் பார்த்துன்னை
யிப்பிறப் பறுத்தவ ராரேடா பறையா
சுருதிக டேடியு மறியவொண் ணாதவத்
துய்யநற் சோதியார் காணேடி பறைச்சி. (9)

அன்றான வறிவுதந் தறியாமை தனைப்போக்கி
யகம்பிர்ம முனக்களித்தா ராரேடா பறையா
குன்றாத மெய்ஞ்ஞான நன்றாக வருள்செய்யுங்
கோதில்சுக வப்பனென் றறியாயோ பறைச்சி. (10)

சாதிகுல பேதமறச் சங்கை யறத்தெரிந்து
சந்தான வுபதேசந் தந்தாரார் பறையா
நீதியினா லுணர்வேயாய் நித்தசுத்த மாகிய
நின்மலனா மப்பனென் றறியாயோ பறைச்சி. (11)

குன்றாத மெய்ஞ்ஞானங் கொணர்ந்துனக் கருள்செய்திங்
கொன்றான வுண்மையை யுரைத்தாரார் பறையா
சென்றார்தம் போதத்தைத் தெளிவுறக் கண்டிடி
லன்றாயு மவனென்றிட் டறியாயோ பறைச்சி. (12)

பறைச்சியும் பறையனும் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூறாவது,

சாற்றுபறை,

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பொன்னையொழி யச் *சவடி காறையிலை யார்ப்போற்
புவனங்கள் பதினாலு மிருந்தபடி பார்க்கி
லென்னையொழி யப்புவன மேதுமிலை யென்றிட்
டிரவுபக லனவரத மறையு*மேடா பறையை. (1)

ஆங்கார வன்னியறை யாசழியப் பொருதிட்
டவருடைய மைந்தரையு மறவச் சிறைவைத்து
வோங்கார வடிவான துண்மையிதே யென்றிட்
டுலகுதொறு மோயாதே யறையுமேடா பறையை. (2)

இயமமென நியமமென விரட்டைமதி விட்டு
விதயபுண்ட ரீகமெனு மில்லதனுக் குள்ளே
யயனைமுத லமரரெலா மடிகள்பணிந் தேற்ற
வறிவுகிட ராசராசென் றறையுமேடா பறையை. (3)

ஊனைவடி வாகவுண ரும்மதியை விட்டு
வுண்மையுண ரும்மதியை யுள்ளுறவே நிறுத்தி
ஞானவடி வானவனை நானவனே யென்று
நாடோறு நாடோறு மறையுமேடா பறையை. (4)

ஏதுமலா வறிவதனன் யான்பறையோ னென்றிட்
டெருதுபோ லேயாகா திகன்மதன்ம மெடுத்துப்
பேதமெனும் படுகுழியில் விழுந்துபல பிதற்றும்
பித்தனையு மறுத்தோமென் றறையுமேடா பறையை. (5)

---

*சவடி இத்தேசத்தில் சவளியென வழங்குகின்றது.

*எடாவென்பது எடாவென பன்மையொருமையாய் வந்த வழுவமைதி

எடுப்பதொன்று மிடுவதொன்று மன்றுகிடீர் பிரம
மேழைச்சன முழுன்றனுக்கு மாயத்தானம் போலே
கொடுப்பதொன்றுங் கொள்வதொன்று மன்றுகிடீர் பிரமங்
கோதிலறி வானதென் றறையுமேடா பறையை. (6)

அறிவான வடிவுதனை யறியாமை மறைத்திட்
டகமனித னென்றிடுமவ் வவமானங் கழிய
நெறியான வறிவுதரு நின்மலனு ரருளா
னித்தசுத்த மானேனென் றறையுமேடா பறையை. (7)

வானாதி பூதமெல்லா மாயையாலே வளர்த்து
வடிவுதொறு மறிவாகி வளர்வுகுறை வின்றித்
தானேயா யுலகனைத்துந் தன்னில்வே றில்லைத்
தான்சேரா னுலகமென்று சாற்றுமேடா பறையை (8)

பொய்யாய மாயையினைப் புவனமுழு தாக்கிப்
புத்தியெனு மந்திரிதனோடுபுவி யாள
மெய்யாய வறிவுகிடீ ரரசாள்வ தென்று
வீதிதொறும் விளங்கிடவே யறையுமேடா பறையை.(9)

புகழிலங்கு மறிவானும் பூமச்சோதி யருளாற்
புவனங்கள் பதினாலும் பொய்யெனவே யுணர்ந்து
துகளின்மறைத் தமிழ்மாலை பத்தினையுந் தொடுத்துத்
தோளின்மிகச் சாத்தினேனென் றறையு மேடா பறையை. (10)

சாற்றுபறை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றொன்றுவது,

திருவுந்தியார்.

கலித்தாழிசை.

அஞ்ஞான காரிய மனைத்தையு மறவிட்டு
விஞ்ஞான மானோமென் றுந்தீபற
வெளியாகி நின்றோமென் றுந்தீபற. (1)

முடியாத பிறவிகண் முடிந்திட மாயையைத்
துடியாம லறுத்தோமென் றுந்தீபற
துரிசற்று நின்றோமென் றுந்தீபற. (2)

போதத்தை யுணராதே பொல்லாத மாயையாற்
பேதத்தை யுணர்ந்தோமென் றுந்தீபற
பேதமும் பிரமமென் றுந்தீபற. (3)

முன்செய் தவத்திலே முயன்றவப் பெருமையாற்
பின்சாதி கழிந்தோமென் றுந்தீபற
பிரமமே யானோமென் றுந்தீபற. (4)

அதுவேகா ணிதுவென்றொன் றுரியனருள்செய்ய
விதுவது வாகுமென் றுந்தீபற
விலக்கணை புகுந்ததென் றுந்தீபற. (5)

தொம்பதந் தனிலுள்ள துகளினை யறுத்தக்காற்
றம்பத மறிவேயென் றுந்தீபற
தாக்கற்று நின்றோமென் றுந்தீபற. (6)

தற்பதந் தன்னினுஞ் சபளத்தைக் கழித்தக்கா
னிற்பது போதமென் றுந்தீபற
நீக்கியொன் றில்லையென் றுந்தீபற. (7)

அசிபதந் தனக்குள்ளே யவனேகா ணிவனென்ன
வுசிவத்தொன் றுரேனுமென் றுந்தீபற
வொழிவற நிறைந்ததென் றுந்தீபற. (8)

பாக்கியத் தாலேநாம் பழமறை மொழிந்திட்ட
வாக்கியங் கேட்டோமென் றுந்தீபற.
வரவுபோக் கற்றோமென் றுந்தீபற. (9)

அக்கண மறிவாக வடியிணை தருவார்க்குத்
தெக்கணை காணேமென் றுந்தீபற.
செய்வதொன் றில்லையென் றுந்தீபற. (10)

*உந்தி பறபெண்கா ளுந்தீபற
வுணர்வோ மாணேமென் றுந்தீபற.

திருவுந்தியார் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிரண்டாவது

அனுபவமாலை,

இரட்டைக்குறள் வெண்செந்துறை

பொங்கு கானல் புனலாய வண்ணமும்
போத மேபேத மாகி யதுபுரிந்
தெங்கு நாமறி வாகி யிருந்ததா
லீதென் றீ தென்றன லாவ துண்டோ. (1)

---

*உந்தீபறபெண்காளென்பது-ஒருமை பன்மையாய் வந்த வழுவமைதி.

சமய மாறுக்குஞ் சத்தா மொளியதாய்ச்
சாக்ஷி யாகி யிருந்த விடத்திலே
யமையு மாசை யவற்றிற் பிதற்றைவிட்
டாறி னருக் கலைந்தலை தானுண்டோ. (2)

அஞ்சு கோச வரணை யழித்திட்டு
வானந்த வறி வாகிய வாசையும்
வஞ்ச மாகு மதுவிட்டு வாழ்வார்க்கு
மாய வாழ்வை மதிப்ப தினியுண்டோ. (3)

கலவி யென்பதோர் கட்டை யறுத்துக்
காமன் வாழுங் கருக்குழித் தூர்த்தே
யலையிலா வுணர் வாயிட் டிருந்தா
லமரர் வாழ்பதி யிற்புக வுண்டோ. (4)

காம கோபப் பெருங்புலி வாழுங்
கன்ம காண்ட மெனுங்காடு வெட்டி
யோமெ னும்பொரு டன்னை யுணர்ந்தே
யுண்மை யானோர்க் கொருகுறை யுண்டோ. (5)

தோற்று மாயத் துவக்கை யறுத்துத்
துய்ய போதச் சுகத்தினை யுண்டு
காற்றி லாவிடங் கண்டிட் டிருந்தாற்
கற்ப னையின் கருத்தழி யாதோ. (6)

வான ழிந்து மகானு மழிந்துபின்
மாயை தானு மழிந்து வழக்கற
நான ழிந்துபின் னனது வானு
னை னென்பதோர் நாசந்தா னுண்டோ. (7)

சுருதி யந்தமாஞ் சுத்த சுகத்தைச்
சோம்பை விட்டுச் செவியாரக் கேட்டு
மிருதி யாற்றெளி வாக வுணர்ந்தான்
மீண்டுபோ தென்னும் வேதனை யுண்டோ. (8)

எரியின் முன்னவ நீத மதுபோ
லெல்லா மேகபோ கத்தி னுருக்கிச்
சரிவி லாதசச் சித்தா யிருந்தாற்
ருமியா மென்னுந் தங்குத லுண்டோ. (9)

போக்கி னோடு வரவு மிறந்து
பூரண போதம தாகிப் பொலிந்து
வாக்கி னோடு மனமு மிறந்தால்
வாசகஞ் செய்ய லாவதொன் றுண்டோ. (10)

அனுபவ மாலை யையி ரண்டையு
மத்தன் பூமனற் சோதிதாள் சாத்தி
யுனு பவவழி மாள வுரைத்த
வொப்பி லாதார்க் கொருகுறை யுண்டோ. (11)

அனுபவமாலை முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்று மூன்றுவது,

அறிவு.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

போகாத மாயையைப் போக்கிட லாவதும்
புண்ணிய பாவம் புறத்திட லாவது
மாகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. (1)

என்னிலே யாவையுங் கண்டிட லாவதும்
யாவையு ளென்னையுங் கண்டிட லாவது
மன்னியங் கண்டிலோ மென்றிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. (2)

மோகாதி யெல்லா முறிந்திட லாவது
முற்றுமுற் கன்மங்க ளற்றிட லாவது
மாகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. (3)

இந்தப் பிறப்பினின் றேறிட லாவது
மேகாந்த மாகி யிருந்திட லாவது
மந்தக் கரண மறுத்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. (4)

நற்செய் தவங்களு மற்றிட லாவது
நானெனு மாங்கார நச்சற லாவது
மற்சனை யெல்லா மறவிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ. (5)

அறிவு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றுநான்காவது,

*தச்சராண்டு.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

என்னை யறியா வறியாமை போயிட
வேகமா யின்ப மெனக்கே யருள்செய்து
பின்ன மில்லாத பிரமநீ யென்றிடப்
பேச்சற்ற மெய்பொரு ளானேமே யப்பா. (1)

*தச்சராண்டென்பதோர் கூட்டம்.

கண்ட கருக்குழி மாளும் படிக்குக்
கருணையி னாற்கலந் தாண்டு கொண்டு
பண்டை வடிவது நீயானா யென்றிட்டுப்
பார்க்கப் பரமா யிருந்தோமே யப்பா. (2)

கருதும் பொருளிவை யெல்லா மெல்லாங்
கானலி னீரென்று சொல்லிச் சொல்லி
யொருவ னுணர்த்த வுணர்ந்தங் குணர்ந்தவ்
வொப்பற்ற மெய்ப்பொரு ளானோமே யப்பா. (3)

தப்பா மறைப்பொரு டன்னை முன்னைத்
தானே யெனக்குத் தலைவ னளித்திட
வொப்போத லில்லா வுணர்வேநா னானபின்
னொன்றிய மெய்ப்பொரு ளானோமே யப்பா. (4)

பேதப் பிணக்கற வெண்ணி யெண்ணிப்
பேராத துன்பப் பிறவி யறுத்திடும்
போதப் பொருளே யுணர்த்த வுணர்த்தப்
பொய்யிலா மெய்ப்பொரு ளானோமே யப்பா. (5)

தேடுந் தனமுந் திடமாம் பிராணனுங்
கூடு முடலுங் குருபர னார்க்கென்று
பாடு மறையின் படிபரன் கைக்கொள்ள
நீடும் பரமாகி நின்றோமே யப்பா. (6)

தோற்று முலகவை யெல்லா மெல்லாந்
தோற்றா திருக்குஞ் சுகமேவடி வென்னப்
பேற்று முறையுங் கடந்து நடந்த
பிரமமே நாமா யிருந்தோமே யப்பா. (7)

அத்தி கிரியினு மன்ப ரறிவினு
மாதி யருளாளர் தாமா யிருக்கவே
யெத்திசைக் கேதெய்வ முண்டென்று சொல்லிடு
மேழையர் தங்காசு கொள்ளோமே யப்பா. (8)

அண்ட மனைத்துமாய் நின்ற பரனார்த
மாகம வாக்கியந் தன்னை யுணராதே
பிண்ட மதனையே நானென்று பேசிடும்
பேதையர் தங்காசு கொள்ளோமே யப்பா. (9)

கூடும் பரனுங் குருபரன் பாதமே
நீடு மடியவர் நெஞ்சத்து ணின்றிடத்
தேடுந் தனமுஞ் செகமுந்தான் மெய்யென்று
நாடு மவர்காசு கொள்ளோமே யப்பா. (10)

தூச்சராண்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றைந்தாவது,

பாம்பாட்டு.

குறள் வெண்செந்துறை.

ஆதியு மந்தமு மேதுமில் லாவறி
வானந்தத் தேவ ராணை யாணை
சோதியுட் சோதிநா மானே மென்று
சுருதிகள் பாடநின் றாடாய் பாம்பே. (1)

சுருதியுங் கருதிடாச் சுகமேகா ணீயென்று
சொல்லாதே சொன்னவ ராணை யாணை
கருதிய வுலகினிற் கற்பனைக ளெல்லாங்
கானலி னீரென்றே யாடாய் பாம்பே. (2)

ஆங்கார மோகங்க டாமே கழிய
வடியிணை சூட்டினா ராணை யாணை
யோங்காரத் துட்பொரு ளாகி நின்ற
வுண்மைநா மானேனென் றாடாய் பாம்பே. (3)

நாரிய ரென்னும் வலையிற் பட்டு
நானென தென்னா நகுவ றீர
வாரியன் வந்தடி வைத்த போதே
யானந்த மானேனென் றாடாய் பாம்பே. (4)

மனமுத லான கரண மெல்லா
மாய வருள்செய்தா ராணை யாணை
நனவிலுங் கனவிலுஞ் சுழுத்தி யிலு
நானேதா னானேனென் றாடாய் பாம்பே. (5)

கடையிற் சரக்கினை கண்டு நான்போய்க்
காதலித் தெங்குங் கழிந்தி டாதே
மடியிற் சரக்கினை காட்டித் தந்த
மாமறை பாடநின் றாடாய் பாம்பே. (6)

ஒக்கலைப் பிள்ளை யுடனி ருக்க
வூரெங்குந் தேடி யுழலு வேனை
யக்கணம் பிள்ளையைக் காட்டித் தந்த
வாசானைப் பாடிநின் றாடாய் பாம்பே. (7)

சந்திக டோறுங் குடைவி ரித்துத்
தப்புக்கை கொட்டும் பிடார னல்லேன்
புந்தியுள் ளேயுறப் பார்த்த போதே
போக்கிட மற்றேனென் றாடாய் பாம்பே. (8)

கோசங்க ளென்னுங் குடமு ருட்டிக்
குலநல மென்னுங் கொடிய றுத்துப்
பாசங்க ளென்கின்ற பற்கள் வாங்கிப்
பார்ப்பறப் பார்த்தோமென் றாடாய் பாம்பே. (9)

அப்பத மிப்பத மென்றி ரண்டி
ஞசங்கை தீர்த்தவ ராணை யாணை
தற்பதந் தொம்பதந் தாம்பு றம்பாய்த்
தன்மய மானேமென் ருடாய் பாம்பே. (10)

பிறவிக ளென்னும் பெருங்க டலைப்
பிறகிட்டுப் போந்தவ ராணை யாணை
திறவிய தேசிகன் சேவடி யைச்
சேராதே சேர்ந்தோமென் ருடாய் பாம்பே. (11)

அஞ்சு முகமுடைப் பாம்பி னீரே
யாராயி னும்முக மொன்றே காணுந்
துஞ்சவ தில்லாத் துரிய நாமே
தோன்ருதே தோன்றிநின் ருடாய் பாம்பே. (12)

பாம்பாட்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்ருருவது,

நையாண்டி.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

ஆரணந் தேடற் கரியா னொருபையல்
பேராமை காட்டிப் பிறவா தனசொன்னன். (1)

நாணு தனசொல்லி நாண மழித்தென்னை
காணுது காட்டிக் கழித்தானு னென்செய்வேன். (2)

நில்லா வுபாதி நிலையேநீ யென்றிட்டுச்
சொல்லாது சொல்லித் துவக்கை யறுத்தானே. (3)

முடிவு நடுவு முதலுமில் லாப்பைய
லடியை நினைவுற வானந்த மானேனே. (4)

சுருதிக டேடியுந் தோன்றாத பையலார்
கருதிய நீயென்னைக் காலாலே பாய்ந்தானே. (5)

வரையொன் றி லாப்பையல் வார்த்தையைக் கேட்டுநா
னுரையொன்றுங் காணாத வுன்மத்த னானேனே. (6)

எட்டா நிலத்தே யிருப்பா னொருபையல்
கட்டின தெல்லாங் கழித்தா னென்செய்வேன். (7)

பேச்சு முறையும் பிறவு மறுத்தென்னைத்
தோய்ச்சு மொளியிலே தோய்ச்சாமெய் செய்தானே.(8)

விதியாலே காடேறி விறகோடே போவேனைப்
புதியானோ ராண்பிள்ளை போகாய் வாராயென்றான். (9)

கரியா முடம்போடே கடைகொள்ளப் போவேனைப்
பெரியானோ ராண்பிள்ளை பிறவாதெல்லாஞ் சொன்னான்.

விள்ளேன் விள்ளேனென்று வேண்டிற்றெல் லாஞ்சொல்லி
யுள்ளே கொடுபுக் குடம்பைக் கழித்தானே. (11)

கருதி யிருக்கினுங் கண்ணுக்கெட் டாப்பையல்
சுருதி முடிவிலே தோன்றினா னென்செய்வேன். (12)

ஆரணந் தேடற் கரியா னொருபையல்
காரண நீயென்னைக் காலாலே பாய்ந்தானே. (13)

மருவ வடிவில்லான் மானமில் லாப்பைய
லொருவன் கிடீரென்னை யுள்ள மழித்தானே. (14)

முன்னில்லைப் பின்னில்லை மூலமில் லாப்பைய
லென்னில்லைத் தன்னில்லை யென்றானா னென்செய்வேன். (15)

சோதித்துப் பார்க்கிலேன் சுருதிக ளுற்றிலேன்
பேதிக்கப் போகாத பிரமனா மானேனே. (16)

இட்டிடத் துண்கிலே னேதேனுஞ் செய்கிலே
னெட்டொன்று மில்லாத வுணர்வுநா மானேமே (17)

ஓட்டிலே பிச்சையேற் றுண்பா னொருபையல்
வீட்டிலுங் கொண்டுபோய் வெளியிலே விட்டானே.(18)

பண்டில்லை மேலில்லைப் பாரீரிப் பையலார்
பெண்டிரோ டென்றும் பிரியா வுணர்வென்னே. (19)

கண்டதுங் கேட்டதுங் காணாத போதினு
முண்டதுங் கொண்டது முனக்குண்டோ வென்றானே.

பொறியுற் றிருக்கிலென் புலனைச் செயிக்கிலெ
னறிவைப் பிரியாத வானந்த மல்லேனே. (21)

நெஞ்சிலே நெஞ்சிலே நிற்பா னொருபைய
லஞ்ச மறுத்தறி வாக்கினா னென்செய்வேன். (22)

கருவை யறுக்கிலேன் கழலிணை சூட்டிலே
னுருவையில் லாப்பைய லுறக்க றவிர்த்தானே. (23)

தன்னை யிகந்து தனியே யிருப்பானை
யென்னெனச் சென்றுநா னென்னை யிகந்தேனே. (24)

நாட்டார்தா மென்செய்வார் நமனார்தா மென்செய்வார்
வீட்டார்தா மென்செய்வார் வீணை திரிவாரை. (25)

அஞ்சுவ தில்லை யடங்குவ தமில்லைத்
தஞ்சமில் லாப்பைய ருன்றோன்றி யானேனே. (26)

உள்ளத்தி லுள்ளே யுதிப்பானொரு *பையல்
வள்ளலைக் கண்டுநான் வரவுபோக் கற்றேனே. (27)

ஏதமில் லாப்பைய லென்னையுந் தானாகப்
போத வுணர்த்திப் புகலு மறுத்தானே. (28)

கரமே கலமாகக் கண்டிடமெல்லா மிரந்துண்டு
பரமே பரமாகப் பற்றற்றிருக்கநாம் பெற்றோமே. (29)

அடியின்றி முடியின்றி நடுவு மின்றி
யாகாசந் தானின்றி யங்கு னேயாய்
வடிவின்றி நின்றதோர் வடிவு தன்னை
மறைகளல் லோதேடி மயங்கு தின்னம். (30)

நையாண்டி முற்றுப்பெற்றது.

---

*பையல் – சிற்றாள்

சிவமயம்.

நூற்றியேழாவது,

மனம்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சேராய் மனமேநீ சிற்பரத்தோடே கஞ்சிவனை
யோராமையல்ல துணர்விற் பிறிதொன்றுங் கண்டிலேனே. (1)

சொல்லாய் மனமேநீ சொல்லாதிருப்பதென் சொல்லற்றோ
வெல்லாம் பிரமமாய்நின் றபி னேதென்று சொல்லுவேன். (2)

கற்ற னினைத்தல் கருதுதல் செய்யாய் மனமேநீ
சுற்று மகத்துஞ் சுகங்கா ணினிப்பல சொல்லியென் (3)

பண்டுபோலன்றிப் பதைப்பற் றிருந்தாய் மனமேநீ
கண்டதனைத்து மறிவாகக் காணாதே கண்டோநீ. (4)

ஐயோமனமேநீ யாராய பாட்டா திருப்பதென்
பொய்யோ முடிந்தது பூரணபோதமே யானோமே. (5)

என்னே மனமேநீ யேவிற்றுச்செய்யா திருப்பதென்
முன்னே கருமத்தின் மூலவவிச்சை முடிந்ததோ. (6)

கோத்தாம வித்தையின் கொத்தைக்குலையாய் மனமேநீ
பார்த்தா லனைத்தும் பழுதையிற்பாம்பாய் முடிந்ததே.(7)

அன்னையை முன்ன மறிவாலறப்பறித் தாட்டினே
னென்னையும் பின்னையி லாமைநிலையிட்டா லென்செய்வேன்

கரண மனைத்தையுங் கையொக்கப் பாராய் மனமேநீ
புரணமேயெங்கும் புலனுக்குப் போக்கிடங் கண்டிலேனே.

போகாய்மனமேநீ போகா திருப்பதென் போக்கற்றோ
வாகாவிவர் சொல்லும் வார்த்தையே யெங்குமறிவன்றோ.

கலைகளனைத்தையுங் கற்கிலை கண்டாய் மனமேநீ
யுலைநீர்போல்வெந் துனக்குள்ளே நடாவொளி யானேனே.

மனம் முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

நூற்றியெட்டாவது,

செட்டியார்.

குறள் வெண்செந்துறை.

ஓராதிருபல வெண்கல, மொக்கநிறுத்துக் கொடுத்தே ஞன், சேரவொருபல மாக்கினர், செய்யும்படியெனிச் செட்டியார். (1)

எட்டிடையாலிட்ட தட்டியை, யெல்லோருங்காணக் கொடுத்தேனன், றட்டிநிறுத்தாறிச் செட்டியார், தத்வமசி யென்றார் செட்டியார். (2)

வீடாயிருப்பது நாற்பல, வெண்கலத் தாலிட்ட தட்டியை, யோடாக மாறினர் செட்டியா, ரொருபல மாக்கினர் செட்டியார். (3)

கடையி லிருப்பாருந் தாமேயாய்க் காணக்கொடுத்த கலமெல்லா, முடையநிறுத்தி தொருபல, முண்மையி தென்றாரிச் செட்டியார். (4)

என்று முடையாக் கலந்தன்னை, யெல்லாருங் காணக் கொடுத்தேனு, னன்றே யுடைத்தாரிச் செட்டியா, ராரறி வாரென்றார் செட்டியார். (5)

உண்டகலங்க ளனைத்தையு, மோராறியக் கொடுத் தேனன், கொண்டுநீ யாரென்றார் செட்டியார், கூறாது கூறினர் செட்டியார். (6)

ஓட்டைக் கலத்தி லிடவிட, வுள்ளசோ றெல்லா மறவுண்டு, வீட்டி லிருப்பாரிச் செட்டியார், வியாபார முஞ்செய்யார் செட்டியார். (7)

செட்டியார் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிஒன்பதாவது,

இம்பில்,

கலித்தாழிசை:

ஆதிப் பிரம மறியாமை தன்னாலே
பேதித்துத் தோன்றிற்றென் றிம்பிலடி
பிறப்பிறப் பில்லையென் றிம்பிலடி. (1)

வந்த பிறவியும் வானாதி பூதமு
மிந்திர சாலமென் றிம்பிலடி
யெனக்கழி வில்லையென் றிம்பிலடி. (2)

ஏகமே யல்லா விரண்டில்லை யத்விதப்
போகமே யானோமென் றிம்பிலடி
புலன்வழி கெட்டதென் றிம்பிலடி. (3)

அண்டத்தை யெல்லா மறிவே படைத்தமை
பிண்டத்தே கேட்டோமென் றிம்பிலடி
பேதமற் றில்லையென் றிம்பிலடி. (4)

பூதங்க ளைந்தும் புலன்கள் பதினாலும்
பாதத்தே பாய்ந்ததென் றிம்பிலடி
பரமே பரமாமென் றிம்பிலடி. (6)

ஏறிட்ட சட்டை யிரண்டையு ஞானத்தாற்
கீறிக் களைந்தோமென் றிம்பிலடி
கிளைப்பதொன் றில்லையென் றிம்பிலடி. (7)

மாங்கூ டிடுக்கிட மாநாகந் தீண்டிற்றென்
றேங்கா விறந்தானென் றிம்பிலடி.
யெல்லா மிப்படியேயென் றிம்பிலடி. (8)

ஆரியன் வந்திங் கடிதலை வைத்தபின்
பூரண மானதென் றிம்பிலடி
போக்குவர வில்லையென் றிம்பிலடி. (9)

பன்னு மறையின் படியே பரனைகத்
தன்னை யுணர்ந்தோமென் றிம்பிலடி
தத்துவந் தானேயென் றிம்பிலடி. (9)

இம்பில் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பத்தாவது,

பந்து.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

ஒன்றாகி நின்றபே ருணர்வே யுணர்ந்திட்
டோமென்னுங் கரத்தினாற் பந்தாடா நின்றேன்
பின்றாதே யென்னோடே பிழைப்பாயோ பந்தே
பேய்த்தேரி னீருண்ணப் போவாயோ பந்தே. (1)

பத்தியே வளர்கோலப் பட்டினை யுடுத்துப்
பழவினை சரிதையாற் பந்தாடா நின்றேன்
முத்தியே வடிவாகி நிற்பாயோ பந்தே
முட்பூவிற் றேனுண்ண முயல்வாயோ பந்தே. (2)

வாகாதி தொங்கலை வாவலித் துடுத்து
மதனன்றன் வழிமாறப் பந்தாடா நின்றேன்
போகாதி யனைத்தையு மொழிவாயோ பந்தே
புரியி லரவாகிப் போவாயோ பந்தே. (3)

சுருதிநன் முலைமாதர் தோழிமா ராகச்
சொல்லொணா நிலத்திலே பந்தாடா நின்றேன்
றிருகின்மை யாலறி வாவாயோ பந்தே.
தெளிவின்மை யாற்பிறந் திறப்பாயோ பந்தே. (4)

உலகங்கள் பதினாலு மொருகாலா லடக்கி
யுணர்வேழுக் காலாகிப் பந்தாடா நின்றே
னலகில்லா வறிவுரு வாவாயோ பந்தே
யங்குமிங் கும்மாகி யலைவாயோ பந்தே. (5)

தேசிக னாடி சென்னிமேல் வைத்துத்
தேச காலங்கெடப் பந்தாடா நின்றேன்
வாசியில் லாவறி வாவாயோ பந்தே
மாயா மயமாகிப் போவாயோ பந்தே, (6)

ஆறு முகமு மடையப் புதைத்திட்
டறிவே முகமாகிப் பந்தாடா நின்றேன்
வீறும் வெறுப்பு மறுவாயோ பந்தே
விதியா ரேவற்றொழில் செய்வாயோ பந்தே. (7)

குணக்குங் குடக்கொடு தெற்கும் வடக்குங்
கோணங் களுமாகிப் பந்தாடா நின்றே
னணுக்கவொண் ணாவறி வாவாயோ பந்தே
யங்குமிங் கும்மா யலைவாயோ பந்தே. (8)

கோசமென் னுங்கழற் கற்றைக் குலையக்
குருபரன் றாள்சூடிப் பந்தாடா நின்றேன்
பாச மறுத்தறி வாவாயோ பந்தே
பார்க்கி லில்லாப்பவ மாவாயோ பந்தே. (9)

எல்லாம் பிரமமே யென்னு மொழியாலே
யானேயா ஞகப் பந்தாடா நின்றே
னில்லாத வாழ்வை நினைவாயோ பந்தே
நித்த சுத்தம்முத்த மாவாயோ பந்தே. (10)

பந்து முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பதினொன்ருவது,

ஞானகாண்டம்-கன்மகாண்டம்.

கலிவிருத்தம்.

அந்தண ஞகிவந்தா றங்கமறை யோதி
மந்தணங்கள் பேசி யடவாளை மணஞ்செய்து
செந்தழ லில்விட்டுத் தேவரோ டிருக்கின்ற
நந்தறி வாருண்டோ ஞானகாண் டத்தில். (1)

அருக்கஞர் கலங்கடோறு மநேகரா யிருந்தாற்போ
லொருத்தனை யுணராமை யாலுல கேழுமாய்
பொருத்தற வுடல்கடோறும் புரைவறப் புகுந்துநின்ற
கருத்தனை யறிவாருண்டோ கன்மகாண் டத்தில் (2)

தேடிய பொருள்கொண்டு தேவாரம் பலசெய்து
கூடிய செல்வத்தைக் குறைவற விருந்துண்டு
நீடிய வுலகங்க ளனைத்தினு நெடுங்கால
நாடிட விருப்பாருண்டோ ஞானகாண் டத்தில். (3)

அளவறுத் துலகத்தை யநித்தியமென் றறிந்தபி
னிளமை கெடுவதன்மு னியமநிய மஞ்செய்
தளவறவானந்த வனுபோக வடிவினைக்
களவறக் கண்டாருண்டோ கன்மகாண் டத்தில். (4)

அரசரா யவனிதன்னி லடிதொழ வரசாண்
டுரைசெய வுலகினி லொப்பாருண் டோவென்னப்
பெருசறிவ ராகிப் பிறந்துள்ள பெருமையு
நரர்சுரர் பசுவுமுண்டோ ஞானகாண் டத்தில். (5)

பெரியதே சுகமென வருமறை பேசிட
வரியதோ ரனுபவ மகத்திலே யுதித்தபின்
மருவிய பிறவியு மாயையு மாய்வுறக்
கருவினைக் கழித்தாருண்டோ கன்மகாண் டத்தில். (6)

வாடாத மலர்சாந்து மதிமுக மடந்தையர்
தேடாத வடிசிலுஞ் சென்றிடச் சேவிப்ப
வீடாசா மரம்வீச வெண்கொற்றக் குடையிட
நாடாளப் பிறந்தாருண்டோ ஞானகாண் டத்தில் (7)

கோணாத மனத்தராய்க் குருபர னருளாலே
நாணாத நான்மறைத் தலையினை நிலைகண்டு
பூணாதே யுலகினைப் புரைவறப் புகுந்திட்டுக்
காணாது கண்டாருண்டோ கன்மகாண் டத்தில் (8)

வானினு மண்ணினு மற்றுள வுலகினுந்
தேனினு மினியபோ கங்களைத் தெரிந்துண்டு
மேனில நிலையென்றும் விதிவேதத் துளதென்று
நானென் றிருப்பாருண்டோ ஞானகாண் டத்தில் (9)

செய்தவப் பயனெல்லாஞ் சிறிதென்று சிலதள்ளி
மொய்தவத் தினாலே முத்திக்கே முயன்றிட்டு
மெய்தவத் தினைக்கண்டு வேதாந்தத் திருப்பார்கள்
கைதவ மல்லாதுண்டோ கன்மகாண் டத்தில் (10);

கொள்ளையா குதியினை யமரர்க்குக் கொடுக்கைக்கே
யெள்ளளித் தெசமானா ரெட்டுப் பெயரோடே
சள்ளென வள்ளெனச் சாற்றிய சடங்கிலே
நள்ளென வல்லாருண்டோ ஞானகாண் டத்தில். (11)

ஆரணந் துதிசெய்யு மறிவினை யகமென்று
பூரண மாகியைம் புலன்களும் புறத்திட்டு
மாரண முமற்றைப் பிறவியு மறுத்திடுங்
காரணங் கண்டாருண்டோ கன்மகாண் டத்தில். (12)

ஞானகாண்டம் - கன்மகாண்டம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பன்னிரண்டாவது,

பாங்கிக்குரைத்தல்.

குறள் வெண்டாழிசை.

மானே பட்டது சற்றோ மானே பட்டது சற்றோ
மானிற் பெரியதோ ராண்பிள்ளை வந்து
தானே நானென்று போனா னவன்
றன்னையுங் கண்டிலே னென்னையுங் காணேன். (1)

பெண்ணே பட்டத சற்றோ பெண்ணே பட்டது சற்றோ
பென்னம் பெரியதோ ராண்பிள்ளை வந்து
கண்ணே கண்ணென்று போனா னந்தக்
கண்ணையுங் கண்டிலேன் னென்னையுங் காணேன். (2)

பாங்கிக்குரைத்தல் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பதிமூன்ருவது,

தச்சாண்டி.

—:—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

உன்ற னிடத்திலு மூரா ரிடத்திலு
முலகம் பதினாலு முள்ள வொருபொரு
டன்றனை யீதென்று காட்டித் தந்தார்க்குச்
சமைத்துக் கழலிட்ட தச்சாண்டி யன்ருே. (1)

ஒப்பாரி தன்னு ளுயிரே பிரமமென்
ருேதியே போகாமே யோர்மாத் திரைக்குள்ளே
தப்பாமே யிங்ங னிருவென் றிருத்தச்
சமைத்துக் கழலிட்ட தச்சாண்டி யன்ருே. (2)

தச்சாண்டி முற்றுப்பெற்றது.

———

உ

சிவமயம்.

நூற்றிப்பதினான்காவது,

அப்பா.

—;—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

ஆத்ம சுரூபமே மெய்த்தெய்வ மென்னு
மாரணம் பொய்யோ வநுபூதி யில்லையோ
பார்ப்பற நீர்பனை முட்டைக் குருப்போற்
பாஷாணம் விட்டும்மைப் பார்த்தாலோ வப்பா. (1)

கொள்ளைக் *கிராந்தங் குதட்டிப் பிறகுநீர்
கோதிலா ஞானமுங் கூறியே நாணாதே
மெள்ள விருந்து சிவவேடங் கொண்டு
விழிசிம் பிளிக்கை தவிர்ந்தாலோ வப்பா. (2)

அப்பா முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.

நூற்றிப்பதினைந்தாவது,

கு ண லை.

—;—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

தேவாரஞ் செய்கின்ற திண்டாட்ட மெல்லாநாந்
    தீரவே தீர்ந்தோமென் றிடுகுணலை
செயலெங்கு மான திறம்பாடிப் பாடித்
    தெளிவெங்கு மானதென் றிடுகுணலை.
நாவார வோதிய நாமவே தங்களு
    நமக்கினி யமையுமென் றிடு குணலை
நம்மில்வே றிலையெனுந் தன்மை யதுபோக
    நாமேநா யானேனென் றிடு குணலை. (1)

வேறு.

உடம்புட னுறவில்லை யுணர்வே யுறவென்று
    முணர்வொழிந் தில்லையென் றிடு குணலை
        யோர்வி னுணர்வேயென் றிடு குணலை
கடம்படு மென்னுங் கதற்றுக் கழிந்தது
    கலங்காது காணென் றிடு குணலை
        கதற்று மொழிந்ததென் றிடு குணலை. (2)

---

*கிராந்தம்=கிரியை முடிவு.

ஆசார மெல்லா மடையவிட் டங்கா
    மானோ மானேமென் றிடுகுணலே
        யருமறை யறியாதென் றிடுகுணலே
யாசார மானவை முழுது மறவிட்டே
    யானந்த மானேமென் றிடுகுணலே
        யறிவு வடிவேயென் றிடுகுணலே. (3)

குணலே முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பதினொருவது,

பிடாரன்.

—;—

குறள் வெண்செந்துறை.

நாதச் சிலுகாக்கு நச்சரவாட்டும் பிடாரரை யெல்லாம் போதச் சம்மட்டியாலே போன போனிட மெல்லாம் போகடிப்பேன். (1)

வாக்கை யடக்குவிப்பேன் மனமோடாமை வைச் சுத்திரிப்பே, னீக்கொன்றி லோடவு மொட்டேனின்மல மாக்கும்பிடாரனே. (2)

அன்றுமென் றல்லல்கள் பேசியடங்கி பிராதாரை யெல்லா, மொன்றாக மெய்யுணர் வாலேயொக்க விருத்தி யொருக்குவேனே. (3)

பிடாரன் முற்றுப்பெற்றது.



உ

சிவமயம்

நூற்றிப்பதினேழாவது,

அம்பட்டன்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பதைக்கவே தனைசெய்யும் பவமூலப் பெரும்புண்ணைப்
பார்வையா மயிலாலே யறுத்துத்துன் றசையா
முதித்தவூ னினையுணர் வனலே கோலதுவா
யுண்மையிற் றெகித்திட் டவம்பட் டன்*சீயா. (1)

உலகொடு பொருண்மைந்த னுமுள்ளத் தொடுவை
யோர்வாலே கீறியங் கொழித்துண்மை யுணரா
வலைபேதப் பெருவன்மக் கிரந்தியை யறிவா
காரத்திற் கரைத்திட்ட வம்பட்டன் சீயா. (2)

சங்கற்ப விகற்பமாந் தசையது படர்ந்து
தன்மையாம் விழிமுடிச் சடமாகி யுதித்த
வங்கத்தை யசமென்னும் படலத்தை யுரித்து
வறிவா விழிப்பித்த வம்பட்டன் சீயா. (3)

அம்பட்டன் முற்றுப்பெற்றது.

---

* சீயன் = பெரியோர்

நூற்றிப்பதினெட்டாவது,

வண்ணான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்,

கறையுறு முளத்தூசிற் காமாதி முழுதுங்
 கமையென்னும் பெருங்கல்லிற் கரிசறப் புடைத்து
வறையுறு மலமா மதியுவர் பிடித்து
 வைம்பூதத் துடக்கென்று மறவாவி வைத்து
வுறைதரு பெருமாயை யொதுக்கற வொலித்து
 வொழிவற வொளிர்போதப் பிரமமே யாக
மறைமுறை கழுவிய வண்ணத்த னடியேன்
 வாசாம கோசர வண்ணத்த னடியேன். (1)

தேசுறு முளத்தூசிற் றிகழ்மையன் முழுதுஞ்
 சிதையவே யெடுத்தடித் தலம்பியங் கதனை
யாசறு சமதம மதியுவர் பிடித்து
 வகிலத்தோ டணைவொன்று மறவாவி வைத்துப்
பேசுறு பெருமாயை பிறழ்வற வொலித்துப்
 பிறிதற வொளிர்போதப் பிரமமே யாக
மாசறக் கழுவிய வண்ணத்த னடியேன்
 வாசாம கோசர வண்ணத்த னடியேன். (2)

அழுக்குறு முளத்தூசி லாகுமுக் குணமீ
 டணைமுழு தறப்புடைத் தலம்பியங் கதனை
யிழுக்கறும் விமலமா மதியுவர் பிடித்து
 யானெனு தென்முழு தறவாவி வைத்து
புழுக்கூடி னுளமாயை புரையற வொலித்துப்
 புரணபூ ரணப்போதப் பிரமமே யாக
வழுக்கறக் கழுவிய வண்ணத்த னடியேன்
 வாசாம கோசர வண்ணத்த னடியேன். (3)

வண்ணான் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றிப்பத்தொன்பதாவது,

முதலியார்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சட்டனென்று தலைப றித்திடுஞ் சழக்கறுத்த முதலியார்
சாந்தமாகவே வாய்ந்த பாவனைத் தலைநிலென்ற முதலியார்
கட்டறுத் தெனைக் கழலிணைதந்து கண்ணளித்த முதலியார்
காரிருளி லிரவிபோ லுள்ளே கலந்துநின்ற முதலியார். (1)

கூறைகொள்ளும் புலன்களைந்தையர் தணியவெட்டு முதலியார்
சுருதிசொன்ன சுகவடிவாகத் துணிவுதந்த முதலியார்
பாறைநெஞ்சு பதஞ்செய்யும்படி பார்த்தருளிய முதலியார்
பத்தரெய்ப்பினில் வைப்பதாகிய பரிசுடைய முதலியார். (2)

அப்புலனுமவ் வுடலுமோர்வற மொழிதந்த முதலியா
ரடியிணைதலை மிசையினில்வைத் தாண்டுகொண்ட முதலியார்
செப்பரிய சிவவடிவாகத் தெளிவுதந்த முதலியார்
சிந்தையோடு மனமொன்றும்படி திருத்தியாண்ட முதலியார். (3)

முதலியார் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபதாவது,

தவமுந் தவமுடிந்ததும்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சங்கரனுகி யிமையோர் தவம்பண்ணிச் சாரச்சடை
கட்டவுர், தன்கழறன்னிற் பணியாருயிரெல்லாந் தானே

தலைகட்டவுங், கங்குல்பக லென்றடியார்கள் வேறொன் றுங் காணாமே கண்கட்டவுங், கட்டுவிடற்றகள் காட்டி னான்வீரக் கழல்கட்டிக் காட்டினனே. (1)

பண்டைவினையாற் பணியாதவர்தம்மைப் பாசத் தளை கட்டவும், பணிந்தேத்திநிற்கு மடியாரைவிண்ணோர் பணியப்பட்டங் கட்டவுங், கண்டுகளித்தவர் பண்டுதாங் கத்திக் கதற்றுங்கலை கட்டவுங், கண்ணாகியதன்னைக் காட்டினான்வீரக் கழல்கட்டிக் காட்டினனே. (2)

வருபிறவிக்குமருந்தென் றடியாரை மாலயன்கால் கட்டவு, மனக்கணக்கிட்டு வழக்குற்றலைறகின்ற வாதியர் வாய்கட்டவுங், கருதலர்செயபொற் கதிர்மேனியின் றன்மை காணாமே கண்கட்டவுங், காணாதுகாட்டிய தம்பிரான்வீரக் கழல்கட்டிக் காட்டினனே. (3)

தவமுந் தவமுடிந்ததும் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்தொன்றுவது,

ஆண்டார்.

குறள் வெண்டாழிசை.

முன்னாண்டவல்வினை பின்னாண்டுவாராமே மோக்கிச மாகவே சாக்கிரானக்கிய, வென்னாண்டா ரென்பேனே வென்னாண்டீ ரென்பேனே. (1)

மூண்டவுல்வினை மாண்டுநான்வெற முத்தனாகவே சித்தனாக்கிய, வாண்டாரே யென்பேனே வாண்டீரே யென்பேனே (2)

பூண்டமாமும்மல மாண்டுபின்னான்வெறும் பூரண மாகவே பொற்கழல்சூட்டிடு, வாண்டாரே யென்பேனே வாண்டீரே யென்பேனே. (3)

ஆண்டார் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்திரண்டாவது,

தச்சன்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

அறுகம்பு னுனிப்பனி யின்ற னளவில்பல் யோனியி னூடே,பெறுதா யுதரக்குகை பாய்ச்சிப் பிறழ்ங்கியின் மீது வளர்த்து, மறுகாலவ் வியோனியினூடே வளர்காயம தாயிடும் வண்ண, மறியாம லியந்திரம் வைத்த வாசாரியை யாரறி வாரே. (1)

கால்வைத்திரு கையதுமூட்டிக் கழியென்பு நரம்பொ டிசைத்து, சாலக்குரு திப்புன லூடே தசையாமதி டன்னை யமைத்துத், தோலைக்கொடு மேலதன் மேவித் துளைதூப வியந்திர கூடஞ், சாலப்பொறி வைச்ச தியக்குந் தச்சன்றனை யாரறி வாரே. (2)

பொய்யுற்றுடல் போலொரு பாவை பொறியுற்றுள போல நடித்துச், செய்யுற்றிக மோடுய ரத்திற் சென்றே யுழலத் திரிவித்துக், கைவிட்ட வியந்திர மாகக் கண்வைத் தவை கண்ணில் விழுங்குந்,தெய்வத்திகழ் தச்ச னவன்றன் செம்பொற்கழல் சூட வல்லீரே. (3)

தச்சன் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்திமூன்றாவது.

பாம்பாட்டி.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சிரகற்ற குடத்திலே பாம்ப டைப்போம்
வேதாந்த வெளியிலே விட்டாட் டுவோங்
கரணங்கள் பிடித்தங்கே யிரையி டுவோங்
காலங் கழியவே தப்பி டுவோம்
பரவிய மும்மல மாயை யென்னும்
பாபபுதான் சீறிக் கடித்த போது
வுரையற்ற மந்திரம் கொண்டு மீட்பா
முள்ளுளார் வாழுகின் றாடாய் பாம்பே. (1)

சித்திர முத்தி தருமென் றெண்ணிச்
சிந்தித்து நாளுந் திகைத்தி ராதே
பத்திர நிற்கவுறை குத்து மோதான்
பார்த்தானைப் பார்த்துநின் றாடாய் பாம்பே. (2)

ஓங்காரத் துட்புகுந் துச்சி யேறி
யொன்பது துவாரத்தி னுட்பு குந்து
தூங்காமை தூங்கிநின் றாடாய் பாம்பே
தொந்தங் கடந்தோமென் றாடாய் பாம்பே. (3)

ஆறாறு மிங்கேயம் பலமு மிங்கே
யாடரவக் கிங்கிணிக் காலு மிங்கே
பேறாறு மிடபவா கனமு மிங்கே
பிறப்பிறப் பற்றிடந் தானுமிங்கே
சீராருஞ் சிவஞான போதந் தன்னைத்
தெளிந்து தெளிந்துநின் றாடாய் பாம்பே. (4)

பாம்பாட்டி முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்திநான்காவது,

நிலம்.

—:—

குறள் வெண்செந்துறை.

வேறுகூ றொன்று மிலாதநிலம் வேதாந்த மெய்ப்பொரு ளானநில
மாறி யறிந்தா ரறியுநில மங்கனே யாகி யிருந்தநிலம். (1)

எல்லா வழக்குங் கடந்தநில மேகமே யாகி யிருந்தநிலம்
பொல்லாங்கு தன்னிற் புகுதாநிலம் பூரண போதமாய் நின்றநிலம்.

கல்விக் கடலைக் கடந்தநிலங் கற்பனை யெல்லாந் தவிர்ந்தநிலஞ்
சொல்லற்ற சோதியாய் நின்றநிலஞ் சோக மோகாதி துறந்தநிலம்.

அறிவே வடிவா யிருந்தநில மாற்ற லுடையா ரமர்ந்தநிலம்
பிறிவேது மின்றி யிருந்த நிலம் பிரமப் பெருவெளி யானநிலம். (4)

சித்தஞ் சிவமா யிருந்தநிலஞ் செய்வன வொன்றுடன் கூடாநில
முத்தனு முத்தியு மானநில முக்குண மெல்லா முடிந்தநிலம். (5)

நிலம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்தைந்தாவது,

தட்டான்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பந்தமாம் பணிசெய்யுந் தட்டா னென்றும்
பலதார் பதக்கஞ் செய்யுந் தட்டான்

முந்து நாண்வளை பண்ணுந் தட்டான்
முற்பவ மெல்லா முடிசெய்யுந் தட்டான். (1)

இருவினைத் தளைசெய்யுந் தட்டா னேனைத்
தளப்பமு நன்றாய்ப் பண்ணுந் தட்டான்
சரியுடற் சரிசெய்யுந் தட்டான் றெருந்தச்
சங்கிலி பண்ணும்வீ ரத்தட் டானே. (2)

ஐயஞ் சாவடங் கோக்குந் தட்டா
ஞைசயணி கட்டுவடம் பண்ணுந் தட்டான்
மெய்யுள்ளக் குழைசெய்யுந் தட்டான் ஞான
மெய்க்குழை செய்யும்வீ ரதட் டானே. (3)

அறுதொழி லாழிசெய் தட்டா னென்று
மருமறைச் சிலம்பு செய்யுந் தட்டா
னறமுயி ருடல்கோத் தங்கு லகே
மூடன் செய்யும் வீரத் தட்டானே. (4)

மையுற்ற பவபா சக்கு ழைசெய்
வயிர வீடது பண்ணுந் தட்டான்
செய்யுற்ற தொழி ருஞய் முழுதுஞ்
சிவப்பிர காச மொன்றுந் தட்டானே. (5)

தட்டான் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்தாருவது,

ஏவலிலாக்காரணத்திகழ்ச்சி.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

சாத்துந் தனிமாலை தானனே னகிலலோ
தம்பிரா னுக்குநெற்றித் தாரானே னகிலலோ

வேத்து மடியார் திரளானே னல்லவோ
வெம்பிரான் கேதேனு மொன்றானே னல்லவோ. (1)

பூங்கோயில் செய்கைக்குப் பூவானே னல்லவோ
பூவோடே யேறிய நாரானே னல்லவோ
பாங்கா மடியார்க்குப் பாங்கானே னல்லவோ
பரமன் றிருப்பணிக் காளானே னல்லவோ. (2)

இட்ட திரிமுண்டந் தானானே னல்லவோ
விலங்குந் திருச்செவிப் பூணானே னல்லவோ
கட்டிய வீரக் கழலானே னல்லவோ
கழலுக் கிசைந்தசெய் காலானே னல்லவோ. (3)

உருகு மடியா ருளமானே னல்லவோ
வுவந்துவந் தேத்து முரையானே னல்லவோ
பெருகிச் சொரியுங்கண் ணீரானே னல்லவோ
பெருமா னுக்குநாளும் பித்தானே னல்லவோ. (4)

கலையறப் பார்த்தருட் கண்ணானே னல்லவோ
கண்ணிற் கருணைக் கடலானே னல்லவோ
தலையிறந்த செய்ய தாளானே னல்லவோ
தாடந்த தம்பிரான் றானானே னல்லவோ. (5)

ஏவலிலாக்காரணத்திகழ்ச்சி முற்றுப்பெற்றது

உ

சிவமயம்.

நூற்றியிருபத்தேழாவது,

அம்மானை.

—:—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

மாயைக்கு வடிவு கொடுப்பர்கா ணம்மானை
மாயையா னுலகு வளர்ப்பர்கா ணம்மானை

யாயி லறிவா யிருப்பர்கா ணம்மானை
யாயாத போதுலக மாவர்கா ணம்மானை. (1)

பார்க்கி லுலகம் பழுதைகா ணம்மானை
பாராத போது பழுதைபாம் பம்மானை
யார்க்கு மறிய வறிதுகா ணம்மானை
யற்ற நிரையடிகண் மற்றிலா வம்மானை. (2)

ஊனெனுந் தூணி லுதிப்பர்கா ணம்மானை
யோராருடலைப் பிளப்பர்கா ணம்மானை
யானென தென்னவொண் ணின்பங்கா ணம்மானை
யின்ப துன்பமற் றிருப்பர்கா ணம்மானை. (3)

பத்திக் கடலி லமிர்தங்கா ணம்மானை
பார்க்கில் பரஞ்சோதி யாவர்கா ணம்மானை
யெத்திக்கு மெப்போது நிற்பர்கா ணம்மானை
யீறிலாப் போத மாவர்கா ணம்மானை. (4)

உண்டிபா னங்க ளுயிரள வம்மானை
யோரின் மனத்தே சுகதுக்க மம்மானை
கண்ட நரைமரணங் காயத்தே யம்மானை
காண்பானுக் காறான மில்லைக்கா ணம்மானை. (5)

ஆறுபா வங்களு மில்லைக்கா ணம்மானை
யாறுகோ* தானு மப்படியே யம்மானை
பேறு மிழவுமில்லாப் பேரின்ப மம்மானை
பேதா பேதமில்லாப் பிரமங்கா ணம்மானை. (6)

அம்மானை முற்றுப்பெற்றது.

---

* கோதகாமாதி — கோடியென்றும்பாடம்.

உ

சிவமயம்.

நூற்றியிருபத்தெட்டாவது,

காளம்.

—:—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அன்னிய மில்லையென் றூதேடா காள
மானந்த மானோமென் றூதேடா காளந்
தன்னு சுடரேயென் றூதேடா காளஞ்
சோதியுட் சோதியென் றூதேடா காளம். (1)

பிறவி கழிந்ததென் றூதேடா காளம்
பேதைமை தீர்ந்ததென் றூதேடா காளம்
அறிவே வடிவென் றூதேடா காள
மறியாமை போனதென் றூதேடா காளம். (2)

கோசங் குலைந்ததென் றூதேடா காளங்
கூரறி வானதென் றூதேடா காளம்
பாசம் பறிந்ததென் றூதேடா காளம்
பரமே பரமமென் றூதேடா காளம். (3)

பற்றற்று நின்றோமென் றூதேடா காளம்
பார்ப்பறப் பார்த்தோமென் றூதேடா காள
முற்ற வுணர்வேயென் றூதேடா காள
முள்ளொளி யானோமென் றூதேடா காளம். (4)

உள்ளது போதமென் றூதேடா காள
முலகமோக் காளமென் றூதேடா காளம்
வெள்ள வெளியிதென் றூதேடா காளம்
வேதஞ் சொன்னவண்ண மூதேடா காளம். (5)

ஊனே மறிவதென் றூதேடா காள
முணர்வே பிரமமென் றூதேடா காள

நானே யவனுமென் றாதேடா காள
நானவ தில்லையென் றாதேடா காளம். (6)

உண்மை வடிவேயென் றாதேடா காள
முட்புறம் பில்லையென் றாதேடா காளந்
திண்மை யறிவேயென் றாதேடா காளந்
திசைதிசை தோறுநின் றாதேடா காளம். (7)

சாதி சுழிந்ததென் றாதேடா காளஞ்
சங்கை தவிர்ந்ததென் றாதேடா காளஞ்
சோதி சுகமேயென் றாதேடா காளஞ்
சொல்லவொண் ணாததென் றாதேடா காளம். (8)

காளம் முற்றுப்பெற்றது.

நூற்றியிருபத்தொன்பதாவது,

ஆவாள்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

உள்ளா னொருவன்கா ணவாளே, யுனையல தொன்று மில்லை யாவாளே, விள்ளா னொருக்காலு மாவாளே, வேண்டுந்தே வைகொள்வா னவாளே. (1)

பண்டே யெனக்கடை யாவாளே, பற்றித்தென்னு லேகா னவாளே, கண்டே மதிகெட்டே னவாளே, கண்டுகூடக் கைவிட்டே னவாளே. (2)

தேடுமவ னேனகா ணவாளே, தேடப்படு மவரல்ல ராவாளே, வீடுமவர் தாமேகா ணவாளே, வேண்டுந்தே வைமீட்ப ராவாளே. (3)

காரியஞ்செய்யார்கா ணவாளே,கண்ணாலே கழிப்பர் கா ணவாளே, நேரியர் கூரிய ராவாளே, நிற்பரெங் கும்போகா ராவாளே. (4)

வாயுங் கையுமில்லை யாவாளே, வாவென் றழைக்க வல்ல ராவாளே, யேய்வு மோய்வுந்தாராராவாளே, யெப் போதும் வாய்தாரி யாவாளே. (5)

பேதித் திடத்தினு மாவாளே, பேரா திருப்பார்கா ணுவாளே, யோதிக் குடிகெட்டோ மாவாளே, யுனையு மெனை யுங்கைவிட்டா ராவாளே. (6)

வஞ்சனை செய்வார்கா ணுவாளே, வாக்கு மனமழிப் பா ராவாளே, நெஞ்சு கலங்கினு மாவாளே, நேதியென் று நிற்ப ராவாளே. (7)

ஓராத போதுளா ராவாளே, யோரி லொளிப்பர்கா ணுவாளே, *யோராத நீயவ ராவாளே, யெல்லா மறிவுகா ணுவாளே. (8)

ஆவாள் முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பதாவது,
சோதனை.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

பூணப் படாதன பூண்டு
போர்த்துடுத் துப்புறம் பேதிரி வேனைக்
காணப் படாயென்று சொல்லியெனிற்
கண்ட தனைத்துங் கழித்துவிட் டானே. (1)

எட்டாங் கரணத்தி னுள்ளே
யேவின காரியஞ் செய்திருப் பேனை
வெட்ட வெளியினிற் காட்டி
வேற்று முகந்தோன்று வேறுசெய்தானே. (2)

உலகர்க் கிசைய நடந்திட்
டொன்றுமுன் னென்றென் றுணர்ந்திருப் பேனைச்

*ஏராகாதவென்பது - ஏராதவென விகாரமாயிற்று.

சிலுகற்ற சிற்பற மாக்கியெனிற்
சேரு மனத்தையுஞ் செம்மை செய்தானே (3)

காரிய முண்டென்று சொல்லிக்
கண்ணுக்கெட் டாதே கடக்கப் போவேனை
யாரியன் வந்துபுக் கென்னை
யப்போதே யானந்த மாக்கி விட்டானே. (4)

சொல்ல வொண்ணாதன சொல்லிச்
செவியோடு கண்வாய்கள் சோதித்துப் பார்த்தென்
னெல்லை யிலாவறி வாகி
யானு மிதன்றி யினிதிருந் தேனே. (5)

சிட்டனு மாய்ப்பட் டனுமாய்த்
தேசத்துள் ளாரொரு வன்சொல்லப் போகப்
பட்ட விதனமும் பாரீர்
பரிபூர்ண மேயின்னு மானது பாரீர். (6)

நீருக் குமிழியது போல
நிலையில்லா வாக்கைக்கு நேசித் திருந்தே
யாருக்கு நன்மைசெய் தோரா
மறிவே யகண்டமு மாய் வறியாதே. (7)

ஏழைத் தனந்தனி னாலே
யென்னில்வே றில்லையென் றேநெடு நாளாய்ப்
பாழுக் கிறைத்தோமு நாமே
பண்டை யறிவை யறியா திருந்தே. (8)

சோதனை முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்தொன்றுவது,

ஊர்.

—;—

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

*நான்முக னுக்கிட மானவூ ரெங்களூர்
நான்மறை யுந்துதி செய்யுமூ ரெங்களூர்

---

*இச்செய்யுள் கெடின்கோனை - எதுகையின்று.

தேவுக்குந் தேவா யிருக்குமூ ரெங்களூர்
தேவர்க ளன்றித் திரியுமூ ரெங்களூர். (1)

தோற்றா வாகத் துணிந்தவூ ரெங்களூர்
சோகமோ கங்க டுறந்தவூ ரெங்களூ
ராற்ற லுடையார்க் கடைத்தவூ ரெங்களூ
ரானந்த மாயே யிருக்குமூ ரெங்களூர். (2)

காமக் குரோதங் கழிந்தவூ ரெங்களூர்
கல்விக் கடலைக் கடந்தவூ ரெங்களூர்
நாமரூ பங்க டவிர்ந்தவூ ரெங்களூர்
ஞானமே யாக நவின்றவூ ரெங்களூர் (3)

அறிவிட் டறியாமை போக்குமூ ரெங்களூ
ரன்னிய மொன்றுமி லாதவூ ரெங்களூர
குறியிட்டி தென்னவொண் ணாதவூ ரெங்களூர்
கோசங்க ளைந்துங் குலைந்தவூ ரெங்களூர். (4)

புத்தி விகற்ப மறுக்குமூ ரெங்களூர்
பூரண போதமே யானவூ ரெங்களூர்
வித்தும் விளைவு மிலாதவூ ரெங்களூர்
விண்முதற் பூதம் விளைந்தவூ ரெங்களூர். (5)

எட்டுத் திசையு நிறைந்தவூ ரெங்களூ
ரேகாந்த மாகி யிருக்குமூ ரெங்களூர்
தட்டற்ற யோகிக டங்குமூ ரெங்களூர்
தன்மபா வங்க டவிந்தவூ ரெங்களூர். (6)

உலகத்தை யெல்லா மொருக்குமூ ரெங்களூ
ருண்மையொன் றாகியொன் றானவூ ரெங்களூர்
சிறுகற்ற சிற்பர மானவூ ரெங்களூர்
சிந்தனை விட்டுத் தெளிந்தவூ ரெங்களூர். (7)

உன்னப் படாவுணர் வானவூ ரெங்களூ
ருள்ளொளி யாகி யிருக்குமூ ரெங்களூர்
கண்ணுக் கணித்தா யிருக்குமூ ரெங்களூர்
கள்ளப் புலனைக் கழிந்தவூ ரெங்களூர். (8)

கத்துஞ் சிலுகு மிலாதவூ ரெங்களூர்
காண்பானுங் காட்சியு மற்றவூ ரெங்களூர்
சுத்த வெளியிலே தோன்றுமூ ரெங்களூர்
சோம்பர் சுகமென் றுணர்ந்தவூ ரெங்களூர். (9)

ஊர் முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்திரண்டாவது,

வாரணம்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

வினைவி லங்கு கழற்றிய வாரணம்
விரத கம்ப முறித்திடும் வாரண
மெனதி யானெனன் கணையை முறித்தெறிந்
தெங்கு மாமயிர் தாகிய வாரணம். (1)

கரணப் பாகரை வீசிய வாரணங்
கருணை மாமலை மேவிய வாரண
மரண மாமறை யீறு முழக்கவே
யறநல் வீதியி லேவரும் வாரணம். (2)

பத்தி வண்கோலுக் குளைந்தநல் வாரணம்
பாசக் கயிற்றூர் கட்டுண வாரண
முத்தி மாமடு விற்படி வாரண
மூல மாமத வாரணம் வாரணம். (3)

அன்ப ரன்பளற் றிற்படும் வாரண
மான்ற மாமத மேபொழி வாரணம்
வன்பி லோடு மனிதரை வாரியே
மாசு சேர்கிரை யத்தெறி வாரணம். (4)

சமய வைம்பொழில் சாடியே யைந்தெனுந்
தளைமு றித்தயி லுந்தனி வாரண

மமைய வாறினர் மேல்கொளும் வாரண
மாதி மூலமென் றேறிடும் வாரணம். (5)

கத்த வாதங் கடிந்தநல் வாரணங்
கவள மாவண்ட முண்டதோர் வாரண
நித்த வாரரு ளின்பட்டங் கட்டியே
நீச னேனையு மாண்மத வாரணம். (6)

அலம லக்குறு மென்மனந் தன்னையே
யசைவ றச்சிவ மாக்கிய வாரணங்
கலக லப்பைநூற் கட்டுரை யொன்றினாற்
கரிச றுத்தநல வாரணம் வாரணம். (7)

கொச்சை வன்குலச் சாதிச் சடங்கெனுங்
கோடு வான்கொம் பற்றநல் வாரண
மச்ச மேது மறுத்தெனை யாண்டுகொண்
டிட்ட மாமத வாரணம் வாரணம். (8)

மூவ ரும்பணிந் தேத்திடும் வாரண
முடிவில் கற்பகச் சோலையில் வாரண
மாவ வென்றடி யாருட னென்னையு
மாண்ட மாமத வாரணம் வாரணம். (9)

வாரணம் முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்திமூன்றுவது,

மெய்ஞ்ஞான விளக்கம்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

ஆடு பார்க்குதேடா வாரக் கோனே
யடையப் படர்ந்துதேடா வாரக் கோனே
யோடி மறியேடா வாரக் கோனே
யுள்ளே மறியேடா வாரக் கோனே. (1)

குறுகவளை குறுகவளை கோலக் கோனே
குரவனடி குறுகவளை கோலக் கோனே
குறுகவளைத் தவிழவிராய் கோலக் கோனே
குரம்பைதனைக் குலையவிராய்க் கோலக் கோனே. (2)

ஓடியிடு காடேநான் *போகு தேனே
யோடாமை யுள்ளே மறிக்கு தேனே
யோடாமை யுள்ளே மறித்த வாறே
யோவாமை நின்று நடுங்கு தேனே. (3)

ஓவாதே நின்று நடுங்கு மென்னை
யுள்ளே புகுத்திரியத் தள்ளு தேனே
காவா நரகமுங் கைக மூன்று
கருதுமங் கொன்றையுங் காண்கி லேனே. (4)

காணாதே நின்று சுழியு மென்னைக்
காலிட்டுக் காலிட்டுப் பாயு தேனே
காணாத கண்ணைத் துடைக்கு தேனே
கதிர்போ லறிவங்கே காண்கு தேனே. (5)

அறிவா லனைத்தையுங் காண்கு தேனே
யறிந்த வறிவா யிருக்கு தேனே
பிறியா வறிவா யெனையு மந்தப்
பேச்சற் றிடத்தி லொளிக்கு தேனே. (6)

போராமை பேச்சற் றிடத்தே வைத்துப்
பேரின்பப் பாற்சோ றிடுகு தேனே
யாராதே நான்வாரி யுண்கு தேனே
யடையவு நானா யிருக்கு தேனே. (7)

உண்டு களித்துநின் றாடு தேனே
யோவா தொளிரநின் றாடு தேனே
யண்ட மழிந்துநின் றாடு தேனே
யலைவறக் கொட்டிநின் றாடு தேனே. (8)

---

* இப்பதிகத்தில் மூன்றாவது முதல் ஒன்பதாஞ்செய்யுள் வரைக்கும் அடிகளினீற்றுச்சொற்கள் காலவிடைநிலைகுறைந்து மருவிநின்றன.

உண்மைக் குழலேகின் றாது தேனே
யுரைமாண்டு சும்மா விருக்கு தேனே
வண்மைக் கருணை வளதகைத யுண்ணி
மறுகி யுடைந்துக்குப் போகு தேனே. (9)

ஆதார மிக்குநின் ருடாய் கோனே
யதிசய மிக்குநின் ருடாய் கோனே
சாதிலையை விட்டெடறிந் தாடாய் கோனே
சதுரினை விட்டெடறிந் தாடாய் கோனே. (10)

மெய்ஞ்ஞானவிளக்கம் முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்திநான்காவது,

குறி.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆதிப்பிரமத் திருக்குமறியாமை யாகாசாதிபூதமாய்ப், பூதத்திரளாம் புலன்களொருபதாய்ப் போகும் பொறிக ளாயே, யோதத்தகும் வாக்காதிகரணநான் கோங்கிய சோலைக்குள்ளே, வேதத்தலைவன் வருங்குறியாமிந்த வேதாந்தத்துட்குறியே. (1)

ஏகனனேகனிடை யொருவரின்றியெங்கு நிறைந்து நின்று, போகம் புலன்கள் பொழுதுபுணரிலும் போதமே யாகிநின்றேன், மோகங்கழியமுன் வேடங்கொண்டென் பான், முத்தியளித்தபோதே, யேகும்பிறவியென் றிடக் கண்டுடித்திடுமின்றே வருங்குறியே. (2)

அங்குமொருகுறை யின்றியழியாவறிவா யிருக்கை யாலு, மிங்குமொருகுறை யின்றியினியனவேகமாய் நிற் கையாலும், பொங்கும் பிறவியும் பூதப்புலன்களும் பொய்யா யிருக்கையாலு, மெங்குநிறைந்தவ னென்னை யருள்செய்வானென்றே யிடுங்குறியே. (3)

பூணும்புலன்க ளனைத்தையும் பொய்யாய்ப் பொருந்திக் கழறவும், பேணுமனந்தப் பிரமநாமாயிடப் பேசாது பேசிடவும், காணுங்கனவுநான் கண்டநிமித்தமுங் கண்டோடுடிப்பனவும், வீணன்றுகாணும் விமலன்வருகைக்கு மெய்யே யிடுங்குறியே. (4)

நீசெய்வினையா னிலையாதவூனையெடுத்து நெடுநாளெல்லாம், வீசேழுலகில் விழுவதெழுவதாய வீணேயுழன்று யென், றோசைபரிச முருவஞ்சுவைகந்த யோரிலுணர்வாகு மென், றோசையறுக்க வமலன்வருங்குறி யங்கத்திடுங் குறியே. (5)

சலியாதுலக பனைத்தையுநோக்கிச் சனனமரணங்களு, மெலியாவிகபர லோகங்கடன்னில்வெறுப்பும் விழைவி யாவையும், பலியாதேபச்சென் றிருந்தவனைத்தையும் பார்த்துப்பரமொழிய, நிலையாமலென் னெஞ்சுதன்னில் வருங்குறி நித்தன்வருங்குறியே. (6)

ஆருமறியாவறிவதே நானென்றிட்டானந்த மாகச் செய்தே, தாரணியனையக் கன்மயக்கனுய்த் தோற்று மம்மாயையினு, மேலாரறிவாகவுணர்த்த வுணர்வாகுந் தம்மை யுணர்ந்தபோதே, பேரறிவாய்ப்பி னன்றியப் படாமை பிரமநாமாங்குறியே. (7)

தன்னையறியா இருந்தான்றனையிறைதா னறிவித்த போதே, யன்னியமின்றி யகண்டபோதம்மா யறிந்துமறி யாவிடிற், பன்னுமறையும் பரமேநீயென்று பணித்தபடி யதுவர, யின்னஇதுவென் றியம்பவொண்ணுப்பர மென்னுங்குறியதுவே. (8)

தந்தைதாய்சுற்றந் தனையந்தமாகவே தரணியினுள்ள தெல்லாம், பந்தமேயன்றிப் பயனில்லையென்றுபின் பாசம் பறித்தபோதே, சிந்தையவற்றினிற் சேராதவண்ணஞ் செறுத்தேயறத்தையுன்னி, வந்தபடிகண்டு மானமற்றில் லது மாயையறுங்குறியே. (9)

அத்தனைகால மறிந்தவர்தம்மி லடங்கியிருப்பதுவு
மித்தனைகால மிவ்வூனை யெடுத்தவிருவினைப் பற்றதுவு
மத்தனருமறை யாவது நீயென்ன யானவனானதுவு
நித்தனாய் முத்தனாய் நேரொருவரின்றி நிற்கவருங்குறியே.

குறி முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்தைந்தாவது,

கனுவுரை.

—:—

கலி விருத்தம்.

உண்மையே யாகி யுலகுதிப் பதன்முன்ன
முண்மையிற் றொன்று முணராமை யாலுதித்
தண்மையா லேவளர்ந் துண்மையி லுன்புக்குக்
கண்மையாய்த் தோன்றக் கனாக்கண்டேன் றோழிநான்.

வானே முதலாய வையம் படைத்தபி
னானே புகுந்துநின் றுள்ளடங் கிக்கொண்டு
நானே முதலாம் பிரம முதலாகத்
தானே தழைக்கக் கனாக்கண்டேன் றோழிநான். (2)

பண்டமுண் டென்று பரங்கெட் டிராதேநீ
விண்டிடும் போதேவே தாந்தத்தை நோக்கிட
வண்டமே யாத லகண்டமே யாதல்
கண்ட தழிக்கக் கனாக்கண்டேன் றோழிநான். (3)

மொய்தவத் தாலுன்னை முற்ற வுணர்த்திட்டுச்
செய்தவத் தாலுன்னைச் சிந்தித் திராதேநீ
கொய்தநற் கூற்றையுங் கொண்டநற் கோதையுங்
கைதவ மாகக் கனாக்கண்டேன் றோழிநான். (4)

எங்கள் பெருமா னிணையடி சென்னிமேற்
றங்கும் படிதந்து தாமரைக் கண்களாற்

பொங்கும் பிறவிகள் போயகலப் பார்த்துக்
கங்குல் கழியக் கனாக்கண்டேன் றோழிநான். (5)

அன்னை மறையாக வப்ப னறிவாக
வுன்னிய போதே யுலகையு மூனையுந்
தன்னி லொளித்திடத் தன்குண மாங்கேயாய்க்
கன்னி பிறக்கக் கனாக்கண்டேன் றோழிநான். (6)

வேரிலா மாயைதான் வித்தாகிப் பூதமாய்ப்
பாரிலே தட்டப் பரந்து பலகொம்பா
யீரிலை யாயிந் திரியங்க ளேபூத்திங்
கோரி லொளிக்கக் கனாக்கண்டேன் றோழிநான். (7)

சத்துக்குற் பத்திமுன் சத்தாதலா லில்லைச்
சத்தா வதுக்கு மசத்தலால் வேறில்லைச்
சத்து மசத்துமாய்ச் சந்திப்ப தொன்றில்லைப்
பித்தும் பிதற்றக் கனாக்கண்டேன் றோழிநான். (8)

பற்றிலா தானொருவன் பார்த்திட்ட பார்வையான்
மற்றில்லா மாயை மரமுறிந்து பேரறிவாய்க்
கற்றிலாக் காக்கைக ளெல்லாங் கனியுண்ணச்
சுற்றிலே பார்க்கக் கனாக்கண்டேன் றோழிநான் (9)

பேரா வுறக்கத்தாற் பெண்டிர் மகச்சுற்ற
மூரா மௌனத்தா லுறக்கூத்தி னின்றேனைச்
சீரார் மறைவிரைச் ஸ்ரீபுருஷோத்தம
னோரா வுணர்த்தநா னுண்மெளியா னேனே. (10)

கனாவுரை முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்தாறுவது,

குறத்தி.

கலிவிருத்தம்.

பேதை வனம்புக்குப் பிணிமூப்புப் பின்சூழச்
சாதி பலபேசிச் சரித்திடுங் குறத்தியல்லேன்

கேதம் பலவின்றிக் கீழ்மேலொன் றில்லாத
போத வடிவாம் புரையறுங் குறத்தியேனே. (1)

நில்லா வுபாதிகளை நிரூபியா நிலையாலே
பொல்லாத விடயத்திற் புகுந்துவிழுங் குறத்தியல்லே
னெல்லாம் பிரமமென வென்னில்வே றிலைகண்டு
சொல்லாலுணரவொண்ணாச்சுகமாங்குறத்தியேனே (2)

மின்னிக் கழிந்தாற்போல் வீழுங் கனவுடலை
யுன்னிப் பலனு ளூறவுசெய்யுங் குறத்தியல்லேன்
றன்னைத் தனிற்கண்டு சத்தாதி யிந்தியங்க
ளென்னுக் கினியென விழித்திடுங் குறத்தியேனே. (3)

பச்சை வடம்பூண்டு பசுங்குழவி யலைசேர்த்துப்
பிச்சை பலகொண்டு பிழைபேசுங் குறத்தியல்லே
னச்ச மறத்துறந்த வதிகாரி குடிரேறும்
விச்சை பலசொல்லி விளையாடுங் குறத்தியேனே. (4)

கட்டருங் கரணமென்னுங் கடுநாய்கள் புடைசூழப்
புட்டி றலைவைத்துப் போய்மீளுங் குறத்தியல்லேன்
சிட்ட னடிசூடிச் சிவனே பிரமமென்று
விட்டுவிடா தொன்றில் விளையாடுங் குறத்தியேனே.()

விதிகள் பலபிதற்றி மேதினி புற்பரப்பி
நிதிகள் பலதேடி நெய்தாவுங் குறத்தியல்லேன்
மதிகள் பலவிட்டு மரணபவ மானம்விட்டு
விதுவது வென்றே யேகமாங் குறத்தியேனே. (6)

ஊனைவடி வென்றெண்ணு முலகிற் பிறந்திறந்து
கானல் புனலென்று கருதிடுங் குறத்தியல்லே
ஞானமதப் பட்டதுபோ லாரணக் காட்டினுள்ள
தேனறிவை யுண்டு தெளிவாகுங் குறத்தியேனே. (7)

குத்துத் தினைகுத்திக் கொழுமரத் தேன்வாங்கி
யத்திற்குழைத்துண்டறஞ்சொல்லுங்குறத்தியல்லேன்
முத்திமலை யேறிமுடி யாதவா னகத்தேனைத்
தித்திக்க வுண்டு தெளிவாகுங் குறத்தியேனே. (8)

கேடுபடு முடறனக்குக் கீழாய கிழங்குகல்லிக்
காடு மலையுங் கருதியிடும் குறத்தியல்லேன்
பாடு மறையிற் பரம்பிரம முகாறுங்
கூடும் வகைதேடிக்குனித்திடுங் குறத்தியேனே. (9)

போற்றித் தலைக்கொண்டு பூமச் சோதிபாத
மூற்ற மதுவாக வுட்சோதி யுரைபத்து
மாற்றும் பவமென்ன மனத்தோடே யதிகரித்துக்
கூற்றங் கனவிலுங் குறுகிடாக் குறத்தியேனே. (10)

குறத்தி முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்தேழாவது,

ஊசல்.

—:—

கலிவிருத்தம்.

ஆரணமாங் கால்கணட்டி யறிவாங் கயிறதுதூக்கிப்
பூரணமாம் பலகைசேர்த்து பந்தியதிற் பொருந்தவைத்து
வாரணியு முலையார்தங்கள் வலையிற்போகா வண்ணங்காத்துச்
சீரணியுஞ் சித்தம்வேறு திரியாவண்ண மாடிரூசல். (1)

தானுகா வடிவுதன்னை தானாக நம்வடிவை
யூனுேரோடொன்றப் பண்ணியொன்றி லொன்றை மறைக்குமாயை
தானேதா னறியவேண்டிச் சத்தினே டசத்துமின்றி
வானதி பூதங்களுமா மாயைபோச்சென் றாடிரூசல். (2)

வேதமுத னீர்தரித்து விதித்தகன்மம் பலவுஞ்செய்து
சாதிபேதம் பலவுண்டாகச் சமைந்தான்ஞானம் பிறக்குமோதான்
வேதவழி காரந்தன்னால் விதித்தகன்மந் தனக்குமுன்னே
சாதனநாலு முண்டேயாகிற் சமைந்ததேயென் றாடிரூசல். (3)

கரைபுரளப் பெருகுமாறற்றிற் கங்குறங்கி நில்லாதாற்போ
லுரைமுதலாம் யோகத்தாலே யொருமைதன்னைக் குலைக்கவல்ல
விருமையென்னு மாற்றையேறி யேகமண்ட பத்திருந்து
பிரமமென்னும் பார்வையாலே பிறவாவண்ண மாடிரூசல். (4)

புத்தேந் திரியங்கண்முதற்பொறி கடன்மேற் புணரும்போது
நித்திரையில் வந்தபோது நின்றபோது நில்லாப்போது
மித்தனையுங் காண்கையாலே யெங்குமுள்ளா னேகமாயே
யத்தனையு மறிகையாலே யறிவானென் றூடிரூசல். (5)

பதினெட்டு வடிவமதாகிப் பரலோக மேறலாமென்று [டாம்
கெதிகெட்டமனிதர் சொல்வேள்விக் கேடுபாட்டைக் கேட்கவேண்
விதிதட்டா வேதாந்தத்தின் விளங்குஞான மெய்ச்சுடரை
மதிதட்டாதே யறிந்தபோதே மாயைபோச்சென் றூடிரூசல் (6)

மேதினியே பாதமாக விரியும்வானே யுதரமாகப்
போதுமதி முகமதாகப் புரந்தானூர் முடியேயாக
வேதமாதி வாயதாக விரியும்வாயு வுயிராதாக
வாதியிலே யவதரித்த வவனேகானென் றூடிரூசல். (7)

புரியினிடை யாவுதோன்றிப் போனபோதும் போகாப்போதும்
புரியதுவே யாறுற்போலப் போதயாகும் புரணந்தானென்னி
லெரியொடு நீர்பவன மண்விண்ணெல்லாந் தோன்றியழியும
போது, வரியமா யையத்தில்வீழுங் காமமாய வாடிரூசல். 8)

ஊசல் முற்றுப்பெற்றது.

நூற்றிமுப்பத்தெட்டாவது.

கழல்.

கலித்தாழிசை.

ஒன்றேகாண் பெண்ணே யுலகம் பதினாறு
முள்ளது போதமென் றூடாய்கழ
லொழிவற நின்றோமென் றூடாய் கழல். (1)

இரண்டுகாண் பெண்ணே யிடைபிங் கலைக
ளிரண்டுமொன் றுனவென் றூடாய்கழ
லேகாந்த மாஞேமென் றூடாய் கழல். (2)

மூன்றுகாண் பெண்ணே முடிவான மண்டல
முத்திக்கு வித்தாமென் றூடாய்கழன்
முந்நிலா வீசுதென் றூடாய் கழல். (3)

நாலுகாண் பெண்ணே நாடினா னாடியுண்
ணாதமே சோதியென் றாடாய்கழ
னம்மை யுணர்ந்தோமென் றாடாய் கழல். (4)

அஞ்சுகாண் பெண்ணே யறிவே நமக்கென்றுந்
தஞ்சமாய் நின்றதென் றாடாய்கழ
றானேதா னானதென் றாடாய் கழல். (5)

ஆறுகாண் பெண்ணே யல்லல் கழிந்தபின்
னானந்த மானோமென் றாடாய்கழ
லாசை யொழிந்தோமென் றாடாய் கழல். (6)

ஏழுகாண் பெண்ணே யெல்லா நிலைகளு
மிந்திர ஞாலமென் றாடாய்கழ
லெமக்கழி வில்லையென் றாடாய் கழல். (7)

எட்டுக்காண் பெண்ணே சுற்றக் குழாமென்றுங்
கட்டதை விட்டோமென் றாடாய்கழல்
காணாது கண்டோமென் றாடாய் கழல். (8)

ஒன்பதாம் பெண்ணே யுள்ளே தெளிந்தபின்
மின்போலும் போதமென் றாடாய்கழல்
வேத முடிவதென் றாடாய் கழல். (9)

பத்துக்காண் பெண்ணே பரமே பரமாகப்
பற்றற் றிருந்தோமென் றாடாய்கழல்
பத்தி முடிவதென் றாடாய் கழல். (10)

ஆடுங் கழலா மடியி லொளித்தக்காற்
றேடுவ தில்லையென் றாடாய்கழ
றிருவடி யல்லதென் றாடாய் கழல். (11)

கழல் முற்றுப்பெற்றது

பாடுதுறை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம். 30—10—1953.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1954
MADRAS